நம்மாழ்வார்.

திருவாய்மொழி.

Vol II

TDRC 2351

Rdno 1056-1-1869

O22:412x1,4i
M69
117044

VOL II

2,351

105-1-1869

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திராவிட வேதமாகிய

நாலாயிரப்ரபந்தங்களுள்

நம்மாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

ஸாமவேதஸாரமாகிய

திருவாய்மொழி.

இதனை

காலக்ஷேபஸ்வாமிகள் முன்னிலையில்

ஆறாயிரப்படிவியாக்கியானத்திணங்க

திருக்குடந்தை - தட்டை

கிருஷ்ணமாசாரியரால்

பரிசோதிக்கப்பட்டு

அ-வீராசாமிநாயகரவர்களால்

கலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நம்மாழ்வார்திருவவதார ௵

௲௧௭0-வது தாரண-விய ௵-ஆடி ௴

ஸ்ரீமதேசடகோபாயநம:

திருவாய்மொழியிலடங்கியிருக்கும்

திவ்யதேசவிஷய

அட்டவணை.

பக்கம்.	திருவாய் மொழி.	விஷயம்.
௩௩௫	௧	பரமபதநாதன்விஷயம்.
௩௫௬	௧௭	த்வாதசநாமமாஹாத்ம்யம்.
௩௫[illegible]	௨௦	திருமாலிருஞ்சோலை - அழகர்விஷயம்.
௩௬௭	௨௧	அழகர் - திருமேனிவர்ணனை.
௩௬௯	௨௩	திருவேங்கடமுடையான்விஷயம்.
௩௮௩	௩௧	திருநாராயணன்விஷயம்.
௩௯௭	௪௦	திருக்குருகூர் - ஆதிநாதன்விஷயம்.
௪௦௪	௪௨	திவ்யதேசங்களை - மங்களாசாஸநம்பண்ணுகிறது.
௪௦௬	௪௫	திருக்குறுங்குடி - நம்பிவிஷயம்.
௪௦௭	௪௬	பாகவதர்களை அநுஸரித்தது.
௪௧௦	௪௭	ஸ்ரீவரமங்கலநகர்வானமாமலை - தெய்வநாயகன்விஷயம்
௪௧௨	௪௮	திருக்குடந்தை - ஆராவமுதன்விஷயம்.
௪௧௪	௪௯	திருவல்லவாழ் - கோலப்பிரான்விஷயம்.
௪௧௭	௫௧	திருவண்வண்டூர் - பாம்பணையப்பன்விஷயம்.
௪௨௦	௫௩	திருவிண்ணகர் - உப்பிலியப்பன்விஷயம்.
௪௨௪	௫௫	தொலைவில்லிமங்கலம் - தேவபிரான்விஷயம்
௪௨௭	௫௭	திருக்கோளூர் - வைத்தமாநிதிவிஷயம்.
௪௩௨	௬௦	திருவேங்கடமுடையானிடத்தில்ஆழ்வார் - சரணாகதி பண்ணுது.
௪௩௫	௬௨	திருவரங்கம் - திருவரங்கன்விஷயம்.
௪௩௭	௬௩	திருப்பேரை - மகரநெடுங்குழைகாதன்விஷயம்.
௪௩௯	௬௪	ஆழிஎழ - ஸ்ரீநரஸிம்மன்விஷயம்,
௪௪௧	௬௫	திருவயோத்தி - இராமபிரான்விஷயம்.
௪௪௯	௭௦	திருவாறன்விளை - திருகுறளப்பன்விஷயம்.

117044

௪௫௬	௭௩	திருவண்பரிசாரம் - திருவாழ்மார்பன்விஷயம்.
௪௫௭	௭௪	திருசெங்குன்றூர் - மையார்பனவிஷயம்
௪௬௦	௭௬	திருகடித்தானம் - அற்புதநாராயணன்விஷயம்.
௪௬௫	௭௯	திருப்புலியூர் - மாயப்பிரான்விஷயம்.
௪௭௦	௮௨	திருப்புளிங்குடி - காசினிவேந்தன்விஷயம்.
௪௭௧	,,	வரகுணமங்கை - விஜயாஸனர்விஷயம்.
,,	,,	ஸ்ரீவைகுண்டம் - கள்ளப்பிரான்விஷயம்.
௪௭௭	௮௬	தென்காட்கரை - அப்பன்விஷயம்.
௪௭௯	௮௭	திருமூழிக்களம் - திருமூழிகளத்தான்விஷயம்.
௪௮௦	௮௮	திருநாவாய் - நாராயணன்விஷயம்.
௪௮௪	௯௦	திருக்கண்ணபுரம் - சௌரிராஜன்விஷயம்.
௪௮௫	௯௧	திருமோகூர் - காளமேகபிரான்விஷயம்.
௪௮௭	௯௨	திருவனந்தபுரம் - அனந்தபத்மநாபன்விஷயம்.
௪௯௨	௯௬	திருவாட்டாறு - ஆதிகேசவன்விஷயம்.
௪௯௫	௯௭	திருமாலிருசோலை - அழகர்விஷயம்.
௪௯௬	௯௮	தென்திருப்பேர் - அப்பக்குடத்தான்விஷயம்.
௪௯௮	௯௯	முக்தர்நித்தியவிபூதியில்யெழுந்தருளும்போதுநடக்கு[ம்வரிசைகள்.
௪௯௯	௧௦௦	பரமபதத்தில்பர்ம்மானுபவம்.

ஆ ழ் வா ர் தி ரு வ டி க ளே ச ர ண ம்.

திவ்யதேசவிஷய அட்டவணை.

மு ற் றி ற் று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்மாழ்வார் ப்ரபாவஸங்க்ரஹம்.

ஸ்ரீவைகுண்டத்திலே நித்திய முக்தர் ஸேவிக்கும்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் அபௌருஷேயமான வேதங்கள் நம்மையுள்ளபடி சொல்லுகின்றன. பூமியின்கண்ணுள்ள ஜீவகோடிகள் கலியின் கொடுமையா லதைத் தெரிந்துகொள்ளமாட்டாமல் கெட்டுப் போகிறார்களே இதற்கு நித்ய ஸூரிகளையுந் தேவி பூமி நீளைகளையும் ஆழ்வாராசார்யர்களாகப் பூலோகத்தி லவதரிப்பித்தவர்களில் தாமு மநுப்ரவேசரூப ஆவிர்ப்பவ விசேஷத்தையுஞ் செய்தவர்களால் தத்வஹிதபுருஷார்த்த ப்ரகாசமான வேதாந்த ஸித்தாந்தத்தைத் த்ராவிட ப்ரபந்தங்களாலும், பல வ்யாக்யானங்களாலும் நிலைநிறுத்தி, யம்ப்ரந்தத்தாலே ஜீவாத்மாக்கள் ஸ்வரூபந்தெரிந் துபாயத்திலே ப்ரவர்த்தித்துஜ்ஜீவிக்கும்படி செய்யவேணுமென்று தந்திருவுள்ளத்திலெண்ணி நித்யஸூரிகளுக்குத் தலைவரான ஸேனைமுதலியாரைப்பார்த்துத் திருக்குருகா புரியிலிருக்கிற தந்தாமரை கமலராகிய காரிமுதலியா ரவர் பத்தினி உடையநங்கையும் புத்திரன்வேண்டி நம்மைக்குறித்து தவஞ் செய்கிறார்க ளவர்களுக்குப் புத்திரராய் அவதரியுமென்று திருவருள் செய்தார்.—அப்படியே ஸேனைமுதலியான நம்மாழ்வார்-கலியுகம் பிறந்த-௪௩-ம் நாளான பிரமாதி(வருஷ) வைகாசிமீ' பௌர்ணமி - வெள்ளிக்கிழமைகூடின விசாகநக்ஷத்திரத்தில் காரி உடைய நங்கையாருக்குப் புத்திரராய்ப்பிறந்து ப்ராக்ருத சிசுக்கள்போலழாமலும், ஸ்தந்யபானம் பண்ணாமலும், திருக்கண்விழியாமலும் மசையற்று நாளுக்கு நாள் திருமேனி பரிவித்ததாக இருந்தா லிந்த ஆச்சரியத்தை மாதா பிதாக்கள்கண்டு பன்னிரண்டாநாள் மாறனென்று திருநாமஞ்சாத்தித் திருக்குருகூர் எம்பெருமானுடைய பொலிந்து நின்றபிரான் ஸந்நிதியில் ஸேவிக்கப்பண்ணுவித்தார்கள்.—அப்போதாழ்வார் தவழ்ந்துசென்று முன்னின்ற? திருப்புளியின்கீழ்ப் பத்மாஸனராய் ஞானமுத்திரை தரித்தெழுந்தருளியிருந்தார். இப்படி-௧௬ திருநக்ஷத்திரஞ் சென்றபின் ஸ்ரீயப்பதியானவர் ஸேனைமுதலியாரான நம்மாழ்வாருக்குத் திருவிலச்சினை முதலாகிய ஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்தருளினார்—நம்மாழ்வாரும் ஸர்வஜ்ஞராய்ஸர்வசக்தராய் மூர்த்திமத்ராய் மிக தேஜஸ்வியாய் இருக்கின்ற விசித்ரமானமையைத் தாய்தந்தைகள்கண்டு ஸடவாயுவை நிராகரித்தவராகையால் சடகோபனென்றும் மகிழ்மாலையிருந்தார்க ளிப்படியிருக்கையில் த்ராவிடவேதத்தை எளிப்பண்ணவும் ஆசார்யனிஷ்டையை யனுஷ்டித்துக் காண்பிக்கவு மவதரித்த மதுரகவியாழ்வார் திருவயோத்தியிலிருக்கை யிலொருநாள் திருக்கோளூர் எம்பெருமானை யாத்திரையுற்று சேர நம்போதொரு பெரிய தேஜஸைக்கண்டு தெற்கிலென்று நினைத்து

னைச்சோதிக்கத் திருவுள்ளமாய் அங்குலிப்பைக்கொண்டு திருநகரியெழுந்தருளி அதற்குத் தென்புறத்தில்போக அப்போதந்த தேஜஸை வடதிசையிற்கண்டு மறுபடி திருநகரில்வந்து சோதிக்கத் திருப்புளியாழ்வாரடியிலே நம்மாழ்வாரைக்கண்டு ஜ்ஞானமாயிருக்க திவ்ய சரித்ரத்தைக்கேட்டு ப்ராக்ருதஸம்பந்தமற்றிருக்கிற நம்மாழ்வார்விஷயத்தில் போர ப்ரீதிபண்ணி (செத்தின்வயிற்றில் சிறியதுபிறந்தால் எத்தைத்தின்றெங்கே கிடக்கும்) என்று விண்ணப்பஞ்செய்ய நம்மாழ்வார், (அத்தைத்தின் றங்கேகிடக்கும்) என்று அமலங்களாகவிழித்துக் கடாக்ஷித்தருள, மதுரகவிகளும் மகிழ்ந் தடியேனுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கிற விசேஷார்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அப்போது ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீதேவி பூதேவ்யுத பரிஜனங்களோடே பெரியதிருவடிமேலெழுந்தருளி நம்மாழ்வாருக்கு ஸேவை ஸாதித்தருள, நம்மாழ்வார் திவ்யாத்மஸ்வரூப திவ்ய மங்களவிக்ரஹ திவ்யதேவி பூஷணாயுத திவ்யகுண சேஷ்டிதங்களையு மனுபவித்து அவ்வனுபவத்தைப் பிரகாசிப்பிக்கிற ஸர்வவேதாந்தஸாரமான திருமந்த்ரார்த்தத்தை நான்கு ப்ரபந்தங்களாலே ப்ரகாசிப்பித்தருளத் திருவுள்ளமாய் ருக்வேதஸாரமான திருவிருத்தத்தையும் யஜுர்வேதஸாரமான திருவாசிரியத்தையும், அதர்வணவேதஸாரமான பெரியதிருவந்தாதியையும், ஸாமவேதஸாரமான திருவாய்மொழியையும், மதுரகவிகள் பட்டோலைகொள்ள அவருக்கு ப்ரஸாதித்தருளினார். மதுரகவிகளு மவைகளைப்பெற்று மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தின நம்மாழ்வாரைக்காட்டிலும் தேவுமற்றறியாதவராய் (என்னப்பனின்னித்தென்குருகூர்நம்பியென்றக்கா லண்ணிக்குமமுதூறும்) என்று பாகவதசேஷத்வ பர்யந்தமாகக்காட்டத் திருவுள்ளமாய ஆழ்வார் தம்மிடத்தில்பண்ணின கடாக்ஷவிசேஷத்தை கண்ணிநுண் சிறுத்தாம்பாலே ப்ரகாசிப்பித்தருளிற்குப் பொலிந்துநின்ற பிரானுக்கே ப்ரஸாதிக்கப்பட்ட மகிழம்பூமாலையைச் சாத்திக்கொண்டு வகுளாபரணனென்கிற திருநாமத்தையுடையவரான நம்மாழ்வார் ஆசார்யபக்தி தலையெடுத்து ஆத்மகுணபூர்ணரான மதுரகவிகள்பக்க லீடுபட்டு விசேஷ கடாக்ஷஞ்செய்தருளி பலமகஸ்தளையுந்திருத்தி - ௩௫-திருநக்ஷத்ரத்துக்குமேல் நித்யவிபூதிக்கெழுந்தருளினார் ஸ்ரீமதுரகவிகள் நம்மாழ்வாரைத் திருநகரியில் அர்ச்சாரூபமாகத் திருப்ரதிஷ்டைசெய்து ப்ரந்தசதுஷ்டயத்தையும் ப்ரவர்த்திப்பித்தருளினார்.

நம்மாழ்வார்திருவடிகளே சரணம்.

☞ இந்த - குருபரம்பராப்ரபாவத்தில்

பாக்கங்கண்டுகொள்வது.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தனியன்கள்.

ஸ்ரீமந்நாதமுநிகள் அருளிச்செய்தது.

భక్తామృతం విశ్వజనానుమోదనం
సర్వార్థదం శ్రీశఠకోపవాఙ్మయం
సహస్రశాఖోపనిషత్సమాగమం
నమామ్యహం ద్రావిడవేదసాగరం

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

மதுரகவிகள் அருளிச்செய்தது.

திருவழுதிநாடென்றுந்தென்குருகூரென்றும்
மருவினியவண்பொருநலென்றும் — அருமறைகள்
அந்தாதிசெய்தானடியிணையேயெப்பொழுதும்
சிந்தியாய்நெஞ்சேதெளிந்து.

நாதமுனிகள் அருளிச்செய்தது.

மனத்தாலும்வாயாலும்வண்குருகூர்ப்பேணும்
இனத்தாரையல்லாதிறைஞ்சேன் — தனத்தாலும்
ஏதுங்குறைவில்லேனெந்தைசடகோபன்
பாதங்கள்யாமுடையபற்று.

பிள்ளான் அருளிச்செய்தது.

ஏய்ந்தபெருங்கீர்த்திஇராமாநுசமுனிதன்
வாய்ந்தமலர்ப்பாதம்வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன்செந்தமிழ்வேதந்தரிக்கும்
பேராதவுள்ளம்பெற.

பிள்ளான் அருளிச்செய்தது.

வான்திகழுஞ்சோலைமதிளரங்கர்வண்புகழ்மேல்
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்—ஈன்ற
முதற்றாய்சடகோபன்மொய்ம்பால்வளர்த்த
இதத்தாயிராமாநுசன்.

பிள்ளான் அருளிச்செய்தது.

மிக்கவிறைநிலையும்மெய்யாமுயிர்நிலையும்
தக்கநெறியுந்தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும்வாழ்வினையுமோதுங்குருகையர்கோன்
யாழினிசைவேதத்தியல்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.



ஸ்ரீசேனேசாம்சரான நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
கலியுகம்பிறந்த-௪௩-வது.நாளானபிரமாதி வைகாசிமீ விசாகம்.



ஆழ்வார்திருவடிகளேசரணம்

திராவிடவேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்துள்

நம்மாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

ஸாமவேதஸாரமாகிய

திருவாய்மொழி

முதற்பத்து.

க-ம் திருவாய்மொழி-உயர்வற

எம்பெருமானது கல்யாணகுணங்களையும் பரத்வத்தையும் அருளிச்செய்தார்.

கலிவிருத்தம் பண்-முதிர்ந்தகுறிஞ்சி-தாளம்-ஏழொத்து.

உயர்வறவுயர்நலமுடையவனெவனவன்
மயர்வறமதிநலமருளினனெவனவன்
அயர்வறுமமரர்களதிபதியெவனவன்
துயரறுசுடரடிதொழுதெழென்மனனே. (க)

மனனகமலமறமலர்மிசையெழுதரும்
மனனுணர்வளவிலன்பொறியுணர்வவையிலன்
இனனுணர்முழுநலமெதிர்நிகழ்கழிவினும்
இனனிலனெனனுயிர்மிகுநரையிலனே. (உ)

இலனதுவுடையனிதெனநினைவரியவன்
நிலனிடைவிசும்பிடையுருவினனருவினன்
புலனொடுபுலனலனொழிவிலன்பரந்த
நலனுடையொருவனைநணுகினம்நாமே. (௩)

நாமவனிவனுவனவளிவளுவளெவள்
தாமவரிவருவரதுவிதுவுதுவெது
வீமவையிவையுவையவைநலந்தீங்கவை
ஆமவையாயவையாய்நின்றவவரே. (௪)

அவரவர்தமதமதறிவறிவகைவகை
அவரவரிறையவரெனவடியடைவர்கள்
அவரவரிறையவர்குறைவிலரிறையவர்
அவரவர்விதிவழியடையநின்றனரே. (௫)

நின்றனரிருந்தனர்கிடந்தனர்திரிந்தனர்
நின்றிலரிருந்திலர்கிடந்திலர்திரிந்திலர்
என்றுமோரியல்வினரெனநினைவரியவர்
என்றுமோரியல்வொடுநின்றவெந்திடரே. (௬)

திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசைப்
படர்பொருள்முழுவதுமாயவையவைதொறும்
உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்துளன்
சுடர்மிகுசுருதியுளிவையுண்டசுரனே. (௭)

சுரரறிவருநிலைவிண்முதல்முழுவதும்
வரன்முதலாயவைமுழுதுண்டபரபரன்
புரமொருமூன்றெரித்தமரர்க்குமறிவியந்து
அரனயனெனவுலகழித்தமைத்துளனே. (௮)

உளனெனிலுளனவனுருவமிவ்வுருவுகள்
உளனலனெனிலவனருவமிவ்வருவுகள்
உளனெனவிலனெனவிவைகுணமுடைமையில்
உளனிருதகைமையொடொழிவிலன்பரந்தே. (௯)

பரந்ததண்பரவையுள்நீர்தொறும்பரந்துளன்
பரந்தவண்டமிதெனநிலவிசும்பொழிவறக்
கரந்தசிலிடந்தொறுமிடந்திகழ்பொருள்தொறும்
கரந்தெங்கும்பரந்துளனிவையுண்டகரனே. (௧௦)

கரவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசை
வரனவில்திறல்வலியளிபொறையாய்நின்ற
பரனடிமேல்குருகூர்ச்சடகோபன்சொல்
நிரனிறையாயிரத்திவைபத்துமவீடே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

உ - வது. வீடுமின்.

அப்படிப்பட்டபரத்வத்திலேயும்ப்ரபத்திபண்ணி
உஜ்ஜீவியுங்களென்றருளிச்செய்தார்.

வஞ்சித்துறை-பண்-முதிர்ந்தகுறிஞ்சி-தாளம்-ஏழொத்து.

வீடுமின்முற்றவும்
வீடுசெய்தும்முயிர்
வீடுடையானிடை
வீடுசெய்ம்மினே. (௧)

மின்னின்நிலையில
மன்னுயிராக்கைகள்
என்னுமிடத்திறை
உன்னுமின்நீரே. (௨)

நீர்நுமதென்றிவை
வேர்முதல்மாய்த்திறை
சேர்மினுயிர்க்கதன்
நேர்நிறையில்லே. (௩)

இல்லதுமுள்ளதும்
அல்லதவனுரு
எல்லையிலந்நலம்
புல்குபற்றற்றே. (௪)

அற்றதுபற்றெனில்
உற்றதுவீடுயிர்
செற்றதுமன்னுறில்
அற்றிறைபற்றே. (௫)

பற்றிலனீசனும்
முற்றவுநின்றனன்
பற்றிலையாயவன்
முற்றிலடங்கே. (௬)

அடங்கெழில்சம்பத்
தடங்கக்கண்டீசன்
அடங்கெழிலஃதென்
றடங்குகவுள்ளே. (௭)

உள்ளமுரைசெயல்
உள்ளவிம்மூன்றையும்
உள்ளிக்கெடுத்திறை
உள்ளிலொடுங்கே. (௮)

ஒடுங்கவவன்கண்
ஒடுங்கலுமெல்லாம்
விடும்பின்னுமாக்கை
விடும்பொழுதெண்ணே. (௯)

எண்பெருக்கந்நலத்
தொண்பொருளீறில
வண்புகழ்நாரணன்
திண்கழல்சேரே. (௧௦)

சேர்த்தடத்தென்குரு
கூர்ச்சடகோபன்சொல்
சீர்த்தொடையாயிரத்
தோர்த்தவிப்பத்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

௩ - வது. பத்துடை.

ஸர்வேச்வரனதிசுலபனென்
ஆச்ரயிக்கும்படி தங்களையெளிவடியார்களிடத்தில்வந்திருக்கும்
ஸௌலப்யகுணத்தை யருளிச்செய்தார்.

கலித்துறை-பண்-நட்டபாஷை-தாளம்-ஏழொத்து.

பத்துடையடியவர்க்கெளியவன்பிறர்களுக்கரிய
வித்தகன்மலர்மகள்விரும்புமருமபெறலடிகள்
மத்துறுகடைவெண்ணெய்களவினிலுரவிடையாப்புண்
டெத்திறமுரலினோடிணைந்திருந்தேங்கியவெளிவே. (௧)

எளிவருமியல்வினனிலைவரம்பிலபல்பிறப்பாய்
ஒளிவருமுழுநலமுதலிலகேடிலவீடாம்
தெளிதருநிலைமையதொழிவிலன்முழுவதுமிறையோன்
அளிவருமருளினோடகத்தனன்புறத்தனனமைந்தே. (௨)

அமைவுடையறநெறிமுழுவதுமுயர்வறவுயர்ந்
தமைவுடைமுதல்கெடலொடிவிடையறநிலமதுவாம்
அமைவுடையமரருமியாவையுமியாவருந்தானும்
அமைவுடைநாரணன்மாயையையறிபவர்யாரே (௩)

யாருமோர்நிலைமையனெனவறிவரியவெம்பெருமான்
யாருமோர்நிலைமையனெனவறிவெளியவெம்பெருமான்
பேருமோராயிரம்பிறபலவுடையவெம்பெருமான்
பேருமோருருவமுமுளதில்லையிலதில்லைபிணக்கே. (௪)

பிணக்கறவறுவகைச்சமயமுநெறியுள்ளியுரைத்த
கணக்கறுநலத்தனனந்தமிலாதியம்பகவன்
வணக்குடைத்தவநெறிவழிநின்றுபுறநெறிகளைகட்
டுணக்குமின்பசையறவவனுடையுணர்வுகொண்டுணர்ந்தே. (௫)

உணர்ந்துணர்ந்திழிந்தகன்றுயர்ந்துருவியந்தவிந்நிலைமை
உணர்ந்துணர்ந்துணரிலுமிறைநிலையுணர்வரிதுயிர்காள்
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்தரியயனரனென்னுமிவரை
உணர்ந்துணர்ந்துரைத்துரைத்திறைஞ்சுமின்மனப்பட்டதொன்றே. (௬)

ஒன்றெனப்பலவெனவறிவருவடிவினுள்நின்ற
நன்றெழில்நாரணன்நான்முகனரனென்னுமிவரை

ஒன்றநும்மனத்துவைத்துள்ளிநும்மிருபசையறுத்து
நன்றெனநலஞ்செய்வதவனிடைநம்முடைநாளே. (௭)

நாளுநின்றடுநமபழமையங்கொடுவினையுடனே
மாளுமோரிடர்குறைவில்லைமனனகமலமறக்கழுவி
நாளுநந்திருவுடையடிகள்தம்நலங்கழல்வணங்கி
மாளுமோரிடத்திலும்வணக்கொடுமாள்வதுவலமே. (௮)

வலத்தனன்திரிபுரமெரித்தவனிடம்பெறத்துந்தித்
தலத்தெழுதிசைமுகன்படைத்தநல்லுலகமுந்தானும்
புலப்படப்பின்னுந்தன்னுலகத்திலகத்தனன்றோனே
சொலப்புகிலிவைபின்னும்வயிற்றுளவிவையவன்துயக்கே. (௯)

துயக்கறுமதியில்நன்ஞானத்துளமரரைத்துயக்கு
மயக்குடைமாயைகள்வானிலும்பெரியனவல்லன்
புயற்கருநிறத்தனன்பெருநிலங்கடந்தநல்லடிப்போ
தயர்ப்பிலனலற்றுவன்தழுவுவன்வணங்குவனமர்ந்தே. (௰)

அமரர்கள்தொழுதெழவலைகடல்கடைந்தவன்றன்னை
அமர்பொழில்வளங்குருகூர்ச்சடகோபன்குற்றேவல்
அமர்சுவையாயிரத்தவற்றினுளிவைபத்தும்வல்லார்
அமரரோடுயர்விற்சென்றறுவர்தம்பிறவியஞ்சிறையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி -௩- இ -பாசுரம்-௩௩.

௪ - வது. அஞ்சிறைய.

பிராட்டிதன்மையையடைந்துதம்குறையுடைய
அபராதத்தையிட்டே தூதுவாக்கொண்டு பட்சிகளைத்தூதுவிடுகிறார்.

கலிவிருத்தம்-பண்-நட்டபாஷை-தாளம்-ஏழொத்து.

அஞ்சிறையமடநாராயளியத்தாய்நீயுநின்
அஞ்சிறையசேவலுமாயாவோவென்றெனக்கருளி
வெஞ்சிறைப்புள்ளுயர்த்தாற்கென்விதுதாய்ச்சென்றக்கால்
வன்சிறையிலவன்வைக்கில்வைப்புண்டாலென்செய்யுமே. (௧)

என்செய்யதாமரைக்கட்பெருமானார்க்கென்தூதாய்
என்செய்யுமுரைத்தக்கால்இனக்குயில்காள்நீரலிரே
முன்செய்தமுழுவினையால்திருவடிக்கீழ்க்குற்றேவல்
முன்செய்யமுயலாதேனகலுவதோவிதியினமே. (௨)

விதியினாற்பெடைமணக்குமென்னடையவன்னங்காள்
மதியினாற்குறண்மாணாயுலகிரந்தகள்வற்கு
மதியிலேன்வல்வினையேமாளாதோவென்றொருத்தி
மதியெல்லாமுள்கலங்கிமயங்குமாலென்னீரே. (௩)

என்னீர்மைகண்டிரங்கியிதுதகாதென்னாத
என்னீலமுகில்வண்ணற்கென்சொல்லியான்சொல்லுகேனோ
நன்னீர்மையினியவர்கட்டங்காதென்றொருவாய்ச்சொல்
நன்னீலமகன்றில்காள்* நல்குதிரோநல்கீரோ. (௪)

நல்கித்தான்காத்தளிக்கும்பொழிலேழும்வினையேற்கே
நல்கத்தானாகாதோநாரணனைக்கண்டக்கால்
மல்குநீர்ப்புனற்படப்பையிரைதேர்வண்சிறுகுருகே
மல்குநீர்க்கண்ணேற்கோர்வாசகங்கொண்டருளாயே. (௫)

அருளாதநீரருளியவராவிதுவராமுன்
அருளாழிப்புட்கடவீரவர்வீதியொருநாளென்
றருளாழியம்மானைக்கண்டக்காலிதுசொல்லி
அருளாழிவரிவண்டேயாமுமென்பிழைத்தோமே. (௬)

என்பிழைகோப்பதுபோலப்பனிவாடையீர்கின்ற
என்பிழையேநினைந்தருளியருளாததிருமாலார்க்
கென்பிழைத்தாடிருவடியின்றகவினுக்கென்றொருவாய்ச்சொல்
என்பிழைக்குமிளங்கிளியேயான்வளர்த்தநீயலையே. (௭)

நீயலையேசிறுபூவாய்நெடுமாலார்க்கென்றூதாய்
நோயெனதுநுவலென்னநுவலாதேயிருந்தொழிந்தாய்
சாயலொடுமணிமாமைதளர்ந்தேனானினியுனது
வாயலகிலின்னடிசில்வைப்பாரைநாடாயே. (௮)

நாடாதமலர்நாடிநாடோறுநாரணன்றன்
வாடாதமலரடிக்கீழ்வைக்கவேவகுக்கின்று
வீடாடிவீற்றிருத்தல்வினையற்றதென்செய்வதோ
ஊடாடுபனிவாடாயுரைத்தீராயெனதுடலே. (௯)

உடலாழிப்பிறப்புவீடுயிர்முதலாமுற்றுமாய்க்
கடலாழிநீர்தோற்றியதனுள்ளேகண்வளரும்
அடலாழியம்மானைக்கண்டக்காலிதுசொல்லி
விடலாழிமடநெஞ்சேவினையோமொன்றாமளவே. (௰)

* மகன்றில் - எ - து - அன்றில்.

அளவியன்றவேழுலகத்தவர்பெருமான்கண்ணனை
வளவயல்சூழ்வண்குருகூர்ச்சடகோபன்வாய்ந்துரைத்த
அளவியன்றவந்தாதியாயிரத்துளிப்பத்தின்
வளவுரையாற்பெறலாகும்வானோங்குபெருவளமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௪-ஐ-பாசுரம்-௪௪.

௫-வது. வளவேழ்.

ஈச்வரன்தன்னுடையசீலகுணத்தாலே
ஆழ்வாருடையவிச்லேஷத்தைபொறுக்கமாட்டாமல்சேர்த்துக்கொண்டதை
அருளிச்செய்தார்.

ஆசிரியவிருத்தம்-பண்-செருந்தி-தாளம்-ஏழொத்து.

வளவேழுலகின்முதலாயவானோரிறையையருவினையேன்
களவேழ்வெண்ணெய்தொடுவுண்டகள்வாவென்பன்பின்னையும்
தளவேழ்முறுவற்பின்னைக்காய்வல்லானாயர்தலைவனாய்
இளவேறேழுந்தழுவியவெந்தாயென்பனினைந்துநைந்தே. (௧)

நினைந்துநைந்துள்கரைந்துருகியிமையோர்பலருமுனிவரும்
புனைந்தகண்ணிநீர்சாந்தம்புகையோடேந்திவணங்கினால்
நினைந்தவெல்லாப்பொருள்களுக்கும்வித்தாய்முதலிற்சிதையாமே
மனஞ்செய்ஞானத்துன்பெருமைமாசூணாதோமாயோனே. (௨)

மாயோனிகளாய்நடைகற்றவானோர்பலருமுனிவரும்
நீயோனிகளைப்படையென்றுநிறைநான்முகனைப்படைத்தவன்
சேயோனெல்லாவறிவுக்குந்திசைகளெல்லாந்திருவடியால்
தாயோனெல்லாவெவ்வுயிர்க்குந்தாயோன்றானோருருவனே. (௩)

தானோருருவேதனிவித்தாய்த்தன்னின்மூவர்முதலாய
வானோர்பலருமுனிவருமற்றுமற்றுமுற்றுமாய்த்
தானோர்பெருநீர்தன்னுள்ளேதோற்றியதனுட்கண்வளரும்
வானோர்பெருமான்மாமாயன்வைகுந்தனெம்பெருமானே. (௪)

மானேய்நோக்கிமடவாளைமார்பிற்கொண்டாய்மாதவா
கூனேசிதையவுண்டைவில்நிறத்திற்றெறித்தாய்கோவிந்தா
வானார்சோதிமணிவண்ணாமதுசூதாநீயருளாயுன்
தேனேமலருந்திருப்பாதஞ்சேருமாறுவினையேனே. (௫)

வினையேன்வினைதீர்மருந்தானாய்விண்ணோர்தலைவாகேசவா
மனைசேராயர்குலமுதலேமாமாயனேமாதவா
சினையேதழையமராமரங்களேழுமெய்தாய்சிரீதரா
இனையாயினையபெயரினாயென்றுநைவனடியேனே. (௬)

அடியேன்சிறியஞானத்தனறிதலார்க்குமரியானைக்
கடிசேர்தண்ணந்துழாய்க்கண்ணிபுனைந்தான்றன்னைக்கண்ணனை
செடியாராக்கையடியாரைச்சேர்தல்தீர்க்குந்திருமாலை
அடியேன்காண்பானலற்றுவனிதனின்மிக்கோரயர்வுண்டே. (௭)

உண்டாயுலகேழ்முன்னமேயுமிழ்ந்துமாயையாற்புக்
குண்டாய்வெண்ணெய்சிறுமனிசருவலையாக்கைநிலையெய்தி
மண்டான்சோர்ந்ததுண்டேலும்மனிசர்க்காகும்பீர்சிறிதும்
அண்டாவண்ணமண்கரையநெய்யூண்மருந்தோமாயோனே. (௮)

யோந்தியலவலைப்பெருமாவஞ்சப்பேய்வீய
யகுழவியாய்விடப்பாலமுதாவமுதுசெய்திட்ட
ஞோர்தனித்தலைவன்மலராண்மைந்தனெவ்வுயிர்க்குந்
ம்மானென்னம்மானம்மாமூர்த்தியைச்சார்ந்தே. (௯)

ருவல்வினைகளுஞ்சரித்துமாயப்பற்றறுத்துத்
ந்பான்மனம்வைக்கத்திருத்திவீடுதிருத்துவான்
ஆர்ந்தஞானச்சுடராகியகலங்கீழ்மேலளவிறந்து
நேர்ந்தவுருவாயருவாகுமிவற்றினுயிராநெடுமாலே. (௰)

மாலேமாயப்பெருமானேமாமாயனேயென்றென்று
மாலேயேறிமாலருளான்மன்னுகுருகூர்ச்சடகோபன்
பாலேய்தமிழரிசைகாரர்பத்தர்பரவுமாயிரத்தின்
பாலேபட்டவிவைபத்தும்வல்லார்க்கில்லைப்பரிவதே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௫-இ-பாசுரம்-௫௫.

௬-வது. பரிவதில்.

ஈச்வரனிடத்தில்படிப்பட்டதுனைப்பிருப்பதையறியாமல்—
ஆத்மாக்கள்... சமாராதனதரியாயமென்று ஈச்வரனை ஆராதியுங்களென்று
எல்லாருமாச்ரயித்து உச்சீவியுங்களென்றார்.

வஞ்சிவிருத்தம்-பண்-முதிர்ந்தகுறிஞ்சி-தாளம்-ஏழொத்து.

பரிவதிலீசனைப்பாடி
விரிவதுமேவலுறுவீர்
பிரிவகையின்றிநன்னீர்தூய்
புரிவதுவும்புகைபூவே. (௧)

மதுவார்தண்ணந்துழாயான்
முதுவேதமுதல்வனுக்
கெதுவேதென்பணியென்னா
ததுவேவாட்செய்யுமீடே. (௨)

ஈடுமெடுப்புமிலீசன்
மாடுவிடாதென்மனனே
பாடுமென்னாவவன்பாடல்
ஆடுமெனங்கமணங்கே (௩)

அணங்கெனவாடுமெனங்கம்
வணங்கிவழிபடுமீசன்
பிணங்கியமரர்பிதற்றுங்
குணங்கெழுகொள்கையினானே.

கொள்கைகொளாமையிலாதான்
எள்கலிராகமிலாதான்
விள்கைவிள்ளாமைவிரும்பி
உள்கலந்தார்க்கோரமுதே. ( )

அமுதமமரர்கட்கீந்த
நிமிர்சுடராழிநெடுமால்
அமுதிலுமாற்றவினியன்
நிமிர்திரைநீள்கடலானே. (௬)

நீள்கடல்சூழிலங்கைக்கோன்
தோள்கள்தலைதுணிசெய்தான்
தாள்கள்தலையில்வணங்கி
நாள்கடலைக்கழிமினே. (௭)

கழிமின்றொண்டீர்கள்கழித்துத்
தொழுமினவனைத்தொழுதால்
வழிநின்றவல்வினைமாள்வித்
தழிவின்றியாக்கந்தருமே. (௮)

தருமவரும்பயனாய
திருமகளார்தனிக்கேள்வன்
பெருமையுடையபிரானார்
இருமைவினைகடிவாரே. (௯)

கடிவார்தீயவினைகள்
நொடியாருமளவைக்கண்
கொடியாவடுபுள்ளுயர்த்த
வடிவார்மாதவனாரே. (௰)

மாதவன்பாற்சடகோபன்
தீதவமின்றியுரைத்த
ஏதமிலாயிரத்திப்பத்
தோதவல்லார்பிறவாரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௬-இ-பாசுரம்-௬௬.

௭-வது. பிறவி.

ஸ்வாராதியனான ஈச்வரனுடைய ஆராதனம் ஸுகரூபமாயிருக்குமென்றருளிச்செய்தார்.

கலிவிருத்தம் - பண் - வியந்தம் - தாளம் - ஏழொத்து.

பிறவித்துயரறஞானத்துணின்று
துறவிச்சுடர்விளக்கந்தலைப்பெய்வார்
அறவனையாழிப்படையந்தணனை
மறவியையின்றிமனத்துவைப்பாரே. (௧)

வைப்பாம்மருந்தாமடியரைவல்வினைத்
துப்பாம்புலனைந்துந்துஞ்சக்கொடானவன்
எப்பாலெவர்க்குநலத்தாலுயர்ந்துயர்ந்
தப்பாலவனெங்களாயர்கொழுந்தே. (௨)

ஆயர்கொழுந்தாயவரால்புடையுண்ணும்
மாயப்பிரானையென்மாணிக்கச்சோதியைத்
தூயவமுதைப்பருகிப்பருகியென்
மாயப்பிறவிமயர்வறுத்தேனே. (௩)

மயர்வறவென்மனத்தேமன்னினான்றன்னை
உயர்வினையேதருமொண்சுடர்க்கற்றையை
அயர்விலமரர்களாதிக்கொழுந்தையென்
இசைவினையென்சொல்லியான்விடுவேனோ. (௪)

விடுவேனோவென்விளக்கையென்னாவியை
நடுவேவந்துய்யக்கொள்கின்றநாதனைத்
தொடுவேசெய்திளவாய்ச்சியர்கண்ணினுள்
விடவேசெய்துவிழிக்கும்பிரானையே. (௫)

பிரான்பெருநிலங்கீண்டவன்பின்னும்
விராய்மலர்த்துழாய்வேய்ந்தமுடியன்
மராமரமெய்தமாயவனென்னுள்
இரானெனிற்பின்னையானொட்டுவேனோ. (௬)

யானொட்டியென்னுளிருத்துவமென்றிலன்
தானொட்டிவந்தென்றனிநெஞ்சைவஞ்சித்
தூனொட்டிநின்றென்னுயிரிற்கலந்தியல்
வானொட்டுமோவினியென்னைநெகிழ்க்கவே. (௭)

என்னைநெகிழ்க்கிலுமென்னுடைநன்னெஞ்சந்
தன்னையகல்விக்கத்தானுங்கில்லானினிப்
பின்னைநெடும்பணைத்தோள்மகிழ்பீடுடை
முன்னையமரர்முழுமுதலானே. (௮)

அமரர்முழுமுதலாகியவாதியை
அமரர்க்கமுதீந்தவாயர்கொழுந்தை
அமரவழும்பத்துழாவியென்னாவி
அமரத்தழுவிற்றினியகலுமோ. (௯)

அகலிலகலுமணுகிலணுகும்
புகலுமரியன்பொருவல்லனெம்மான்
நிகரிலவன்புகழ்பாடியிளைப்பிலம்
பகலுமிரவும்படிந்துகுடைந்தே. (௧௦)

குடைந்துவண்டுண்ணுந்துழாய்முடியானை
அடைந்ததென்குருகூர்ச்சடகோபன்
மிடைந்தசொற்றொடையாயிரத்திப்பத்
துடைந்துநோய்களையோடுவிக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
ஆக திருவாய்மொழி-௭ - ௰ - பாசுரம்-௭௭.

௮-வது. ஓடும்புள்.

ஸுகரூபமான ஆச்ரயணமுடைய ஈச்வரன்
காணதாயத்தாலும் கெட்டமாட்டாத சேதனரிடத்தில் ஆர்ஜவகுணத்தோடே
ஆச்ரயிச்சவரை பண்ணிக்கொண்டிருப்பானென்று
அருளிச்செய்தார்.

குறளடிவஞ்சித்துறை - பண் - இந்தளம் - தாளம் - ஏழொத்து.

ஓடும்புள்ளேறிச்
சூடுந்தண்டுழாய்
நீடுநின்றவை
ஆடுமம்மானே. (௧)

அம்மானாய்ப்பின்னும்
எம்மாண்புமானான்
வெம்மாவாய்கீண்ட
செம்மாகண்ணனே. (௨)

கண்ணாவானென்றும்
மண்ணோர்விண்ணோர்க்குத்
தண்ணார்வேங்கட
விண்ணோர்வெற்பனே. (௩)

வெற்பையொன்றெடுத்
தொற்கமின்றியே
நிற்குமம்மான்சீர்
கற்பன்வைகலே. (௪)

வைகலும்வெண்ணெய்
கைகலந்துண்டான்
பொய்கலவாதென்
மெய்கலந்தானே. (௫)
கலந்தென்னாவி
நலங்கொளாதன்
புலன்கொண்மாணாய்
நிலங்கொண்டானே. (௬)
கொண்டானேழ்விடை
உண்டானேழ்வையந்
தண்டாமஞ்செய்தென்
எண்டானானானே. (௭)
ஆனானாயன்
மீனோடேனமுந்
தானானென்னில்
தானாயசங்கே. (௮)
சங்குசக்கரம்
அங்கையிற்கொண்டான்
எங்குந்தானாய
நங்கணாதனே. (௯)
நாதன்ஞாலங்கொள்
பாதனென்னம்மான்
ஓதம்போல்கிளர்
வேதநீரனே. (௰)
நீர்புரைவண்ணன்
சீர்சடகோபன்
நேர்தலாயிரத்
தோர்தலிவ்வையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி - அ - இ - பாசுரம் - அஅ.

௯ - வது. இவையும்.

ஆர்ஜவகுண ஸந்தானம்பண்ணின அம்பிடத்தில் ஈச்வரன் ஸாத்மிக்க ஸர்வாவயவ ஸம்ச்லேஷம் பண்ணின அநுபவரஸத்தை யருளிச்செய்தார்.

ஆசிரியவிருத்தம் - பண் - கொல்லி - தாளம் - ஏறொத்து.

இவையுமவையுமுவையுமிவருமவருமுவரும்
எவையுமெவருந்தன்னுள்ளேயாகியுமாக்கியுங்காக்கும்
அவையுட்டனிமுதலெம்மான்கண்ணபிரானென்னமுது
சுவையன்திருவின்மணாளனென்னுடைச்சூழலுளானே. (௧)

சூழல்பலபலவல்லான்றொல்லையங்காலத்துலகைக்
கேழலொன்றாகியிடந்தகேசவனென்னுடையம்மான்
வேழமருப்பையொசித்தான்விண்ணவர்க்கெண்ணலரியான்
ஆழநெடுங்கடற்சேர்ந்தானவனென்னருகலிலானே. (௨)

அருகலிலாயபெருஞ்சீரமரர்களாதிமுதல்வன்
கருகியநீலநன்மேனிவண்ணன்செந்தாமரைக்கண்ணன்
பொருசிறைப்புள்ளுவந்தேறும்பூமகளார்தனிக்கேள்வன்
ஒருகதியின்சுவைதந்திட்டொழிவிலனென்னொடுடனே. (௩)

உடனமர்காதன்மகளிர்திருமகள்மண்மகளாயர்
மடமகளென்றிவர்மூவராளுமுலகமுமூன்றே
உடனவையொக்கவிழுங்கியாலிலைச்சேர்ந்தவனெம்மான்
கடன்மலிமாயப்பெருமான்கண்ணனென்னொக்கலையானே. (௪)

ஒக்கலைவைத்துமுலைப்பாலுண்ணென்றுதந்திடவாங்கிச்
செக்கஞ்செகவன்றவள்பாலுயிர்செகவுண்டபெருமான்
நக்கபிரானோடயனுமிந்திரனுமுதலாக
ஒக்கவுந்தோற்றியவீசன்மாயனென்னெஞ்சினுளானே. (௫)

மாயனென்னெஞ்சினுள்ளான்மற்றெவர்க்குமதுவே
காயமுஞ்சீவனுந்தானேகாலுமெரியுமவனே
சேயனணியனெவர்க்குஞ்சிந்தைக்குங்கோசரமல்லன்
தூயன்துயக்கன்மயக்கனென்னுடைத்தோளிணையானே. (௬)

தோளிணைமேலுநன்மார்பின்மேலுஞ்சுடர்முடிமேலுந்
தாளிணைமேலும்புனைந்ததண்ணந்துழாயுடையம்மான்
கேளிணையொன்றுமிலாதான்கிளருஞ்சுடரொளிமூர்த்தி
நாளணைந்தொன்றுமகலானென்னுடைநாவினுளானே. (௭)

நாவினுள்நின்றுமலருஞானக்கலைகளுக்கெல்லாம்
ஆவியுமாக்கையுந்தானேயழிப்போடளிப்பவன்றானே
பூவியல்நாற்றடந்தோளன்பொருபடையாழிசங்கேந்துங்
காவிநன்மேனிக்கமலக்கண்ணனென்கண்ணினுளானே. (௮)

கமலக்கண்ணனென்கண்ணினுள்ளான்காண்பனவன்கண்களாலே
அமலங்களாகவிழிக்குமைம்புலனுமவன்மூர்த்தி
கமலத்தயனம்பிதன்னைக்கண்ணுதலானொடுந்தோற்றி
அமலத்தெய்வத்தோடுலகமாக்கியென்னெற்றியுளானே. (௯)

நெற்றியுள்நின்றென்னையாளுநிரைமலர்ப்பாதங்கள்சூடிக்
கற்றைத்துழாய்முடிக்கோலக்கண்ணபிரானைத்தொழுவார்
ஒற்றைப்பிறையணிந்தானுநான்முகனுமிந்திரனும்
மற்றையமரருமெல்லாம்வந்தெனதுச்சியுளானே. (௰)

உச்சியுள்ளேநிற்குந்தேவதேவற்குக்கண்ணபிரார்க்
கிச்சையுட்செல்லவுணர்த்திவண்குருகூர்ச்சடகோபன்
இச்சொன்னவாயிரத்துளிவையுமோர்பத்தெம்பிரார்க்கு
நிச்சலும்விண்ணப்பஞ்செய்யநீள்கழல்சென்னிபொருமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி-௯ இ பாசுரம்-௯௯.

௧௦ - வது. பொருமா.

ஸர்வேச்வரன் பண்ணின ஸர்வாத்மஸம்ச்லேஷத்துக்கு
ஹேதுவேதாகிலும் தம்பிடத்திலேயுண்டோவென்று விசாரித்து ஒருஹேதுவு
மில்லாமையாலே ஈச்வரனுடைய நிர்ஹேதுக உபகாரத்வத்தையும்
அருளிச்செய்தார்.

கலிவிருத்தம்-பண்-தக்கராகம்-தாளம்-ஏழொத்து.

பொருமாநீள்படையாழிசங்கத்தொடு
திருமாநீள்கழலேழுலகுந்தொழ
ஒருமாணிக்குறளாகிநிமிர்ந்தவக்
கருமாணிக்கமென்கண்ணுளதாகுமே. (௧)

கண்ணுள்ளேநிற்குங்காதன்மையாற்றொழில்
எண்ணிலும்வருமென்னினிவேண்டுவம்
மண்ணுநீருமெரியுநல்வாயுவும்
விண்ணுமாய்விரியுமெம்பிரானையே. (௨)

எம்பிரானையெந்தைதந்தைதந்தைக்குந்
தம்பிரானைத்தண்டாமரைக்கண்ணனை
கொம்பராவுநுண்ணேரிடைமார்பனை
எம்பிரானைத்தொழாய்மடநெஞ்சமே. (௩)

நெஞ்சமேநல்லைநல்லையுன்னைப்பெற்றால்
என்செய்யோமினியென்னகுறைவினம்
மைந்தனைமலராள்மணவாளனைத்
துஞ்சும்போதும்விடாதுதொடர்கண்டாய். (௪)

கண்டாயேநெஞ்சேகருமங்கள்வாய்க்கின்றோர்
எண்டானுமின்றியேவந்தியலுமா
றுண்டானையுலகேழுமோர்மூவடி
கொண்டானைக்கண்டுகொண்டனைநீயுமே. (௫)

நீயுநானுமிந்நேர்நிற்கின்மேன்மற்றோர்
நோயுஞ்சார்கொடாநெஞ்சமேசொன்னேன்
தாயுந்தந்தையுமாயிவ்வுலகினில்
வாயுமீசன்மணிவண்ணனெந்தையே. (௬)

எந்தையேயென்றுமெம்பெருமானென்றுஞ்
சிந்தையுள்வைப்பன்சொல்லுவன்பாவியேன்
எந்தையெம்பெருமானென்றுவானவர்
சிந்தையுள்வைத்துச்சொல்லுஞ்செல்வனையே. (௭)

செல்வநாரணனென்றசொற்கேட்டலும்
மல்குங்கண்பனிநாடுவன்மாயமே
அல்லுநன்பகலுமிடைவீடின்றி
நல்கியென்னைவிடானம்பிநம்பியே. (௮)

நம்பியைத்தென்குறுங்குடிநின்றவச்
செம்பொனேதிகழுந்திருமூர்த்தியை
உம்பர்வானவராதியஞ்சோதியை
எம்பிரானையென்சொல்லிமறப்பனோ. (௯)

மறப்புஞானமுநானொன்றுணர்ந்திலன்
மறக்குமென்றுசெந்தாமரைக்கண்ணொடு
மறப்பறவென்னுள்ளேமன்னினான்றன்னை
மறப்பனோவினியானென்மணியையே. (௰)

மணியைவானவர்கண்ணனைத்தன்னதோர்
அணியைத்தென்குருகூர்ச்சடகோபன்சொற்
பணிசெயாயிரத்துள்ளிவைபத்துடன்
தணிவிலர்கற்பரேல்கல்விவாயுமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பத்து-௧-ல்-திருவாய்மொழி-௧௦-இ-பாசுரம்-௧௧௦.

இரண்டாம்பத்து.

௧ - வது. வாயுந்திரை.

பாத்விஷயத்தைப்பலவகைகளாலனுபவித்து
ஆத்மவஸ்து பாஹ்ய ஸம்ச்லேஷயோகமாகிலுமென்று ஆசைப்பட்டு அது
கைபடாமையால் ஆர்த்திமிகுந்து ஆழ்வார் தாமொருபிராட்டி அவஸ்தையை
அடைந்து அசேதனங்களையும் திர்யக்குகளையும் தம்மோடே ஸமதுக்கிகளாக
வெண்ணித் தங்கிலித்தமாகப்ரலாபித்ததை-
யருளிச்செய்தார்.

கலிவிருத்தம்-பண்-புறநீர்மை-தாளம்-இடையொத்து.

வாயுந்திரையுகளுங்கானல்மடநாராய்
ஆயுமமருலகுந்துஞ்சிலுநீதுஞ்சாயால்
நோயும்பயலைமையுமீதூரவெம்மேபோல்
நீயுந்திருமாலால்நெஞ்சங்கோட்பட்டாயே. (௧)

கோட்பட்டசிந்தையையாய்க்கூர்வாயவன்றிலே
சேட்பட்டயாமங்கள்சேராதிரங்குதியால்

ஆட்பட்டவெம்மேபோல்நீயுமரவணையான்
தாட்பட்டதண்டுழாய்த்தாமங்காமுற்றாயே. (௨)
காமுற்றகையறவோடெல்லேயிராப்பகல்
நீமுற்றக்கண்டுயிலாய்நெஞ்சுருகியேங்குதியால்
தீமுற்றத்தென்னிலங்கையூட்டினான்றாணயந்த
யாமுற்றதுற்றாயோவாழிகனைகடலே. (௩)
கடலும்மலையும்விசும்புந்துழாயெம்போற்
சுடர்கொளிராப்பகற்றுஞ்சாயாற்றண்வாடாய்
அடல்கொள்படையாழியம்மானைக்காண்பானீ
உடலம்நோயுற்றாயோவூழிதோறூழியே. (௪)
ஊழிதோறூழியுலகுக்குநீர்கொண்டு
தோழியரும்யாமும்போல்நீராய்நெகிழ்கின்ற
வாழியவானமேநீயும்மதுசூதன்
பாழிமையிற்பட்டவன்கட்பாசத்தால்நைவாயே. (௫)
நைவாயவெம்மேபோல்நாண்மதியேநீயிந்நாள்
மைவானிருளகற்றாய்மாழாந்துதேம்புதியால்
ஐவாயரவணைமேலாழிப்பெருமானார்
மெய்வாசகங்கேட்டுன்மெய்ந்நீர்மைதோற்றாயே. (௬)
தோற்றோம்மடநெஞ்சமெம்பெருமான்நாரணற்கெம்
ஆற்றாமைசொல்லியழுவோமைநீநடுவே
வேற்றோர்வகையிற்கொடிதாயெனையூழி
மாற்றாண்மைநிற்றியோவாழிகனையிருளே. (௭)
இருளின்றிணிவண்ணம்மாநீர்க்கழியேபோய்
மருளுற்றிராப்பகற்றுஞ்சிலும்நீதுஞ்சாயால்
உருளுஞ்சகடமுதைத்தபெருமானார்
அருளின்பெருநசையாலாழாந்துநொந்தாயே. (௮)
நொந்தாராக்காதல்நோய்மெல்லாவியுள்ளுலர்த்த
நந்தாவிளக்கமேநீயுமளியத்தாய்
செந்தாமரைத்தடங்கட்செங்கனிவாயெம்பெருமான்
அந்தாமத்தண்டுழாயாசையால்வேவாயே. (௯)
வேவாராவேட்கைநோய்மெல்லாவியுள்ளுலர்த்த
ஓவாதிராப்பகலுன்பாலேவீழ்த்தொழிந்தாய்
மாவாய்பிளந்துமருதிடைபோய்மண்ணளந்த
மூவாமுதல்வாவினியெம்மைச்சோரேலே. (௰)

சோராதவெப்பொருட்குமாதியாஞ்சோதிக்கே
ஆராதகாதற்குருகூர்ச்சடகோபன்
ஓராயிரஞ்சொன்னவவற்றுளிவைபத்தும்
சோரார்விடார்கண்டீர்வைகுந்தந்திண்ணனவே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ_திருவாய்மொழி-௧௧-இ-பாசுரம்-௧௨௧.

௨ — வது. திண்ணன்.

இத்தார்த்திபோக்குகைக்கு ஆச்வாஸ ஸாந்நித்யம்பண்ணி
நிற்கையாலே அத்தார்த்தியெல்லாம்பெய்பதைகலையானகுண
ஸமர்த்திஹேதுவானபரத்வம்அவதாரத்திலுண்டென்று
பரோபதேசம்பண்ணினதையருளிச்செய்தார்.

வஞ்சிவிருத்தம்-பண்-தக்கராகம்-தாளம்-ஏழொத்து.

திண்ணன்வீடுமுதன்முழுதுமாய்
எண்ணின்மீதியனெம்பெருமான்
மண்ணும்விண்ணுமெல்லாமுடனுண்டநங்
கண்ணன்கண்ணல்லதில்லையோர்கண்ணே. (௧)
ஏபாவம்பரமேயேழுலகும்
ஈபாவஞ்செய்தருளாலளிப்பாரார்
மாபாவம்விடவரற்குப்பிச்சைபெய்
கோபாலகோளரியேறன்றியே. (௨)
ஏறனைப்பூவனைப்பூமகடன்னை
வேறன்றிவிண்டொழத்தன்னுள்வைத்து
மேறன்னைமீதிடநிமிர்ந்துமண்கொண்ட
மாறனில்மிக்குமோர்தேவுமுளதே. (௩)
தேவுமெப்பொருளும்படைக்கப்
பூவில்நான்முகனைப்படைத்த
தேவனெம்பெருமானுக்கல்லாற்
பூவும்பூசனையுந்தகுமே. (௪)
தகுஞ்சீர்த்தன்றனிமுதலினுள்ளே
மிகுந்தேவுமெப்பொருளும்படைக்கத்
தகுங்கோலத்தாமரைக்கண்ணனெம்மான்
மிகுஞ்சோதிமேலறிவாரெவரே. (௫)
எவரும்யாவையுமெல்லாப்பொருளுங்
கவர்வின்றித்தன்னுளொடுங்கநின்ற

பவர்கொண்ஞானவெள்ளச்சுடர்மூர்த்தி
அவரெம்மாழியம்பள்ளியாரே. (௬)
பள்ளியாலிலையேழுலகுங்கொள்ளும்
வள்ளல்வல்வயிற்றுப்பெருமான்
உள்ளுளாரறிவாரவன்றன்
கள்ளமாயமனக்கருத்தே. (௭)
கருத்திற்றேவுமெல்லாப்பொருளும்
வருத்தித்தமாயப்பிரானையன்றியாரே
திருத்தித்திண்ணிலைமூவுலகுந்தம்முள்
இருத்திக்காக்குமியல்வினரே. (௮)
காக்குமியல்வினன்கண்ணபெருமான்
சேர்க்கைசெய்துதன்னுந்தியுள்ளே
வாய்த்ததிசைமுகனிந்திரன்வானவர்
ஆக்கினான்றெய்வவுலகுகளே. (௯)
கள்வாவெம்மையுமேழுலகுநின்
உள்ளேதோற்றியவிறைவவென்று
வெள்ளேறன்நான்முகனிந்திரன்வானவர்
புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரே. (௧0)
ஏத்தவேழுலகுங்கொண்டகோலக்
கூத்தனைக்குருகூர்ச்சடகோபன்சொல்
வாய்த்தவாயிரத்துளிவைபத்துடன்
ஏத்தவல்லார்க்கில்லையோரூனமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி-௧௨-இ-பாசுரம்-௧௩௨.

௩ - வது. ஊனில்.

ஈச்வரன்ஸாத்மியம்பண்ணுகையில்ப்ரகாசமாக
பரத்வத்தையும்அருளிச்செய்துஇப்பகவதநுபவத்துக்கு
ஸம்ஸாரிகள்ஸஹாயரன்றென்றுஇதற்குஸஹாயபூதரான
நித்யஸூரிகளோடேஎப்போதுகூடப்போகிறேமென்கிற
ப்ரார்த்தனையைஅருளிச்செய்தார்.

கலிவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்-ஏழொத்து.

ஊனில்வாழுயிரேநல்லைபோவுன்னைப்பெற்று
வானுளார்பெருமான்மதுசூதனென்னம்மான்
தானும்யானுமெல்லாந்தன்னுள்ளேகலந்தொழிந்தோம்
தேனும்பாலும்நெய்யுங்கன்னலுமமுதுமொத்தே. (௧)

ஒத்தார்மிக்காரையிலையாயமாமாயா
ஒத்தாயெப்பொருட்குமுயிராயென்னைப்பெற்ற
அத்தாயாய்த்தந்தையாயறியாதனவறிவித்த
அத்தாநீசெய்தனவடியேனறியேனே. (௨)
அறியாக்காலத்துள்ளேயடிமைக்கணன்புசெய்வித்
தறியாமாமாயத்தடியேனைவைத்தாயால்
அறியாமைக்குறளாய்நிலம்மாவலிமூவடியென்
றறியாமைவஞ்சித்தாயெனதாவியுட்கலந்தே. (௩)
எனதாவியுட்கலந்தபெருநல்லுதவிக்கைம்மாறு
எனதாவிதந்தொழிந்தேனினிமீள்வதென்பதுண்டே
எனதாவியாவியுநீபொழிலேழுமுண்டவெந்தாய்
எனதாவியார்யானார்தந்தநீகொண்டாக்கினையே. (௪)
இனியார்ஞானங்களாலெடுக்கலெழாதவெந்தாய்
கனிவார்வீட்டின்பமேயென்கடற்படாவமுதே
தனியேன்வாழ்முதலேபொழிலேழுமேனமொன்றாய்
நுனியார்கோட்டில்வைத்தாயுன்பாதஞ்சேர்ந்தேனே. (௫)
சேர்ந்தார்தீவினைகட்கருநஞ்சைத்திண்மதியைத்
தீர்ந்தார்தம்மனத்துப்பிரியாதவருயிரைச்
சோர்ந்தேபோகல்கொடாச்சுடரையரக்கியைமூக்
கீர்ந்தாயையடியேனடைந்தேன்முதன்முன்னமே. (௬)
முன்னல்யாழ்பயினூனரம்பின்முதிர்சுவையே
பன்னலார்பயிலும்பரனேபவித்திரனே
கன்னலேயமுதேகார்முகிலேயென்கண்ணா
நின்னலாலிலேன்காணென்னைநீகுறிக்கொள்ளே. (௭)
குறிக்கொள்ஞானங்களாலெனையூழிசெய்தவமும்
கிறிக்கொண்டிப்பிறப்பேசிலநாளிலெய்தினன்யான்
உறிக்கொண்டவெண்ணெய்பாலொளித்துண்ணுமம்மான்பின்
நெறிக்கொண்டநெஞ்சனாய்ப்பிறவித்துயர்கடிந்தே. (௮)
கடிவார்தண்ணந்துழாய்க்கண்ணன்விண்ணவர்பெருமான்
படிவானமிறந்தபரமன்பவித்திரன்சீர்
செடியார்நோய்கள்கெடப்படிந்துகுடைந்தாடி
அடியேன்வாய்மடுத்துப்பருகிக்களித்தேனே.
களிப்புங்கவர்வுமற்றுப்பிறப்புப்பிணிமூப்பிறப்பற்
றொளிக்கொண்டசோதியுமாயுடன்கூடுவதென்றுகொலோ

பயர்கொண்ஞானவெள்ளச்சுடர்மூர்த்தி
அவரெம்மாழியம்பள்ளியாரே. (௬)

பள்ளியாலிலையேழுலகுங்கொள்ளும்
வள்ளல்வல்வயிற்றுப்பெருமான்
உள்ளுளாரறிவாரவன்றன்
கள்ளமாயமனக்கருத்தே. (௭)

கருத்திற்றேவுமெல்லாப்பொருளும்
வருத்தித்தமாயப்பிரானையன்றியாரே
திருத்தித்திண்ணிலைமூவுலகுந்தம்முள்
இருத்திக்காக்குமியல்வினரே. (௮)

காக்குமியல்வினன்கண்ணபெருமான்
சேர்க்கைசெய்துதன்னுந்தியுள்ளே
வாய்த்ததிசைமுகனிந்திரன்வானவர்
ஆக்கினான்றெய்வவுலகுகளே. (௯)

கள்வாவெம்மையுமேழுலகுநின்
உள்ளேதோற்றியவிறைவவென்று
வெள்ளேறன்நான்முகனிந்திரன்வானவர்
புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரே. (௧0)

ஏத்தவேழுலகுங்கொண்டகோலக்
கூத்தனைக்குருகூர்ச்சடகோபன்சொல்
வாய்த்தவாயிரத்துள்ளிவைபத்துடன்
ஏத்தவல்லார்க்கில்லையோரூனமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௧௨-இ-பாசுரம்-௧௨௨.

௩ - வது. ஊனில்.

ஈச்வரன்ஸாக்ஷாத்கரிப்பண்ணுகையில்ப்ரகாசமாக
பரத்வத்தையுமருளிச்செய்து இந்தபகவதநுபவத்துக்கு
ஸம்ஸாரிகள்ஸஹாயரன்றென்று இதற்குஸஹாயபூதரான
நித்யஸூரிகளோடேஎப்போதுகூடப்போகிறேனென்கிற
ப்ரார்த்தனையையருளிச்செய்தார்.

கலிவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்-ஏழொத்து.

ஊனில்வாழுயிரேநல்லைபோவுன்னைப்பெற்று
வானுளார்பெருமான்மதுசூதனென்னம்மான்
தானும்யானுமெல்லாந்தன்னுள்ளேகலந்தொழிந்தோந்
தேனும்பாலும்நெய்யுங்கன்னலுமமுதுமொத்தே. (௧)

ஒத்தார்மிக்காரையிலையாயமாமாயா
ஒத்தாயெப்பொருட்குமுயிராயென்னைப்பெற்ற
அத்தாயாய்த்தந்தையாயறியாதனவறிவித்த
அத்தாநீசெய்தனவடியேனறியேனே. (௨)

அறியாக்காலத்துள்ளேயடிமைக்கணன்புசெய்வித்
தறியாமாமாயத்தடியேனைவைத்தாயால்
அறியாமைக்குறளாய்நிலம்மாவலிமூவடியென்
றறியாமைவஞ்சித்தாயெனதாவியுட்கலந்தே. (௩)

எனதாவியுட்கலந்தபெருநல்லுதவிக்கைமாறு
எனதாவிதந்தொழிந்தேனினிமீள்வதென்பதுண்டே
எனதாவியாவியுநீபொழிலேழுமுண்டவெந்தாய்
எனதாவியார்யானார்தந்தநீகொண்டாக்கினையே. (௪)

இனியார்ஞானங்களாலெடுக்கலெழாதவெந்தாய்
கனியாரின்பமேயென்கடற்படாவமுதே
தனியேன்வாழ்முதலேபொழிலேழுமேனமொன்றாய்
நுனியார்கோட்டில்வைத்தாயுன்பாதஞ்சேர்ந்தேனே. (௫)

சேர்ந்தார்தீவினைகட்கருநஞ்சைத்திண்மதியைத்
தீர்ந்தார்தம்மனத்துப்பிரியாதவருயிரைச்
சோர்ந்தேபோகல்கொடாச்சுடரையரக்கியைமூக்
கீர்ந்தாயையடியேனடைந்தேன்முதன்முன்னமே. (௬)

முன்னல்யாழ்பயினூனரம்பின்முதிர்சுவையே
பன்னலார்பயிலும்பரனேபவித்திரனே
கன்னலேயமுதேகார்முகிலேயென்கண்ணா
நின்னலாலிலேன்காணென்னைநீகுறிக்கொள்ளே. (௭)

குறிக்கொள்ஞானங்களாலெனையூழிசெய்தவமும்
கிறிக்கொண்டிப்பிறப்பேசிலநாளிலெய்தினன்யான்
உறிக்கொண்டவெண்ணெய்பாலொளித்துண்ணுமம்மான்பின்
நெறிக்கொண்டநெஞ்சனாய்ப்பிறவித்துயர்கடிந்தே. (௮)

கடிவார்தண்ணந்துழாய்க்கண்ணன்விண்ணவர்பெருமான்
படிவானமிறந்தபரமன்பவித்திரன்சீர்
செடியார்நோய்கள்கெடப்படிந்துகுடைந்தாடி
அடியேன்வாய்மடுத்துப்பருகிக்களித்தேனே. (௯)

களிப்புங்கவர்வுமற்றுப்பிறப்புப்பிணிமூப்பிறப்பற்
றொளிக்கொண்டசோதியுமாயுடன்கூடுவதென்றுகொலோ

துளிக்கின்றவானிந்நிலஞ்சுடராழிசங்கேந்தி
அளிக்கின்றமாயப்பிரானடியார்கள்குழாங்களையே. (௧0)

குழாங்கொள்பேரரக்கன்குலம்வீயமுனிந்தவனைக்
குழாங்கொள்தென்குருகூர்ச்சடகோபன்தெரிந்துரைத்த
குழாங்கொளாயிரத்துள்ளிவைபத்துமுடன்பாடி
குழாங்களாயடியீருடன்கூடிநின்றாடுமினே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி-௧௩-இ-பாசுரம்-௧௪௩.

௪ - வது. ஆடியாடி.

பிரார்த்தனைசித்தியாதபடியினாலேஇந்தஆழ்வார்ஒருபிராட்டிஅவஸ்தையையடைந்துமோஹித்திருக்கையில்அந்தநாயகியினுடையஅவஸ்தையைதாய்சொல்லுகிறதாக வருளிச்செய்கிறார்.

வஞ்சிவிருத்தம்-பண்-நட்டம்-தாளம் ஏழொத்து.

ஆடியாடியகங்கரைந்திசை
பாடிப்பாடிக்கண்ணீர்மல்கியெங்கும்
நாடிநாடிநரசிங்காவென்று
வாடிவாடுமிவ்வாணுதலே. (௧)

வாணுதலிம்மடவரலும்மைக்
காணுமாசையுள்நைகின்றாள்விறல்
வாணனாயிரந்தோள்துணித்தீருமைக்
காணநீரிரக்கமிலீரே. (௨)

இரக்கமனத்தோடெரியணை
அரக்குமெழுகுமொக்குமிவள்
இரக்கமெழீரிதற்கென்செய்கேன்
அரக்கனிலங்கைசெற்றீருக்கே. (௩)

இலங்கைசெற்றவனேயென்னும்பின்னும்
வலங்கொள்புள்ளுயர்த்தாயென்னுமுள்ளம்
மலங்கவெவ்வுயிர்க்குங்கண்ணீர்மிகக்
கலங்கிக்கைதொழநின்றிவளே. (௪)

இவளிராப்பகல்வாய்வெரீஇத்தன
குவளையொண்கண்ணநீர்கொண்டாள்வண்டு
திவளுந்தண்ணந்துழாய்கொடீரெனத்
தவளவண்ணர்தகவுகளே. (௫)

தகவுடையவனேயென்னும்பின்னும்
மிகவிரும்பும்பிரானென்னுமென
தகவுயிர்க்கமுதேயென்னுமுள்ளம்
உகவுருகிநின்றுள்ளுளே. (௬)

உள்ளுளாவியுலர்ந்துலர்ந்தென
வள்ளலேகண்ணனேயென்னும்பின்னும்
வெள்ளநீர்க்கிடந்தாயென்னுமென
கள்விதான்பட்டவஞ்சனையே. (௭)

வஞ்சனேயென்னுங்கைதொழுந்தன
நெஞ்சம்வேவநெடிதுயிர்க்கும்விறற்
கஞ்சனைவஞ்சனைசெய்தீருமைத்
தஞ்சமென்றிவள்பட்டனவே. (௮)

பட்டபோதெழுபோதறியாள்விரை
மட்டலர்தண்துழாயென்னுஞ்சுடர்
வட்டவாய்நுதிநேமியீர்நும்
திட்டமென்கொலிவ்வேழைக்கே. (௯)

ஏழைபேதையிராப்பகற்றன
கேழிலொண்கண்ணநீர்கொண்டாள்கிளர்
வாழ்வைவேவவிலங்கைசெற்றீரிவள்
மாழைநோக்கொன்றும்வாட்டேன்மினே. (௧0)

வாட்டமில்புகழ்வாமனனையிசை
கூட்டிவண்சடகோபன்சொல்லமை
பாட்டோராயிரத்திப்பத்தாலடி
சூட்டலாகுமந்தாமமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி-௧௪-இ-பாசுரம்-௧௫௪.

௫ - வது. அந்தாம

இவ்வார்த்திபோக்குகைக்கு ஈச்வரனைமர்லேதிக்கையாலே அந்தாபம் நிவர்த்தியாய் ஈச்வரனுடையதிவ்யாயுததிவ்யாவயவ ஸௌந்தர்யத்தையும்நித்யஸூரிசேவையையும்அநு ஸந்தித்ததையருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-சீகாமரம்-தாளம்-நடையொத்து.

அந்தாமத்தன்புசெய்தென்னாவிசேரம்மானுக்
கந்தாமவாண்முடிசங்காழிநூலாரமுள
செந்தாமரைத்தடங்கண்செங்கனிவாய்செங்கமலஞ்
செந்தாமரையடிகள்செம்பொன்றிருவுடம்பே.

திருவுடம்புவான்சுடர்செந்தாமரைகண்கைகமலந்
திருவிடமேமார்பமயனிடமேகொப்பூழ்
ஒருவிடமுமெந்தைபெருமாற்கரனேயோ
ஒருவிடமொன்றின்றியென்னுள்கலந்தானுக்கே. (௨)

என்னுள்கலந்தவன்செங்கனிவாய்செங்கமலம்
மின்னுஞ்சுடர்மலைக்குக்கண்பாதங்கைகமலம்
மன்னுமுழுவேழுலகும்வயிற்றினுள
தன்னுள்கலவாதவெப்பொருளுந்தானிலையே. (௩)

எப்பொருளுந்தானாய்மரகதக்குன்றமொக்கும்
அப்பொழுதைத்தாமரைப்பூக்கண்பாதங்கைகமலம்
எப்பொழுதும்நாள்திங்களாண்டூழியூழிதொறும்
அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே. (௪)

ஆராவமுதமாயல்லாவியுள்கலந்த
காரார்கருமுகில்போலென்னம்மான்கண்ணனுக்கு
நேரவாய்செம்பவளங்கண்பாதங்கைகமலம்
பேராரநீண்முடிநாண்பின்னுமிழைபலவே. (௫)

பலபலவேயாபரணம்பேரும்பலபலவே
பலபலவேசோதிவடிவுபண்பெண்ணில்
பலபலகண்டுண்டுகேட்டுற்றுமோந்தின்பம்
பலபலவேஞானமும்பாம்பணைமேலாற்கேயோ. (௬)

பாம்பணைமேற்பாற்கடலுட்பள்ளியமர்ந்ததுவுங்
காம்பணைதோட்பின்னைக்காயேறுடனேழ்செற்றதுவுந்

தேம்பணையசோலைமராமரமேழெய்ததுவும்
பூம்பிணையதண்டுழாய்ப்பொன்முடியம்போரேறே. (௭)

பொன்முடியம்போரேற்றையெம்மானைநாற்றடந்தோள்
தன்முடிவொன்றில்லாததண்டுழாய்மாலையனை
என்முடிவுகாணாதேயென்னுள்கலந்தானைச்
சொன்முடிவுகாணேனான்சொல்லுவதென்சொல்லீரே. (௮)

சொல்லீரென்னம்மானையென்னாவியாவிதனை
எல்லையில்சீரென்கருமாணிக்கச்சுடரை
நல்லவமுதம்பெறற்கரியவீடுமாய்
அல்லிமலர்விரையொத்தானல்லன்பெண்ணல்லனே. (௯)

ஆணல்லன்பெண்ணல்லனல்லாவலியுமல்லன்
காணலுமாகானுளனல்லனில்லையல்லன்
பேணுங்காற்பேணுமுருவாகுமல்லனுமாம்
கோணைபெரிதுடைத்தெம்பெம்மானைக்கூறுதலே. (௧௦)

கூறுதலொன்றாராக்குடக்கூத்தவம்மானைக்
கூறுதலேமேவிக்குருகூர்ச்சடகோபன்
கூறினவந்தாதியோராயிரத்துளிப்பத்துங்
கூறுதல்வல்லாருளரேற்கூடுவர்வைகுந்தமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்
ஆ திருவாய்மொழி-௧௫-இ-பாசுரம்-௧௬௫

௬ - வது. வைகுந்தா.

ஸாத்மிக்கப்பண்ணினஎம்பெருமானிடத்திலே ஆழ்வார் அதிசங்கைச்செய்ய அதைப்பார்த்து தம்மைவிட்டுப்பிரிவரோவென்று ஈச்வரனதிசங்கைபண்ண ஆழ்வாருமமையொருக்காலும் விடத்தக்கதில்லையென்றபின்பு ஈச்வரனுக்கதிசங்கைதீர்ந்ததை யருளிச்செய்கிறார்.

ஆசிரியத்துறை-பண்-பழந்தக்கராகம்-தாளம்-ஏழொத்து.

வைகுந்தாமணிவண்ணனேயென்பொல்லாத்திருக்குறளாவென்னுள்மன்னி
வைகும்வைகல்தோறுமமுதாயவானேறே
செய்குந்தாவருந்தீமையுன்னடியார்க்குத்தீர்த்தசுரர்க்குத்தீமைகள்
செய்குந்தாவுன்னைநான்பிடித்தேன்கொள்சிக்கெனவே. (௧)

சிக்கெனச்சிறிதோரிடமும்புறப்படாத்தன்னுள்ளேயுலகுகள்
ஒக்கவேவிழுங்கிப்புகுந்தான்புகுந்ததற்பின்
மிக்கஞானவெள்ளச்சுடர்விளக்காய்த்துளக்கற்றமுதமாயெங்கும்
பக்கநோக்கறியானென்பைந்தாமரைக்கண்ணனே. (௨)

தாமரைக்கண்ணனைவிண்ணோர்பரவுந்தலைமகனைத்துழாய்விரைப்
பூமருவுகண்ணியெம்பிரானைப்பொன்மலையை
நாமருவிநன்கேத்தியுள்ளிவணங்கிநாமகிழ்ந்தாடநாவலர்
பாமருவிநிற்கத்தந்தபான்மையேவள்ளலே. (௩)

வள்ளலேமதுசூதனாவென்மரகதமலையேயுனைநினைந்
தெள்கறந்தவெந்தாயுன்னையெங்ஙனம்விடுகேன்
வெள்ளமேபுரைநின்புகழ்குடைந்தாடிப்பாடிக்களித்துகந்துகந்
துள்ளநோய்களெல்லாந்துரந்துய்ந்துபோந்திருந்தே. (௪)

உய்ந்துபோந்தென்னுலப்பிலாதவெந்தீவினைகளைநாசஞ்செய்துன
தந்தமிலடிமையடைந்தேன்விடுவேனோ
ஐந்துபைந்தலையாடரவணைமேவிப்பாற்கடல்யோகநித்திரைச்
சிந்தைசெய்தவெந்தாயுன்னைச்சிந்தைசெய்துசெய்தே. (௫)

உன்னைச்சிந்தைசெய்துசெய்துன்னெடுமாமொழியிசைபாடியாடியென்
முன்னைத்தீவினைகள்முழுவேரரிந்தனன்யான்
உன்னைச்சிந்தையினாலிகழ்ந்தவிரணியனகல்மார்வங்கீண்டவென்
முன்னைக்கோளரியேமுடியாததென்னெனக்கே. (௬)

முடியாததென்னெனக்கேலினிமுழுவேழுலகுமுண்டானுகந்துவந்
தடியேனுள்புகுந்தானகல்வானுமல்லனினிச்
செடியார்நோய்களெல்லாந்துரந்தெமர்கீழ்மேலெழுபிறப்பும்
வெடியாவெந்நரகத்தென்றுஞ்சேர்தல்மாறினரே. (௭)

மாறிமாறிப்பல்பிறப்பும்பிறந்தடியையடைந்துள்ளந்தேறி
ஈறிலின்பத்திருவெள்ளம்யான்மூழ்கினன்
பாறிப்பாறியசுரர்தம்பல்குழாங்கள்நீறெழப்பாய்பறவையொன்
றேறிவீற்றிருந்தாயுன்னையென்னுள்நீக்கேலெந்தாய். (௮)

எந்தாய்தண்டிருவேங்கடத்துள்நின்றாயிலங்கைசெற்றாய்மராமரம்
பைந்தாளேழுருவவொருவாளிகோத்தவில்லா
கொந்தார்தண்ணந்துழாயினாயமுதேயுன்னை யென்னுளேகுழைத்தவெம்
மைந்தாவானேறேயினியெங்குப்போகின்றதே. (௯)

போகின்றகாலங்கள்போயகாலங்கள் போகுகாலங்கள்தாய்தந்தையுயிர்
ஆகின்றாயுன்னைநானடைந்தேன்விடுவேனோ

பாகின்றதொல்புகழ்மூவுலகுக்குநாதனேபரமாதண்வேங்கட
மேகின்றாய்தண்டுழாய்விரைநாறுகண்ணியனே. (௰)

கண்ணித்தண்ணந்துழாய்முடிக்கமலத்தடம்பெருங்
கண்ணனைப்புகழ்நண்ணித்தென்குருகூர்ச்சடகோபன்மாறன்சொன்ன
எண்ணிற்சோர்விலந்தாதியாயிரத்துள்ளிவையுமோர்பத்திசையொடும்
பண்ணிற்பாடவல்லாரவர்கேசவன்றமரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௧௬-இ-பாசரம்-௧௭௬.

எ-வது. கேசவன்.

ஈச்வரனுக்குத்தம்முடையவிஷயத்திலுண்டானப்ரீதியானது
தன்னுடையஸம்பந்தஸம்பந்திகளிலுமுண்டானதுகண்டு
மிகவும்ப்ரீதராய்த்வாதசநாமப்ரதிபாத்யனானஸர்வேச்வரனுடைய
ஸம்பந்தத்தாலேதம்முடையவேழேழுமுறையோரும்
க்ருதார்த்தர்களென்கிறார்.

கலித்துறை-தக்கராகம்-தாளம்-ஏழொத்து.

கேசவன்தமர்கீழ்மேலெமரேழெழுபிறப்பு
மாசதிரிதுபெற்றுநம்முடைவாழ்வுவாய்க்கின்றவா
ஈசனென்கருமாணிக்கமென்செங்கோலக்கண்ணன்விண்ணோர்
நாயகனெம்பிரானெம்மானாராயணனாலே. (௧)

நாரணன்முழுவேழுலகுக்குநாதன்வேதமயன்
காரணன்கிரிசைகருமமிவைமுதல்வனெந்தை
சீரணங்கமரர்பிறர்பலருந்தொழுதேத்தநின்று
வாரணத்தைமருப்பொசித்தபிரானென்மாதவனே. (௨)

மாதவனென்றதேகொண்டென்னையினியிப்பாற்பட்டது
யாதவங்களுஞ்சேர்கொடேனென்றென்னுள்புகுந்திருந்து
தீதவங்கெடுக்குமமுதந்செந்தாமரைக்கட்குன்றங்
கோதவமிலென்கன்னற்கட்டியெம்மானென்கோவிந்தனே. (௩)

கோவிந்தன்குடக்கூத்தன்கோவலனென்றென்றேகுனித்துத்
தேவுந்தன்னையும்பாடியாடத்திருத்தியென்னைக்கொண்டென்
பாவந்தன்னையும்பாறக்கைத்தெமரேழெழுபிறப்பு
மேவுந்தன்மையமாக்கினான்வல்லனெம்பிரான்விட்டுவே. (௪)

விட்டிலங்குசெஞ்சோதித்தாமரைபாதங்கைகள்கண்கள்
விட்டிலங்குகருஞ்சுடர்மலையேதிருவுடம்பு
விட்டிலங்குமதியஞ்சீர்சங்குசக்கரம்பரிதி
விட்டிலங்குமுடியம்மான்மதுசூதனன்றனக்கே. (௫)

மதுசூதனையன்றிமற்றிலேனென்றெத்தாலுங்கருமமின்றித்
துதிசூழ்ந்தபாடல்கள்பாடியாடிநின்றூழியூழிதொறும்
எதிர்சூழல்புக்கெனைத்தோர்பிறப்புமெனக்கேயருள்செய்ய
விதிசூழ்ந்ததாலெனக்கேலெம்மான்றிருவிக்கிரமனையே. (௬)

திருவிக்கிரமன்செந்தாமரைக்கண்ணனெம்மான்செங்கனிவாய்
உருவிற்பொலிந்தவெள்ளைப்பளிங்குநிறத்தனனென்றென்றுள்ளிப்
பரவிப்பணிந்துபல்லூழியூழிநின்பாதபங்கயமே
மருவித்தொழுமனமேதந்தாய்வல்லைகாணென்வாமனனே. (௭)

வாமனனென்மரதகவண்ணன்றாமரைக்கண்ணினன்
காமனைப்பயந்தாயென்றென்றுன்கழல்பாடியேபணிந்து
தூமனத்தனனாய்ப்பிறவித்துழதிநீங்கவென்னைத்
தீமனங்கெடுத்தாயுனக்கென்செய்கேனென்சிரீதரனே. (௮)

சிரீதரன்செய்யதாமரைக்கண்ணனென்றென்றிராப்பகல்வாய்
வெரீயலமர்ந்துகண்கணீர்மல்கவெவ்வுயிர்த்துயிர்த்து
மரீயதீவினைமாளவின்பம்வளரவைகல்வைகல்
இரீயுன்னையென்னுள்வைத்தனையென்னிருடீகேசனே. (௯)

இருடீகேசனெம்பிரானிலங்கையரக்கர்குலம்
முருடுதீர்த்தபிரானெம்மானமரர்பெம்மானென்றென்று
தெருடியாகினெஞ்சேவணங்குதிண்ணமறியறிந்து
மருடியேலும்விடேல்கண்டாய்நம்பிபற்பநாபனையே. (௧௰)

பற்பநாபனுயர்வறவுயரும்பெருந்திறலோன்
எற்பரனென்னையாக்கிக்கொண்டெனக்கேதன்னைத்தந்த
கற்பகமென்னமுதங்கார்முகில்போலும்வேங்கடநல்
வெற்பன்விசும்போர்பிரானெந்தைதாமோதரனே. (௧௧)

தாமோதரனைத்தனிமுதல்வனைஞாலமுண்டவனை
ஆமோதரமறியவொருவர்க்கென்றேதொழுமவர்கள்
தாமோதரனுருவாகியசிவற்குந்திசைமுகற்கும்
ஆமோதரமறியவம்மானையென்னாழிவண்ணனையே. (௧௨)

வண்ணமாமணிச்சோதியையமரர்தலைமகனைக்
கண்ணனைநெடுமாலைத்தென்குருகூர்ச்சடகோபன்
பண்ணியதமிழ்மாலையாயிரத்துளிவைபன்னிரண்டும்
பண்ணிற்பன்னிருநாமப்பாட்டண்ணல்தாளணைவிக்குமே. (௧௩)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௧௭-இ-பாசுரம்-௧௮௯.

௮-வது. அணைவது.

ஈச்வரன்தன்ஸம்பந்தஸம்பந்திகளிலும்வ்யாமோஹம்
பண்ணின அசன்லோகஸம்ஸாரிகளையுந்தன்னுடையஸம்பந்திகளாகப்பண்ண
வேணுமென்று அவர்களுக்குமோக்ஷப்ரதத்தைஉபதேசித்ததை
யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-இந்தளம்-தாளம்-ஏழொத்து.

அணைவதரவணைமேற்பூம்பாவையாகம்
புணர்வதிருவரவர்முதலுந்தானே
இணைவனாமெப்பொருட்கும்வீடுமுதலாம்
புணைவன்பிறவிக்கடனீந்துவார்க்கே. (௧)

நீந்துந்துயர்ப்பிறவியுட்படமற்றெவ்வெவையும்
நீந்துந்துயரில்லாவீடுமுதலாம்
பூந்தண்புனற்பொய்கையானையிடர்கடிந்த
பூந்தண்டுழாயென்றனிநாயகன்புணர்ப்பே. (௨)

புணர்க்குமயனாமழிக்குமரனாம்
புணர்த்ததனுந்தியோடாகத்துமன்னிப்
புணர்த்ததிருவாகித்தன்மார்விற்றான்சேர்
புணர்ப்பன்பெரும்புணர்ப்பெங்கும்புலனே. (௩)

புலனைந்துமேயும்பொறியைந்துநீங்கி
நலமந்தமில்லதோர்நாடுபுகுவீர்
அலமந்துவீயவசுரரைச்செற்றான்
பலமுந்துசீரிற்படிமினோவாதே. (௪)

ஓவாத்துயர்ப்பிறவியுட்படமற்றெவ்வெவையும்
மூவாத்தனிமுதலாய்மூவுலகுங்காவலோன்

மாவாகியாமையாய்மீனாகிமானிடமாம்
தேவாதிதேவபெருமானென்தீர்த்தனே. (௫)

தீர்த்தனுலகளந்தசேவடிமேற்பூந்தாமஞ்
சேர்த்தியவையேசிவன்முடிமேற்றான்கண்டு
பார்த்தன்றெளிந்தொழிந்தபைந்துழாயான்பெருமை
பேர்த்துமொருவராற்பேசக்கிடந்ததே. (௬)

கிடந்திருந்துநின்றளந்துகேழலாய்க்கீழ்புக்
கிடந்திடுந்தன்னுள்கரக்குமுமிழுந்
தடம்பெருந்தோளாரத்தழுவும்பாரென்னு
மடந்தையைமால்செய்கின்றமாலார்காண்பாரே. (௭)

காண்பாரார்எம்மீசன்கண்ணனையென்காணுமா
றூண்பேசிலெல்லாவுலகுமோர்துற்றாற்றாச்
சேண்பாலவீடோவுயிரோமற்றெப்பொருட்கும்
ஏண்பாலுஞ்சோரான்பரந்துளனாமெங்குமே. (௮)

எங்குமுளன்கண்ணனென்றமகனைக்காய்ந்
திங்கில்லையாலென்றிரணியன்றூண்புடைப்ப
அங்கப்பொழுதேயவன்வீயத்தோன்றியவென்
சிங்கப்பிரான்பெருமையாராயுஞ்சீர்மைத்தே. (௯)

சீர்மைகொள்வீடுசுவர்க்கநரகீறா
ஈர்மைகொள்தேவர்நடுவாமற்றெப்பொருட்கும்
வேர்முதலாய்வித்தாய்ப்பரந்துதனிநின்ற
கார்முகில்போல்வண்ணனென்கண்ணனைநான்கண்டேனே.

கண்டலங்கள்செய்யகருமேனியம்மானை
வண்டலம்புஞ்சோலைவழுதிவளநாடன்
பண்டலையிற்சொன்னதமிழாயிரத்திப்பத்தும்வல்லார்
விண்டலையில்வீற்றிருந்தாள்வரெம்மாவீடே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ-திருவாய்மொழி-௧௮ - இ - பாசுரம்-௨௦௦.

௯ - வது. எம்மா.

ஈச்வரன்ஆழ்வாருக்கும்அவருடையஸம்பந்தஸம்பந்திகளுக்கும்
மோக்ஷம்ப்ரதானம்பண்ணுதற்குஉத்யோகமாயிருக்கையில்அவன்ப்ரீதிக்காக
மோக்ஷம்ப்ரதானம்பண்ணவேண்டாம்உம்முடையப்ரீதியின்றே
மோக்ஷம்ப்ரதானம்பண்ணவேண்டுமென்றுஅனைத்துகைங்கர்யத்தைப்பண்ணினதை
யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண் - முதிர்ந்தகுறிஞ்சி-தாளம்-ஏழொத்து.

எம்மாவீட்டுத்திறமுஞ்செப்பம்நின்
செம்மாபாதபற்புத்தலைசேர்த்தொல்லைக்
கைம்மாதுன்பங்கடிந்தபிரானே
அம்மாவடியேன்வேண்டுவதீதே. (௧)

ஈதேயானுன்னைக்கொள்வதெஞ்ஞான்றும்
மைதோய்சோதிமணிவண்ணாவெந்தாய்
எய்தாநின்கழல்யானெய்தஞானக்
கைதாகாலக்கழிவுசெய்யேலே. (௨)

செய்யேற்றீவினையென்றருள்செய்யுமென்
கையார்சக்கரக்கண்ணபிரானே.
ஐயார்கண்டமடைக்கிலுநின்கழல்
எய்யாதேத்தவருள்செய்தெனக்கே. (௩)

எனக்கேயாட்செய்யெக்காலத்துமென்றென்
மனக்கேவந்திடைவீடின்றிமன்னித்
தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே
எனக்கேகண்ணனையான்கொள்சிறப்பே. (௪)

சிறப்பில்வீடுசுவர்க்கநரகம்
இறப்பிலெய்துகவெய்தற்கயானும்
பிறப்பில்பல்பிறவிப்பெருமானை
மறப்பொன்றின்றியென்றுமகிழ்வேனே. (௫)

மகிழ்கொடெய்வமுலோகமலோகம்
மகிழ்கொள்சோதிமலர்ந்தவம்மானே
மகிழ்கொள்சிந்தைசொற்செய்கைகொண்டென்றும்
மகிழ்வுற்றுன்னைவணங்கவாராயே. (௬)

வாராயுன்றிருப்பாதமலர்க்கீழ்ப்
பேராதேயான்வந்தடையும்படி
தாராதாயுன்னையென்னுள்வைப்பிலென்றும்
ஆராதாயெனக்கென்றுமெக்காலே. (௭)

எக்காலத்தெந்தையாயென்னுள்மன்னின்மற்
றெக்காலத்திலும்யாதொன்றும்வேண்டேன்
மிக்கார்வேதவிமலர்விழுங்குமென்
அக்காரக்கனியேயுன்னையானே. (௮)

யானேயென்னையறியகிலாதே
யானேயென்றனதேயென்றிருந்தேன்
யானேநீயென்னுடைமையுநீயே
வானேயேத்துமெம்வானவரேறே. (௯)

ஏறேலேழும்வென்றேர்கொளிலங்கையை
நீறேசெய்தநெடுஞ்சுடர்ச்சோதி
தேறேலென்னையுன்பொன்னடிச்சேர்த்தொல்லை
வேறேபோகவெஞ்ஞான்றும்விடலே. (௰)

விடலில்சக்கரத்தண்ணலைமேவல்
விடலில்வண்குருகூர்ச்சடகோபன்சொற்
கெடலில்லாயிரத்துள்ளிவைபத்துங்
கெடலில்வீடுசெய்யுங்கிளர்வார்க்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௧௯-இ-பாசுரம்-௨௦௯.

௰ - வது. கிளரொளி.

முன்னிஷ்கர்ஷித்த கைங்கர்யஸித்திக்குத் திருமாலிருஞ்சோலைத்
திருமலையை ஆச்ரயிக்கவேண்டுமென்
றருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்-ஏழொத்து.

கிளரொளியிளமைகெடுவதன்முன்னம்
வளரொளிமாயோன்மருவியகோயில்
வளரிளம்பொழில்சூழ்மாலிருஞ்சோலை
தளர்விலராகிச்சார்வதுசதிரே. (௧)

சதிரிளமடவார்தாழ்ச்சியைமதியா
ததிர்குரல்சங்கத்தழகர்தங்கோயில்
மதிதவழ்குடுமிமாலிருஞ்சோலைப்
பதியதுவேத்தியெழுவதுபயனே. (௨)

பயனல்லசெய்துபயனில்லைநெஞ்சே
புயன்மழைவண்ணர்புரிந்துறைகோயில்
மயன்மிகுபொழில்சூழ்மாலிருஞ்சோலை
அயன்மலையடைவதுகருமமே. (௩)

கருமவன்பாசங்கழித்துழன்றுய்யவே
பெருமலையெடுத்தான்பீடுறைகோயில்
வருமழைதவழுமாலிருஞ்சோலைத்
திருமலையதுவேயடைவதுதிறமே. (௪)

திறமுடைவலத்தாற்றீவினைபெருக்கா
தறமுயலாழிப்படையவன்கோயில்
மறுவில்வண்சுனைசூழ்மாலிருஞ்சோலை
புறமலைசாரப்போவதுகிறியே. (௫)

கிறியெனநினைமின்கீழ்மைசெய்யாதே
உறியமர்வெண்ணெயுண்டவன்கோயில்
மறியொடுபிணைசேர்மாலிருஞ்சோலை
நெறிபடவதுவேநினைவதுநலமே. (௬)

நலமெனநினைமின்னரகழுந்தாதே
நிலமுனமிடந்தானீடுறைகோயில்
மலமறுமதிசேர்மாலிருஞ்சோலை
வலமுறையெய்திமருவுதல்வலமே. (௭)

வலஞ்செய்துவைகல்வலங்கழியாதே
வலஞ்செய்யுமாயமாயவன்கோயில்
வலஞ்செய்யும்வானோர்மாலிருஞ்சோலை
வலஞ்செய்துநாளுமருவுதல்வழக்கே. (௮)

வழக்கெனநினைமின்வல்வினைமூழ்கா
தழக்கொடியட்டானமர்பெருங்கோயில்
மழக்களிற்றினஞ்சேர்மாலிருஞ்சோலை
தொழக்கருதுவதேதுணிவதுசூதே. (௯)

சூதென்றுகளவுஞ்சூதுஞ்செய்யாதே
வேதமுன்விரித்தான்விரும்பியகோயில்

மாதுறுமயில்சேர்மாலிருஞ்சோலைப்
போதவிழ்மலையேபுகுவதுபொருளே (௧௦)

பொருளென்றிவ்வுலகம்படைத்தவன்புகழ்மேல்
மருளில்வண்குருகூர்வண்சடகோபன்
தெருள்கொள்ளச்சொன்னவோராயிரத்துளிப்பத்
தருளுடையவன்றாளணைவிக்குமுடித்தே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

இரண்டாம்பத்துமுற்றிற்று.

ஆ பத்து-௨ல். திருவாய்மொழி-௨௦-இ-பாசுரம்-௨௨௨.

மூன்றாம்பத்து

௧ - வது. முடிச்சோதி.

திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கிற
அழகருடைய திவ்யமங்கள விக்ரஹ திவ்யாபரண திவ்யஸௌந்தர்யங்களை
அநுபவித்ததை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-இந்தளம்-தாளம்-நடையொத்து.

முடிச்சோதியாயுனதுமுகச்சோதிமலர்ந்ததுவோ
அடிச்சோதிநீநின்றதாமரையாயலர்ந்ததுவோ
படிச்சோதியாடையொடும்பல்கலனாய்நின்பைம்பொற்
கடிச்சோதிகலந்ததுவோதிருமாலேகட்டுரையே. (௧)

கட்டுரைக்கிற்றாமரைநின்கண்பாதங்கையொவ்வா
சுட்டுரைத்தநன்பொன்னுன்திருமேனியொளியொவ்வாது
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப்புகழ்வெல்லாம்பெரும்பாலும்
பட்டுரையாய்ப்புற்கென்றேகாட்டுமாற்பரஞ்சோதி. (௨)

பரஞ்சோதிநீபரமாய்நின்னிகழ்ந்தபின்மற்றோர்
பரஞ்சோதியின்மையிற்படியோவிநிகழ்கின்ற
பரஞ்சோதிநின்னுள்ளேபடருலகம்படைத்தவெம்
பரஞ்சோதிகோவிந்தாபண்புரைக்கமாட்டேனே. (௩)

மாட்டாதேயாகிலுமிம்மலர்தலைமாஞாலநின்
மாட்டாயமலர்புரையுந்திருவுருவமனம்வைக்க
மாட்டாதபலசமயமதிகொடுத்தாய்மலர்த்துழாய்
மாட்டேநீமனம்வைத்தாய்மாஞாலம்வருந்தாதே. (௪)

வருந்தாதவருந்தவத்தமலர்கதிரின்சுடருடம்பாய்
வருந்தாதஞானமாய்வரம்பின்றிமுழுதியன்றாய்
வருங்காலநிகழ்காலங்கழிகாலமாயுலகை
ஒருங்காகவளிப்பாய்சீரெங்குலக்கவோதுவனே. (௫)

ஓதுவாரோத்தெல்லாமெவ்வுலகத்தெவ்வெவையுஞ்
சாதுவாய்நின்புகழின்றகையல்லாற்பிறிதில்லை
போதுவாழ்புனந்துழாய்முடியினாய்பூவின்மேல்
மாதுவாழ்மார்பினாயென்சொல்லியான்வாழ்த்துவனே. (௬)

வாழ்த்துவார்பலராகநின்னுள்ளேநான்முகனை
மூழ்த்தநீருலகெல்லாம்படையென்றுமுதல்படைத்தாய்
கேழ்த்தசீரான்முதலாக்கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து
சூழ்த்தமரர்துதித்தாலுன்றொல்புகழ்மாசூணாதே. (௭)

மாசூணாச்சுடருடம்பாய்மலராதுகுவியாது
மாசூணாஞானமாய்முழுதுமாய்முழுதியன்றாய்
மாசூணாவான்கோலத்தமரர்கோன்வழிப்பட்டால்
மாசூணாவுனபாதமலர்ச்சோதிமழுங்காதே. (௮)

மழுங்காதவைந்நுதியசக்கரநல்வலத்தையாய்த்
தொழுங்காதற்களிறளிப்பான்புள்ளூர்ந்துதோன்றினையே
மழுங்காதஞானமேபடையாகமலருலகிற்
றொழும்பாயார்க்களித்தாலுன்சுடர்ச்சோதிமறையாதே. (௯)

மறையாயநால்வேதத்துள்நின்றமலர்ச்சுடரே
முறையாலிவ்வுலகெல்லாம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய்
பிறையேறுசடையானும்நான்முகனுமிந்திரனும்
இறையாதலறிந்தேத்தவீற்றிருத்தலிதுவியப்பே. (௧௦)

வியப்பாயவியப்பில்லாமெய்ஞ்ஞானவேதியனைச்
சயப்புகழார்பலர்வாழுந்தடங்குருகூர்ச்சடகோபன்
துயக்கின்றித்தொழுதுரைத்தவாயிரத்துளிப்பத்தும்
உயக்கொண்டுபிறப்பறுக்குமொலிமுந்நீர்ஞாலத்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௨௧-இ-பாசுரம்-௨௩௩.

௨ - வது. முன்னீர்.

அழகருடைய திவ்யஸௌந்தர்யத்தை பரிசோதித்து அநுபவிக்கைக்கு அசக்தராய்த்த அசக்திக்கு ஹேது தம்முடைய கரணஸங்கோச மென்று ஆழ்வார் வ்யாமோஹப்பட்டிருக்க ஸர்வேச்வரன் (யாதொவரொருவர்க்குத்தே) இந்த நித்யஸூரிகளுக்கும் அபரிச்சேத்யமானதென ஸ்வபாவம் இதற்குஹேது கரணஸங்கோசமென்று வ்யாமோஹப்படவே ண்டாம் திருமலையிலே ஸர்வஸுலபனா ய் நிற்கிறவென்னை யநுபவியுமென் று வ்யாமோஹந் தீர்த்ததை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-சீகாமரம்-தாளம்-ஏமொத்து.

முன்னீர்ஞாலம்படைத்தவெம்முகில்வண்ணனே
அன்னாணீதந்தவாக்கையின்வழியுழல்வேன்
வெந்நாணோய்வீயவினைகளைவேரறப்பாய்ந்
தெந்நாள்யானுன்னையினிவந்துகூடுவனே. (௧)

வன்மாவையமளந்தவெம்வாமனா நின்
பன்மாமாயப்பல்பிறவியிற்படிகின்றயான்
தொன்மாவல்வினைத்தொடர்களைமுதலரிந்து
நின்மாதாள்சேர்ந்துநிற்பதெஞ்ஞான்றுகொலோ. (௨)

கொல்லாமாக்கோல்கொலைசெய்துபாரதப்போர்
எல்லாச்சேனையுமிருநிலத்தவித்தவெந்தாய்
பொல்லாவாக்கையின்புணர்வினையறுக்கலறா
சொல்லாயானுன்னைச்சார்வதோர்சூழ்ச்சியே. (௩)

சூழ்ச்சிஞானச்சுடரொளியாகியென்றும்
ஏழ்ச்சிக்கேடின்றியெங்கணுநிறைந்தவெந்தாய்
தாழ்ச்சிமற்றெங்குந்தவிர்ந்துநின்றாளிணைக்கீழ்
வாழ்ச்சியான்சேரும்வகையருளாய்வந்தே. (௪)

வந்தாய்போலேவந்துமென்மனத்தினைநீ
சிந்தாமற்செய்யாயிதுவேயிதுவாகிற்
கொந்தார்காயாவின்கொழுமலர்திருநிறத்த
வெந்தாயானுன்னையெங்குவந்தணுகிற்பனே. (௫)

கிற்பன்கில்லேனென்றிலன்முனநாளால்
அற்பசாரங்களவைசுவைத்தகன்றொழிந்தேன்
பற்பல்லாயிரமுயிர்செய்தபரமா நின்
நற்பொற்சோதித்தாளணுகுவதெஞ்ஞான்றே. (௬)

எஞ்ஞான்றுநாமிருந்திருந்திரங்கிநெஞ்சே
மெய்ஞ்ஞானமின்றிவினையியல்பிறப்பழுந்தி
எஞ்ஞான்றுமெங்குமொழிவறநிறைந்துநின்ற
மெய்ஞ்ஞானச்சோதிக்கண்ணனைமேவுதுமே. (௭)

மேவுதுன்பவினைகளைவிடுத்துமிலேன்
ஓவுதலின்றியுன்கழல்வணங்கிற்றிலேன்
பாவுதொல்சீர்க்கண்ணாவென்பரஞ்சுடரே.
கூவுகின்றேன்காண்பானெங்கெய்தக்கூவுவனே. (௮)

கூவிக்கூவிக்கொடுவினைத்தூற்றுள்நின்று
பாவியேன்பலகாலம்வழிதிகைத்தலமர்கின்றேன்
மேவியன்றானிரைகாத்தவனுலகமெல்லாந்
தாவியவம்மானையெங்கினித்தலைப்பெய்வனே. (௯)

தலைப்பெய்காலம்நமன்றமர்பாசம்விட்டால்
அலைப்பூணுண்ணுமவ்வல்லலெல்லாமகலக்
கலைப்பல்ஞானத்தென்கண்ணனைக்கண்டுகொண்டு
நிலைப்பெற்றென்னெஞ்சம்பெற்றதுநீடுயிரே. (௧௦)

உயிர்களெல்லாவுலகுமுடையவனைக்
குயில்கொள்சோலைத்தென்குருகூர்ச்சடகோபன்
செயிரில்சொல்லிசைமாலையாயிரத்துள்ளிப்பத்தும்
உயிரின்மேலாக்கையூனிடையொழிவிக்குமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௨௨-இ-பாசுரம்-௨௪௨.

௩ - வது. ஒழிவில்.

திருவேங்கடமுடையான்திருவடிகளிலேஸகலவிதகைங்கர்ய ப்ரார்த்தனையையருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-பழந்தக்கராகம்-தாளம்-ஏமொத்து.

ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி
வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்

தெழிகுரலருவித்திருவேங்கடத்
தெழில்கொள்சோதியெந்தைதந்தைதந்தைக்கே. (௧)

எந்தைதந்தைதந்தைதந்தைதந்தைக்கு
முந்தைவானவர்வானவர்கோனொடும்
சிந்துபூமகிழுந்திருவேங்கடத்
தந்தமில்புகழ்க்காரெழிலண்ணலே. (௨)

அண்ணன்மாயனணிகொள்செந்தாமரைக்
கண்ணன்செங்கனிவாய்க்கருமாணிக்கந்
தெண்ணிறச்சுனைநீர்த்திருவேங்கடத்
தெண்ணில்தொல்புகழ்வானவரீசனே. (௩)

ஈசன்வானவர்க்கென்பனென்றாலது
தேசமோதிருவேங்கடத்தானுக்கு
நீசனேனிறைவொன்றுமிலேனென்கட்
பாசம்வைத்தபரஞ்சுடர்ச்சோதிக்கே. (௪)

சோதியாகியெல்லாவுலகுந்தொழும்
ஆதிமூர்த்தியென்றாலளவாகுமோ
வேதியர்முழுவேதத்தமுதத்தைத்
தீதில்சீர்த்திருவேங்கடத்தானையே. (௫)

வேங்கடங்கள்மெய்ம்மேல்வினைமுற்றவுந்
தாங்கள்தங்கட்குநல்லனவேசெய்வார்
வேங்கடத்துறைவார்க்குநமவெனல்
ஆங்கடமையதுசுமந்தார்கட்கே. (௬)

சுமந்துமாமலர்நீர்சுடர்தூபங்கொண்
டமர்ந்துவானவர்வானவர்கோனொடு
நமன்றெழுந்திருவேங்கடநங்கட்குச்
சமன்கொள்வீடுதருந்தடங்குன்றமே. (௭)

குன்றமேந்திக்குளிர்மழைகாத்தவன்
அன்றுஞாலமளந்தபிரான்பரன்
சென்றுசேர்திருவேங்கடமாமலை
ஒன்றுமேதொழநம்வினையோயுமே. (௮)

ஓயுமூப்புப்பிறப்பிறப்புப்பிணி
வீயுமாறுசெய்வான்திருவேங்கடத்
தாயனாண்மலராமடித்தாமரை
வாயுள்ளும்மனத்துள்ளும்வைப்பார்கட்கே. (௯)

வைத்தநாள்வரையெல்லைகுறுகிச்சென்
றெய்த்திளைப்பதன்முன்னமடைமினோ
பைத்தபாம்பணையான்திருவேங்கட
மொய்த்தசோலைமொய்பூந்தடந்தாழ்வரே. (௧௦)

தாள்பரப்பிமண்தாவியவீசனை
நீள்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொற்
கேழிலாயிரத்திப்பத்தும்வல்லவர்
வாழ்வர்வாழ்வெய்திஞாலம்புகழவே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௨௩-இ-பாசுரம்-௨௫௫.

௪ - வது. புகழும்.

ஸகலவிதகைங்கர்யப்ரபோகத்துக்குஅநுகுணமாக
ஸர்வேச்வரன்ஸர்வாத்மதன்மையைக்காட்டஅதிலேஸர்வவித
கைங்கர்யத்தையும்பண்ணுகைக்கிச்சித்துஅதற்குஅசக்தராய்ஸர்வேச்வரன்
பண்ணினமாத்திரமேபோதுமென்கிறவார்த்தையாலேவாசிக
கைங்கர்யம்பண்ணினதையருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம் பண்-காட்டம்-தாளம்-ஒன்பதொத்து.

புகழுநல்லொருவனென்கோபொருவில்சீர்ப்பூமியென்கோ
திகழுந்தண்பரவையென்கோதீயென்கோவாயுவென்கோ
நிகழுமாகாசமென்கோநீள்சுடரிரண்டுமென்கோ
இகழ்விலிவ்வனைத்துமென்கோகண்ணனைக்கூவுமாறே. (௧)

கூவுமாறறியமாட்டேன்குன்றங்களனைத்துமென்கோ
மேவுசீர்மாரியென்கோவிளங்குதாரகைகளென்கோ
நாவியற்கலைகளென்கோஞானநல்லாவியென்கோ
பாவுசீர்க்கண்ணனெம்மான்பங்கயக்கண்ணனையே. (௨)

பங்கயக்கண்ணனென்கோபவளச்செவ்வாயனென்கோ
அங்கதிரடியனென்கோவஞ்சனவண்ணனென்கோ
செங்கதிர்முடியனென்கோதிருமறுமார்பனென்கோ
சங்குசக்கரத்தனென்கோசாதிமாணிக்கத்தையே. (௩)

சாதிமாணிக்கமென்கோசவிகொள்பொன்முத்தமென்கோ
சாதிநல்வயிரமென்கோதவிவில்சீர்விளக்கமென்கோ
ஆதியஞ்சோதியென்கோவாதியம்புருடனென்கோ
ஆதுமில்காலத்தெந்தையச்சுதனமலனையே. (௪)

அச்சுதனமலனென்கோவடியவர்வினைகெடுக்கும்
நச்சுமாமருந்தமென்கோநலங்கடலமுதமென்கோ
அச்சுவைக்கட்டியென்கோவறுசுவையடிசிலென்கோ
நெய்ச்சுவைத்தேறலென்கொகனியென்கோபாலென்கேனோ. (௫)

பாலென்கோநான்குவேதப்பயனென்கோசமயநீதி
நூலென்கோநுடங்குகேள்வியிசையென்கோவிவற்றுளெல்லா
மேலென்கோவினையின்மிக்கபயனென்கோகண்ணனென்கோ
மாலென்கோமாயனென்கோவானவராதியையே. (௬)

வானவராதியென்கோவானவர்தெய்வமென்கோ
வானவர்போகமென்கோவானவர்முற்றுமென்கோ
ஊனமில்செல்வமென்கோவூனமில்சுவர்க்கமென்கோ
ஊனமின்மோக்கமென்கோவொளிமணிவண்ணனையே. (௭)

ஒளிமணிவண்ணனென்கோவொருவனென்றேத்தநின்ற
நளிர்மதிச்சடையனென்கோநான்முகக்கடவுளென்கோ
அளிமகிழ்ந்துலகமெல்லாம்படைத்தவையேத்தநின்ற
களிமலர்த்துளவனெம்மான்கண்ணனைமாயனையே. (௮)

கண்ணனைமாயன்றன்னைக்கடல்கடைந்தமுதங்கொண்ட
அண்ணலையச்சுதனையனந்தனையனந்தன்றன்மேல்
நண்ணிநன்குறைகின்றானைஞாலமுண்டுமிழ்ந்தமாலை
எண்ணுமாறறியமாட்டேன்யாவையுமெவருந்தானே. (௯)

யாவையுமெவருந்தானாயவரவர்சமயந்தோறுந்
தோய்விலன்புலனைந்துக்குஞ்சொலப்படானுணர்வின்மூர்த்தி
ஆவிசேருயிரினுள்ளால்யாதுமோர்பற்றிலாத
பாவனையதனைக்கூடிலவனையுங்கூடலாமே. (௰)

கூடிவண்டறையுந்தண்டார்க்கொண்டல்போல்வண்ணன்றன்னை
மாடலர்பொழிற்குருகூர்வண்சடகோபன்சொன்ன
பாடலோராயிரத்துளிவையுமோர்பத்தும்வல்லார்
வீடிலபோகமெய்திவிரும்புவரமரர்மொய்த்தே. (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௨௪-இ-பாசுரம்-௨௬௬.

௫ - வது. மொய்ம்மாம்.

பகவத்கைங்கர்யத்தில்ஆதரமுடையஆழ்வார்பகவத்
கைங்கர்யம்பண்ணுகிறபேரைக்கொண்டாடினதும்அல்லாதபேரை
நிந்தித்ததும்அருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-சீகாமரம்-தாளம்-இடையொத்து.

மொய்ம்மாம்பூம்பொழிற்பொய்கைமுதலைச்சிறைப்பட்டுநின்ற
கைம்மாவுக்கருள்செய்தகார்முகில்போல்வண்ணன்கண்ணன்
எம்மானைச்சொல்லிப்பாடியெழுந்தும்பறந்துந்துள்ளாதார்
தம்மாற்கருமமென்சொல்லீர்தண்கடல்வட்டத்துள்ளீரே. (௧)

தண்கடல்வட்டத்துள்ளாரைத்தமக்கிரையாத்தடிந்துண்ணுந்
திண்கழற்காலசுரர்க்குத்தீங்கிழைக்குந்திருமாலைப்
பண்கள்தலைக்கொள்ளப்பாடிப்பறந்துங்குனித்துழலாதார்
மண்கொளுலகிற்பிறப்பார்வல்வினைமோதமலைந்தே. (௨)

மலையையெடுத்துக்கன்மாரிகாத்துப்பசுநிரைதன்னைத்
தொலைவுதவிர்த்தபிரானைச்சொல்லிச்சொல்லிநின்றெப்போதுந்
தலையினோடாதனந்தட்டத்தடுகுட்டமாய்ப்பறவாதார்
அலைகொள்நரகத்தழுந்திக்கிடந்துழைக்கின்றவம்பரே. (௩)

வம்பவிழ்கோதைபொருட்டால்மால்விடையேழுமடர்த்த
செம்பவளத்திரள்வாயன்சிரீதரன்றொல்புகழ்பாடிக்
கும்பிடுநட்டமிட்டாடிக்கோகுகட்டுண்டுழலாதார்
தம்பிறப்பாற்பயனென்னேசாதுசனங்களிடையே. (௪)

சாதுசனத்தைநலியுங்கஞ்சனைச்சாதிப்பதற்கா
யாதியஞ்சோதியுருவையங்குவைத்திங்குப்பிறந்த
வேதமுதல்வனைப்பாடிவீதிகடோறுந்துள்ளாதார்
ஓதியுணர்ந்தவர்முன்னாவென்சவிப்பார்மனிசரே. (௫)

மனிசரும்மற்றும்முற்றுமாய்மாயப்பிறவிபிறந்த
தனியன்பிறப்பிலிதன்னைத்தடங்கடற்சேர்ந்தபிரானைக்
கனியைக்கரும்பினின்சாற்றைக்கட்டியைத்தேனையமுதை
முனிவின்றியேத்திக்குனிப்பார்முழுதுணர்நீர்மையினாரே. (௬)

நீர்மையினூற்றுவர்வீயவைவர்க்கருள்செய்துநின்று
பார்மல்குசேனையவித்தபரஞ்சுடரைநினைந்தாடி

நீர்மல்குகண்ணினராகிநெஞ்சங்குழைந்துநையாதே
ஊன்மல்குமோடுபருப்பாருத்தமர்கட்கென்செய்வாரே. (௭)

வார்புனலந்தண்ணருவிவடதிருவேங்கடத்தெந்தை
பேர்பலசொல்லிப்பிதற்றிப்பித்தரென்றேபிறர்கூற
ஊர்பலபுக்கும்புகாதுமுலோகர்சிரிக்கநின்றாடி
ஆர்வம்பெருகிக்குனிப்பாரமரர்தொழப்படுவாரே. (௮)

அமரர்தொழப்படுவானையனைத்துலகுக்கும்பிரானை
அமரமனத்தினுள்யோகுபுணர்ந்தவன்றன்னோடொன்றாக
அமரத்துணியவல்லார்களொழியவல்லாதவரெல்லாம்
அமரநினைந்தெழுந்தாடியலற்றுவதேகருமமே. (௯)

கருமமுங்கருமபலனுமாகியகாரணன்றன்னைத்
திருமணிவண்ணனைச்செங்கண்மாலினைத்தேவபிரானை
ஒருமைமனத்தினுள்வைத்துள்ளங்குழைந்தெழுந்தாடிப்
பெருமையுநாணுந்தவிர்ந்துபிதற்றுமின்பேதைமைதீர்ந்தே. (௧௰)

தீர்ந்தவடியவர்தம்மைத்திருத்திப்பணிகொள்ளவல்ல
ஆர்ந்தபுகழச்சுதனையமரர்பிரானையெம்மானை
வாய்ந்தவளவயல்சூழ்தண்வளங்குருகூர்ச்சடகோபன்
நேர்ந்தவோராயிரத்திப்பத்தருவினைநீறுசெய்யுமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௨௫-இ-பாசுரம்-௨௭௫.

௬ - வது. செய்ய.

கைங்கர்யத்துக்குப்பரவ்யூஹவிபவாந்தர்யாமிகளைக்காட்டிலர்ச்சாவதாரமே
சுலபவிஷயத்வமென்றதையருளிச்செய்கிறார்

எழுசீராசிரியவிருத்தம்-பண்-தக்கராகம்-தாளம் ஏறொத்து.

செய்யதாமரைக்கண்ணனாயுலகேழுமுண்டவவன்கண்டீர்
வையம்வானம்மனிசர்தெய்வம்மற்றும்மற்றும்மற்றும்முற்றுமாய்ச்
செய்யசூழ்சுடர்ஞானமாய்வெளிப்பட்டிவைபடைத்தான்பின்னும்
மொய்கொள்சோதியோடாயினானொருமூவராகியமூர்த்தியே. (௧)

மூவராகியமூர்த்தியைமுதன்மூவர்க்குமுதல்வன்றன்னைச்
சாபமுள்ளனநீக்குவானைத்தடங்கடற்கிடந்தான்றன்னைத்

தேவதேவனைத்தென்னிலங்கையெரியெழச்செற்றவில்லியைப்
பாவநாசனைப்பங்கயத்தடங்கண்ணனைப்பரவுமினோ. (௨)

பரவிவானவரேத்தநின்றபரமனைப்பரஞ்சோதியைக்
குரவைகோத்தகுழகனைமணிவண்ணனைக்குடக்கூத்தனை
அரவமேறியலைகடலமருந்துயில்கொண்டவண்ணலை
இரவுநன்பகலும்விடாதென்றுமேத்துதல்மனம்வைம்மினோ. (௩)

வைம்மினும்மனத்தென்றுயானுரைக்கின்றமாயவன்சீர்மையை
எம்மனோர்களுரைப்பதென்னதுநிற்கநாடொறும்வானவர்
தம்மையாளுமவனுநான்முகனுஞ்சடைமுடியண்ணலுஞ்
செம்மையாலவன்பாதபங்கயஞ்சிந்தித்தேத்தித்திரிவரே. (௪)

திரியுங்காற்றோடகல்விசும்புதிணிந்தமண்கிடந்தகடல்
எரியுந்தீயோடிருசுடர்தெய்வம்மற்றும்மற்றும்முற்றுமாய்க்
கரியமேனியன்செய்யதாமரைக்கண்ணன்கண்ணன்விண்ணோரிறை
சுரியும்பல்கருங்குஞ்சியெங்கள்சுடர்முடியண்ணல்தோற்றமே. (௫)

தோற்றக்கேடவையில்லவனுடையானவனொருமூர்த்தியாய்ச்
சிற்றத்தோடருள்பெற்றவனடிக்கீழ்ப்புகநின்றசெங்கண்மால்
நாற்றத்தோற்றச்சுவையொலியுறலாகிநின்றவெம்வானவர்
ஏற்றையேயன்றிமற்றொருவரையானிலேனெழுமைக்குமே. (௬)

எழுமைக்குமெனதாவிக்கின்னமுதத்தினையெனதாருயிர்
கெழுமியகதிர்ச்சோதியைமணிவண்ணனைக்குடக்கூத்தனை
விழுமியவமரர்முனிவர்விழுங்குங்கன்னற்கனியினைத்
தொழுமின்றூயமனத்தராயிறையுநில்லாதுயரங்களே. (௭)

துயரமேதருதுன்பவின்பவினைகளாயவையல்லனாய்
உயரநின்றதோர்சோதியாயுலகேழுமுண்டுமிழ்ந்தான்றன்னை
அயரவாங்குநமன்றமர்க்கருநஞ்சினையச்சுதன்றன்னைத்
தயரதற்குமகன்றன்னையன்றிமற்றிலேன்றஞ்சமாகவே. (௮)

தஞ்சமாகியதந்தைதாயொடுதானுமாயவையல்லனாய்
எஞ்சலிலமரர்குலமுதல்மூவர்தம்முளுமாதியை
அஞ்சிநீருலகத்துள்ளீர்களவனிவனென்றுகூழேன்மின்
நெஞ்சினால்நினைப்பானெவனவனாகுநீள்கடல்வண்ணனே. (௯)

கடல்வண்ணன்கண்ணன்விண்ணவர்கருமாணிக்கமெனதாருயிர்
படவரவினணைக்கிடந்தபரஞ்சுடர்பண்டுநூற்றுவர்
அடவரும்படைமங்கவைவர்கட்காகிவெஞ்சமத்தன்றுதேர்
கடவியபெருமான்கனைகழல்காண்பதென்றுகொல்கண்களே. (௧௰)

கண்கள்காண்டற்கரியனாய்க்கருத்துக்குநன்றுமெளியனாய்
மண்கொண்ஞாலத்துயிர்க்கெல்லாமருள்செய்யும்வானவரீசனைப்
பண்கொள்சோலைவழுதிநாடன்குருகைக்கோன்சடகோபன்சொற்
பண்கொளாயிரத்திப்பத்தால்பத்தராகக்கூடும்பயிலுமினே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௨௬-இ-பாசுரம்-௨௮௬.

௭ - வது. பயிலும்.

பகவத்கைங்கர்யம் பண்ணுகிறவர்கள் நமக்கு ஸ்வாமிகளென்று பாகவத சேஷத்வ மருளிச் செய்கிறார்,

கலித்துறை-பண்-காட்டம்-தாளம்-ஏழொத்து.

பயிலுஞ்சுடரொளிமூர்த்தியைப்பங்கயக்கண்ணனைப்
பயிலவினியநம்பாற்கடற்சேர்ந்தபரமனைப்
பயிலுந்திருவுடையாரெவரேலுமவர்கண்டீர்
பயிலும்பிறப்பிடைதோறெம்மையாளும்பரமரே. (௧)

ஆளும்பரமனைக்கண்ணனையாழிப்பிரான்றன்னைத்
தோளுமோர்நான்குடைத்தூமணிவண்ணனெம்மான்றன்னைத்
தாளுந்தடக்கையுங்கூப்பிப்பணியுமவர்கண்டீர்
நாளும்பிறப்பிடைதோறெம்மையாளுடைநாதரே. (௨)

நாதனைஞாலமும்வானமுமேத்துநறுந்துழாய்ப்
போதனைப்பொன்னெடுஞ்சக்கரத்தெந்தைபிரான்றன்னைப்
பாதம்பணியவல்லாரைப்பணியுமவர்கண்டீர்
ஓதும்பிறப்பிடைதோறெம்மையாளுடையார்களே. (௩)

உடையார்ந்தவாடையன்கண்டிகையனுடைநாணினன்
புடையார்பொன்னூலினன்பொன்முடியன்மற்றும்பல்கலன்
நடையாவுடைத்திருநாரணன்றொண்டர்தொண்டர்கண்டீர்
இடையார்பிறப்பிடைதோறெமக்கெம்பெருமக்களே. (௪)

பெருமக்களுள்ளவர்தம்பெருமானையமரர்கட்
கருமையொழியவன்றாரமுதூட்டியவப்பனைப்
பெருமைபிதற்றவல்லாரைப்பிதற்றுமவர்கண்டீர்
வருமையுமிம்மையுநம்மையளிக்கும்பிராக்களே. (௫)

அளிக்கும்பரமனைக்கண்ணனையாழிப்பிரான்றன்னைத்
துளிக்குநறுங்கண்ணித்தூமணிவண்ணனெம்மான்றன்னை
ஒளிக்கொண்டசோதியையுள்ளத்துக்கொள்ளுமவர்கண்டீர்
சலிப்பின்றியாண்டெம்மைச்சன்மசன்மாந்தரங்காப்பரே. (௬)

சன்மசன்மாந்தரங்காத்தடியார்களைக்கொண்டுபோய்த்
தன்மைபெறுத்தித்தன்றாளிணைக்கீழ்க்கொள்ளுமப்பனைத்
தொன்மைபிதற்றவல்லாரைப்பிதற்றுமவர்கண்டீர்
நன்மைபெறுத்தெம்மைநாளுய்யக்கொள்கின்றநம்பரே. (௭)

நம்பனைஞாலம்படைத்தவனைத்திருமார்பனை
உம்பருலகினில்யார்க்குமுணர்வரியான்றன்னைக்
கும்பிநரகர்களேத்துவரேலுமவர்கண்டீர்
எம்பல்பிறப்பிடைதோறெந்தொழுகுலந்தாங்களே. (௮)

குலந்தாங்குசாதிகணாலிலுங்கீழிழிந்தெத்தனை
நலந்தானிலாதசண்டாளசண்டாளர்களாகிலும்
வலந்தாங்குசக்கரத்தண்ணல்மணிவண்ணற்காளென்றுள்
கலந்தாரடியார்தம்மடியாரெம்மடிகளே. (௯)

அடியார்ந்தவையமுண்டாலிலையன்னவசஞ்செய்யும்
படியாதுமில்குழவிப்படியெந்தைபிரான்றனக்
கடியாரடியார்தம்மடியாரடியார்தமக்
கடியாரடியார்தம்மடியாரடியோங்களே. (௰)

அடியோங்குநூற்றுவர்வீயவன்றைவர்க்கருள்செய்த
நெடியோனைத்தென்குருகூர்ச்சடகோபன்குற்றேவல்கள்
அடியார்ந்தவாயிரத்துள்ளிவைபத்தவன்றொண்டர்மேல்
முடிவாரக்கற்கிற்கிற்சன்மஞ்செய்யாமைமுடியுமே. (௧௧)

117044

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௨௭-இ - பாசுரம்-௨௯௭.

௮ - வது. முடியானே.

பாகவதசேஷத்வம் ப்ரதிபாதித்தஆழ்வார்இந்தபாகவதசேஷத்வம்பரம்பர
போதனத்துக்கு உபயுக்தமாகாமல்பகவத்குணஸ்மாரகமாய்
அக்குணானுபவத்திலொரோரிந்த்ரியமேயஞ்சேந்த்ரிய
க்ருத்யங்களையாசைப்பட்டதென்
றருளிச் செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-இந்தளம்-தாளம்-ஏழொத்து.

முடியானேமூவுலகுந்தொழுதேத்துஞ்சீர்
அடியானேயாழ்கடலைக்கடைந்தாய்புள்ளூர்

கொடியானேகொண்டல்வண்ணாவண்டத்தும்பரில்
நெடியானேயென்றுகிடக்குமென்னெஞ்சமே. (௧)
நெஞ்சமேநீணகராகவிருந்தவென்
தஞ்சனேதண்ணிலங்கைக்கிறையைச்செற்ற
நஞ்சனேஞாலங்கொள்வான்குறளாகிய
வஞ்சனேயென்னுமெப்போதுமென்வாசகமே. (௨)
வாசகமேயேத்தவருள்செய்யும்வானவர்தன்
நாயகனேநாளிளந்திங்களைக்கோள்விடுத்து
வேயகம்பால்வெண்ணெய்தொடுவுண்டவானாயர்
தாயவனேயென்றுதடவுமென்கைகளே. (௩)
கைகளாலாரத்தொழுதுதொழுதுன்னை
வைகலுமாத்திரைப்போதுமோர்வீடின்றிப்
பைகொள்பாம்பேறியுறைபரனேயுன்னை
மெய்கொள்ளக்காணவிரும்புமென்கண்களே. (௪)
கண்களாற்காணவருங்கொலென்றாசையால்
மண்கொண்டவாமனனேறமகிழ்ந்துசெல்
பண்கொண்டபுள்ளின்சிறகொலிபாவித்துத்
திண்கொள்ளவோர்க்குங்கிடந்தென்செவிகளே. (௫)
செவிகளாலாரநின்கீர்த்திக்கனியென்னும்
கவிகளேகாலப்பண்தேனுறைப்பத்துற்றுப்
புவியின்மேற்பொன்னெடுஞ்சக்கரத்துன்னையே
அவிவின்றியாதரிக்குமெனதாவியே. (௬)
ஆவியேயாரமுதேயென்னையாளுடைத்
தூவியம்புள்ளுடையாய்சுடர்நேமியாய்
பாவியேனெஞ்சம்புலம்பப்பலகாலும்
கூவியுங்காணப்பெறேனுனகோலமே. (௭)
கோலமேதாமரைக்கண்ணதோரஞ்சன
நீலமேநின்றெனதாவியையீர்கின்ற
சீலமேசென்றுசெல்லாதனமுன்னிலாம்
காலமேயுன்னையென்னாள்கண்டுகொள்வனே. (௮)
கொள்வன்நான்மாவலிமூவடிதாவென்ற
கள்வனேகஞ்சனைவஞ்சித்துவாணனை
உள்வன்மைதீரவோராயிரந்தோள்துணித்த
புள்வல்லாயுன்னையெஞ்ஞான்றுபொருந்துவனே. (௯)

பொருந்தியமாமருதினிடைபோயவெம்
பெருந்தகாயுன்கழல்காணியபேதுற்று
வருந்திநான்வாசகமாலைகொண்டுன்னையே
இருந்திருந்தெத்தனைகாலம்புலம்புவனே. (௰)
புலம்புசீர்ப்பூமியளந்தபெருமானை
நலங்கொள்சீர்நன்குருகூர்ச்சடகோபன்சொல்
வலங்கொண்டவாயிரத்துள்ளிவையுமோர்பத்து
இலங்குவான்யாவருமேறுவர்சொன்னாலே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௨௮-இ-பாசுரம்-௩௧௦.

௯ - வது. சொன்னால்.

பகவத்குணானுபவத்திலே ஆசையுடைத்தான ஆழ்வார் லௌகிகரைப்பார்த்து இதரஸ்தோத்ரம்பண்ணி ஞெலையுண்டாகிறது என்றேறுடேகட்ட ப்ரீயப்படியைஸ்தோத்ரம்பண்ணினுல்லவா பீஷ்டங்களுமுண்டாகு மென்றதை யருளிச்செய்கிறார்

கலித்துறை-பண்-முதிர்ந்தகுறிஞ்சி-தாளம்-ஏழொத்து.

சொன்னால்விரோதமிதாகிலுஞ்சொல்லுவன்கேண்மினோ
என்னாவிலின்கவியானொருவர்க்குங்கொடுக்கிலேன்
தென்னாதெனாவென்றுவண்டுமுரல்திருவேங்கடத்து
என்னானையென்னப்பனெம்பெருமானுளனாகவே. (௧)
உளனாகவேயெண்ணித்தன்னையொன்றாகத்தன்செல்வத்தை
வளனாமதிக்குமிம்மானிடத்தைக்கவிபாடியென்
குளனார்கழனிசூழ்கண்ணன்குறுங்குடிமெய்ம்மையே
உளனாயவெந்தையையெந்தைபெம்மானையொழியவே. (௨)
ஒழிவொன்றில்லாதபல்லூழிதோறூழிநிலாவப்போம்
வழியைத்தருநங்கள்வானவரீசனைநிற்கப்போய்க்
கழியமிகநல்லவான்கவிகொண்டுபுலவீர்காள்
இழியக்கருதியோர்மானிடம்பாடலென்னாவதே. (௩)
என்னாவதெத்தனைநாளைக்குப்போதும்புலவீர்காள்
மன்னாமனிசரைப்பாடிப்படைக்கும்பெரும்பொருள்
மின்னார்மணிமுடிவிண்ணவர்தாதையைப்பாடினால்
தன்னாகவேகொண்டுசன்மஞ்செய்யாமையுங்கொள்ளுமே. (௪)

கொள்ளும்பயனில்லைக்குப்பைகிளர்த்தன்னசெல்வத்தை
வள்ளல்புகழ்ந்துநும்வாய்மையிழக்கும்புலவீர்காள்
கொள்ளக்குறைவிலன்வேண்டிற்றெல்லாந்தருங்கோதிலென்
வள்ளல்மணிவண்ணன்றன்னைக்கவிசொல்லவம்மினோ. (௫)

வம்மின்புலவீர்நும்மெய்வருத்திக்கைசெய்துய்ம்மினோ
இம்மன்னுலகினில்செல்வரிப்போதில்லைநோக்கினோம்
நும்மின்கவிகொண்டுநுந்நுமிட்டாதெய்வமேத்தினாற்
செம்மின்சுடர்முடியென்றிருமாலுக்குச்சேருமே. (௬)

சேருங்கொடைபுகழெல்லையிலானையோராயிரம்
பேருமுடையபிரானையல்லால்மற்றுயான்கிலேன்
மாரியனையகைமால்வரையொக்குந்திண்டோளென்று
பாரிலோர்பற்றையைப்பச்சைப்பசும்பொய்கள்பேசவே. (௭)

வேயின்மலிபுரைதோளிபின்னைக்குமணாளனை
ஆயபெரும்புகழெல்லையிலாதனபாடிப்போய்க்
காயங்கழித்தவன்றாளிணைக்கீழ்ப்புகுங்காதலன்
மாயமனிசரையென்சொல்லவல்லேனென்வாய்கொண்டே. (௮)

வாய்கொண்டுமானிடம்பாடவந்தகவியேனல்லேன்
ஆய்கொண்டசீர்வள்ளலாழிப்பிரானெனக்கேயுளன்
சாய்கொண்டவிம்மையுஞ்சாதித்துவானவர்நாட்டையும்
நீகண்டுகொள்ளென்றுவீடுந்தருநின்றுநின்றே. (௯)

நின்றுநின்றுபலநாளுய்க்குமிவ்வுடல்நீங்கிப்போய்ச்
சென்றுசென்றாகிலுங்கண்டுசன்மங்கழிப்பானெண்ணி
ஒன்றியொன்றியுலகம்படைத்தான்கவியாயினேற்
கென்றுமென்றுமினிமற்றொருவர்கவியேற்குமே. (௧௦)

ஏற்கும்பெரும்புகழ்வானவரீசன்கண்ணன்றனக்
கேற்கும்பெரும்புகழ்வண்குருகூர்ச்சடகோபன்சொல்
ஏற்கும்பெரும்புகழாயிரத்துள்ளிவையுமோர்பத்
தேற்கும்பெரும்புகழ்சொல்லவல்லார்க்கில்லைசன்மமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-உக-இ-பாசுரம்-கஉக.

௧௦ - வது. சன்மம்.

இதரஸ்துதிபண்ணுகிறகவிகளைபகவத்விஷயத்திலேப்ரவர்த்
திக்கும்படிஉத்யோகித்துஅவர்கள்புத்திதிரும்பாதபடியாலேஅவர்கள்போ
லன்றிஸகலப்ரகாரத்தாலும் ஸர்வேச்வரன்அநுக்ரஹிக்கையாலே
தமக்கொருகுறையின்றி ஸர்வாபீஷ்டமுண்டாச்சதென்
றருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-காட்டம்தாளம் ஏழொத்து.

சன்மம்பலபலசெய்துவெளிப்பட்டுச்சங்கொடுசக்கரம்வில்
ஒண்மையுடையவுலக்கையொள்வாள்தண்டுகொண்டுபுள்ளூர்ந்துலகில்
வன்மையுடையவரக்கரசுரரைமாளப்படைபொருத
நன்மையுடையவன்சீர்பரவப்பெற்றநானோர்குறைவிலனே. (௧)

குறைவிற்றடங்கடற்கோளரவேறித்தன்கோலச்செந்தாமரைக்கண்
உறைபவன்போலவோர்யோகுபுணர்ந்தவொளிமணிவண்ணன்கண்ணன்
கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவியசுரரைக்காய்ந்தவம்மான்
நிறைபுகழேத்தியும்பாடியுமாடியும்யானொருமுட்டிலனே. (௨)

முட்டில்பல்போகத்தொருதனிநாயகன்மூவுலகுக்குரிய
கட்டியைத்தேனையமுதைநன்பாலைக்கனியைக்கரும்புதன்னை
மட்டவிழ்தண்ணந்துழாய்முடியானைவணங்கியவன்றிறத்துப்
பட்டபின்னையிறையாகிலும்யானென்மனத்துப்பரிவிலனே. (௩)

பரிவின்றிவாணனைக்காத்துமென்றன்றுபடையொடும்வந்தெதிர்ந்த
திரிபுரஞ்செற்றவனுமகனும்பின்னுமங்கியும்போர்தொலையப்
பொருசிறைப்புள்ளைக்கடாவியமாயனையாயனைப்பொற்சக்கரத்
தரியினையச்சுதனைப்பற்றியானிறையேனுமிடரிலனே. (௪)

இடரின்றியேயொருநாளொருபோதிலெல்லாவுலகுங்கழியப்
படர்புகழ்பார்த்தனும்வைதிகனுமுடனேறத்திண்டேர்கடவிச்
சுடரொளியாய்நின்றதன்னுடைச்சோதியில்வைதிகன்பிள்ளைகளை
உடலொடுங்கொண்டுகொடுத்தவனைப்பற்றியொன்றுந்துயரிலனே. ()

துயரில்சுடரொளிதன்னுடைச்சோதிநின்றவண்ணநிற்கவே
துயரின்மலியுமனிசர்பிறவியிற்றோன்றிக்கண்காணவந்து
துயரங்கள்செய்துதன்றெய்வநிலையுலகிற்புகவுய்க்குமம்மான்
துயரமில்சீர்க்கண்ணன்மாயன்புகழ்துய்த்தயானோர்துன்பமிலனே.

துன்பமுமின்பமுமாகியசெய்வினையாயுலகங்களுமாய்
இன்பமில்வெந்நரகாகியினியநல்வான்சுவர்க்கங்களுமாய்
மன்பல்லுயிர்களுமாகிப்பலபலமாயமயக்குகளால்
இன்புறுமிவ்விளையாட்டுடையானைப்பெற்றேதுமல்லலிலேனே. (௭)
அல்லலிலின்பமளவிறந்தெங்குமழகமர்சூழொளியன்
அல்லிமலர்மகள்போகமயக்குகளாகியுநிற்குமம்மான் [ப
எல்லையில்ஞானத்தன்ஞானமஃதேகொண்டெல்லாக்கருமங்களுஞ்செ
எல்லையின்மாயனைக்கண்ணனைத்தாள்பற்றியானோர்துக்கமிலேனே. (௮)
துக்கமில்ஞானச்சுடரொளிமூர்த்திதுழாயலங்கற்பெருமான்
மிக்கபன்மாயங்களால்விகிர்தஞ்செய்வேண்டுமுருவுகொண்டு
நக்கபிரானோடயன்முதலாகவெல்லாருமெவையுந்தன்னுள்
ஒக்கவொடுங்கவிழுங்கவல்லானைப்பெற்றொன்றுந்தளர்விலேனே. (௯)
தளர்வின்றியேயென்றுமெங்கும்பரந்ததனிமுதல்ஞானமொன்றாய்
அளவுடையைம்புலன்களறியாவகையாலருவாகிநிற்கும்
வளரொளியீசனைமூர்த்தியைப்பூதங்களைந்தையிருசுடரைக்
கிளரொளிமாயனைக்கண்ணனைத்தாள்பற்றியானென்றுங்கேடிலேனே.
கேடில்விழுப்புகழ்க்கேசவனைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
பாடலோராயிரத்துள்ளிவைபத்தும்பயிற்றவல்லார்கட்கவன்
நாடுநகரமுநன்குடன்காணநலனிடையூர்திபண்ணி
வீடும்பெறுத்தித்தன்மூவுலகுக்குந்தருமொருநாயகமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

மூன்றாம்பத்துமுற்றிற்று.

ஆ திருவாய்மொழி -௩௰- இபாசுரம்-௩௩௨.

நான்காம்பத்து.

௧ - வது. ஒருநாயகம்.

பகவதாஸ்ரயணத்தாற்றமக்கொரு குறையில்லையென்றவாழ்வார்அன்யருடை யகுறையுந்தீர்க்கஉத்யோகித்துஇஹலோகஐச்வர்யமும் ஸ்வர்காதிபோகமும்அஸ்திரம்கைவல்யாநுபவமல்பம்பகவதநுபவமே ஸ்திரமாயபரமபுருஷார்த்தமென் றுபதேசம்பண்ணினதை யருளிச்செய்கிறார்

கலிவிருத்தம்-பண்-நாட்டம்-தாளம்-ஏகதாளம்.

ஒருநாயகமாயோடவுலகுடனாண்டவர்
கருநாய்கவர்ந்தகாலர்சிதைகியபானையர்

பெருநாடுகாணவிம்மையிலேபிச்சைதாங்கொள்வர்
திருநாரணன்றாள்காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ. (௧)
உய்ம்மின்றிறைகொணர்ந்தென்றுலகாண்டவரிம்மையே
தம்மின்சுவைமடவாரைப்பிறர்கொள்ளத்தாம்விட்டு
வெம்மினொளிவெயிற்கானகம்போய்க்குமைதின்பர்கள்
செம்மின்முடித்திருமாலைவிரைந்தடிசேர்மினோ. (௨)
அடிசேர்முடியினராகியரசர்கள்தாந்தொழ
இடிசேர்முரசங்கள்முற்றத்தியம்பவிருந்தவர்
பொடிசேர்துகளாய்ப்போவர்களாதலினொக்கெனக்
கடிசேர்துழாய்முடிக்கண்ணன்கழல்கணினைமினோ. (௩)
நினைப்பான்புகிற்கடலெக்கலினுண்மணலிற்பலர்
எனைத்தோருகங்களுமிவ்வுலகாண்டுகழிந்தவர்
மனைப்பால்மருங்கறமாய்தலல்லால்மற்றுக்கண்டிலம்
பனைத்தாள்மதகளிறட்டவன்பாதம்பணிமினோ. (௪)
பணிமின்றிருவருளென்னுமஞ்சீதப்பைம்பூம்பள்ளி
அணிமென்குழலாரின்பக்கலவியமுதுண்டார்
துணிமுன்புநாலப்பல்லேழையர்தாமிழிப்பச்செல்வர்
மணிமின்னுமேனிநம்மாயவன்பேர்சொல்லிவாழ்மினோ. (௫)
வாழ்ந்தார்கள்வாழ்ந்ததுமாமழைமொக்குளின்மாய்ந்துமாய்ந்து
ஆழ்ந்தாரென்றல்லாலன்றுமுதலின்றறுதியாய்
வாழ்ந்தார்கள்வாழ்ந்தேநிற்பரென்பதில்லைநிற்குறில்
ஆழ்ந்தார்கடற்பள்ளியண்ணலடியவராமினோ. (௬)
ஆமின்சுவையவையாறொடடிசிலுண்டார்ந்தபின்
தூமென்மொழிமடவாரிரக்கப்பின்னுந்துற்றுவார்
ஈமினெமக்கொருதுற்றென்றிடறுவராதலிற்
கோமின்துழாய்முடியாதியஞ்சோதிகுணங்களே. (௭)
குணங்கொணிறைபுகழ்மன்னர்கொடைக்கடன்பூண்டிருந்
திணங்கியுலகுடனாக்கிலுமாங்கவனையில்லார்
மணங்கொண்டபோகத்துமன்னியுமீள்வர்கண்மீள்வில்லைப்
பணங்கொளரவணையான்றிருநாமம்படிமினோ. (௮)
படிமன்னுபல்கலன்பற்றோடறுத்தைம்புலன்வென்று
செடிமன்னுகாயஞ்செற்றார்களுமாங்கவனையில்லார்
குடிமன்னுமின்சுவர்க்கமெய்தியுமீள்வர்கண்மீள்வில்லை
கொடிமன்னுபுள்ளுடையண்ணல்கழல்கள்குறுகுமினோ. (௯)

குறுகமிகவுணர்வத்தொடுநோக்கியெல்லாம்விட்ட
இறுகலிறப்பென்னுஞானிக்கும்பயனில்லையே
சிறுகநினைவதோர்பாசமுண்டாம்பின்னும்வீடில்லை
மறுகலிலீசனைப்பற்றிவிடாவிடில்வீடஃதே. (௧௦)

அஃதேயுய்யப்புகுமாறென்றுகண்ணன்கழல்கள்மேற்
கொய்பூம்பொழிற்குருகூர்ச்சடகோபன்குற்றேவல்கள்
செய்கோலத்தாயிரஞ்சீர்த்தொடைப்பாடலிவைபத்தும்
அஃகாமற்கற்பவராழ்துயர்போயுய்யப்பாலரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௩௧-இ-பாசுரம்-௩௪௧.

௨-வது. பாலனாய்.

முன்சொன்னபரோபதேசம்வ்யர்த்தமாய்ப்பேசுகையாலேநாம்பகவத்விஷயத்தில்மிகவும்அபிநிவேசத்தையடைந்துமுன்புசெய்தஅவதாரங்களெல்லாமிப்பொழுதுதமக்குக்காட்டவேண்டுமென்கிறதையருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-நட்டபாஷை-தாளம்-ஒன்பதொத்து.

பாலனாயேழுலகுண்டுபரிவின்றி
ஆலிலையன்னவசஞ்செய்யுமண்ணலார்
தாளிணைமேலணிதண்ணந்துழாயென்றே
மாலுமால்வல்வினையேன்மடவல்லியே. (௧)

வல்லிசேர்நுண்ணிடையாய்ச்சியர்தம்மொடும்
கொல்லைமைசெய்துகுரவைபிணைந்தவர்
நல்லடிமேலணிநாறுதுழாயென்றே
சொல்லுமாற்சூழ்வினையாட்டியேன்பாவையே. (௨)

பாவியல்வேதநன்மாலைபலகொண்டு
தேவர்கள்மாமுனிவரிறைஞ்சநின்ற
சேவடிமேலணிசெம்பொற்றுழாயென்றே
கூவுமால்கோள்வினையாட்டியேன்கோதையே. (௩)

கோதில்வண்புகழ்கொண்டுசமயிகள்
பேதங்கள்சொல்லிப்பிதற்றும்பிரான்பரன்
பாதங்கள்மேலணிபைம்பொற்றுழாயென்றே
ஓதுமாலூழ்வினையேன்றடந்தோளியே. (௪)

தோளிசேர்பின்னைபொருட்டெருதேழ்தழீஇக்
கோளியார்கோவலனார்குடக்கூத்தனார்
தாளிணைமேலணிதண்ணந்துழாயென்றே
நாளுநாள்நைகின்றதாலென்றன்மாதரே. (௫)

மாதர்மாமண்மடந்தைபொருட்டேனமாய்
ஆதியங்காலத்தகலிடங்கீண்டவர்
பாதங்கள்மேலணிபைம்பொற்றுழாயென்றே
ஓதுமாலெய்தினளென்றன்மடந்தையே. (௬)

மடந்தையைவண்கமலத்திருமாதினைத்
தடங்கொள்தார்மார்பினில்வைத்தவர்தாளின்மேல்
வடங்கொள்பூந்தண்ணந்துழாய்மலர்க்கேயிவள்
மடங்குமால்வாணுதலீரென்மடக்கொம்பே. (௭)

கொம்புபோல்சீதைபொருட்டிலங்கைநகர்
அம்பெரியுய்த்தவர்தாளிணைமேலணி
வம்பவிழ்தண்ணந்துழாய்மலர்க்கேயிவள்
நம்புமால்நானிதற்கென்செய்கேன்நங்கைமீர். (௮)

நங்கைமீர்நீருமோர்பெண்பெற்றுநல்கினீர்
எங்ஙனேசொல்லுகேன்யான்பெற்றவேழையைச்
சங்கென்னுஞ்சக்கரமென்னுந்துழாயென்னும்
இங்ஙனேசொல்லுமிராப்பகலென்செய்கேன். (௯)

என்செய்கேனென்னுடைப்பேதையென்கோமளம்
என்சொல்லுமென்வசமுமல்லள்நங்கைமீர்
மின்செய்பூண்மார்பினன்கண்ணன்கழல்துழாய்
பொன்செய்பூண்மென்முலைக்கென்றுமெலியுமே. (௧௦)

மெலியுநோய்தீர்க்கும்நங்கண்ணன்கழல்கள்மேல்
மலிபுகழ்வண்குருகூர்ச்சடகோபன்சொல்
ஒலிபுகழாயிரத்திப்பத்தும்வல்லவர்
மலிபுகழ்வானவர்க்காவர்நற்கோவையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௩௨-இ-பாசுரம்-௩௫௨

௩ - வது. கோவை.

ஆழ்வார்ப்ரார்த்தித்தபடியேசகலகாலத்திலவதாரங்களையெல்லாங்காட்டப் ப்ரீதியடைந்ததை யருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம் - பண் - தக்கேசி - தாளம் - ஏகொத்து.

கோவைவாயாள்பொருட்டேற்றினெருத்தமிறுத்தாய்மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலைகுனித்தாய்குலநல்யானைமருப்பொசித்தாய்
பூவைவீயாநீர்தூவிப்போதால்வணங்கேனேலுநின்
பூவைவீயாமேனிக்குப்பூசுஞ்சாந்தென்னெஞ்சமே. (௧)

பூசுஞ்சாந்தென்னெஞ்சமேபுனையுங்கண்ணியெனதுடைய
வாசகஞ்செய்மாலையேவான்பட்டாடையுமஃதே
தேசமானவணிகலனுமென்கைகூப்புச்செய்கையே
ஈசன்ஞாலமுண்டுமிழ்ந்தவெந்தையேகமூர்த்திக்கே. (௨)

ஏகமூர்த்தியிருமூர்த்திமூன்றுமூர்த்திபலமூர்த்தி
ஆகியைந்துபூதமாயிரண்டுசுடராயருவாகி
நாகமேறிநடுக்கடலுட்டுயின்றநாராயணனேயுன்
ஆகமுற்றுமகத்தடக்கியாவியல்லல்மாய்த்ததே. (௩)

மாய்த்தலெண்ணிவாய்முலைதந்தமாயப்பேயுயிர்
மாய்த்தவாயமாயனேவாமனனேமாதவா
பூத்தண்மாலைகொண்டுன்னைப்போதால்வணங்கேனேலுநின்
பூத்தண்மாலைநெடுமுடிக்குப்புனையுங்கண்ணியெனதுயிரே. (௪)

கண்ணியெனதுயிர்காதல்கனகச்சோதிமுடிமுதலா
எண்ணில்பல்கலன்களுமேலுமாடையுமஃதே
நண்ணிமூவுலகும்நவிற்றுங்கீர்த்தியுமஃதே
கண்ணனெம்பிரானெம்மான்காலசக்கரத்தானுக்கே. (௫)

காலசக்கரத்தொடுவெண்சங்கங்கையேந்தினாய்
ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்தநாராயணனேயென்றென்று
ஓலமிட்டுநானழைத்தாலொன்றும்வாராயாகிலும்
கோலமாமென்சென்னிக்குன்கமலமன்னகுரைகழலே. (௬)

குரைகழல்கணீட்டிமண்கொண்டகோலவாமனா
குரைகழல்கைகூப்புவார்கள்கூடநின்றமாயனே
விரைகொள்பூவும்நீருங்கொண்டேத்தமாட்டேனேலுமுன்
உரைகொள்சோதித்திருவுருவமென்னதாவிமேலதே. (௭)

என்னதாவிமேலையாயேர்கொளேழுலகமுந்
துன்னிமுற்றுமாகிநின்றசோதிஞானமூர்த்தியா
உன்னதென்னதாவியுமென்னதுன்னதாவியும்
இன்னவண்ணமேநின்றாயென்றுரைக்கவல்லேனே. (௮)

உரைக்கவல்லேனல்லேனுன்னுலப்பில்கீர்த்திவெள்ளத்தின்
கரைக்கணென்றுசெல்வனான்காதல்மையலேறினேன்
புரைப்பிலாதபரம்பரனேபொய்யிலாதபரஞ்சுடரே
இரைத்துநல்லமேன்மக்களேத்தயானுமேத்தினேன். (௯)

யானுமேத்தியேழுலகும்முற்றுமேத்திப்பின்னையுந்
தானுமேத்திலுந்தன்னையேத்தவேத்தவெங்கெய்துந்
தேனும்பாலுங்கன்னலுமமுதுமாகித்தித்திப்ப
யானுமெம்பிரானையேயேத்தினேன்யானுய்வானே. (௧௰)

உய்வுபாயம்மற்றின்மைதேறிக்கண்ணனொண்கழல்கள்மேற்
செய்யதாமரைப்பழனத்தென்னன்குருகூர்ச்சடகோபன்
பொய்யில்பாடலாயிரத்துளிவையும்பத்தும்வல்லார்கள்
வையம்மன்னிவீற்றிருந்துவிண்ணுமாள்வர்மண்ணூடே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ திருவாய்மொழி-௩௩ - இ - பாசுரம்-௩௬௩.

௪ - வது. மண்ணை.

அவதாரங்களைக்காட்டிமறைத்தபடியாலே ஆழ்வார் நாயகித்தன்மையை யடைந்து மோஹித்துலம்பத்தைச்சகியன்றுக்கண்பார்த்துத் தெளிவின்றித்தாய்சொல்லுவதாக வருளிச்செய்கிறார்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம் - பண் - பஞ்சமம் - தாளம் இடையொத்து.

மண்ணையிருந்துதுழாவிவாமனன்மண்ணிதுவென்னும்
விண்ணைத்தொழுதவன்மேவுவைகுந்தமென்றுகைகாட்டும்
கண்ணையுண்ணீர்மல்கநின்றுகடல்வண்ணனென்னுமன்னேயென்
பெண்ணைப்பெருமயல்செய்தாற்கென்செய்கேன்பெய்வளையீரே. (௧)

பெய்வளைக்கைகளைக்கூப்பிப்பிரான்கிடக்குங்கடலென்னும்
செய்யதோர்ஞாயிற்றைக்காட்டிச்சிரீதரன்மூர்த்தியீதென்னும்

கையுங்கண்ணீர்மல்கநின்றுகடல்வண்ணனென்னுமன்னேயென்
தெய்வவுருவிற்சிறுமான்செய்கின்றதொன்றறியேனே. (௨)
அறியுஞ்செந்தீயைத்தழுவியச்சுதனென்னும்மெய்வேவாள்
எறியுந்தண்காற்றைத்தழுவியென்னுடைக்கோவிந்தனென்னும்
வெறிகொள்துழாய்மலர்நாறும்வினையுடையாட்டியேன்பெற்ற
செறிவளைமுன்கைச்சிறுமான்செய்கின்றதென்கண்ணுக்கொன்றே (௩)
ஒன்றியதிங்களைக்காட்டியொளிமணிவண்ணனேயென்னும்
நின்றகுன்றத்தினைநோக்கிநெடுமாலேவாவென்றுகூவும்
நன்றுபெய்யும்மழைகாணில்நாரணன்வந்தானென்றாலும்
என்றினமையல்கள்செய்தானென்னுடைக்கோமளத்தையே. (௪)
கோமளவான்கன்றைப்புல்கிக்கோவிந்தன்மேய்த்தனவென்னும்
போமிளநாகத்தின்பின்போயவன்கிடக்கையீதென்னும்
ஆமளவொன்றுமறியேனருவினையாட்டியேன்பெற்ற
கோமளவல்லியைமாயோன்மால்செய்துசெய்கின்றகூத்தே. (௫)
கூத்தர்குடமெடுத்தாடிற்கோவிந்தனாமெனாவோடும்
வாய்த்தகுழலோசைகேட்கில்மாயவனென்றுமையாக்கும்
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்காணிலவனுண்டவெண்ணெயீதென்னும்
பேய்ச்சிமுலைசுவைத்தார்க்கென்பெண்கொடியேறியபித்தே. (௬)
ஏறியபித்தினோடெல்லாவுலகுங்கண்ணன்படைப்பென்னும்
நீறுசெவ்வேயிடக்காணில்நெடுமாலடியாரென்றோடும்
நாறுதுழாய்மலர்காணில்நாரணன்கண்ணியீதென்னுந்
தேறியுந்தேறாதுமாயோன்திறத்தனளேயித்திருவே. (௭)
திருவுடைமன்னரைக்காணிற்றிருமாலைக்கண்டேனேயென்னும்
உருவுடைவண்ணங்கள்காணிலுலகளந்தானென்றுதுள்ளும்
கருவுடைத்தேவில்களெல்லாங்கடல்வண்ணன்கோயிலேயென்னும்
வெருவிலும்வீழ்விலுமோவாக்கண்ணன்கழல்கள்விரும்புமே. (௮)
விரும்பிப்பகைவரைக்காணில்வியலிடமுண்டானேயென்னுங்
கரும்பெருமேகங்கள்காணிற்கண்ணனென்றேறப்பறக்கும்
பெரும்புலவாநிரைகாணிற்பிரானுளனென்றுபின்செல்லும்
அரும்பெறற்பெண்ணினைமாயோனலற்றியயர்ப்பிக்கின்றானே. (௯)
அயர்க்குஞ்சுற்றும்பற்றிநோக்குமகலவேநீணோக்குக்கொள்ளும்
வியர்க்குமழைக்கண்டுளும்பவெவ்வுயிர்க்கொள்ளும்மெய்சோரும்
பெயர்த்துங்கண்ணாவென்றுபேசும்பெருமானேவாவென்றுகூவும்
மயக்கும்பெருஞ்சாதலென்பேதைக்கென்செய்கேன்வல்வினையேனே. (௧௦)

வல்வினைதீர்க்குங்கண்ணனைவண்குருகூர்ச்சடகோபன்
சொல்வினையாற்சொன்னபாடலாயிரத்துளிவைபத்தும்
நல்வினையென்றுகற்பார்கள்நலனிடைவைகுந்தம்நண்ணித்
தொல்வினைதீரவெல்லாருந்தொழுதெழவீற்றிருப்பாரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௪-௪-இ-பாசுரம்-௩௪௪.

௫ - வது. வீற்றிருந்து.

அந்தமோஹந்திரும்படி ஸர்வேச்வரன் நித்யஸூரிகளோடே கூடவாக்கித்யம் பண்ணுகையில் மங்களாசாஸநம்பண்ணிப் ப்ரீதியடைந்தத்தை யருளிச்செய்கிறார்.

கலித்துறைவிருத்தம் பண் - இந்தளம் - குறிஞ்சி - தாளம் - ஒன்பதொத்து

வீற்றிருந்தேழுலகுந்தனிக்கோல்செல்லவீவில்சீர்
ஆற்றல்மிக்காளுமம்மானைவெம்மாபிளந்தான்றன்னை
போற்றியென்றேகைகளாரத்தொழுதுசொல்மாலைகள்
ஏற்றநோற்றேற்கினியென்னகுறையெழுமையுமே. (௧)

மையகண்ணாள்மலர்மேலுறைவாளுறைமார்பினன்
செய்யகோலத்தடங்கண்ணன்விண்ணோர்பெருமான்றன்னை
மொய்யசொல்லாலிசைமாலைகளேத்தியுள்ளப்பெற்றேன்
வெய்யநோய்கள்முழுதும்வியன்ஞாலத்துவீயவே. (௨)

வீவிலின்பமிகவெல்லைநிகழ்ந்தநம்மச்சுதன்
வீவில்சீரன்மலர்க்கண்ணன்விண்ணோர்பெருமான்றன்னை
வீவில்காலமிசைமாலைகளேத்திமேவப்பெற்றேன்
வீவிலின்பம்மிகவெல்லைநிகழ்ந்தனன்மேவியே. (௩)

மேவிநின்றுதொழுவார்வினைபோகமேவும்பிரான்
தூவியம்புள்ளுடையானடலாழியம்மான்றன்னை
நாவியலாலிசைமாலைகளேத்திநண்ணப்பெற்றேன்
ஆவியென்னாவியையானறியேன்செய்தவாற்றையே. (௪)

ஆற்றநல்லவகைகாட்டுமம்மானையமரர்தம்
ஏற்றையெல்லாப்பொருளும்விரித்தானையெம்மான்றன்னை

மாற்றமாலைபுனைந்தேத்திநாளும்மகிழ்வெய்தினேன்
காற்றின்முன்னங்கடுகிவினைநோய்கள்கரியவே. (௫)

கரியமேனிமிசைவெளியநீறுசிறிதேயிடும்
பெரியகோலத்தடங்கண்ணன்விண்ணோர்பெருமான்றன்னை
உரியசொல்லாலிசைமாலைகளேத்தியுள்ளப்பெற்றேற்கு
அரியதுண்டோவெனக்கின்றுதொட்டுமினியென்றுமே. (௬)

என்றுமொன்றாகியொத்தாரும்மிக்காருந்தன்றனக்
கின்றிநின்றானையெல்லாவுலகுமுடையான்றன்னைக்
குன்றமொன்றாலமழைகாத்தபிரானைச்சொன்மாலைகள்
நன்றுசூட்டும்விதியெய்தினமென்னகுறைநமக்கே. (௭)

நமக்கும்பூவின்மிசைநங்கைக்குமின்பனைஞாலத்தார்
தமக்கும்வானத்தவர்க்கும்பெருமானைத்தண்டாமரை
சுமக்கும்பாதப்பெருமானைச்சொன்மாலைகள்சொல்லுமா
றமைக்கவல்லேற்கினியாவர்நிகரகல்வானத்தே. (௮)

வானத்தும்வானத்துள்ளும்பருமண்ணுள்ளும்மண்ணின்கீழ்த்
தானத்துமெண்டிசையுந்தவிராதுநின்றான்றன்னைக்
கூனற்சங்கத்தடக்கையவனைக்குடமாடியைவானக்
கோனைக்கவிசொல்லவல்லேற்கினிமாறுண்டே. (௯)

உண்டுமிழ்ந்துங்கடந்துமிடந்துங்கிடந்துநின்றுங்
கொண்டகோலத்தொடுவீற்றிருந்துமணங்கூடியும்
கண்டவாற்றாற்றனதேயுலகெனநின்றான்றன்னை
வண்டமிழ்நூற்கநோற்றேனடியார்க்கின்பமாரியே. (௰)

மாரிமாறாததண்ணம்மலைவேங்கடத்தண்ணலை
வாரிமாறாதபைம்பூம்பொழில்சூழ்குருகூர்நகர்க்
காரிமாறன்சடகோபன்சொல்லாயிரத்திப்பத்தால்
வேரிமாறாதபூமேலிருப்பாள்வினைதீர்க்குமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

௫-ஆ திருவாய்மொழி ௩௰௫-பாசுரம்-௩௱௮௰௫.

---

௬ - வது தீர்ப்பாரை.

ஸாத்மீத்தியம்பண்ணினதுச்வரனைத்தானுகைகையாலே
ஆழ்வார்போலிக்குஇதரதேவதாவேசமென்றுக்ஷுத்ரதேவதா
ராதநம்பண்ணுவதைப்பரிஹரித்துபகவந்நாமஸங்கீர்த்தனமும் ஸ்ரீவைஷ்ணவ
ஸ்ரீபாததூளிகளும்இதற்குப்பரிஹாரமென்றுதுப்தலைகேசால்ல
வப்படியே பரிஹாரம்பண்ணமோஹந்தீர்ந்ததை
யருளிச்செய்கிறார்.

விருத்தம்-பண்-சீகாமரம்-பழக்கசாகம்-தாளம்-இடையொத்து.

தீர்ப்பாரையாமினியெங்ஙனம்நாடுதுமன்னைமீர்
ஓர்ப்பாலிவ்வொண்ணுதலுற்றநன்னோயிதுதேறினோம்
போர்ப்பாகுதான்செய்தன்றைவரைவெல்வித்தமாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கிவள்சிந்தைதுழாய்த்திசைக்கின்றதே. (௧)

திசைக்கின்றதேயிவள்நோயிதுமிக்கபெருந்தெய்வம்
இசைப்பின்றிநீரணங்காடுமிளந்தெய்வமன்றிது
திசைப்பின்றியேசங்குசக்கரமென்றிவள்கேட்கநீர்
இசைக்கிற்றிராகில்நன்றேயில்பெறுமிதுகாண்மினே. (௨)

இதுகாண்மினன்னைமீரிக்கட்டுவிச்சிசொற்கொண்டுநீர்
எதுவானுஞ்செய்தங்கோர்கள்ளுமிறைச்சியுந்தூவேன்மின்
மதுவார்துழாய்முடிமாயப்பிரான்கழல்வாழ்த்தினால்
அதுவேயிவளுற்றநோய்க்குமருந்தாகுமே. (௩)

மருந்தாகுமென்றங்கோர்மாயவலவைசொற்கொண்டுநீர்
மருஞ்சோறும்மற்றைச்செஞ்சோறுங்களனிழைத்தென்பயன்
ஒருங்காகவேயுலகேழும்விழுங்கியுமிழ்ந்திட்ட
பெருந்தேவன்பேர்சொல்லகிற்கிலிவளைப்பெறுதிரே. (௪)

இவளைப்பெறும்பரிசிவ்வணங்காடுதலன்றந்தோ
குவளைத்தடங்கண்ணுங்கோவைச்செவ்வாயும்பயந்தனள்
கவளக்கடாக்களிறட்டபிரான்திருநாமத்தால்
தவளப்பொடிக்கொண்டுநீரிட்டிடுமின்தணியுமே. (௫)

தணியும்பொழுதின்றிநீரணங்காடுதிரன்னைமீர்
பிணியுமொழிகின்றதில்லைபெருகுமிதுவல்லால்
மணியினணிநிறமாயன்றமரடிநீறுகொண்டு
அணியமுயலின்மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே. (௬)

அணங்குக்கருமருந்தென்றங்கோராடுங்கள்ளும்பராய்ச்
சுணங்கையெறிந்துநுந்தோள்குலைக்கப்படுமன்னைமீர்
உணங்கல்கெடக்கழுதையுதடாட்டங்கண்டென்பயன்
வணங்கீர்கள்மாயப்பிரான்றமர்வேதம்வல்லாரையே. (௭)

வேதம்வல்லார்களைக்கொண்டுவிண்ணோர்பெருமான்றிருப்
பாதம்பணிந்திவணோயிதுதீர்த்துக்கொள்ளாதுபோய்
ஏதம்பறைந்தல்லசெய்துகள்ளூடுகலாய்த்தூய்க்
கீதமுழவிட்டுவீரணங்காடுதல்கீழ்மையே. (௮)

கீழ்மையினாலங்கோர்கீழ்மகனிட்டமுழவின்கீழ்
வாழ்மைபலசொல்லிவீரணங்காடும்பொய்காண்கிலேன்
ஏழ்மைப்பிறப்புக்குஞ்சேமமிந்நோய்க்குமீதேமருந்
தூழ்மையிற்கண்ணபிரான்கழல்வாழ்த்துமினுன்னித்தே. (௯)

உன்னித்துமற்றொருதெய்வந்தொழாளவனையல்லால்
நும்மிச்சைசொல்லிநுந்தோள்குலைக்கப்படுமன்னைமீர்
மன்னப்படுமறைவாணனைவண்டுவராபதி
மன்னனையேத்துமினேத்துதலுந்தொழுதாடுமே. (௧௦)

தொழுதாடித்தூமணிவண்ணனுக்காட்செய்துநோய்தீர்ந்த
வழுவாததொல்புகழ்வண்குருகூர்ச்சடகோபன்சொல்
வழுவாதவாயிரத்துள்ளிவைபத்துவெறிகளுந்
தொழுதாடிப்பாடவல்லார்துக்கசீலமிலர்களே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆறு திருவாய்மொழி-௩௯-இ-பாசுரம்-௩௯௬.

ஏ - வது. சீலமில்.

மோக்ஷத்தெளிந்து திவ்யமங்களவிக்ரஹத்தைக்
காட்டவேணுமென்று ஆர்த்தராய் விழித்தமையை
யருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம் பண்-பழந்தக்கராகம்- தாளம்-ஏழொத்து.

சீலமில்லாச்சிறியனேலுஞ்செய்வினையோபெரிதால்
ஞாலமுண்டாய்ஞானமூர்த்திநாராயணாவென்றென்று
காலந்தோறும்யானிருந்துகைதலைபூசலிட்டாற்
கோலமேனிகாணவாராய்கூவியுங்கொள்ளாயே. (௧)

கொள்ளமாளாவின்பவெள்ளங்கோதில்தந்திடுமென்
வள்ளலேயோவையங்கொண்டவாமனாவோவென்றென்று
நள்ளிராவும்நன்பகலுநானிருந்தோலமிட்டாற்
கள்ளமாயாவுன்னையென்கண்காணவந்தீயாயே. (௨)

ஈவிலாததீவினைகளெத்தனைசெய்தனன்கொல்
தாவிவையங்கொண்டவெந்தாய்தாமோதராவென்றென்று
கூவிக்கூவிநெஞ்சுருகிக்கண்பனிசோரநின்றாற்
பாவியேனென்றொன்றுசொல்லாய்பாவியேன்காணவந்தே. (௩)

காணவந்தென்கண்முகப்பேதாமரைக்கண்பிறழ
ஆணிச்செம்பொன்மேனியெந்தாய்நின்றருளாயென்றென்று
நாணமில்லாச்சிறுதகையேனானிங்கலற்றுவதென்
பேணிவானோர்காணமாட்டாப்பீடுடையப்பனையே. (௪)

அப்பனேயடலாழியானேயாழ்கடலைக்கடைந்த
துப்பனேயுன்றோள்கணான்குங்கண்டிடக்கூடுங்கொலென்று
எப்பொழுதுங்கண்ணநீர்கொண்டாவிதுவர்ந்துவர்ந்து
இப்பொழுதேவந்திடாயென்றேழையேனோக்குவனே. (௫)

நோக்கிநோக்கியுன்னைக்காண்பான்யானெனதாவியுள்ளே
நாக்குநீள்வன்ஞானமில்லைநாடோறுமென்னுடைய
ஆக்கையுள்ளுமாவியுள்ளுமல்லபுறத்தினுள்ளும்
நீக்கமின்றியெங்குநின்றாய்நின்னையறிந்தறிந்தே. (௬)

அறிந்தறிந்துதேறித்தேறியானெனதாவியுள்ளே
நிறைந்தஞானமூர்த்தியாயைநின்மலமாகவைத்துப்
பிறந்துஞ்செத்துநின்றிடறும்பேதைமைதீர்ந்தொழிந்தேன்
நறுந்துழாயின்கண்ணியம்மாநானுன்னைக்கண்டுகொண்டே. (௭)

கண்டுகொண்டென்கைகளாரநின்றிருப்பாதங்கள்மேல்
எண்டிசையுமுள்ளபூக்கொண்டேத்தியுகந்துகந்து
தொண்டரோங்கள்பாடியாடச்சூழ்கடல்ஞாலத்துள்ளே
வண்டுழாயின்கண்ணிவேந்தேவந்திடகில்லாயே. (௮)

இடகிலேனொன்றட்டகில்லேனைம்புலன்வெல்லகில்லேன்
கடவனாகிக்காலந்தோறும்பூப்பறித்தேத்தகில்லேன்
மடவனெஞ்சங்காதல்கூரவல்வினையேனயர்ப்பாய்த்
தடவுகின்றேனெங்குக்காண்பன்சக்கரத்தண்ணலையே. (௯)

சக்கரத்தண்ணலேயென்றுதாழ்ந்துகண்ணீர்ததும்பப்
பக்கம்நோக்கிநின்றலந்தேன்பாவியேன்காண்கின்றிலேன்
மிக்கஞானமூர்த்தியாயவேதவிளக்கினையென்
தக்கஞானக்கண்களாலேகண்டுதழுவுவனே. (௰)

தழுவிநின்றகாதல்தன்னாற்றாமரைக்கண்ணன்றன்னைக்
குழுவுமாடத்தென்குருகூர்மாறன்சடகோபன்சொல்
வழுவிலாதவொண்டமிழ்களாயிரத்துளிப்பத்துந்
தழுவப்பாடியாடவல்லார்வைகுந்தமேறுவரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௩௭-இ-பாசுரம்-௪௦௧.

௮ - வது. ஏறாளும்.

கூப்பிட்டும் வாராதபடியாலே இந்தஸர்வேச்வரனுக்கு உபேக்ஷாவிஷயமான
ஆத்மாத்மீயங்கள் தமக்குவேண்டாமென் றருளிச்செய்கிறார்,

கலிவிருத்தம்-இதுநாலடித்தாழிசையுமாம்,
பண் - நட்டம்-தாளம்-ஏழொத்து.

ஏறாளுமிறையோனுந்திசைமுகனுந்திருமகளுங்,
கூறாளுந்தனியுடம்பன்குலங்குலமாயசுரர்களை
நீறாகும்படியாகநிருமித்துப்படைதொட்ட
மாறாளன்கவராதமணிமாமைகுறைவிலமே. (௧)

மணிமாமைகுறைவில்லாமலர்மாதருறைமார்பன்
அணிமானத்தடவரைத்தோளடலாழித்தடக்கையன்
பணிமானம்பிழையாமேயடியேனைப்பணிகொண்ட
மணிமாயன்கவராதமடநெஞ்சாற்குறைவிலமே. (௨)

மடநெஞ்சாற்குறைவில்லாமகள்தாய்செய்தொருபேய்ச்சி
விடநஞ்சமுலைசுவைத்தமிகுஞானச்சிறுகுழவி
படநாகத்தணைக்கிடந்தபருவரைத்தோட்பரமபுருடன்
நெடுமாயன்கவராதநிறைவினாற்குறைவிலமே. (௩)

நிறைவினாற்குறைவில்லாநெடும்பணைத்தோள்மடப்பின்னைப்
பொறையினான்முலையணைவான்பொருவிடையேழடர்த்துகந்த
கறையினார்துவருடுக்கைக்கடையாவின்கழிகோற்கைச்
சறையினார்கவராததளிர்நிறத்தாற்குறைவிலமே. (௪)

தளிர்நிறத்தாற்குறைவில்லாத்தனிச்சிறையில்விளப்புற்ற
கிளிமொழியாள்காரணமாக்கிளரரக்கன்நகரெரித்த
களிமலர்த்துழாயலங்கற்கமழ்முடியன்கடல்ஞாலத்
தளிமிக்கான்கவராதவறிவினாற்குறைவிலமே. (௫)

அறிவினாற்குறைவில்லாவகல்ஞாலத்தவரறிய
நெறியெல்லாமெடுத்துரைத்தநிறைஞானத்தொருமூர்த்தி
குறியமாணுருவாகிக்கொடுங்கோளானிலங்கொண்ட
கிறியம்மான்கவராதகிளரொளியாற்குறைவிலமே. (௬)

கிளரொளியாற்குறைவில்லாவரியுருவாய்க்கிளர்ந்தெழுந்து
கிளரொளியவிரணியனதகன்மார்பங்கிழித்துகந்த
வளரொளியகனலாழிவலம்புரியன்மணிநீல
வளரொளியான்கவராதவரிவளையாற்குறைவிலமே. (௭)

வரிவளையாற்குறைவில்லாப்பெருமுழக்காலடங்காரை
எரியழலம்புகவூதியிருநிலமுன்துயர்தவிர்த்த
தெரிவரியசிவன்பிரமனமரர்கோன்பணிந்தேத்தும்
விரிபுகழான்கவராதமேகலையாற்குறைவிலமே. (௮)

மேகலையாற்குறைவில்லாமெலிவுற்றவகலல்குற்
போகமகள்புகழ்த்தந்தைவிறல்வாணன்புயந்துணித்து
நாகமிசைத்துயில்வான்போலுலகெல்லாநன்கொடுங்க
யோகணைவான்கவராதவுடம்பினாற்குறைவிலமே. (௯)

உடம்பினாற்குறைவில்லாவுயிர்பிரிந்தமலைத்துண்டங்
கிடந்தனபோற்றுணிபலவாவசுரர்குழாந்துணித்துகந்த
தடம்புனலசடைமுடியன்றனியொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான்கவராதவுயிரினாற்குறைவிலமே. (௰)

உயிரினாற்குறைவில்லாவுலகேழ்தன்னுள்ளொடுக்கித்
தயிர்வெண்ணெயுண்டானைத்தடங்குருகூர்ச்சடகோபன்
செயிரில்சொல்லிசைமாலையாயிரத்துளிப்பத்தால்
வயிரஞ்சேர்பிறப்பறுத்துவைகுந்தநண்ணுவரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௩௮-இ-பாசுரம்-௪௨௦.

௯ - வது. நண்ணாதார்.

உன்னிச்சையைமாறுதலும் ஸஹிக்கிறோமொழிய உன்னிடத்தில் விமுகரான ஜீவனைப் பார்க்கமாட்டோம் இந்த தேஹம் விடும்படி செய்யவேண்டுமென்று ஸ்வாமியை ப்ரார்த்தித்ததை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-கட்டபாடை-தாளம்-இடையொத்து.

நண்ணாதார்முறுவலிப்பநல்லுற்றார்கரைந்தேங்க
எண்ணாராத்துயர்விளைக்குமிவையென்னவுலகியற்கை
கண்ணாளாகடல்கடைந்தாயுனகழற்கேவரும்பரிசு
தண்ணாவாதடியேனைப்பணிகண்டாய்சாமாறே.

சாமாறுங்கெடுமாறுந்தமருற்றார்தலைத்தலைப்பெய்து
ஏமாறிக்கிடந்தலற்றுமிவையென்னவுலகியற்கை
ஆமாறொன்றறியேன்நானரவணையாயம்மானே
கூமாறேவிரைகண்டாயடியேனைக்குறிக்கொண்டே. (௨)

கொண்டாட்டுங்குலம்புனைவுந்தமருற்றார்விழுநிதியும்
வண்டார்பூங்குழலாளும்மனையொழியவுயிர்மாய்தல்
கண்டாற்றேனுலகியற்கைகடல்வண்ணாவடியேனைப்
பண்டேபோற்கருதாதுன்னடிக்கேகூய்ப்பணிகொள்ளே. (௩)

கொள்ளென்றுகிளர்ந்தெழுந்தபெருஞ்செல்வநெருப்பாகக்
கொள்ளென்றுதமமூடுமிவையென்னவுலகியற்கை
வள்ளலேமணிவண்ணாவுனகழற்கேவரும்பரிசு
வள்ளல்செய்தடியேனையுனதருளால்வாங்காயே. (௪)

வாங்குநீர்மலருலகில்நிற்பனவுந்திரிவனவும்
ஆங்குயிர்கள்பிறப்பிறப்புப்பிணிமூப்பால்தகர்ப்புண்ணும்
ஈங்கிதன்மேல்வெந்நரகமிவையென்னவுலகியற்கை
வாங்கெனைநீமணிவண்ணாவடியேனைமறுக்கேலே. (௫)

மறுக்கிவல்வலைப்படுத்திக்குமைத்திட்டுக்கொன்றுண்பர்
அறப்பொருளையறிந்தோராரிவையென்னவுலகியற்கை
வெறித்துளபமுடியானேவினையேனையுனக்கடிமை
அறக்கொண்டாயினியென்னாரமுதேகூயருளாயே. (௬)

ஆயேயிவ்வுலகத்துநிற்பனவுந்திரிவனவும்
நீயேமற்றொருபொருளுமின்றிநீநின்றமையால்

நோயேமூப்பிறப்பிறப்புப்பிணியேயென்றிவையொழியக்
கூயேகொள்ளடியேனைக்கொடுவுலகங்காட்டேலே. (௭)

காட்டிநீகரந்துமிழும்நிலநீர்தீவிசும்புகால்
ஈட்டிநீவைத்தமைத்தவிமையோர்வாழ்தனிமுட்டைக்
கோட்டையினிற்கழித்தென்னையுன்கொழுஞ்சோதியுயரத்துக்
கூட்டரியதிருவடிக்களெஞ்ஞான்றுகூட்டுதியே. (௮)

கூட்டுதிநின்குரைகழல்களிமையோருந்தொழாவகைசெய்து
ஆட்டுதிநீயரவணையாயடியேனுமஃதறிவன்
வேட்கையெல்லாம்விடுத்தென்னையுன்திருவடியேசுமந்துழலக்
கூட்டரியதிருவடிக்கட்கூட்டினையான்கண்டேனே. (௯)

கண்டுகேட்டுற்றுமோந்துண்டுழலுமைங்கருவி
கண்டவின்பந்தெரிவரியவளவில்லாச்சிற்றின்பம்
ஒண்டொடியாள்திருமகளும்நீயுமேநிலாநிற்பக்
கண்டசதிர்கண்டொழிந்தேனடைந்தேனுன்திருவடியே. (௧௦)

திருவடியைநாரணனைக்கேசவனைப்பரஞ்சுடரைத்
திருவடிசேர்வதுகருதிச்செழுங்குருகூர்ச்சடகோபன்
திருவடிமேலுரைத்ததமிழாயிரத்துளிப்பத்தும்
திருவடியேயடைவிக்குந்திருவடிசேர்ந்தொன்றுமினே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௩௯-இ-பாசுரம்-௪௨௯.

௧௦ - வது. ஒன்றும்.

மீண்டும் தேவதாந்த்ரபரரான சேதனரிடத்தில் க்ருபையாலே ஸ்ரீமந்நாராயணனே பரத்வமாகையாலே தேவதாந்த்ரத்தை விட்டு ஆச்ரயணீயனான பூதனை ஸர்வேச்வரனை யாச்ரயுங்கோளென்று உபதேசப்பண்ணினதை யருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-காட்டம் தாளம் ஏழொத்து.

ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்மற்றும்யாதுமில்லா
அன்றுநான்முகன்றன்னொடுதேவருலகோடுயிர்படைத்தான்
குன்றம்போல்மணிமாடநீடுதிருக்குருகூரதனுள்
நின்றவாதிப்பிரானிற்கமற்றைத்தெய்வநாடுதிரே. (௧)

நாடிநீர்வணங்குந்தெய்வமு மும்மையுமுன்படைத்தான்
வீடில்சீர்ப்புகழாதிப்பிரானவன்மேவியுறைகோயில்
மாடமாளிகைசூழ்ந்தழகாயதிருக்குருகூரதனைப்
பாடியாடிப்பரவிச்சென்மின்கள்பல்லுலகீர்பரந்தே. (௨)

பரந்ததெய்வமும்பல்லுலகும்படைத்தன்றுடனேவிழுங்கிக்
கரந்துமிழ்ந்துகடந்திடந்ததுகண்டுந்தெளியகில்லீர்
சிரங்களாலமரர்வணங்குந்திருக்குருகூரதனுட்
பரன்றிறமன்றிப்பல்லுலகீர்தெய்வம்மற்றில்லைப்பேசுமினே. (௩)

பேசநின்றசிவனுக்கும்பிரமன்றனக்கும்பிறர்க்கும்
நாயகனவனேகபாலநன்மோக்கத்துக்கண்டுகொண்மின்
தேசமாமதிள்சூழ்ந்தழகாயதிருக்குருகூரதனுள்
ஈசன்பாலோரவம்பறைதலென்னாவதிலிங்கியர்க்கே. (௪)

இலிங்கத்திட்டபுராணத்தீருஞ்சமணருஞ்சாக்கியரும்
மலிந்துவாதுசெய்வீர்களும்மற்றுநுந்தெய்வமுமாகிநின்றான்
மலிந்துசெந்நெல்கவரிவீசுந்திருக்குருகூரதனுள்
பொலிந்துநின்றபிரான்கண்டீரொன்றும்பொய்யில்லைப்போற்றுமினே.

போற்றிமற்றோர்தெய்வம்பேணப்புறத்திட்டும்மையின்னே
தேற்றிவைத்ததெல்லீரும்வீடுபெற்றாலுலகில்லையென்றே
சேற்றிற்செந்நெல்கமலமோங்குந்திருக்குருகூரதனுள்
ஆற்றவல்லவன்மாயங்கண்டதறிந்தறிந்தோடுமினே. (௬)

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்துமற்றோர்தெய்வம்
பாடியாடிப்பணிந்துபல்படிகால்வழியேறிக்கண்டீர்
கூடிவானவரேத்தநின்றதிருக்குருகூரதனுள்
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கடிமைபுகுவதுவே. (௭)

புக்கடிமையினாற்றன்னைக்கண்டமார்க்கண்டேயனவனை
நக்கபிரானுமன்றுய்யக்கொண்டதுநாராயணனருளே
கொக்கலர்தடந்தாழைவேலித்திருக்குருகூரதனுள்
மிக்கவாதிப்பிரானிற்கமற்றைத்தெய்வம்விளம்புதிரே. (௮)

விளம்புமாறுசமயமுமவையாகியும்மற்றுந்தன்பால்
அளந்துகாண்டற்கரியனாகியவாதிப்பிரானமரும்
வளங்கொள்தண்பணைசூழ்ந்தழகாயதிருக்குருகூரதனை
உளங்கொள்ஞானத்துவைம்மினும்மையுய்யக்கொண்டுபோகுறிலே.

உறுவதாவதெத்தேவுமெவ்வுலகங்களும்மற்றுந்தன்பால்
மறுவில்மூர்த்தியோடொத்தித்தனையும்நின்றவண்ணம்நிற்கவே
செறுவிற்செந்நெல்கரும்பொடோங்குந்திருக்குருகூரதனுட்
குறியமாணுருவாகியநீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே. (௧0)

ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன்வண்குருகூர்நகரான்
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன்மாறன்சடகோபன்
வேட்கையாற்சொன்னபாடலாயிரத்துள்ளிப்பத்தும்வல்லார்
மீட்சியின்றிவைகுந்தமாநகர்மற்றதுகையதுவே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

நான்காம்பத்துமுற்றிற்று.

ஆ-பத்து-௪-ல்-திருவாய்மொழி-௪0-இ-பாசுரம்-௪௪௨.

ஐந்தாம்பத்து.

௧ - வது. கையார்.

பக்தியில்லாமல் பக்தன்போல் வஞ்சவோக்திகளைசொல்லி பாஹ்யவிஷயங்களிலே ப்ரவணனான வெனக்கு ஸ்வாநுபவத்தை யுபகரித்தானென்று உபகாரஸ்ம்ருதி பண்ணினதை யருளிச்செய்கிறார்.

கலித்துறை-பண்-குறிஞ்சி-தாளம்-ஏமொத்து.

கையார்சக்கரத்தென்கருமாணிக்கமேயென்றென்று
பொய்யேகைம்மைசொல்லிப்புறமேபுறமேயாடி
மெய்யேபெற்றொழிந்தேன்விதிவாய்க்கின்றுகாப்பாரார்
ஐயோகண்ணபிரானறையோவினிப்போனாலே. (௧)

போனாய்மாமருதின்நடுவேயென்பொல்லாமணியே
தேனேயின்னமுதேயென்றென்றேசிலகூத்துச்செல்லத்
தானேலெம்பெருமானவனென்னாகியொழிந்தான்
வானேமாநிலமேமற்றும்முற்றுமென்னுள்ளனவே. (௨)

உள்ளனமற்றுளவாப்புறமேசிலமாயஞ்சொல்லி
வள்ளல்மணிவண்ணனேயென்றென்றேயுன்னையும்வஞ்சிக்கும்
கள்ளமனந்தவிர்ந்தேயுன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்
வெள்ளத்தணைக்கிடந்தாயினியுன்னைவிட்டென்கொள்வனே. (௩)

என்கொள்வனுன்னைவிட்டென்னும்வாசகங்கள்சொல்லியும்
வன்கள்வனேன்மனத்தைவலித்துக்கண்ணநீர்கரந்து
நின்கண்ணெருங்கவைத்தெனதாவியைநீக்ககில்லேன்
என்கண்மலினமறுத்தென்னைக்கூவியருளாய்கண்ணனே. (௪)

கண்ணபிரானைவிண்ணோர்கருமாணிக்கத்தையமுதை
நண்ணியும்நண்ணகில்லேன்நடுவேயோருடம்பிலிட்டுத்
திண்ணமழுந்தக்கட்டிப்பலசெய்வினைவன்கயிற்றால்
புண்ணைமறையவரிந்தென்னைப்போரவைத்தாய்புறமே. (௫)

புறமறக்கட்டிக்கொண்டிருவல்வினையார்குமைக்கும்
முறைமுறையாக்கைப்புகலொழியக்கண்டுகொண்டொழிந்தேன்
நிறமுடைநாற்றடந்தோள்செய்யவாய்ச்செய்யதாமரைக்கண்
அறமுயலாழியங்கைக்கருமேனியம்மான்றன்னையே. (௬)

அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான்யானார்
எம்மாபாவியர்க்கும்விதிவாய்க்கின்றுவாய்க்குங்கண்டீர்
கைம்மாதுன்பொழித்தாயென்றுகைதலைபூசலிட்டே
மெய்ம்மாலாயொழிந்தேனெம்பிரானுமென்மேலானே. (௭)

மேலாத்தேவர்களும்நிலத்தேவரும்மேவித்தொழும்
மாலார்வந்தினநாளடியேன்மனத்தேமன்னினார்
சேலேய்கண்ணியரும்பெருஞ்செல்வமும்நன்மக்களும்
மேலாத்தாய்தந்தையுமவரேயினியாவாரே. (௮)

ஆவாரார்துணையென்றலைநீர்க்கடலுளழுந்தும்
நாவாய்போற்பிறவிக்கடலுள்நின்றுநான்றுளங்கத்
தேவார்கோலத்தொடுந்திருச்சக்கரஞ்சங்கினொடும்
ஆவாவென்றருள்செய்தடியேனொடுமானானே. (௯)

ஆனானாளுடையானென்றஃதேகொண்டுகந்துவந்து
தானேயின்னருள்செய்தென்னைமுற்றவுந்தானானான்
மீனாயாமையுமாய்நரசிங்கமுமாய்க்குறளாய்க்
கானாரேனமுமாய்க்கற்கியாமின்னங்கார்வண்ணனே. (௰)

கார்வண்ணன்கண்ணபிரான்கமலத்தடங்கண்ணன்றன்னை
ஏர்வளவொண்கழனிக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
சீர்வண்ணவொண்டமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்
ஆர்வண்ணத்தாலுரைப்பாரடிக்கீழ்ப்புகுவார்பொலிந்தே (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்

ஆ. திருவாய்மொழி-௪௧-இ-பாசுரம்-௪௫௧.

௨ - வது. பொலிக.

தம்முடையஉபதேசத்தால்திருந்தப்பெற்றவர்களான
சேதநரையும் தம்முடையபரிகரத்தைப்பார்க்கவந்த நித்யஸூரிகளையும்
பார்த்து மங்களாசாஸநம்பண்ணினதை யருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண் சீகாமரம்-தாளம்-இடையொத்து.

பொலிகபொலிகபொலிகபோயிற்றுவல்லுயிர்ச்சாபம்
நலியுநரகமும்நைந்தநமனுக்கிங்கியாதொன்றுமில்லைக்
கலியுங்கெடுங்கண்டுகொண்மின்கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்
மலியப்புகுந்திசைபாடியாடியுழிதரக்கண்டோம் (௧)

கண்டோங்கண்டோங்கண்டோங்கண்ணுக்கினியனகண்டோம்
தொண்டீரெல்லீரும்வாரீர்தொழுதுதொழுதுநின்றார்த்தும்
வண்டார்தண்ணந்துழாயான்மாதவன்பூதங்கள்மண்மேல்
பண்டான்பாடிநின்றாடிப்பரந்துதிரிகின்றனவே (௨)

திரியுங்கலியுகம்நீங்கித்தேவர்கள்தாமும்புகுந்து
பெரியகிதயுகம்பற்றிப்பேரின்பவெள்ளம்பெருகக்
கரியமுகில்வண்ணனெம்மான்கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்
இரியப்புகுந்திசைபாடியெங்குமிடங்கொண்டனவே. (௩)

இடங்கொள்சமயத்தையெல்லாமெடுத்துக்களைவனபோலே
தடங்கடற்பள்ளிப்பெருமான்றன்னுடைப்பூதங்களேயாய்க்
கிடந்துமிருந்துமெழுந்துங்கீதம்பலபலபாடி
நடந்தும்பறந்துங்குனித்துநாடகஞ்செய்கின்றனவே (௪)

செய்கின்றதென்கண்ணுக்கொன்றேயொக்கின்றதிவ்வுலகத்து
வைகுந்தன்பூதங்களேயாய்மாயத்தினாலெங்குமன்னி
ஐயமொன்றில்லையரக்கரசுரர்பிறந்திருள்ளீரேல்
உய்யும்வகையில்லைத்தொண்டீரூழிபெயர்த்திடுங்கொன்றே (௫)

கொன்றுயிருண்ணும்விசாதிபகைபசிதீயனவெல்லாம்
நின்றிவ்வுலகிற்கடிவான்நேமிப்பிரான்தமர்போந்தார்
நன்றிசைபாடியுந்துள்ளியாடியுஞ்ஞாலம்பரந்தார்
சென்றுதொழுதுய்ம்மின்றொண்டீர்சிந்தையைச்செந்நிறுத்தியே (௬)

நிறுத்திநும்முள்ளத்துக்கொள்ளுந்தெய்வங்களும்மையுய்யக்கொள்
மறுத்துமவனோடேகண்டீர்மார்க்கண்டேயனுங்கரியே
கறுத்தமனமொன்றும்வேண்டாகண்ணனல்லாற்றெய்வமில்லை
இறுப்பதெல்லாமவன்மூர்த்தியாயவர்க்கேயிறுமினே (௭)

இறுக்குமிறையிறுத்துண்ணவெவ்வுலகுக்குந்தன்மூர்த்தி
நிறுத்தினான்றெய்வங்களாகவத்தெய்வநாயகன்றானே
மறுத்திருமார்பனவன்றன்பூதங்கள்கீதங்கள்பாடி
வெறுப்பின்றிஞாலத்துமிக்கார்மேவித்தொழுதுய்ம்மினீரே (௮)

மேவித்தொழுதுய்ம்மினீர்கள்வேதப்புனிதவிருக்கை
நாவிற்கொண்டச்சுதன்றன்னைஞானவிதிபிழையாமே
பூவிற்புகையும்விளக்குஞ்சாந்தமுநீருமலிந்து
மேவித்தொழுமடியாரும்பகவருமிக்கதுலகே (௯)

மிக்கவுலகுகடோறும்மேவிக்கண்ணன்றிருமூர்த்தி
நக்கபிரானோடயனுமிந்திரனும்முதலாகத்
தொக்கவமரர்குழாங்களெங்கும்பரந்தனதொண்டீர்
ஒக்கத்தொழுகிற்றிராகிற்கலியுகமொன்றுமில்லையே (௰)

கலியுகமொன்றுமின்றிக்கேதன்னடியார்க்கருள்செய்யும்
மலியுஞ்சுடரொளிமூர்த்திமாயப்பிரான்கண்ணன்றன்னைக்
கலிவயற்றென்னன்குருகூர்க்காரிமாறன்சடகோபன்சொல்
ஒலிபுணராயிரத்திப்பத்துமுள்ளத்தைமாசறுக்குமே (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி-௫-௨-பாசுரம்-[illegible].

௫ - ௩. மாசறு.

எங்கும்பகவத்விச்லேஷத்தை நினைத்துக்கொண்டு துக்கமிகுதியாலே தன்மையை
யடைந்து சோகத்தால் தரிக்கமாட்டாமல் மடலூரும்படி
உத்யோகித்ததை யருளிச்செய்கிறார்.

கலித்துறை-பண்-நட்டபாடை-தாளம்-[illegible].

மாசறுசோதியென்செய்யவாய்மணிக்குன்றத்தை
ஆசறுசீலனையாதிமூர்த்தியைநாடியே

பாசறவெய்தியறிவிழந்தெனைநாளையம்
ஏசறுமூரவர்கவ்வைதோழீயென்செய்யுமே (௧)

என்செய்யுமூரவர்கவ்வைதோழீயினிநம்மை
என்செய்யதாமரைக்கண்ணனென்னைநிறைகொண்டான்
முன்செய்யமாமையிழந்துமேனிமெலிவெய்தி
என்செய்யவாயுங்கருங்கண்ணும்பயப்பூர்ந்தவே (௨)

ஊர்ந்தசகடமுதைத்தபாதத்தன்பேய்முலை
சார்ந்துசுவைத்தசெவ்வாயனென்னைநிறைகொண்டான்
பேர்ந்தும்பெயர்ந்துமவனோடன்றியோர்சொல்லிலேன்
தீர்ந்தவென்றோழீயென்செய்யுமூரவர்கவ்வையே (௩)

ஊரவர்கவ்வையெருவிட்டன்னைசொன்னீர்படுத்
தீரநெல்வித்திமுளைத்தநெஞ்சப்பெருஞ்செய்யுள்
பேரமர்காதற்கடல்புரையவிளைவித்த
காரமர்மேனிநங்கண்ணன்றோழீகடியனே (௪)

கடியன்கொடியனெடியமாலுலகங்கொண்ட
அடியனறிவருமேனிமாயத்தனாகிலும்
கொடியவென்னெஞ்சமவனென்றேகிடக்குமெல்லே
துடிகொளிடைமடத்தோழீயன்னையென்செய்யுமே (௫)

அன்னையென்செய்யிலென்னூரென்சொல்லிலென்றோழிமீர்
என்னையினியுமக்காசையில்லையகப்பட்டேன்
முன்னையமரர்முதல்வன்வண்டுவராபதி
மன்னன்மணிவண்ணன்வாசுதேவன்வலையுளே (௬)

வலையுளகப்படுத்தென்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு
அலைகடற்பள்ளியம்மானையாழிப்பிரான்றன்னைக்
கலைகொளகலல்குற்றோழீநங்கண்களாற்கண்டு
தலையில்வணங்கவுமாங்கொலோதையலார்முன்பே (௭)

பேய்முலையுண்டுசகடம்பாய்ந்துமருதிடை
போய்முதல்சாய்த்துப்புள்வாய்பிளந்துகளிறட்ட
தூமுறுவற்றொண்டைவாய்ப்பிரானையெந்நாள்கொலோ
யாமுறுகின்றதுதோழீயன்னையர்நாணவே (௮)

நாணுநிறையுங்கவர்ந்தென்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு
சேணுயர்வானத்திருக்குந்தேவபிரான்றன்னை
ஆணையென்றோழீயுலகுதோறலர்தூற்றியாம்
கோணைகள்செய்துகுதிரியாய்மடலூர்துமே (௯)

யாமடலூர்ந்துமெம்மாழியங்கைப்பிரானுடைத்
தூமடத்தண்ணந்துழாய்மலர்கொண்டுசூடுவோம்
யாமடமின்றித்தெருவுதோறயற்றையலார்
நாமடங்காப்பழிதூற்றிநாடுமிரைக்கவே. (௰)

இரைக்குங்கருங்கடல்வண்ணன்கண்ணபிரான்றன்னை
விரைக்கொள்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொன்ன
நிரைக்கொளந்தாதியோராயிரத்துளிப்பத்தும்
உரைக்கவல்லார்க்குவைகுந்தமாகுந்தம்மூரெல்லாம். (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆக திருவாய்மொழி-௪௩-இ-பாசுரம்-௪௭௩.

---

௫ - ௪. ஊரெல்லாம்.

மடலூர்தற்கு அசக்யமாய் அந்தகாராக்ராந்தமான இரவில் ஆழ்வார் அத்யந்தம் அக்கப்பட்டதை அருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம் - நாலடித்தாழிசையுமாம்
பண் - புறநீர்மை - தாளம் - ஒத்து.

ஊரெல்லாந்துஞ்சியுலகெல்லாம்நள்ளிருளாய்
நீரெல்லாந்தேறியோர்நீளிரவாய்நீண்டதால்
பாரெல்லாமுண்டநம்பாம்பணையான்வாரானால்
ஆரெல்லேவல்வினையேனாவிகாப்பாரினியே. (௧)

ஆவிகாப்பாரினியாராழ்கடல்மண்விண்மூடி
மாவிகாரமாயோர்வல்லிரவாய்நீண்டதால்
காவிசேர்வண்ணனென்கண்ணனும்வாரானால்
பாவியேனெஞ்சமேநீயும்பாங்கல்லையே. (௨)

நீயும்பாங்கல்லைகாணெஞ்சமேநீளிரவும்
ஓயும்பொழுதின்றியூழியாய்நீண்டதால்
காயுங்கடுஞ்சிலையென்காகுத்தன்வாரானால்
மாயும்வகையறியேன்வல்வினையேன்பெண்பிறந்தே. (௩)

பெண்பிறந்தாரெய்தும்பெருந்துயர்காண்கிலேனென்று
ஒண்சுடரோன்வாராதொளித்தானிம்மண்ணளந்த
கண்பெரியசெவ்வாயென்காரேறுவாரானால்
எண்பெரியசிந்தைநோய்தீர்ப்பாரார்என்னையே. (௪)

ஆரென்னையாராய்வாரன்னையருந்தோழியரும்
நீரென்னேயென்னாதேநீளிரவுந்துஞ்சுவரால்
காரன்னமேனிநங்கண்ணனும்வாரானால்
பேரென்னைமாயாதால்வல்வினையேன்பின்னின்றே. (௫)

பின்னின்றகாதல்நோய்நெஞ்சம்பெரிதடுமால்
முன்னின்றவிராவூழிகண்புதையமூடிற்றால்
மன்னின்றசக்கரத்தெம்மாயவனும்வாரானால்
இன்னின்றநீளாவிகாப்பாரார்இவ்விடத்தே. (௬)

காப்பாராரிவ்விடத்துக்கங்குலிருள்நுண்துளியாய்ச்
சேட்பாலதூழியாய்ச்செல்கின்றகங்குல்வாய்த்
தூப்பாலவெண்சங்குசக்கரத்தன்தோன்றானால்
தீப்பாலவல்வினையேன்தெய்வங்காளென்செய்கேனோ. (௭)

தெய்வங்காளென்செய்கேனோரிரவேழூழியாய்
மெய்வந்துநின்றெனதாவிமெலிவிக்கும்
கைவந்தசக்கரத்தென்கண்ணனும்வாரானால்
தைவந்ததண்டென்றல்வெஞ்சுடரிற்றானடுமே. (௮)

வெஞ்சுடரிற்றானடுமால்வீங்கிருளின்நுண்துளியாய்
அஞ்சுடரவெய்யோனணிநெடுந்தேர்தோன்றாதால்
செஞ்சுடர்த்தாமரைக்கட்செல்வனும்வாரானால்
நெஞ்சிடர்தீர்ப்பாரினியார்நின்றுருகுகின்றேனே. (௯)

நின்றுருகுகின்றேனேபோலநெடுவானம்
சென்றுருகிநுண்துளியாய்ச்செல்கின்றகங்குல்வாய்
அன்றொருகால்வையமளந்தபிரான்வாரானென்று
ஒன்றொருகாற்சொல்லாதுலகோவுறங்குமே. (௰)

உறங்குவான்போல்யோகுசெய்தபெருமானைச்
சிறந்தபொழில்சூழ்குருகூர்ச்சடகோபன்சொல்
நிறங்கிளர்ந்தவந்தாதியாயிரத்துளிப்பத்தால்
இறந்துபோய்வைகுந்தஞ்சேராவாறெங்ஙனேயோ. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௪௪-இ-பாசுரம்-௪௮௪.

ரு - வது. எங்ஙனே.

அதன்பின் ஸூர்யோதயமாய் திருக்குறுங்குடிநம்பி பகவான் ப்ரத்யக்ஷமாகாநிற்க தத்ப்ரவணரான ஆழ்வாரைப்பார்த்து தாய்விலக்கியும் அவனிடத்தில் தன்மனது லக்னமாயிருக்கிறது நீ கோபிக்கவேண்டா மென்றருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-கைசியம்-தாளம்-ஏழொத்து.

எங்ஙனேயோவன்னைமீர்காளென்னைமுனிவதுநீர்
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
சங்கினோடுநேமியோடுந்தாமரைக்கண்களோடுஞ்
செங்கனிவாயொன்றினோடுஞ்செல்கின்றதென்னெஞ்சமே.

என்னெஞ்சினால்நோக்கிக்காணீரென்னைமுனியாதே
தென்னன்சோலைத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
மின்னுநூலுங்குண்டலமுமார்பிற்றிருமறுவும்
மன்னுபூணுநான்குதோளும்வந்தெங்குநின்றிடுமே. (௨)

நின்றிடுந்திசைக்குநையுமென்றன்னையரும்முனிதிர்
குன்றமாடத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
வென்றிவில்லுந்தண்டும்வாளுஞ்சக்கரமுஞ்சங்கமும்
நின்றுதோன்றிக்கண்ணுணீங்காநெஞ்சுள்ளுநீங்காவே. (௩)

நீங்கநில்லாக்கண்ணநீர்களென்றன்னையரும்முனிதிர்
தேங்கொள்சோலைத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
பூந்தண்மாலைத்தண்டுழாயும்பொன்முடியும்வடிவும்
பாங்குதோன்றும்பட்டுநாணும்பாவியேன்பக்கத்தவே. (௪)

பக்கம்நோக்கிநிற்குநையுமென்றன்னையரும்முனிதிர்
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
தொக்கசோதித்தொண்டைவாயுநீண்டபுருவங்களுந்
தக்கதாமரைக்கண்ணும்பாவியேனுவியின்மேலனவே. (௫)

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்றன்னைகாணகொடாள்
சோலைசூழ்தண்டிருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
கோலநீள்கொடிமூக்குந்தாமரைக்கண்ணுங்கனிவாயும்
நீலமேனியுநான்குதோளுமென்னெஞ்சம்நிறைந்தனவே. (௬)

நிறைந்தவன்பழிநங்குடிக்கிவளென்றன்னைகாணகொடாள்
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்

நிறைந்தசோதிவெள்ளஞ்சூழ்ந்தநீண்டபொன்மேனியொடும்
நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தானேமியங்கையுளதே. (௭)

கையுள்நன்முகம்வைக்குநையுமென்றன்னையரும்முனிதிர்
மைகொண்மாடத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
செய்யதாமரைக்கண்ணுமல்குலுஞ்சிற்றிடையும்வடிவும்
மொய்கொணீள்குழல்தாழ்ந்ததோள்களும்பாவியேன்முன்னிற்குமே. (௮)

முன்னின்றாயென்றுதோழிமார்களுமன்னையரும்முனிதிர்
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
சென்னிநீண்முடியாதியாயவுலப்பிலணிகலத்தன்
ன்னல்பாலமுதாகிவந்தென்னெஞ்சங்கழியானே. (௯)

கழிய[illegible]தலளிவளென்றன்னைகாணகொடாள்
[illegible]ர்த்தித்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்
குழுமித்தேவர்குழாங்கள்கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழுமார்க்குமறிவரிதே. (௰)

அறிவரியபிரானையாழியங்கையனையேயலற்றி
நறியநன்மலர்நாடிநன்குருகூர்ச்சடகோபன்சொன்ன
குறிகொளாயிரத்துளிவைபத்துந்திருக்குறுங்குடியதன்மேல்
அறியக்கற்றுவல்லார்வைட்டணவராழ்கடல்ஞாலத்துள்ளே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி-௪௰௫-இ-பாசுரம்-௪௱௯௰௫.

௬ - வது. கடல்ஞாலம்.

பாவனாப்ரகர்ஷம் போகையால் மிகவும் ஆர்த்தியையடைந்து கோபிகைகள் க்ருஷ்ணலீலைகளை யனுபவித்தாற்போல் பகவல்லீலைகளை யனுகரித்துத் தரித்ததை யருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-சீகாமரம்-தாளம் ஏழொத்து.

கடல்ஞாலஞ்செய்தேனும்யானேயென்னுங்
கடல்ஞாலமாவேனும்யானேயென்னுங்
கடல்ஞாலங்கொண்டேனும்யானேயென்னுங்
கடல்ஞாலங்கீண்டேனும்யானேயென்னுங்
கடல்ஞாலமுண்டேனும்யானேயென்னுங்
கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கொலோ

கடல்ஞாலத்தீர்க்கிவையென்சொல்லுகேன்
கடல்ஞாலத்தென்மகள்கற்கின்றவே. (௧)

கற்குங்கல்விக்கெல்லையிலனேயென்னுங்
கற்குங்கல்வியாவேனும்யானேயென்னுங்
கற்குங்கல்விசெய்வேனும்யானேயென்னுங்
கற்குங்கல்விதீர்ப்பேனும்யானேயென்னுங்
கற்குங்கல்விச்சாரமும்யானேயென்னுங்
கற்குங்கல்விநாதன்வந்தேறக்கொலோ
கற்குங்கல்வியீர்க்கிவையென்சொல்லுகேன்
கற்குங்கல்வியென்மகள்காண்கின்றவே. (௨)

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னுங்
காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னுங்
காண்கின்றவெந்தீயெல்லாம்யானேயென்னுங்
காண்கின்றவிக்காற்றெல்லாம்யானேயென்னுங்
காண்கின்றகடலெல்லாம்யானேயென்னுங்
காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ
காண்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
காண்கின்றவென்காரிகைசெய்கின்றவே. (௩)

செய்கின்றகிதியெல்லாம்யானேயென்னுஞ்
செய்வானின்றனகளும்யானேயென்னுஞ்
செய்துமுன்னிறந்தவும்யானேயென்னுஞ்
செய்கைப்பயனுண்பேனும்யானேயென்னு
செய்வார்களைச்செய்வேனும்யானேயென்னுஞ்
செய்யகமலக்கண்ணனேறக்கொலோ
செய்யவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்
செய்யகனிவாயிளமான்றிறத்தே. (௪)

திறம்பாமல்மண்காக்கின்றேன்யானேயென்னுந்
திறம்பாமல்மலையெடுத்தேனேயென்னுந்
திறம்பாமலசுரரைக்கொன்றேனேயென்னுந்
திறங்காட்டியன்றைவரைக்காத்தேனேயென்னுந்
திறம்பாமற்கடல்கடைந்தேனேயென்னுந்
திறம்பாதகடல்வண்ணனேறக்கொலோ
திறம்பாதவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
திறம்பாதென்றிருமகளெய்தினவே. (௫)

இனவேய்மலையேந்தினேன்யானேயென்னும்
இனவேறுகள்செற்றேனும்யானேயென்னும்
இனவான்கன்றுமேய்த்தேனும்யானேயென்னும்
இனவாநிரைகாத்தேனும்யானேயென்னும்
இனவாயர்தலைவனும்யானேயென்னும்
இனத்தேவர்தலைவன்வந்தேறக்கொலோ
இனவேற்கணல்லீர்க்கிவையென்சொல்லுகேன்
இனவேற்கண்ணியென்மகளுற்றனவே. (௬)

உற்றார்களெனக்கில்லையாருமென்னும்
உற்றார்களெனக்கிங்கெல்லாருமென்னும்
உற்றார்களைச்செய்வேனும்யானேயென்னும்
உற்றார்களையழிப்பேனும்யானேயென்னும்
உற்றார்களுக்குற்றேனும்யானேயென்னும்
உற்றாரிலிமாயன்வந்தேறக்கொலோ
உற்றீர்கட்கென்சொல்லிச்சொல்லுகேன்யான்
உற்றென்னுடைப்பேதையுரைக்கின்றவே. (௭)

உரைக்கின்றமுக்கட்பிரான்யானேயென்னும்
உரைக்கின்றதிசைமுகன்யானேயென்னும்
உரைக்கின்றவமரரும்யானேயென்னும்
உரைக்கின்றவமரர்கோன்யானேயென்னும்
உரைக்கின்றமுனிவரும்யானேயென்னும்
உரைக்கின்றமுகில்வண்ணனேறக்கொலோ
உரைக்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
உரைக்கின்றவென்கோமளவொண்கொடிக்கே. (௮)

கொடியவினையாதுமிலனேயென்னுங்
கொடியவினையாவேனும்யானேயென்னுங்
கொடியவினைசெய்வேனும்யானேயென்னுங்
கொடியவினைதீர்ப்பேனும்யானேயென்னுங்
கொடியானிலங்கைசெற்றேனேயென்னுங்
கொடியபுள்ளுடையவனேறக்கொலோ
கொடியவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்
கொடியேன்கொடியென்மகள்கோலங்களே. (௯)

கோலங்கொள்சுவர்க்கமும்யானேயென்னுங்
கோலமின்னரகமும்யானேயென்னுங்

கோலந்திகழ்மோக்கமும்யானேயென்னுங்
கோலங்கொளுயிர்களும்யானேயென்னுங்
கோலங்கொள்தனிமுதல்யானேயென்னுங்
கோலங்கொண்முகில்வண்ணனேறக்கொலோ
கோலங்கொளுலகத்தீர்க்கென்சொல்லுகேன்
கோலந்திகழ்கோதையென்கூந்தலுக்கே. (௧0)

கூந்தல்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்குங்
குலவாயர்கொழுந்துக்குங்கேள்வன்றன்னை
வாய்ந்தவழுதிவளநாடன்மன்னு
குருகூர்ச்சடகோபன்குற்றேவல்செய்து
ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்து
ளிவையுமோர்பத்தும்வல்லாருலகில்
ஏய்ந்தபெருஞ்செல்வத்தராய்த்திருமா
லடியார்களைப்பூசிக்கநோற்றார்களே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௫௬-இ-பாசுரம்-௫0அ.

௭ - வது - நோற்ற.

அந்த அநுகாராவஸ்தைபோய் உன்னைவிட்டிருக்கமாட்டேன் உன்திருவடிகளே யெனக்குபாயமென்று வானமாமலைப் பெருமானிடத்தில் ப்ரபத்திபண்ணினதை யருளிச்செய்கிறார்.

ஆசிரியத்துறை பண்-சீகாமரம் - தாளம்-ஏழொத்து.

நோற்றநோன்பிலேன்நுண்ணறிவிலேனாகிலுமினியுன்னைவிட்டொன்று
ஆற்றகிற்கின்றிலேனரவினணையம்மானே [ம்
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர்சிரீவரமங்கலநகர்
வீற்றிருந்தவெந்தாயுனக்குமிகையல்லேனங்கே. (௧)

அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேனுன்னைக்காணு மவாவில்வீழ்ந்
தெங்குற்றேனுமல்லேனிலங்கைசெற்றவம்மானே [துநான்
திங்கள்சேர்மணிமாடநீடுசிரீவரமங்கலநகருறை
சங்குசக்கரத்தாய்தமியேனுக்கருளாயே. (௨)

கருளப்புட்கொடிசக்கரப்படைவானநாடவென்கார்முகில்வண்ணா
பொருளல்லாதவென்னைப்பொருளாக்கியடிமைகொண்டாய்

தெருள்கொள்நான்மறைவல்லவர்பலர்வாழ்சிரீவரமங்கலநகர்க்கு
அருள்செய்தங்கிருந்தாயறியேனொருகைம்மாறே. (௩)

மாறுசேர்படைநூற்றுவர்மங்கவோரைவர்க்காயன்றுமாயப் போர்பண்
நீறுசெய்தவெந்தாய்நிலங்கீண்டவம்மானே [ணி
தேறுஞானத்தர்வேதவேள்வியறாச்சிரீவரமங்கலநகர்
ஏறிவீற்றிருந்தாயுன்னையெங்கெய்தக்கூவுவனே. (௪)

எய்தக்கூவுதலாவதேயெனக்கெவ்வதெவ்வத்துளாயுமாய்நின்று
கைதவங்கள்செய்யுங்கருமேனியம்மானே
செய்தவேள்வியர்வையத்தேவரறாச்சிரீவரமங்கலநகர்
கைதொழவிருந்தாயதுநானுங்கண்டேனே. (௫)

ஏனமாய்நிலங்கீண்டவென்னப்பனே கண்ணாவென்றுமென்னை யாளு
வானநாயகனேமணிமாணிக்கச்சுடரே [டை
தேனமாம்பொழிற்றண்சிரீவரமங்கலத்தவர்கைதொழவுறை
வானமாமலையேயடியேன்றொழவந்தருளே. (௬)

வந்தருளியென்னெஞ்சிடங்கொண்டவானவர்கொழுந்தேயுலகுக்கோர்
முந்தைத்தாய்தந்தையேமுழுவேழுலகுமுண்டாய்
செந்தொழிலவர்வேதவேள்வியறாச்சிரீவரமங்கலநகர்
அந்தமில்புகழாயடியேனையகற்றேலே. (௭)

அகற்றநீவைத்தமாயவல்லைம்புலன்களாமவைநன்கறிந்தனன்
அகற்றியென்னையுமீயருஞ்சேற்றில்வீழ்த்திகண்டாய்
பகற்கதிர்மணிமாடநீடுசிரீவரமங்கைவாணனேயென்றும்
புகற்கரியவெந்தாய்புள்ளின்வாய்பிளந்தானே. (௮)

புள்ளின்வாய்பிளந்தாய்மருதிடைபோயினாயெருதேழடர்த்தவென்
கள்ளமாயவனேகருமாணிக்கச்சுடரே
தெள்ளியார்திருநான்மறைகள்வல்லார்மலிதண்சிரீவரமங்கை
உள்ளிருந்தவெந்தாயருளாயுய்யுமாறெனக்கே. (௯)

ஆறெனக்குநின்பாதமேசரணாகத்தந்தொழிந்தாயுனக்கோர்கைம்
மாறுநானொன்றிலேனெனதாவியுமுனதே
சேறுகொள்கரும்பும்பெருஞ்செந்நெலும்மலிதண்சிரீவரமங்கை
நாறுபூந்தண்டுழாய்முடியாய்தெய்வநாயகனே. (௧0)

தெய்வநாயகன்நாரணன்திரிவிக்கிரமனடியிணைமிசைக்
கொய்கொள்பூம்பொழில்சூழ்குருகூர்ச்சடகோபன்

செய்தவாயிரத்துளிவைதண்சிரீவரமங்கைமேயபத்துடனே
வைகல்பாடவல்லார்வானோர்க்காராவமுதே. (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௪௭-இ-பாசுரம்-௫௧௭.

௮ வது. ஆராவமுதே.

பலவித்தியாகமையால் ஆராவமுதாழ்வாரிடத்தில் * ஆக்ருந்தனம்பண்ணி ப்ரபத்திபண்ணினதை யருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-காந்தாரம்-தாளம்-ஏழொத்து.

ஆராவமுதேயடியேனுடலம்நின்பாலன்பாயே
நீராயலைந்துகரையவுருக்குகின்றநெடுமாலே
சீரார்செந்நெற்கவரிவீசுஞ்செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்கண்டேனெம்மானே. (௧)

எம்மானேயென்வெள்ளைமூர்த்தியென்னையாள்வானே
எம்மாவுருவும்வேண்டுமாற்றாலாவாயெழிலேறே
செம்மாகமலஞ்செழுநீர்மிசைக்கண்மலருந்திருக்குடந்தை
அம்மாமலர்க்கண்வளர்கின்றானேயென்னான்செய்கேனே. (௨)

என்னான்செய்கேன்யாரேகளைகணென்னையென்செய்கின்றாய்
உன்னாலல்லால்யாவராலுமொன்றுங்குறைவேண்டேன்
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாயடியேனருவாழ்நாள்
சென்னாளெந்நாளந்நாளுனதாள்பிடித்தேசெலக்காணே. (௩)

செலக்காண்கிற்பார்காணுமளவுஞ்செல்லுங்கீர்த்தியாய்
உலப்பிலானேயெல்லாவுலகுமுடையவொருமூர்த்தி
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாயுன்னைக்காண்பான்நான்
அலப்பாயாகாசத்தைநோக்கியழுவன்றொழுவனே. (௪)

அழுவன்றொழுவனாடிக்காண்பன்பாடியலற்றுவன்
தழுவல்வினையாற்பக்கம்நோக்கிநாணிக்கவிழ்ந்திருப்பன்
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய்செந்தாமரைக்கண்ணா
தொழுவனேனையுனதாள்சேரும்வகையேசூழ்கண்டாய். (௫)

* ஆக்ருந்தனம் - மனவருத்தம்.

சூழ்கண்டாயென்றொல்லைவினையையறுத்துன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தேதூராக்குழிதூர்த்தெனைநாளகன்றிருப்பன்
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய்வானோர்கோமானே
யாழினிசையேயமுதேயறிவின்பயனேயரியேறே. (௬)

அரியேறேயென்னம்பொற்சுடரேசெங்கட்கருமுகிலே
எரியேபவளக்குன்றேநாற்றோளெந்தாயுனதருளே
பிரியாவடிமையென்னைக்கொண்டாய்குடந்தைத்திருமாலே
தரியேனினியுன்சரணந்தந்தென்சன்மங்களையாயே. (௭)

களைவாய்துன்பங்களையாதொழிவாய்களைகண்மற்றிலேன்
வளைவாய்நேமிப்படையாய்குடந்தைக்கிடந்தமாமாயா
தளராவுடலமெனதாவிசரிந்துபோம்போது
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப்போதவிசைநீயே. (௮)

இசைவித்தென்னையுன்றாளிணைக்கீழிருத்துமம்மானே
அசைவிலமரர்தலைவர்தலைவாவாதிப்பெருமூர்த்தி
திசைவில்வீசுஞ்செழுமாமணிகள்சேருந்திருக்குடந்தை
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய்காணவாராயே. (௯)

வாராவருவாய்வருமென்மாயாமாயாமூர்த்தியாய்
ஆராவமுதாயடியேனாவியகமேதித்திப்பாய்
தீராவினைகடீரவென்னையாண்டாய்திருக்குடந்தை
ஊராவுனக்காட்பட்டுமடியேனின்னமுழல்வேனோ. (௰)

உழலையென்பிற்பேய்ச்சிமுலையூடவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்டகுருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொன்னவோராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார்காமர்மானேய்நோக்கியர்க்கே. (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௪௮-இ-பாசுரம்-௫௨0.

௯-வது. மானேய்.

ஆராவமுதாழ்வாரிடத்திலும் பலஸித்தியடையாமையால் திருப்பதிக்குப் போகவேண்டுமென்று திருநகரி ப்ராஞ்ஞயோத்யாநபர்யந்தமும் வந்த விடாயால் விடாய்த்து விழுந்த ஸிபோடே அந்த திருவல்லவாழ் ஸ்வாமியை என்றடைவேனென் றருளிச்செய்கிறார்.

ஆழ்வாரிரண்டாந்தர மாறுமாசம் மோஹித்த திருவாய்மொழி.

கலித்துறை-பண்-பஞ்சமம்-தாளம்-ஏழொத்து.

மானேய்நோக்குநல்லீர்வைகலும்வினையேன்மெலிய
வானார்வண்கமுகும்மதுமல்லிகைகமழுந்
தேனார்சோலைகள்சூழ்திருவல்லவாழுறையுங்
கோனாரையடியேனடிகூடுவதென்றுகொலோ. (௧)

என்றுகொல்தோழிமீர்காளெம்மைநீர்நலிந்தென்செய்தீரோ
பொன்திகழ்புன்னைமகிழ்புதுமாதவிமீதணவித்
தென்றல்மணங்கமழுந்திருவல்லவாழ்நகருள்
நின்றபிரானடிநீறடியோங்கொண்டுசூடுவதே. (௨)

சூடுமலர்க்குழலீர்துயராட்டியேனைமெலியப்
பாடுநல்வேதவொலிபரவைத்திரைபோல்முழங்க
மாடுயர்ந்தோமப்புகைகமழுந்தண்டிருவல்லவாழ்
நீடுறைகின்றபிரான்கழல்காண்டுங்கொல்நிச்சலுமே. (௩)

நிச்சலுந்தோழிமீர்காளெம்மைநீர்நலிந்தென்செய்தீரோ
பச்சிலைநீள்கமுகும்பலவுந்தெங்கும்வாழைகளும்
மச்சணிமாடங்கள்மீதணவுந்தண்டிருவல்லவாழ்
நச்சரவினணைமேல்நம்பிரானதுநன்னலமே. (௪)

நன்னலத்தோழிமீர்காள்நல்லவந்தணர்வேள்விப்புகை
மைந்நலங்கொண்டுயர்விண்மறைக்குந்தண்டிருவல்லவாழ்
கன்னலங்கட்டிதன்னைக்கனியையின்னமுதந்தன்னை
என்னலங்கொள்சுடரையென்றுகொல்கண்கள்காண்பதுவே. (௫)

காண்பதெஞ்ஞான்றுகொலோவினையேன்கனிவாய்மடவீர்
பாண்குரல்வண்டினொடுபசுந்தென்றலுமாகியெங்குந்
சேண்சினையோங்குமரச்செழுங்கானற்றிருவல்லவாழ்
மாண்குறட்கோலப்பிரான்மலர்த்தாமரைப்பாதங்களே. (௬)

பாதங்கள்மேலணிபூத்தொழக்கூடுங்கொல்பாவைநல்லீர்
ஓதநெடுந்தடத்துளுயர்தாமரைசெங்கழுநீர்
மாதர்கள்வாள்முகமுங்கண்ணுமேந்துந்திருவல்லவாழ்
நாதனிஞ்ஞாலமுண்டநம்பிரான்றன்னைநாடொறுமே. (௭)

நாடொறும்வீடின்றியேதொழக்கூடுங்கொல்நன்னுதலீர்
ஆடுறுதீங்கரும்பும்விளைசெந்நெலுமாகியெங்கும்
மாடுறுபூந்தடஞ்சேர்வயல்சூழ்தண்டிருவல்லவாழ்
நீடுறைகின்றபிரானிலந்தாவியநீள்கழலே. (௮)

கழல்வளைபூரிப்பயாங்கண்டுகைதொழக்கூடுங்கொலோ
குழலென்னயாழுமென்னக்குளிர்சோலையுள்தேனருந்தி
மழலைவரிவண்டுகளிசைபாடுந்திருவல்லவாழ்
சுழலின்மலிசக்கரப்பெருமானதுதொல்லருளே. (௯)

தொல்லருள்நல்வினையாற்சொலக்கூடுங்கொல்தோழிமீர்காள்
தொல்லருள்மண்ணும்விண்ணுந்தொழநின்றதிருநகரம்
நல்லருளாயிரவர்நலனேந்துந்திருவல்லவாழ்
நல்லருள்நம்பெருமான்நாராயணன்நாமங்களே. (௰)

நாமங்களாயிரமுடையநம்பெருமானடிமேல்
சேமங்கொள்தென்குருகூர்ச்சடகோபன்தெரிந்துரைத்த
நாமங்களாயிரத்துளிவைபத்துந்திருவல்லவாழ்
சேமங்கொள்தென்னகர்மேற்செப்புவார்சிறந்தார்பிறந்தே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௪௯-இ-பாசுரம்-௫௩௯.

௰-வது. பிறந்த.

அர்ச்சாவதாரத்தில் பலஸித்தியாகாமையாலே அவதாரங்களில் ப்ரவேசித்து குணாநுபவத்தில் மனசை திடம்வராமற் செய்யவேண்டுமென்று எம்பெருமானை ப்ரார்த்தித்ததை யருளிச்செய்கிறார்.

ஆசிரியத்துறைவிருத்தம்-பண்-காந்தாரம்-தாளம்-ஏழொத்து.

பிறந்தவாறும்வளர்ந்தவாறும்பெரியபாரதங்கைசெய்தைவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச்செய்துபோனமாயங்களும்

நிறந்தனூடுபுக்கெனதாவியைநின்றுநின்றுருக்கியுண்கின்றவிச்
சிறந்தவான்சுடரேயுன்னையென்றுகொல்சேர்வதுவே. (௧)
வதுவைவார்த்தையுளேறுபாய்ந்ததும்மாயமாவினைவாய்பிளந்ததும்
மதுவைவார்குழலார்குரவைபிணைந்தகுழகுமதுவிது
உதுவென்னலாவனவல்லவென்னையுன்செய்கைநைவிக்கும்
முதுவையமுதல்வாவுன்னையென்றுதலைப்பெய்வனே. (௨)
பெய்யும்பூங்குழல்பேய்முலையுண்டபிள்ளைத்தேற்றமும் பேர்ந்தோர்சா
செய்யபாதமொன்றால்செய்தநின்சிறுச்சேவகமும் [டிறச்
நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ளநீயுன்றாமரைக்கண்கள்நீர்
மல்கப், பையவேநிலையும்வந்தென்னெஞ்சையுருக்குகளே. (௩)
கள்ளவேடத்தைக்கொண்டுபோய்ப்புரம்புக்கவாறுங்கலந்தசுரரை
உள்ளம்பேதம்செய்திட்டுயிருண்டவுபாயங்களும்
வெள்ளநீர்ச்சடையானும்நின்னிடைவேறலாமைவிளங்கநின்றதும்
உள்ளமுள்குடைந்தென்னுயிரையுருக்கியுண்ணுமே. (௪)
உண்ணவானவர்கோனுக்காயரொருப்படுத்தவடிசிலுண்டதும்
வண்ணமால்வரையையெடுத்துமழைகாத்ததும்
மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்துகடந்திடந்துமணந்தமாயங்களும்
எண்ணுந்தோறுமென்னெஞ்செரிவாய்மெழுகொக்குநின்றே. (௫)
நின்றவாறுமிருந்தவாறுங்கிடந்தவாறுநினைப்பரியன
ஒன்றலாவுருவாயருவாயநின்மாயங்கள்நின்று
நின்றுநின்றுநினைக்கின்றேனுன்னையெங்ஙனம்நினைகிற்பன்பாவியேற்
கொன்றுநன்குரையாயுலகமுண்டவொண்சுடரே (௬)
ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறுமுண்மையோடின்மையாய் வந்தெ
கண்கொளாவகைநீகரந்தென்னைச்செய்கின்றன [ன்
எண்கொள்சிந்தையுள்நைகின்றேனென்கரியமாணிக்கமே யென்கண்க
திண்கொள்ளவொருநாளருளாயுன்திருவுருவே. [ட்குத்
திருவுருக்கிடந்தவாறுங்கொப்பூழ்ச்செந்தாமரைமேற்றிசைமுகன்
கருவுள்வீற்றிருந்துபடைத்திட்டகருமங்களும்
பொருவிலுன்றனிநாயகமவைகேட்குந்தோறுமென்னெஞ்சம்நின்றனெ
க்கருவிசோருங்கண்ணீரென்செய்கேனடியேனே. (௮)
அடியைமூன்றையிரந்தவாறுமங்கேநின்றாழ்கடலும்மண்ணும்விண்ணு
முடியவீரடியால்முடித்துக்கொண்டமுக்கியமும் [ம்
நொடியுமாறவைகேட்குந்தோறுமென்னெஞ்சம்நின்றுநெக்கேகரைந்து
கொடியவல்வினையேனுன்னையென்றுகொல்கூடுவதே. [குக்

கூடிநீரைக்கடைந்தவாறுமமுதந்தேவருண்ணவசுரரை
வீடும்வண்ணங்களேசெய்துபோனவித்தகமும்
ஊடுபுக்கெனதாவியையுருக்கியுண்டிடுகின்றநின்றன்னை
நாடும்வண்ணஞ்சொல்லாய்நச்சுநாகணையானே. (௧௦)
நாகணைமிசைநம்பிரான்சரணேசரண்நமக்கென்றுநாடொறும்
ஏகசிந்தையனாய்க்குருகூர்ச்சடகோபன்மாறன்
ஆகநூற்றவந்தாதியாயிரத்துளிவையுமோர்பத்தும்வல்லார்
மாகவைகுந்தத்துமகிழ்வெய்துவர்வைகலுமே. (௧௧)

ஐந்தாம்பத்து முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ_பத்துக்கு-திருவாய்மொழி-௰-டு-பாசுரம்-௱௰.

ஆறாம்பத்து.

௧ - வது. வைகல்.

அவதாரங்களாலும் இழவுதீரகில்லாமற் பின்னையும்
அர்ச்சாவதாரங்களிலே இறங்கி திருவண்வண்டூர் ஸ்வாமியினுடையவனுக்கு
பக்ஷிகளைத் தூதுவிட்டதை யருளிச்செய்கிறார்.

கலித்துறை-பண்-கட்டாரம்-தாளம்-ஏழொத்து.

வைகல்பூங்கழிவாய்வந்துமேயுங்குருகினங்காள்
செய்கொள்செந்நெலுயர்திருவண்வண்டூருறையுங்
கைகொள்சக்கரத்தென்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
கைகள்கூப்பிச்சொல்லீர்வினையாட்டியேன்காதன்மையே. (௧)
காதல்மென்பெடையோடுடன்மேயுங்கருநாராய்
வேதவேள்வியொலிமுழங்குந்தண்திருவண்வண்டூர்
நாதன்ஞாலமெல்லாமுண்டநம்பெருமானைக்கண்டு
பாதங்கைதொழுதுபணியீரடியேன்றிறமே. (௨)
திறங்களாகியெங்குஞ்செய்களூடுழல்புள்ளினங்காள்
சிறந்தசெல்வமல்குதிருவண்வண்டூருறையும்
கறங்குசக்கரக்கைக்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
இறங்கிநீர்தொழுதுபணியீரடியேனிடரே.
இடரில்போகமூழ்கியிணைந்தாடுமடவன்னங்காள்
விடலில்வேதவொலிமுழங்குந்தண்திருவண்வண்டூர்க்

கடல்மேனிப்பிரான்கண்ணனைநெடுமாலைக்கண்டு
உடலம்நைந்தொருத்தியுருகுமென்றுணர்த்துமினே. (௪)

உணர்த்தலூடலுணர்ந்துடன்மேயும்மடவன்னங்காள்
திணர்த்தவண்டல்கண்மேற்சங்குசேருந்திருவண்வண்டூர்
புணர்த்தபூந்தண்டுழாய்முடிநம்பெருமானைக்கண்டு
புணர்த்தகையினராயடியேனுக்கும்போற்றுமினே. (௫)

போற்றியானிரக்கேன்புன்னைமேலுறைபூங்குயில்காள்
சேற்றில்வாளைதுள்ளுந்திருவண்வண்டூருறையு
மாற்றலாழியங்கையமரர்பெருமானைக்கண்டு
மாற்றங்கொண்டருளீர்மையல்தீர்வதொருவண்ணமே. (௬)

ஒருவண்ணஞ்சென்றுபுக்கெனக்கொன்றுரையொண்கிளியே
செருவொண்பூம்பொழில்சூழ்செக்கர்வேலைத்திருவண்வண்டூர்
கருவண்ணஞ்செய்யவாய்செய்யகண்செய்யகைசெய்யகால்
செருவொண்சக்கரஞ்சங்கடையாளந்திருந்தக்கண்டே. (௭)

திருந்தக்கண்டெனக்கொன்றுரையாயொண்சிறுபூவாய்
செருந்திஞாழல்மகிழ்புன்னைசூழ்தண்டிருவண்வண்டூர்ப்
பெருந்தண்டாமரைக்கட்பெருநீண்முடிநாற்றடந்தோட்
கருந்தண்மாமுகில்போற்றிருமேனியடிகளையே. (௮)

அடிகள்கைதொழுதலர்மேலசையுமன்னங்காள்
விடிவைசங்கொலிக்குந்திருவண்வண்டூருறையுங்
கடியமாயன்றனைக்கண்ணனைநெடுமாலைக்கண்டு
கொடியவல்வினையேன்றிறமுங்கூறுமின்வேறுகொண்டே. (௯)

வேறுகொண்டும்மையானிரந்தேன்வெறிவண்டினங்காள்
தேறுநீர்ப்பம்பைவடபாலைத்திருவண்வண்டூர்
மாறில்போரரக்கன்மதிள்நீறெழச்செற்றுகந்த
ஏறுசேவகனார்க்கென்னையுமுளளென்மின்களே. (௧௦)

மின்கொள்சேர்புரிநூற்குறளாயகலஞாலங்கொண்ட
வன்கள்வனடிமேற்குருகூர்ச்சடகோபன்சொன்ன
பண்கொளாயிரத்துள்ளிவைபத்துந்திருவண்வண்டூர்க்கு
இன்கொள்பாடல்வல்லார்மதனர்மின்னிடையவர்க்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி (௬-௧)-பாசுரம்-௫௬௧.

௬ - ௨. மின்னிடை.

அநுகோத்தியால் ஸர்வேச்வரன் விளம்பித்து வருகையாலே
நமக்குவேண்டின ஸந்நிதிருக்க இங்கேவரவேண்டாமென்று ப்ரணய
கலகத்தாலே திரஸ்காரம்பண்ணினதை யருளிச்செய்கிறார்.

அறுசீராசிரியத்துறை-பண்-சீகாமரம்-தாளம்-ஏழொத்து.

மின்னிடைமடவார்கணின்னருள்சூடுவார்முனிவன்
மன்னுடையிலங்கையரண்காய்ந்தமாயவனே
உன்னுடையசுண்டாயம்நானறிவனினியதுகொண்டுசெய்வதென்
என்னுடையபந்துங்கழலுந்தந்துபோகுநம்பி (௧)

போகுநம்பியுன்றாமரைபுரைகண்ணிணையுஞ்செய்வாய்முறுவலும்
ஆகுலங்கள்செய்யவழிதற்கேநோற்றோமேயாம்
தோகைமாமயிலார்கணின்னருள்சூடுவார்செவியோசைவைத்தெழ
ஆகள்போகவிட்டுக்குழலூதிப்போயிருந்தே. (௨)

போயிருந்துநின்புள்ளுவமறியாதவர்க்குரைநம்பியிச்செய்ய
வாயுங்கனியுங்கண்களும்விபரீதமிந்நாள்
வேயிருந்தடந்தோளினாரித்திருவருள்பெறுவாரெவர்கொல்
மாயிருங்கடலைக்கடைந்தபெருமானாலே. (௩)

ஆலிநீளிலையேழுலகுமுண்டன்றுநீகிடந்தாயுன்மாயங்கள்
மேலைவானவருமறியாரினியெம்பரமே
வேலிநேர்தடங்கண்ணினார்விளையாடுசூழலைச்சூழவேநின்று
காலிமேய்க்கவல்லாயெம்மைநீகழறேலே. (௪)

கழறேல்நம்பியுன்கைதவம்மண்ணும்விண்ணும்நன்கறியுந்திண்சக்கர
நிழறுதொல்படையாயுனக்கொன்றுணர்த்துவன்யான்
மழறுதேன்மொழியார்கணின்னருள்சூடுவார்மனம்வாடிநிற்கவெங்
குழறுபூவையொடுங்கிளியோடுங்குழகேலே (௫)

குழகியெங்கள்குழமணங்கொண்டுகோயின்மைசெய்து கன்மமொன்றி
பழகியாமிருப்போம்பரமேயித்திருவருள்கள் [ல்லை
அழகியாரிவ்வுலகுமூன்றுக்குந்தேவிமைதகுவார்பலருளர்
கழகமேறேல்நம்பியுனக்குமிளைதேகன்மமே. (௬)

கன்மமன்றெங்கள்கையிற்பாவைபறிப்பதுகடன்ஞாலமுண்ட
நின்மலாநெடியாயுனக்கேலும்பிழைபிழையே

வன்மையேசொல்லியெம்மைநீவிளையாடுதியதுகேட்கில்
என்னைமார்தன்மைபாவமென்றொருவன்றுதடியனுக்கே. (௭)

பிணக்கியாவையும்யாவரும்பிழையாமற்பேதித்தும்பேதியாததோர்
கணக்கில்கீர்த்திவெள்ளக்கதிர்ஞானமூர்த்தியினாய் [ந்தோமை
இணக்கியெம்மையெந்தோழிமார்விளையாடப்போதுமினென்னப்போ
உணக்கிநீவளைத்தாலென்சொல்லாருகவாதவரே. (௮)

உகவையால்நெஞ்சமுள்ளுருகியுன்தாமரைத்தடங்கண்விழிகளின்
அகவலைப்படுப்பானழித்தாயுன்திருவடியால்
தகவுசெய்திலையெங்கள்சிற்றிலும்யாமடுசிறுசோறுங்கண்டுநின்
முகவொளிதிகழமுறுவல்செய்துநின்றிலையே. (௯)

நின்றிலங்குமுடியினாயிருபத்தோர்காலரசுகளை
வென்றிநீள்மழுவாவியன்ஞாலமுன்படைத்தாய்
இன்றிவ்வாயர்குலத்தைவீடுய்யத்தோன்றியகருமாணிக்கச்சுட
நின்றன்னால்நலிவேபடுவோமென்றுமச்சோவே. (௧0)

ஆச்சியாகியவன்னையாலன்றுவெண்ணெய்வார்த்தையுள்
சீற்றமுண்டழுகூத்தவப்பன்றன்னைக்குருகூர்ச்சடகோபன்
ஏத்தியதமிழ்மாலையாயிரத்துள்ளிவையுமோர்பத்திசையொடும்
நாத்தன்னால்நவிலவுரைப்பார்க்கில்லைநல்குரவே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௫௨-இ-பாசுரம்-௫௭௪.

௩. - வது. நல்குரவும்.

ப்ரணயகலஹத்தில் விருத்தமாயிருக்கிற தம்மைவசீகரிக்கின்ற விருத்த விபூதிகனான ஸர்வேச்வரன் வைசித்ர்யத்தை யருளிச்செய்கிறார்.

கலித்துறைவிருத்தம்-பண்-நட்டராகம்-தாளம்-நடையொத்து.

நல்குரவுஞ்செல்வமுநரகுஞ்சுவர்க்கமுமாய்
வெல்பகையுநட்பும்விடமுமமுதமுமாய்
பல்வகையும்பரந்தபெருமானென்னையாள்வானைச்
செல்வமல்குகுடித்திருவிண்ணகர்க்கண்டேனே. (௧)

கண்டவின்பந்துன்பங்கலக்கங்களுந்தேற்றமுமாய்த்
தண்டமுந்தண்மையுந்தழலுநிழலுமாய்க்
கண்டுகொள்வதற்கரியபெருமானென்னையாள்வானூர்
தெண்டிரைப்புனல்சூழ்திருவிண்ணகர்நன்னகரே. (௨)

நகரமுநாடுகளுஞ்ஞானமுமூடமுமாய்
நிகரில்சூழ்சுடராயிருளாய்நிலனாய்விசும்பாய்ச்
சிகரமாடங்கள்சூழ்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லையாவர்க்கும்புண்ணியமே. (௩)

புண்ணியம்பாவம்புணர்ச்சிபிரிவென்றிவையாய்
எண்ணமாய்மறப்பாயுண்மையாயின்மையாயல்லனாய்த்
[illegible]ண்ணமாடங்கள்சூழ்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
[illegible]ணனின்னருளேகண்டுகொண்மின்கள்கைதவமே. (௪)

கை[illegible]செம்மைகருமைவெளுமையுமாய்
[illegible]முதுமைபுதுமைபழமையுமாய்ச்
செய்ததிண்மதிள்சூழ்தி[illegible]விண்ணகர்ச்சேர்ந்தபிரான்
பெய்தகாவுகண்டீர்பெருந்தேவுடைமூவுலகே. (௫)

மூவுலகங்களுமாயல்லனாயுகப்பாய்முனிவாய்ப்
பூவில்வாழ்மகளாய்த்தவ்வையாய்ப்புகழாய்ப்பழியாய்த்
தேவர்மேவித்தொழுந்திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
[illegible]மனத்தேயுறைகின்றபரஞ்சுடரே. (௬)

ப[illegible]ஞ்சுடருடம்பாயழுக்குப்பதித்தவுடம்பாய்க்
கரந்துந்தோன்றியுநின்றுங்கைதவங்கள்செய்தும்விண்ணோர்
சிரங்களால்வணங்குந்திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
வரங்கொள்பாதமல்லாலில்லையாவர்க்கும்வன்சரணே. (௭)

வன்சரண்சுரர்க்காயசுரர்க்குவெங்கூற்றமுமாய்த்
தன்சரணிழற்கீழுலகம்வைத்தும்வையாதும்
தென்சரண்டிசைக்குத்திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
என்சரணென்கண்ணனென்னையாளுடையென்னப்பனே. (௮)

என்னப்பனெனக்காயிகுளாயென்னைப்பெற்றவளாய்ப்
பொன்னப்பன்மணியப்பன்முத்தப்பனென்னப்பனுமாய்
மின்னப்பொன்மதிள்சூழ்திருவிண்ணகர்ச்சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன்றந்தனன்றனதாணிழலே. (௯)

விறல்வெய்யிற்சிறுமைப்பெருமைக்குறைமெய்ம்மைப்புனைவாய்க்
குழல்வணிற்பனமற்றுமாயவையல்லனுமாய்
மழலைவாய்வண்கிளாழ்திருவிண்ணகர்மன்னுபிரான்
கழல்களன்றிமற்றோர்களைகணிலங்காண்மின்களே. (௧௦)

காண்மின்களுலகீரென்றுகண்முகப்பேநிமிர்ந்த
தாளிணையன்றன்னைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
ஆணையாயிரத்துத்திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்
கோணையின்றிவிண்ணோர்க்கென்றுமாவர்குரவர்களே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௫௩-பாசுரம்-௫௮௩.

௪ - வது குரவை

ஆழ்வார்முகட்டிக்கொண்ட இருக்கையுடைய [illegible] அநுபவித்து ப்ரீதியடைந்ததை யருளி[illegible]

அறுசீராசிரியவிருத்தம் பண்-தக்கராகம்-தாளம்-[illegible].

குரவையாய்ச்சியரோடுகோத்ததுங்குன்றமொன்றேந்தியதும்
உரவுநீர்ப்பொய்கைநாகங்காய்ந்ததுமுட்படமற்றும்பல
அரவிற்பள்ளிப்பிரான்றன்மாயவினைகளையேயலற்றி
இரவுநன்பகலுந்தவிர்கிலமென்னகுறையெமக்கே.

கேயத்தீங்குழலூதிற்றும்நிரைமேய்த்ததுங்கெண்டையொண்கண்
வாசப்பூங்குழற்பின்னைதோள்கள்மணந்ததும்மற்றும்பல
மாயக்கோலப்பிரான்றன்செய்கைநினைந்துமனங்குழைந்து
நேயத்தோடுகழிந்தபோதெனக்கெவ்வுலகநிகரே. (௨)

நிகரில்மல்லரைச்செற்றதுந்நிரைமேய்த்ததும்நீணெடுங்கைச்
சிகரமாகளிறட்டதுமிவைபோல்வனவும்பிறவும்
புகர்கொள்சோதிப்பிரான்றன்செய்கைநினைந்துபுலம்பியென்றும்
நுகரவைகல்வைகப்பெற்றேனெனக்கென்னினிநோவதுவே. (௩)

நோவவாய்ச்சியுரலோடார்க்கவிரங்கிற்றும்வஞ்சப்பெண்ணைச்
சாவப்பாலுண்டதுமூர்சகடமிறச்சாடியதும்
தேவக்கோலப்பிரான்றன்செய்கைநினைந்துமனங்குழைந்து
மேவக்காலங்கள்கூடினேனெனக்கென்னினிவேண்டுவதே. (௪)

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும்வீங்கிருள்வாய்
பூண்டன்றன்னைபுலம்பப்போயங்கோராய்க்குலம்புக்கதுங்
காண்டலின்றிவளர்ந்துகஞ்சனைத்துஞ்சவஞ்சஞ்செய்ததும்
ஈண்டுநானலற்றப்பெற்றேனெனக்கென்னவிகலுளதே. (௫)

இகல்கொள்புள்ளைப்பிளந்ததுமிமிலேறுகள்செற்றதுவும்
உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததுமுட்படமற்றும்பல
அகல்கொள்வையமளந்தமாயனென்னப்பன்றன்மாயங்களே
பகலிராப்பரவப்பெற்றேனெனக்கென்னமனப்பரிப்பே. (௬)

மனப்பரிப்போடழுக்குமானிடசாதியிற்றான்பிறந்து
தனக்குவேண்டுருக்கொண்டுதான்றனசீற்றத்தினைமுடிக்கும்
புனத்துழாய்முடிமாலைமார்பனென்னப்பன்றன்மாயங்களே
நினைக்கும்நெஞ்சுடையேனெனக்கினியார்நிகர்நீணிலத்தே. (௭)

நீணிலத்தொடுவான்வியப்பநிறைபெரும்போர்கள்செய்து
வாணனாயிரந்தோள்துணித்ததுமுட்படமற்றும்பல
மாணியாய்நிலங்கொண்டமாயனென்னப்பன்றன்மாயங்களே
காணுநெஞ்சுடையேனெனக்கினியென்னகலக்கமுண்டே. (௮)

கலக்கவேழ்கடலேழ்மலையுலகேழுங்கழியக்கடாய்
உலக்கத்தேர்கொடுசென்றமாயமுமுட்படமற்றும்பல
வலக்கையாழியிடக்கைச்சங்கமிவையுடைமால்வண்ணனை
மலக்குநாவுடையேற்குமாறுளதோவிம்மண்ணின்மிசையே. (௯)

மண்மிசைப்பெரும்பாரநீங்கவோர்பாரதமாபெரும்போர்
பண்ணிமாயங்கள்செய்துசேனையைப்பாழ்படநூற்றிட்டுப்போய்
விண்மிசைத்தனதாமமேபுகமேவியசோதிதன்றாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றேனெனக்கார்பிறர்நாயகரே. (௧௦)

நாயகன்முழுவேழுலகுக்குமாய்முழுவேழுலகுந்தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாயவையல்லனுமாம்
கேசவனடியிணைமிசைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
தூயவாயிரத்திப்பத்தாற்பத்தராவர்துவளின்றியே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௫௪-பாசுரம்-௫௯௪.

௫ - வது. துவளில்.

பகவதநுபவத்தாலொரு ப்ரீதிவிசேஷம்வந்து அதினாலே காயிகதன்மை
யடைந்து தொலைவில்லிமங்கல ஸ்வாமிஸந்நிதியில் அபிப்ராயத்
யம் பிறந்திருக்க அதுகண்டு தாய்மார்கோபிக்க இப்ராவண்
யத்தைப் போக்கப்போகாது இவளிடத்திலாசை விடுமி
னென்று தோழிமார்கள் தாய்மாரோடு சொல்லுகிற
சொல்லாக அருளிச்செய்கிறார்.

எழுசீராசிரியவிருத்தம்-பண்-பஞ்சமம்-தாளம்-ஏழொத்து.

துவளின்மாமணிமாடமோங்குதொலைவில்லிமங்கலந்தொழும்
இவளைநீரினியன்னைமீருமக்காசையில்லைவிடுமினோ
தவளவொண்சங்குசக்கரமென்றுந்தாமரைத்தடங்கணென்றுங்
குவளையொண்மலர்க்கண்கணீர்மல்கநின்றுநின்றுகுமுறுமே. (௧)

குமுறுமோசைவிழவொலித்தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்
கமுதமென்மொழியாளைநீருமக்காசையின்றியகற்றினீர்
திமிர்கொண்டாலொத்துநிற்கும்மற்றிவள்தேவதேவபிரானென்றே
நிமியும்வாயொடுகண்கணீர்மல்கநெக்கொசிந்துகரையுமே. (௨)

கரைகொள்பைம்பொழிற்றண்பணைத்தொலைவில்லிமங்கலங்கொண்டுபு
க்குரைகொளின்மொழியாளைநீருமக்காசையின்றியகற்றினீர்
திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததுந்திசைஞாலந்தாவியளந்ததும்
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றிநெடுங்கணீர்மல்கநிற்குமே. (௩)

நிற்குநான்மறைவாணர்வாழ்தொலைவில்லிமங்கலங்கண்டபின்
அற்கமொன்றுமறவுறாண்மலிந்தாள்கண்டீரிவளன்னைமீர்
கற்குங்கல்வியெல்லாங்கருங்கடல்வண்ணன்கண்ணபிரானென்றே
ஒற்கமொன்றுமிலளுகந்துகந்துண்மகிழ்ந்துகுழையுமே. (௪)

குழையும்வாண்முகத்தேழையைத்தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்
இழைகொள்சோதிச்செந்தாமரைக்கட்பிரானிருந்தமைகாட்டினீர் [கு
மழைபெய்தாலொக்குங்கண்ணநீரினொடன்றுதொட்டுமையாந்திவள்
நுழையுஞ்சிந்தையளன்னைமீர்தொழுமத்திசையுற்றுநோக்கியே. (௫)

நோக்கும்பக்கமெல்லாங்கரும்பொடுசெந்நெலோங்குசெந்தாமரை
வாய்க்குந்தண்பொருநல்வடகரைவண்டொலைவில்லிமங்கலம்
நோக்குமேலத்திசையல்லான்மறுநோக்கிலள்வைகனாடொறும்
வாய்க்கொள்வாசகமுமணிவண்ணனாமமேயிவளன்னைமீர். (௬)

அன்னைமீரணிமாமயிற்சிறுமானிவணம்மைக்கைவலிந்
தென்னவார்த்தையுங்கேட்குறாடொலைவில்லிமங்கலமென்றல்லால்
முன்னம்நோற்றவிதிகொலோமுகில்வண்ணன்மாயங்கொலோவவன்
சின்னமுந்திருநாமமுமிவள்வாயனகடிருந்தவே. (௭)

திருந்துவேதமும்வேள்வியுந்திருமாமகளிருந்தாம்மலிந்
திருந்துவாழ்பொருநல்வடகரைவண்டொலைவில்லிமங்கலங்
கருந்தடங்கண்ணிகைதொழுதவந்நாடொடங்கியிந்நாடொறும்
இருந்திருந்தரவிந்தலோசனவென்றென்றேநைந்திரங்குமே. (௮)

இரங்கிநாடொறும்வாய்வெரீஇயிவள்கண்ணநீர்களலமர
மரங்களுமிரங்கும்வகைமணிவண்ணவோவென்றுகூவுமால்
துரங்கம்வாய்பிளந்தானுறைதொலைவில்லிமங்கலமென்றுதன்
கரங்கள்கூப்பித்தொழுமவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே. (௯)

பின்னைகொனிலமாமகள்கொல்திருமகள்கொல்பிறந்திட்டாள்
என்னமாயங்கொலோவிவணெடுமாலென்றேநின்றுகூவுமால்
முன்னிவந்தவனின்றிருந்துறையுந்தொலைவில்லிமங்கலஞ்
சென்னியால்வணங்குமவ்வூர்த்திருநாமங்கேட்பதுசிந்தையே. (௰)

சிந்தையாலுஞ்சொல்லாலுஞ்செய்கையினாலுந்தேவபிரானையே
தந்தைதாயென்றடைந்தவண்குருகூரவர்சடகோபன்
முந்தையாயிரத்துளிவைதொலைவில்லிமங்கலத்தைச்சொன்ன
செந்தமிழ்பத்தும்வல்லாரடிமைசெய்வார்திருமாலுக்கே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௬-௫-பாசுரம்-௬௦௫.

௬ - வது. மாலுக்கு.

இவ்வண்ணம் வியாமோஹப்பட்டது ... தத்தியாதபடியாக
வர்த்தித்தியாகவும் கருணையாய் ...
ஆபரணங்களும் சாந்நித்யமுடனாக ...
தாய்சொல்லுஞ் சொல்லாக அருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-முதிர்ந்தகுறிஞ்சி-தாளம்-ஏழொத்து.

மாலுக்குவையமளந்தமணாளற்கு
நீலக்கருநிறமேகநியாயற்கு
கோலச்செந்தாமரைக்கண்ணற்கென்கொங்கலர்
ஏலக்குழலியிழந்ததுசங்கே. (௧)

சங்குவில்வாள்தண்டுசக்கரக்கையற்குச்
செங்கனிவாய்ச்செய்யதாமரைக்கண்ணற்குக்
கொங்கலர்தண்ணந்துழாய்முடியானுக்கென்
மங்கையிழந்ததுமாமைநிறமே. (௨)

நிறங்கரியானுக்குநீடுலகுண்ட
திறங்கிளர்வாய்ச்சிறுக்கள்வனவற்குக்
கறங்கியசக்கரக்கையவனுக்கென்
பிறங்கிருங்கூந்தலிழந்ததுபீடே. (௩)

பீடுடைநான்முகனைப்படைத்தானுக்கு
மாடுடைவையமளந்தமணாளற்கு
நாடுடைமன்னர்க்குத்தூதுசெல்நம்பிக்கென்
பாடுடையல்குலிழந்ததுபண்பே. (௪)

பண்புடைவேதம்பயந்தபரனுக்கு
மண்புரைவையமிடந்தவராகற்குத்
தெண்புனற்பள்ளியெந்தேவபிரானுக்கென்
கண்புனைகோதையிழந்ததுகற்பே. (௫)

கற்பகக்காவனநற்பலதோளற்குப்
பொற்சுடர்க்குன்றன்னபூந்தண்முடியற்கு
நற்பலதாமரைநாண்மலர்க்கையற்கென்
விற்புருவக்கொடிதோற்றதுமெய்யே. (௬)

மெய்யமர்பல்கலனன்கணிந்தானுக்குப்
பையரவின்னணைப்பள்ளியினானுக்குக்
கையொடுகால்செய்யகண்ணபிரானுக்கென்
தையலிழந்ததுதன்னுடைச்சாயே. (௭)

சாயக்குருந்தமொசித்ததமியற்கு
மாயச்சகடமுதைத்தமணாளற்குப்
பேயைப்பிணம்படப்பாலுண்பிரானுக்கென்
வாசக்குழலியிழந்ததுமாண்பே. (௮)

மாண்பமைகோலத்தெம்மாயக்குறளற்குச்
சேண்சுடர்க்குன்றன்னசெஞ்சுடர்மூர்த்திக்குக்
காண்பெருந்தோற்றத்தெங்காகுத்தநம்பிக்கென்
பூண்புனைமென்முலைதோற்றதுபொற்பே. (௯)

பொற்பமைநீள்முடிப்பூந்தண்டுழாயற்கு
மற்பொருதோளுடைமாயப்பிரானுக்கு

நிற்பனபல்லுருவாய்நிற்குமாயற்கென்
கற்புடையாட்டியிழந்ததுகட்டே. (௧௦)

கட்டெழிற்சோலைநல்வேங்கடவாணனைக்
கட்டெழிற்றென்குருகூர்ச்சடகோபன்சொல்
கட்டெழிலாயிரத்திப்பத்தும்வல்லவர்
கட்டெழில்வானவர்போகமுண்பாரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ_திருவாய்மொழி-(௬-௬)-பாசுரம்-௬௬.

௭-வது. உண்ணு.

அவ்வண்ணத்தொன்ன தாயர்கள் அவள் நேர்த்தித்திருக்கையாலே பெண்ணுடைய ன்மொழுக்கெழுத்த தெழுந் திருக்கோளூர்க்குத் தாகப்போகை போக்யமென்[illegible]னே யென்று திருக்கோளூர்க்கே போகையில் தாய்தெளிந் தெழுந்திருந் தன்பெண் திருக்கோளூர்க்குப்போனது நிச்சயமென்று தாய்சொல்லுஞ்சொல்லாக அருளிச்செய்கிறார்.

கலித்துறை - பண்பழந்தக்கம் - தாளம் - ஏழொத்து.

உண்ணுஞ்சோறுபருகுநீர்தின்னும்வெற்றிலையுமெல்லாம்
கண்ணனெம்பெருமானென்றென்றேகண்கணீர்மல்கி
மண்ணினுளவன்சீர்வளமிக்கவனூர்வினவித்
திண்ணமென்னிளமான்புகுமூர்திருக்கோளூரே. (௧)

ஊருநாடுமுலகமுந்தன்னைப்போலவனுடைய
பேருந்தார்களுமேபிதற்றக்கற்புவானிடறிச்
சேருநல்வளஞ்சேர்பழனத்திருக்கோளூர்க்கே
போருங்கொலுரையீர்கொடியேன்கொடிப்பூவைகளே. (௨)

பூவைபைங்கிளிகள்பந்துதூதைபூம்புட்டில்கள்
யாவையுந்திருமாற்றிருநாமங்களேகூவியெழுமென்
பாவைபோயினித்தண்பழனத்திருக்கோளூர்க்கே
கோவைவாய்துடிப்பமழைக்கண்ணொடென்செய்யுங்கொலோ. (௩)

கொல்லையென்பர்கொலோகுணமிக்கனளென்பர்கொலோ
சில்லைவாய்ப்பெண்களயற்சேரியுள்ளாருமெல்லே
செல்வம்மல்கியவன்கிடந்ததிருக்கோளூர்க்கே
மெல்லிடைநுடங்கவிளமான்செல்லமேவினளே. (௪)

மேவிநைந்துநைந்துவிளையாடலுறாளென்சிறுத்
தேவிபோயினித்தன்றிருமால்திருக்கோளூரிற்
பூவியல்பொழிலுந்தடமுமவன்கோயிலுங்கண்டு
ஆவியுள்குளிரவெங்ஙனேயுகக்குங்கொலின்றே. (௫)

இன்றெனக்குதவாதகன்றவிளமானினிப்போய்த்
தென்றிசைத்திலதமனையதிருக்கோளூர்க்கே
சென்றுதன்றிருமால்திருக்கண்ணுஞ்செவ்வாயுங்கண்டு
நின்றுநின்றுநையுநெடுங்கண்கள்பனிமல்கவே. (௬)

மல்குநீர்க்கண்ணொடுமையலுற்றமனத்தினளாய்
அல்லுநன்பகலுநெடுமாலென்றழைத்தினிப்போய்ச்
செல்வமல்கியவன்கிடந்ததிருக்கோளூர்க்கே
ஒல்கியொல்கிநடந்தெங்ஙனேபுகுங்கொலொசிந்தே. (௭)

ஒசிந்தநுண்ணிடைமேற்கையைவைத்துநொந்துநொந்து
கசிந்தநெஞ்சினளாய்க்கண்ணநீர்துளும்பச்செல்லுங்கொல்
ஒசிந்தவொண்மலராள்கொழுநன்றிருக்கோளூர்க்கே
கசிந்தநெஞ்சினளாயெம்மைநீத்தவெங்காரிகையே. (௮)

காரியம்நல்லனகளவைகாணிலென்கண்ணனுக்கென்
றீரியாயிருப்பாளிதெல்லாங்கிடக்கவினிப்போய்ச்
சேரிபல்பழிதூஉயிரைப்பத்திருக்கோளூர்க்கே
நேரிழைநடந்தாளெம்மையொன்றுநினைத்திலளே. (௯)

நினைக்கிலேன்றெய்வங்காள்நெடுங்கணிளமானினிப்போய்
அனைத்துலகுமுடையவரவிந்தலோசனனைத்
தினைத்தனையும்விடாளவன்சேர்திருக்கோளூர்க்கே
மனைக்குவான்பழியுநினையாள்செல்லவைத்தனளே. (௧௦)

வைத்தமாநிதியாம்மதுசூதனையேயலற்றிக்
கொத்தலர்பொழில்சூழ்குருகூர்ச்சடகோபன்சொன்ன
பத்துநூற்றுளிப்பத்தவன்சேர்திருக்கோளூர்க்கே
சித்தம்வைத்துரைப்பார்திகழ்பொன்னுலகாள்வாரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆகத்திருவாய்மொழி-௫௰௭-பாசுரம்-௬௨௭.

---

௬ - ௮து. பொன்.

திருக்கோளூருக்குப் போகிறேமென்று பலஹானியாலே போகமாட்டாமல் இங்கேயிருந்தே பக்ஷிகளைக்குறித்து உங்களுக்கு உபயவிபூதியுந் தருகிறேம் என்னவஸ்தையைப் பரமபதநாதனுக்குச் சொல்லுங்களென்று அருளிச்செய்கிறார்.

கலித்துறைவிருத்தம் - பண் - குறிஞ்சி - தாளம் - ஏழொத்து.

பொன்னுலகாளீரோபுவனமுழுதாளீரோ
நன்னலப்புள்ளினங்காள்வினையாட்டியேன்நானிரந்தேன்
முன்னுலகங்களெல்லாம்படைத்தமுகில்வண்ணன்கண்ணன்
என்னலங்கொண்டபிரான்றனக்கென்னிலைமையுரைத்தே. (௧)

மையமர்வாணெடுங்கண்மங்கைமார்முன்பென்
கையிருந்துநெய்யமரின்னடிசில்நிச்சல்பாலொடுமேவீரோ
கையமர்சக்கரத்தென்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
மெய்யமர்காதல்சொல்லிக்கிளிகாள்விரைந்தோடிவந்தே. (௨)

ஓடிவந்தென்குழல்மேலொளிமாமலரூதீரோ
கூடியவண்டினங்காள்குருநாடுடையைவர்கட்காய்
ஆடியமாநெடுந்தேர்ப்படைநீறெழச்செற்றபிரான்
சூடியதண்டுளபமுண்டதூமதுவாய்கள்கொண்டே. (௩)

தூமதுவாய்கள்கொண்டுவந்தென்முல்லைகள்மேற்றும்பிகாள்
பூமதுவுண்ணச்செல்லில்வினையேனைப்பொய்செய்தகன்ற
மாமதுவார்தண்டுழாய்முடிவானவர்கோனைக்கண்டு
யாமிதுவோதக்கவாறென்னவேண்டுங்கண்டீர்நுங்கட்கே. (௪)

நுங்கட்குயானுரைக்கேன்வம்மின்யான்வளர்த்தகிளிகாள்
வெங்கட்புள்ளூர்ந்துவந்துவினையேனைநெஞ்சங்கவர்ந்த
செங்கட்கருமுகிலைச்செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை
எங்குச்சென்றாகிலுங்கண்டிதுவோதக்கவாறென்மினே. (௫)

என்மின்னுநூல்மார்பனென்கரும்பெருமானென்கண்ணன்றன்
மன்னுநீள்கழல்மேற்றண்டுழாய்நமக்கன்றிநல்கான்
கன்மின்களென்றும்மையான்கற்பியாவைத்தமாற்றஞ்சொல்லிச்
சென்மின்கள்தீவினையேன்வளர்த்தசிறுபூவைகளே. (௬)

பூவைகள்போல்நிறத்தன்புண்டரீகங்கள்போலுங்கண்ணன்
யாவையும்யாவருமாய்நின்றமாயனென்னாழிப்பிரான்

நாவைவல்வாய்ப்பிள்ளைகாள்குருகுக்கென்மாற்றஞ்சொல்லிப்
பாவைகாள்தீர்க்கிற்றிரேல்வினையாட்டியேன்பாசறவே. (௭)

பாசறவெய்தியின்னேவினையேனெனையூழிநைவேன்
ஆசறுதூவிவெள்ளைக்குருகேயருள்செய்தொருநாள்
மாசறுநீலச்சுடர்முடிவானவர்கோனைக்கண்டு
ஏசறுநும்மையல்லால்மறுநோக்கிலன்பேர்த்துமற்றே. (௮)

பேர்த்துமற்றோர்களைகண்வினையாட்டியேனானொன்றிலேன்
நீர்த்திரைமேலுலவியிரைதேரும்புதாவினங்காள்
கார்த்திரள்மாமுகில்போற்கண்ணன்விண்ணவர்கோனைக்கண்டு
வார்த்தைகள்கொண்டருளியுரையீர்வைகல்வந்திருந்தே. (௯)

வந்திருந்தும்முடையமணிச்சேவலும்நீருமெல்லாம்
அந்தரமொன்றுமின்றியலர்மேலசையுமன்னங்காள்
என்திருமார்பற்கென்னையின்னவாறிவள்காண்மினென்று
மந்திரத்தொன்றுணர்த்தியுரையீர்மறுமாற்றங்களே. (௰)

மாற்றங்களாய்ந்துகொண்டுமதுசூதப்பிரானடிமேல்
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ்குருகூர்ச்சடகோபன்சொன்ன
தோற்றங்களாயிரத்துளிவையுமோர்பத்தும்வல்லார்
ஊற்றின்கண்ணுண்மணல்போலுருகாநிற்பர்நீராயே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ திருவாய்மொழி-௬-௮-பாசுரம்-௮0.

௯ - வது. த்ரிப.

ஆழ்வீட்டில் வாராதபடி தன்னையழைத்தல் கேட்குமளவாம்
திருக்குருகூர்படி ஸர்வேச்வரனும் பரமபதத்திலிருக்கவு
மசக்யமாம்படி யாழ்வாரழைத்தமை
யருளிச் செய்கிறார்.

கலித்துறை-பண்-காந்தாரம்-தாளம்-ஏழொத்து.

நீராய்நிலனாய்த்தீயாய்க்காலாய்நெடுவானாய்ச்
சீரார்சுடர்களிரண்டாய்ச்சிவனாயயனானாய்க்
கூராராழிவெண்சங்கேந்திக்கொடியேன்பால்
வாராயொருநாள்மண்ணும்விண்ணும்மகிழவே. (௧)

மண்ணும்விண்ணும்மகிழக்குறளாய்வலங்காட்டி
மண்ணும்விண்ணுங்கொண்டமாயவம்மானே
நண்ணியுனைநான்கண்டுகந்துகூத்தாட
நண்ணியொருநாள்ஞாலத்தூடேநடவாயே. (௨)

ஞாலத்தூடேநடந்துநின்றுங்கிடந்திருந்தும்
சாலப்பலநாளுகந்தோறுயிர்கள்காப்பானே
கோலத்திருமாமகளோடுன்னைக்கூடாதே
சாலப்பலநாளடியேனின்னந்தளர்வேனோ. (௩)

தளர்ந்தும்முறிந்துஞ்சகடவசுரருடல்வேறாப்
பிளந்துவீயத்திருக்காலாண்டபெருமானே
கிளர்ந்துபிரமன்சிவனிந்திரன்விண்ணவர்சூழ
விளங்கவொருநாள்காணவாராய்விண்மீதே. (௪)

விண்மீதிருப்பாய்மலைமேல்நிற்பாய்கடல்சேர்ப்பாய்
மண்மீதுழல்வாயிவற்றுளெங்குமறைந்துறைவாய்
எண்மீதியன்றபுறவண்டத்தாயெனதாவி
உண்மீதாடியுருக்காட்டாதேயொளிப்பாயோ. (௫)

பாயோரடிவைத்ததன்கீழ்ப்பரவைநிலமெல்லாந்
தாயோனடியாலெல்லாவுலகுந்தடவந்த
மாயோனுன்னைக்காண்பான்வருந்தியெனைநாளுந்
தீயோடுடன்சேர்மெழுகாயுலகிற்றிரிவேனோ. (௬)

உலகிற்றிரியுங்கருமக்கதியாயுலகமாய்
உலகுக்கேயோருயிருமானாய்புறவண்டத்
தலகிற்பொலிந்ததிசைபத்தாயவருவேயோ
அலகிற்பொலிந்தவறிவிலேனுக்கருளாயே. (௭)

அறிவிலேனுக்கருளாயறிவாருயிரானாய்
வெறிகொள்சோதிமூர்த்தியடியேன்நெடுமாலே
கிறிசெய்தென்னைப்புறத்திட்டின்னங்கெடுப்பாயோ
பிறிதொன்றறியாவடியேனாவிதிகைக்கவே. (௮)

ஆவிதிகைக்கவைவர்குமைக்குஞ்சிற்றின்பம்
பாவியேனைப்பலநீகாட்டிப்படுப்பாயோ
தாவிவையங்கொண்டதடந்தாமரைகட்கே
கூவிக்கொள்ளுங்காலமின்னங்குறுகாதோ. (௯)

குறுகாநீளாவிறுதிகூடாவெனையூழி
சிறுகாபெருகாவளவிலின்பஞ்சேர்ந்தாலும்

மறுகாலின்றிமாயோனுக்கேயாளாகுஞ்
சிறுகாலத்தையுறுமோவந்தோதெரியிலே, (௧0)

தெரிதல்நினைதலெண்ணலாகாத்திருமாலுக்கு
உரியதொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன்
தெரியச்சொன்னவோராயிரத்துளிப்பத்தும்
உரியதொண்டராக்குமுலகமுண்டாற்கே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௫௯ = இ - பாசுரம்-௬௫௧.

---

௧0 - வது. உலகம்.

ஆழ்வார்க்குத்தனம்பனை நம்முடையபொருட்டே பரமபதத்தைவிட்டு இங்கே பரமபதமாக்கிக்கொண்டு திருமலையிலே நிற்குமென்ன அலர்மேல்மங்கைநாச்சியாரை புருஷகாரமாக்கிக்கொண்டு திருவேங்கடமுடையானை ப்ரபத்திசெய்தருளை யருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண்-பழம்பஞ்சரம்-தாளம்-ஏழொத்து.

உலகமுண்டபெருவாயாவுலப்பில்கீர்த்தியம்மானே
நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்திநெடியாயடியேனாருயிரே
திலதமுலகுக்காய்நின்றதிருவேங்கடத்தெம்பெருமானே
குலதொல்லடியேனுனபாதங்கூடுமாறுகூறாயே. (௧)

கூறாய்நீறாய்நிலனாகிக்கொடுவல்லசுரர்குலமெல்லாஞ்
சீறாவெரியுந்திருநேமிவலவாதெய்வக்கோமானே
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலருந்திருவேங்கடத்தானே
ஆறாவன்பிலடியேனுன்னடிசேர்வண்ணமருளாயே, (௨)

வண்ணமருள்கொளணிமேகவண்ணாமாயவம்மானே
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதேயிமையோரதிபதியே
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்குந்திருவேங்கடத்தானே
அண்ணலேயுன்னடிசேரவடியேற்காவாவென்னாயே. (௩)

ஆவாவென்னாதுலகத்தையலைக்குமசுரர்வாணாள்மேல்
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையாதிருமாமகள்கேள்வா
தேவாசுரர்கண்முனிக்கணங்கள்விரும்புந்திருவேங்கடத்தானே
பூவார்கழல்களருவினையேன்பொருந்துமாறுபுணராயே. (௪)

புணராநின்றமரமேழன்றெய்தவொருவில்வலவாவோ
புணரேய்நின்றமரமிரண்டினடுவேபோனமுதல்வாவோ
திணரார்மேகமெனக்களிறுசேருந்திருவேங்கடத்தானே
திணரார்சார்ங்கத்துனபாதஞ்சேர்வதடியேனெந்நாளே. (௫)

எந்நாளேநாம்மண்ணளந்தவிணைத்தாமரைகள்காண்பதற்கென்று
எந்நாளுநின்றிமையோர்களேத்தியிறைஞ்சியினமினமாய்
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யுந்திருவேங்கடத்தானே
மெய்ந்நானெய்தியெந்நாளுனடிக்கணடியேன்மேவுவதே. (௬)

அடியேன்மேவியமர்கின்றவமுதேயிமையோரதிபதியே
கொடியாவடுபுள்ளுடையானேகோலக்கனிவாய்ப்பெருமானே
செடியார்வினைகடீர்மருந்தேதிருவேங்கடத்தெம்பெருமானே
நொடியார்பொழுதுமுனபாதங்காணநோலாதாற்றேனே. (௭)

நோலாதாற்றேனுனபாதங்காணவென்றுநுண்ணுணர்வில்
நீலார்கண்டத்தம்மானுநிறைநான்முகனுமிந்திரனுஞ்
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்புந்திருவேங்கடத்தானே.
மாலாய்மயக்கியடியேன்பால்வந்தாய்போலேவாராயே. (௮)

வந்தாய்போலேவாராதாய்வாராதாய்போல்வருவானே
செந்தாமரைக்கட்செங்கனிவாய்நாற்றோளமுதேயெனதுயிரே
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய்திருவேங்கடத்தானே
அந்தோவடியேனுனபாதமகலகில்லேனிறையுமே. (௯)

அகலகில்லேனிறையுமென்றலர்மேல்மங்கையுறைமார்பா
நிகரில்புகழாயுலகமூன்றுடையாயென்னையாள்வானே
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்புந்திருவேங்கடத்தானே
புகலொன்றில்லாவடியேனுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே, (௧0)

அடிக்கீழமர்ந்துபுகுந்தடியீர்வாழ்மினென்றென்றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப்பழனக்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்னவாயிரத்துத்திருவேங்கடத்துக்கிவைபத்தும்
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்துபெரியவானுணிலாவுவரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆறும்பத்து முற்றிற்று.

ஆ. திருவாய்மொழி-௬0-இ-பாசுரம்-௬௬௨.

ஏழாம்பத்து.

க - வது. உண்ணி.

ப்ரபத்தி பண்ணினாலும் ப்ராரப்தபரிஸமாப்தி நிமித்தமாக ஈச்வரன் பலத்தைக்கொடாமல் விளம்பிக்க மிகவுமார்த்தராய் தன் திருவடிகள் சேராதபடிக்கு இன்னுமிந்த்ரியங்களாலே எத்தனைநாள் பாதிப்பிப்பதென்று ஆக்ருந்தனம்பண்ணினதை யருளிச்செய்கிறார்.

ஆசிரியத்துறைவிருத்தம்-பண்-பழம்பஞ்சுரம்-தாளம்-ஏழொத்து.

உண்ணிலாவியவைவராற்குமைதீற்றியென்னையுன்பாதபங்கயம்
நண்ணிலாவகையேநலிவானின்னமெண்ணுகின்றாய்
எண்ணிலாப்பெருமாயனேயிமையோர்களேத்துமுலகம்மூன்றுடை
அண்ணலேயமுதேயப்பனேயென்னையாள்வானே. (௧)

என்னையாளும்வன்கோவோரைந்திவைபெய்திராப்பகல்மோதுவித்திட்டு
உன்னைநானணுகாவகைசெய்துபோதிகண்டாய்
கன்னலேயமுதேகார்முகில்வண்ணனேகடல்ஞாலங்காக்கின்ற
மின்னுநேமியினாய்வினையேனுடைவேதியனே. (௨)

வேதியாநிற்குமைவரால்வினையேனைமோதுவித்துன்திருவடிச்
சாதியாவகைநீதடுத்தென்பெறுதியந்தோ
ஆதியாகியகலிடம்படைத்துண்டுமிழ்ந்துகடந்திடந்திட்ட
சோதிநீண்முடியாய்தொண்டனேன்மதுசூதனனே. (௩)

சூதனாயியாவதைசுழற்றியோரைவரைக்காட்டியுன்னடிப்
போதுநானணுகாவகைசெய்துபோதிகண்டாய்
யாதும்யாவருமின்றிநின்னகம்பாலொடுக்கியோராலினீளிலை
மீதுசேர்குழவிவினையேன்வினைதீர்மருந்தே. (௪)

தீர்மருந்தின்றியைந்துநோயடுஞ்செக்கிலிட்டுத்திரிக்குமைவரை
நேர்மருங்குடைத்தாயடைத்துநெகிழ்ப்பானொக்கின்றாய்
யார்மருந்தினியாகுவாரடலாழியேந்தியசுரர்வன்குலம்
வேர்மருங்கறுத்தாய்விண்ணுளார்பெருமானேயோ. (௫)

விண்ணுளார்பெருமாற்கடிமைசெய்வாரையுஞ்செறுமைம்புலனிவை
மண்ணுளென்னைப்பெற்றாலென்செய்யாமற்றுநீயும்விட்டால்

பண்ணுளாய்க்கவிதன்னுளாய்ப்பத்தியினுள்ளாய்பரமீசனேவந்தென்
கண்ணுளாய்நெஞ்சுளாய்சொல்லுளாயொன்றுசொல்லாயே. (௬)

ஒன்றுசொல்லியொருத்தனிற்கிலாதவோரைவர்வன்கையரை
என்றுயான்வெல்கிற்பனுன்றிருவருளில்லையேல்
அன்றுதேவரசுரர்வாங்கவலைகடலரவமளாவியோர்
குன்றம்வைத்தவெந்தாய்கொடியேன்பருகின்னமுதே. (௭)

இன்னமுதெனத்தோன்றியோரைவர்யாவரையும்மயக்கநீவைத்த
முன்னமாயமெல்லாமுழுவேரரிந்தென்னையுன்
சின்னமுந்திருநாமமுஞ்சிந்தித்தேத்திக்கைதொழவேயருளெனக்கு
என்னம்மாவென்கண்ணாவிமையோர்தங்குலமுதலே. (௮)

குலமுதலடுந்தீவினைக்கொடுவன்குழியினில்வீழ்க்குமைவரை
வலமுதல்கெடுக்கும்வரமேதந்தருள்கண்டாய்
நிலமுதலினியெவ்வுலகுக்குநிற்பனசெல்வனவெனப்பொருள்
பலமுதல்படைத்தாயென்கண்ணாவென்பரஞ்சுடரே. (௯)

என்பரஞ்சுடரேயென்றுன்னையலற்றியுன்னிணைத்தாமரைகட்
கன்புருகிநிற்குமதுநிற்கச்சுமடுதந்தாய்
வன்பரங்களெடுத்திவையைவர்திசைதிசைவலித்தெற்றுகின்றனர்
முன்பரவைகடைந்தமுதங்கொண்டமூர்த்தியோ. (௧௦)

கொண்டமூர்த்தியோர்மூவராய்க்குணம்பலபடைத்தளித்துக்கெடுக்கும்
அப்புண்டரீகக்கொப்பூழ்ப்புனற்பள்ளியப்பனுக்கேதொண்டர்
தொண்டர்தொண்டன்சடகோபன்சொல்லாயிரத்துளிப்பத்துங்
கண்டுபாடவல்லார்வினைபோங்கங்குலும்பகலே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி-சுக-இ-பாசுரம்-சுஎஉ.

உ - வது. கங்குலும்.

இவ்வண்ணமழிந்த ஆழ்வார் மோஹித்திருக்க திருத்தாயார் பெரியபெருமாளைக் குறித்து இந்நாயகியிவ்வண்ணமாக ஏதலைக்கஸ்தித்திருக்கிறீரென்று கேட்டதாக வருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம் - பண் - தக்கராகம் - தாளம் - ஒன்பதொத்து.

கங்குலும்பகலுங்கண்டுயிலறியாள்கண்ணநீர்கைகளாலிறைக்கும்
சங்குசக்கரங்களென்றுகைகூப்புந்தாமரைக்கண்ணென்றேதளரும்

எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டென்னுமிருநிலங்கைதுழாவிருக்குஞ்
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாயிவள்திறத்தென்செய்கின்றாயே. (௧)

என்செய்கின்றாயென்றாமரைக்கண்ணாவென்னுங்கண்ணீர்மல்க
விருக்கும், என்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாயென்னும்வெவ்வுயி
ர்த்துயிர்த்துருகும், முன்செய்தவினையேமுகப்படாயென்னும் முகில்
வண்ணாதகுவதோவென்னும், முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தா
யென்கொலோமுடிகின்றதிவட்கே. (௨)

வட்கிலளிறையும்மணிவண்ணாவென்னும்வானமேநோக்கு மையை
யாக்கும், உட்குடையசுரருயிரெல்லாமுண்டவொருவனேயென்னுமு
ள்ளுருகும், கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய்காகுத்தாகண்ணனேயெ
ன்னும், திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாயிவள்திறத்தென்செய்திட்
டாயே. (௩)

இட்டகாலிட்டகையளாயிருக்குமெழுந்துலாய்மயங்குங்கைகூப்பும்
கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்குங்கடல்வண்ணாகடியைகாணென்னும்
வட்டவாய்நேமிவலங்கையாவென்னும் வந்திடாயென்றென்றேமயங்கு
சிட்டனேசெழுநீர்த்திருவரங்கத்தாயிவள்திறத்தென்சிந்தித்தாயே. (௪)

சிந்திக்குந்திசைக்குந்தேறுங்கைகூப்புந்திருவரங்கத்துள்ளாயென்னும்
வந்திக்குமாங்கேமழைக்கண்ணீர்மல்கவந்திடாயென்றென்றேமயங்கும்
அந்திப்போதவுணனுடலிடந்தானேயலைகடல்கடைந்தவாரமுதே
சந்தித்துன்சரணஞ்சார்வதேவலித்ததையலைமையல்செய்தானே. (௫)

மையல்செய்தென்னைமனங்கவர்ந்தானேயென்னும்மாமாயனே
யென்னுஞ், செய்யவாய்மணியேயென்னுந்தண்புனல்சூழ்திருவரங்கத்
துள்ளாயென்னும், வெய்யவாள்தண்டுசங்குசக்கரம்வில்லேந்தும்விண்
ணோர்முதலென்னும், பைகொள்பாம்பணையாயிவள்திறத்தருளாய்பா
வியேன்செயற்பாலதுவே. (௬)

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்பற்றிலார்பற்றநின்றானே,
காலசக்கரத்தாய்கடலிடங்கொண்டகடல்வண்ணாகண்ணனேயென்னும்,
சேல்கொள்தண்புனல்சூழ்திருவரங்கத்தாயென்னுமென்தீர்த்தனேயெ
ன்னுங், கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்குமென்னுடைக்கோமள
க்கொழுந்தே. (௭)

கொழுந்துவானவர்கட்கென்னுங்குன்றேந்திக்கோநிரைகாத்தவ
னென்னும், அழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்கு மஞ்சனவண்ண

னேயென்னும், எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்குமெங்ஙனே
நோக்குகேனென்னுஞ், செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாயென்
செய்கேனென்றிருமகட்கே. (௮)

என்திருமகள்சேர்மார்பனேயென்னுமென்னுடையாவியேயென்னும்
நின்திருவெயிற்றாலிடந்துநீகொண்டநிலமகள்கேள்வனேயென்னும்
அன்றுருவேழுந்தழுவிநீகொண்டவாய்மகளன்பனேயென்னுந்தே
தென்திருவரங்கங்கோயில்கொண்டானே தெளிகிலேன்முடிவிவள்தனக்கே (௯)

முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னுமூவுலகாளியேயென்னு
ங், கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னும்நான்முகக்கடவுளேயெ
ன்னும், வடிவுடைவானோர்தலைவனேயென்னும்வண்திருவரங்கனேயெ
ன்னும், அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள்முகில்வண்ண
னடியே. (௰)

முகில்வண்ணனடியையடைந்தருள்சூடியுய்ந்தவன்மொய்புனற்பொ
ருநல், துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன்வண் பொழில்சூழ்வண்குருகூ
ர்ச்சடகோபன், முகில்வண்ணனடிமேற்சொன்னசொல்மாலையாயிரத்
திப்பத்தும்வல்லார், முகில்வண்ணவானத்திமையவர்சூழவிருப்பர்பே
ரின்பவெள்ளத்தே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

௭ திருவாய்மொழி-௬௨-இ-பாசுரம்-௬௮௪.

௩ - வது. வெள்ளை.

தாய்ப்ரஸங்கவசாத்பண்ணின நம்பெருமாள் கீர்த்தனத்தாலாழ்வார்
மோஹத்தைவிட்டு இட்டவிருக்கிற திருப்பேரையில்
இருப்பதிக்குப்போவேனென்று உத்யோகிக்குமளவில் தாய்தவிர்க்க
விரத்தாலும் போவேனென்றுசொன்னதை அருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண்-கட்டபாடை-தாளம்-ஏழொத்து.

வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித்தாமரைக்கண்ணனென்னெ
ஞ்சினூடே, புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீரென்சொல்லிச்சொல்
லுகேனன்னைமீர்காள், வெள்ளச்சுகமவன்வீற்றிருந்தவேதவொலியும்
விழாவொலியும், பிள்ளைக்குழாவிளையாட்டொலியுமறாத்திருப்பேரெயி
ற்சேர்வன்நானே. (௧)

நாணக்கருங்குழற்றோழிமீர்காளன்னையர் காளயற்சேரியீர்காள், நானித்தனிநெஞ்சங்காக்கமாட்டேனென்வச மன்றிதிராப்பகற்போய்த், தேன்மொய்த்தபூம்பொழிற்றண்பணைசூழ்தென்றிருப்பேரெயில்வீ ற்றிருந்த, வானப்பிரான்மணிவண்ணன்கண்ணன்செங்கனிவாயின்றிற த்ததுவே. (௨)

செங்கனிவாயின்றிறத்ததாயுஞ்செஞ்சுடர்நீண்முடித்தாழ்ந்ததாயுஞ் சங்கொடுசக்கரங்கண்டுகந்துந்தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்துந் திங்களுநாளும்விழாவறாததென்றிருப்பேரெயில்வீற்றிருந்த நங்கள்பிரானுக்கென்னெஞ்சந்தோழிநாணுநிறையுமிழந்ததுவே. (௩)

இழந்தவெம்மாமைத்திறத்துப்போனவென்னெஞ்சினாருமங்கே யொழிந்தாருழந்தினியாரைக் கொண்டென்னுசாகோ வோதக்கடலொலி போலெங்கும், எழுந்தநல்வேதத்தொலிநின்றோங்குதென்றிருப்பேரெ யில்வீற்றிருந்த, முழங்குசங்கக்கையன்மாயத்தாழ்ந்தே னன்னையர்கா ளென்னையென்முனிந்தே. (௪)

முனிந்துசகடமுதைத்துமாயப்பேய்முலையுண்டுமருதிடைபோய், கனிந்தவிளவுக்குக்கன்றெறிந்தகண்ணபிரானுக்கென்பெண்மைதோற் றேன், முனிந்தினியென்செய்திரன்னைமீர்காண்முன்னியவன்வந்துவீற் றிருந்த, கனிந்தபொழிற்றிருப்பேரெயிற்கேகாலம்பெறவென்னைக்காட் டுமினே. (௫)

காலம்பெறவென்னைக்காட்டுமின்கள்காதல்கடலின்மிகப்பெரிதா ல், நீலமுகில்வண்ணத்தெம்பெருமானிற்குமுன்னே வந்தென்கைக்கு மெய்தான், ஞாலத்தவன்வந்துவீற்றிருந்தநான்மறையாளரும்வேள்வி யோவா, கோலச்செந்நெல்கள்கவரிவீசுங்கூடுபுனற்றிருப் பேரெயிற்கே

பேரெயில்சூழ்கடற்றென்னிலங்கைசெற்றபிரான்வந்து வீற்றிரு ந்த, பேரெயிற்கேபுக்கென்னெஞ்சநாடிப்பேர்த்துவரவெங்குங்காண மாட்டேன். ஆரையினிங்குடைத்தோழியென்னெஞ்சங்கூவவல்லா ருமில்லை, ஆரையினிக்கொண்டென்சாதிக்கின்றதென்னெஞ்சங்கண்ட துவேகண்டேனே. (௭)

கண்டதுவேகொண்டெல்லாருங்கூடிக்கார்க்கடல்வண்ணனோடெ ன்றிறத்து, கொண்டலர்தூற்றிற்றதுமுதலாக்கொண்டவென்காதலுரை க்கிற்றோழி, மண்டிணிஞாலமுமேழ்கடலும்நீள்விசும்புங்கழியப்பெரி தால், தெண்டிரைசூழ்ந்தவன்வீற்றிருந்ததென்றிருப் பேரெயிற்சேர்வ ன்சென்றே. (௮)

சேர்வன்சென்றென்னுடைத்தோழிமீர்காளன்னையர்கா ளென்னை த்தேற்றவேண்டா, நீர்களுரைக்கின்றதென்னிதற்கென்னெஞ்சுநிறை வுமெனக்கிங்கில்லை, கார்வண்ணன்கார்க்கடல்ஞாலமுண்டகண்ணபிரா ன்வந்துவீற்றிருந்த, ஏர்வளவொண்கழனிப்பழனத்தென்றிருப்பேரெ யில்மாநகரே. (௯)

நகருநாடும்பிறவுந்தேர்வேன்நானெனக்கில்லையென்றோழிமீர்காள்
சிகரமணிநெடுமாடநீடுதென்றிருப்பேரெயில்வீற்றிருந்த
மகரநெடுங்குழைக்காதன்மாயநூற்றுவரையன்றுமங்கநூற்ற (னே.
நிகரின்முகில்வண்ணனேமியானென்னெஞ்சங் கவர்ந்தெனையூழியா
ஊழிதோறூழியுருவும்பேருஞ்செய்கையுமே றவன்வையங்காக்கும்
ஆழிநீர்வண்ணனையச்சுதனையணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன
சேழிலந்தாதியோராயிரத்துளிவை திருப்பேரெயில்மேயபத்தும்
ஆழியங்கையனையேத்தவல்லாரவரடிமைத்திறத்தாழியாரே, (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ_ திருவாய்மொழி-௬௰௩-பாசுரம்-௬௯௩

---

௪ - வது. ஆழியெழ.

விச்லேஷதசையிலிருக்க ஈச்வரன்றன் அவதாரவிஜயங்க ளெல்லாவற்றையுங் காட்டத்தரித்தவையெல்லாம் அநுஸந்தித்ததை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-காந்தாரம்-தாளம்-ஏழொத்து.

ஆழியெழச்சங்கும்வில்லுமெழத்திசை
வாழியெழத்தண்டும்வாளுமெழவண்டம்
மோழையெழமுடிபாதமெழவப்பன்
ஊழியெழவுலகங்கொண்டவாறே.

ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலியர
வூறுசுலாய்மலைதேய்க்குமொலிகடல்
மாறுசுழன்றழைக்கின்றவொலியப்பன்
சாறுபடவமுதங்கொண்டநான்றே. (௨)

நான்றிலவேழ்மண்ணுந்தானத்தவேபின்னும்
நான்றிலவேழ்மலைதானத்தவேபின்னும்
நான்றிலவேழ்கடல்தானத்தவேயப்பன்
ஊன்றியிடந்தெயிற்றிற்கொண்டநாளே. (௩)

நாளுமெழநிலநீருமெழவிண்ணுங்
கோளுமெழவெரிகாலுமெழமலை
தாளுமெழச்சுடர்தானுமெழவப்பன்
ஊழியெழவுலகமுண்டவூணே. (௪)

ஊணுடைமல்லர்ததர்ந்தவொலிமன்னர்
ஆணுடைச்சேனைநடுங்குமொலிவிண்ணுள்
ஏணுடைத்தேவர்வெளிப்பட்டவொலியப்பன்
காணுடைப்பாரதங்கையறைபோழ்தே. (௫)

போழ்துமெலிந்தபுன்செக்கரில்வான்றிசை
சூழுமெழுந்துதிரப்புனலாமலை
கீழ்துபிளந்தசிங்கமொத்ததாலப்பன்
ஆழ்துயர்செய்தசுரரைக்கொல்லுமாறே. (௬)

மாறுநிரைத்திரைக்குஞ்சரங்களின
நூறுபிணமலைபோல்புரளக்கடல்
ஆறுமடுத்துதிரப்புனலாவப்பன்
நீறுபடவிலங்கைசெற்றநேரே. (௭)

நேர்சரிந்தான்கொடிக்கோழிகொண்டான்பின்னும்
நேர்சரிந்தானெரியுமனலோன்பின்னும்
நேர்சரிந்தான்முக்கண்மூர்த்திகண்டீரப்பன்
நேர்சரிவாணன்றிண்டோள்கொண்டவன்றே. (௮)

அன்றுமண்ணீரெரிகால்விண்மலைமுதல்
அன்றுசுடரிரண்டுபிறவும்பின்னும்
அன்றுமழையுயிர்தேவுமற்றுமப்பன்
அன்றுமுதலுலகஞ்செய்ததுமே. (௯)

மேய்நிரைகீழ்புகமாபுரளச்சுனை
வாய்நிறைநீர்பிளிறிச்சொரியவின
ஆநிரைபாடியங்கேயொடுங்கவப்பன்
தீமழைகாத்துக்குன்றமெடுத்தானே. (௧0)

குன்றமெடுத்தபிரானடியாரொடும்
ஒன்றிநின்றசடகோபனுரைசெயல்
நன்றிபுனைந்தவோராயிரத்துள்ளிவை
வென்றிதரும்பத்தும்மேவிக்கற்பார்க்கே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௬௪-இ-பாசுரம்-எ0௬.

---

௫ - வது கற்பார்.

விஜயோபாதானங்களுக்கு மூலமான ராமகிருஷ்ணாத் யவதாரங்களைவிட்டு
சேதநரிதரதேவதைகளை யாச்ரயித்துக் கெட்டுப்போகிறார்களென்று
ஆச்சரியப்பட்டுத் தாம் பகவத்குணாநுபவத்தால்
ப்ரீதரானதை யருளிச்செய்கிறார்.

கலித்துறை - பண்-நட்டராகம்-தாளம்-ஏகதாளம்.

கற்பாரிராமபிரானையல்லால்மற்றுங்கற்பரோ
புற்பாமுதலாப்புல்லெறும்பாதியொன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழுஞ்சராசரமுற்றவும்
நற்பாலுக்குய்த்தனன்நான்முகனார்பெற்றநாட்டுளே. (௧)

நாட்டிற்பிறந்தவர்நாரணற்காளன்றியாவரோ
நாட்டிற்பிறந்துபடாதனபட்டுமனிசர்க்காய்
நாட்டைநலியுமரக்கரைநாடித்தடிந்திட்டு
நாட்டையளித்துய்யச்செய்துநடந்தமைகேட்டுமே. (௨)

கேட்பார்கள்கேசவன்கீர்த்தியல்லால்மற்றுங்கேட்பரோ
கேட்பார்செவிசுடுகீழ்மைவசவுகளேவையுஞ்
சேட்பாற்பழம்பகைவன்சிசுபாலன்றிருவடி
தாட்பாலடைந்ததன்மையறிவாரையறிந்துமே. (௩)

தன்மையறிபவர்தாமவற்காளன்றியாவரோ
பன்மைப்படர்பொருளாதுமில்பாழ்நெடுங்காலத்து
நன்மைப்புனற்பண்ணிநான்முகனைப்பண்ணிதன்னுள்ளே
தொன்மைமயக்கியதோற்றியசூழல்களைச்சிந்தித்தே. (௪)

சூழல்கள்சிந்திக்கின்மாயன்கழலன்றிச்சூழ்வரோ
ஆழப்பெரும்புனல்தன்னுளழுந்தியஞாலத்தைத்
தாழப்படாமல்தன்பாலொருகோட்டிடைத்தான்கொண்ட
கேழற்றிருவுருவாயிற்றுக்கேட்டுமுணர்ந்துமே. (௫)

கேட்டுமுணர்ந்தவர்கேசவற்காளன்றியாவரோ
வாட்டமிலாவண்கைமாவலிவாதிக்கவாதிப்புண்டு
ஈட்டங்கொள்தேவர்கள்சென்றிரந்தார்க்கிடர்நீக்கிய
கோட்டங்கைவாமனனாய்ச்செய்தகூத்துகள்கண்டுமே. (௬)

கண்டுதெளிந்துங்கற்றார்கண்ணற்காளன்றியாவரோ
வண்டுண்மலர்த்தொங்கல்மார்க்கண்டேயனுக்குவாழுநாள்

இண்டைச்சடைமுடியீசனுடன்கொண்டுசாச்செல்லக்
கொண்டங்குத்தன்னொடுங்கொண்டுடன்சென்றவுணர்ந்துமே. (௭)

செல்லவுணர்ந்தவர்செல்வன்றன்சீரன்றிக்கற்பரோ
எல்லையிலாதபெருந்தவத்தாற்பலசெய்மிறை
அல்லலமரரைச்செய்யுமிரணியனாகத்தை
மல்லலரியுருவாய்ச்செய்தமாயமறிந்துமே. (௮)

மாயமறிபவர்மாயவற்காளன்றியாவரோ
தாயஞ்செறுமொருநூற்றுவர்மங்கவோரைவர்க்காய்த்
தேசமறியவோர்சாரதியாய்ச்சென்றுசேனையை
நாசஞ்செய்திட்டுநடந்தநல்வார்த்தையறிந்துமே. (௯)

வார்த்தையறிபவர்மாயவற்காளன்றியாவரோ
போர்த்தபிறப்பொடுநோயொடுமூப்பொடிறப்பிவை
பேர்த்துப்பெருந்துன்பம்வேரறநீக்கித்தன்றாளின்கீழ்ச்
சேர்த்தவன்செய்யுஞ்சேமத்தையெண்ணித்தெளிவுற்றே. (௧௦)

தெளிவுற்றுவீவின்றிநின்றவர்க்கின்பக்கதிசெய்யுந்
தெளிவுற்றகண்ணனைத்தென்குருகூர்ச்சடகோபன்சொல்
தெளிவுற்றவாயிரத்துளிவைபத்துமவல்லாரவர்
தெளிவுற்றசிந்தையர்பாமருமூவுலகத்துள்ளே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி ௬௫-இ-பாசுரம்-௭௧௫.

---

௬ - வது. பாமரு.

குணானுபவம்பண்ணியப்படிப்பட்ட ஈச்வரனை ப்ரத்யக்ஷீகரிக்கவேண்டுமென்றாசைப்பட்டு லபியாமையா லெப்போழ்தும்மை யடைவேனென்று ஆக்ரந்தனம்பண்ணினதை அருளிச்செய்கிறார்.

கலித்துறை-பண் -பாலையாழ்-தாளம்-ஏழொத்து.

பாமருமூவுலகும்படைத்தபற்பநாபாவோ
பாமருமூவுலகுமளந்தபற்பபாதாவோ
தாமரைக்கண்ணாவோதனியேன்றனியாளாவோ
தாமரைக்கையாவோவுன்னையென்றுகொல்சேர்வதுவே. (௧)

என்றுகொல்சேர்வதந்தோவரனான்முகனேத்துஞ்செய்ய
நின்திருப்பாதத்தையான்நிலநீரெரிகால்விண்ணுயிர்

என்றிவைதான்முதலாமுற்றுமாய்நின்றவெந்தாயோ
குன்றெடுத்தாநிரைமேய்த்தவைகாத்தவெங்கூத்தாவோ. (௨)

காத்தவெங்கூத்தாவோமலையேந்திக்கன்மாரிதன்னைப்
பூத்தண்டுழாய்முடியாய்புனைகொன்றையஞ்செஞ்சடையாய்
வாய்த்தவென்னான்முகனேவந்தென்னாருயிர்நீயானால்
ஏத்தருங்கீர்த்தியினாயுன்னையெங்குத்தலைப்பெய்வனே. (௩)

எங்குத்தலைப்பெய்வன்நானெழில்மூவுலகும்நீயே
அங்குயர்முக்கட்பிரான்பிரமபெருமானவன்நீ
வெங்கதிர்வச்சிரக்கையிந்திரன்முதலாத்தெய்வம்நீ
கொங்கலர்தண்ணந்துழாய்முடியென்னுடைக்கோவலனே. (௪)

என்னுடைக்கோவலனேயென்பொல்லாக்கருமாணிக்கமே
உன்னுடையுந்திமலருலகமவைமூன்றும்பரந்து
உன்னுடைச்சோதிவெள்ளத்தகம்பாலுன்னைக்கண்டுகொண்டிட்
டென்னுடையாருயிராரெங்ஙனேகொல்வந்தெய்துவரே. (௫)

வந்தெய்துமாறறியேன்மல்குநீலச்சுடர்தழைப்பச்
செஞ்சுடர்ச்சோதிகள்பூத்தொருமாணிக்கஞ்சேர்வதுபோல்
அந்தரமேற்செம்பட்டோடடியுந்திகைமார்கண்வாய்
செஞ்சுடர்ச்சோதிவிடவுறையென்திருமார்பனையே. (௬)

என்திருமார்பன்றன்னையென்மலைமகள்கூறன்றன்னை
என்றுமென்னாமகளையகம்பாற்கொண்டநான்முகனை
நின்றசசிபதியைநிலங்கீண்டெயில்மூன்றெரித்த
வென்றுபுலன்துறந்தவிசும்பாளியைக்காணேனோ. (௭)

ஆளியைக்காண்பரியாயரிகாணரியாயரக்கர்
ஊளையிட்டன்றிலங்கைகடந்துபிலம்புக்கொளிப்ப
மீளியம்புள்ளைக்கடாய்விறல்மாலியைக்கொன்றுபின்னும்
ஆளுயர்குன்றங்கள்செய்தடர்த்தானையுங்காண்டுங்கொலோ. (௮)

காண்டுங்கொலோநெஞ்சமேகடியவினையேமுயலும் *
ஆண்டிறல்மீளிமொய்ம்பிலரக்கன்குலத்தைத்தடிந்து
மீண்டுமவன்றம்பிக்கேவிரிநீரிலங்கையருளி
ஆண்டுதன்சோதிபுக்கவமரரரியேற்றினையே, (௯)

ஏற்றரும்வைகுந்தத்தையருளுமெக்காயர்குலத்
தீற்றிளம்பிள்ளையொன்றாய்ப்புக்குமாயங்களேயியற்றி
கூற்றியல்கஞ்சனைக்கொன்றைவர்க்காய்க்கொடுஞ்சேனைதடிந்
தாற்றல்மிக்கான்பெரியபரஞ்சோதிபுக்கவரியே. (௧௦)

புக்கவரியுருவாயவுணனுடல்கீண்டுகந்த
சக்கரச்செல்வன்றன்னைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
மிக்கவோராயிரத்துளிவைபத்தும்வல்லாரவரைத்
தொக்குப்பல்லாண்டிசைத்துக்கவரிசெய்வரேழையரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி-௬௬-இ-பாசுரம்-௭௨௬.

---

௭ - வது. ஏழை.

இவ்வண்ணம் ஆர்த்தனாய்ப்பன்னிநின்ற நங்கை எம்பாவனாம்ப்ரத்யக்ஷம்பண்ணுவது
கைகமிலத்திவ்யாவயவ சௌந்தர்யம் நமக்கு பாஹ்யஸம்ச்லேஷார்ஹ
மில்லாமையால் வருத்தமாயிருக்கிறதென்று தாய்மாரோடுந்
தோழிமார்களோடுஞ் சொன்னதாகவருளிச்செய்கிறார்.

கலித்துறைவிருத்தம் - பண் - பாலையாழ் - தாளம் - ஏழொத்து.

ஏழையராவியுண்ணுமிணைக்கூற்றங்கொலோவறியேன்
ஆழியங்கண்ணபிரான்றிருக்கண்கள்கொலோவறியேன்
சூழவுந்தாமரைநாண்மலர்போல்வந்துதோன்றுங்கண்டீர்
தோழியர்காளன்னைமீரென்செய்கேன்றுயராட்டியேனே. (௧)

ஆட்டியுந்தூற்றியுநின்றன்னைமீரென்னைநீர்நலிந்தென்
மாட்டுயர்கற்பகத்தின்வல்லியோகொழுந்தோவறியேன்
ஈட்டியவெண்ணெயுண்டான்றிருமுகந்தன்னொடுங்காதில்களோர்
மாட்டியவல்விளக்கின்சுடராய்நிற்கும்வாலியதே. (௨)

வாலியதோர்கனிகொல்வினையாட்டியேன்வல்வினைகொல்
கோலந்திரள்பவளக்கொழுந்துண்டங்கொலோவறியேன்
நீலநெடுமுகில்போற்றிருமேனியம்மான்றொண்டைவாய்
ஏலுந்திசையுளெல்லாம்வந்துதோன்றுமெனின்னுயிர்க்கே. (௩)

இன்னுயிர்க்கேழையர்மேல்வளையுமிணைநீலவிற்கொல்
மன்னியசீர்மதனன்கருப்புச்சிலைகொல்மதனன்
தன்னுயிர்த்தாதைக்கண்ணபெருமான்புருவமவையே
என்னுயிர்மேலனவாயடுகின்றனவென்றுநின்றே. (௪)

என்றுநின்றேதிகழுஞ்செய்யவீன்சுடர்வெண்மின்னுக்கொல்
அன்றியென்னாவியடுமணிமுத்தங்கொலோவறியேன்
குன்றமெடுத்தபிரான்முறுவலெனதாவியடும்
ஒன்றுமறிகின்றிலேனன்னைமீரெனக்குய்விடமே. (௫)

உய்விடமேழையர்க்குமசுரர்க்குமரக்கர்கட்கும்
எவ்விடமென்றிலங்கிமகரந்தழைக்குந்தளிர்கொல்
பைவிடப்பாம்பணையான்றிருக்குண்டலக்காதுகளே
கைவிடலொன்றுமின்றியடுகின்றனகாண்மின்களே. (௬)

காண்மின்களன்னையர்காளென்றுகாட்டும்வகையறியேன்
நாண்மன்னுவெண்டிங்கள்கொல்நயந்தார்கட்குநச்சிலைகொல்
சேண்மன்னுநாற்றடந்தோட்பெருமான்றன்றிருநுதலே
கோண்மன்னியாவியடுங்கொடியேனுயிர்கோவிழைத்தே. (௭)

கோவிழைத்தாமரையுங்கொடியும்பவளமும்வில்லுங்
கோவிழைத்தண்முத்தமுந்தளிருங்குளிர்வான்பிறையுங்
கோவிழையாவுடையகொழுஞ்சோதிவட்டங்கொல்கண்ணன்
கோவிழைவான்முகமாய்க்கொடியேனுயிர்கொள்கின்றதே. (௮)

கொள்கின்றகோளிருளைச்சுகிர்ந்திட்டகொழுஞ்சுருளின்
உள்கொண்டநீலநன்னூற்றழைகொலன்றுமாயங்குழல்
விள்கின்றபூந்தண்டுழாய்விரைநாறவந்தென்னுயிரைக்
கள்கின்றவாறறியீரன்னைமீர்கழறாநிற்றிரே. (௯)

நிற்றிமுற்றத்துளென்றுநெரித்தகையராயென்னைநீர்
சுற்றியுஞ்சூழ்ந்தும்வைதிர்சுடர்ச்சோதிமணிநிறமாய்
முற்றவிம்மூவுலகும்விரிகின்றசுடர்முடிக்கே
ஒற்றுமைக்கொண்டதுள்ளமன்னைமீர்நசையென்னுங்கட்கே. (௧௦)

கட்கரியபிரமன்சிவனிந்திரனென்றிவர்க்குங்
கட்கரியகண்ணனைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
உட்குடையாயிரத்துளிவையுமோர்பத்தும்வல்லார்
உட்குடைவானவரோடுடனாயென்றும்மாயாரே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி-௬௭-இ-பாசுரம்-௭௩௭.

அ-வது. மாயா.

அவ்வாறுபத்ரவப்படுகின்றவென்னை இந்த லீலாவிபூதியிலேவைத்தினி தெப்படிப்பட்ட ஆச்சரியமோதென்ன ஒன்றுகேட்க வொன்று வேறேசொல்லி பரிஹரிப்பாரைப்போலே எம்பெருமான் இவ் வளவோவென்று தன்னுடைய விசித்ர விபூதியெல்லாங் காட்ட வவைக்கண் டாச்சரியப்பட்டதை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-பாலையாழ்-தாளம்-ஏகதாளம்.

மாயாவாமனனேமதுசூதாநீயருளாய்
தீயாய்நீராய்நிலனாய்விசும்பாய்க்காலாய்
தாயாய்த்தந்தையாய்மக்களாய்மற்றுமாய்முற்றுமாய்
நீயாய்நீநின்றவாறிவையென்னநியாயங்களே. (௧)

அங்கண்மலர்த்தண்டுழாய்முடியச்சுதனேயருளாய்
திங்களுஞாயிறுமாய்ச்செழும்பல்சுடராயிருளாய்
பொங்குபொழிமழையாய்ப்புகழாய்ப்பழியாய்ப்பின்னும்நீ
வெங்கண்வெங்கூற்றமுமாமிவையென்னவிசித்திரமே. (௨)

சித்திரத்தேர்வலவாதிருச்சக்கரத்தாயருளாய்
எத்தனையோருகமுமவையாயவற்றுள்ளியலும்
ஒத்தவொண்பல்பொருள்களுலப்பிலனவாய்வியவாய்
வித்தகத்தாய்நிற்றிநீயிவையென்னவிடமங்களே. (௩)

கள்ளவிழ்தாமரைக்கட்கண்ணனேயெனக்கொன்றருளாய்
உள்ளதுமில்லதுமாயுலப்பிலனவாய்வியவாய்
வெள்ளத்தடங்கடலுள்விடநாகணைமேல்மருவி
உள்ளப்பல்யோகுசெய்தியிவையென்னவுபாயங்களே. (௪)

பாசங்கணீக்கியென்னையுனக்கேயறக்கொண்டிட்டுநீ
வாசமலர்த்தண்டுழாய்முடிமாயவனேயருளாய்
காயமுஞ்சீவனுமாய்க்கழிவாய்ப்பிறப்பாய்ப்பின்னும்நீ
மாயங்கள்செய்துவைத்தியிவையென்னமயக்குகளே. (௫)

மயக்காவாமனனேமதியாம்வண்ணமொன்றருளாய்
அயர்ப்பாய்த்தேற்றமுமாயழலாய்க்குளிராய்வியவாய்
வியப்பாய்வென்றிகளாய்வினையாய்ப்பயனாய்ப்பின்னும்நீ
துயக்காநீநின்றவாறிவையென்னதுயரங்களே. (௬)

துயரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீண்முடியாயருளாய்
துயரஞ்செய்மானங்களாய்மதனாகியுகவைகளாய்த்
துயரஞ்செய்காமங்களாய்த்துலையாய்நிலையாய்நடையாய்த்
துயரங்கள்செய்துவைத்தியிவையென்னசுண்டாயங்களே. (௭)

என்னசுண்டாயங்களால்நின்றிட்டாயென்னையாளுங்கண்ணா
இன்னதோர்தன்மையையென்றுன்னையாவர்க்குந்தேற்றரியை
முன்னியமூவுலகுமவையாயவற்றைப்படைத்துப்
பின்னுமுள்ளாய்புறத்தாயிவையென்னவியற்கைகளே. (௮)

என்னவியற்கைகளால்நின்றிட்டாயென்னையாளுங்கண்ணா
துன்னுகரசரணமுதலாகவெல்லாவுறுப்பும்
உன்னுசுவையொளியூறொலிநாற்றமுற்றும்நீயே
உன்னையுணரவுறிலுலப்பில்லைநுணுக்கங்களே. (௯)

இல்லைநுணுக்கங்களேயிதனிற்பிறிதென்னும்வண்ணந்
தொல்லைநன்னூலிற்சொன்னவுருவுமருவும்நீயே
அல்லித்துழாயலங்கலணிமார்பவென்னச்சுதனே
அல்லதோர்வண்ணஞ்சொன்னாலதுவேயுனக்காம்வண்ணமே. (௧௦)

ஆம்வண்ணமின்னதொன்றென்றறிவதரியவரியை
ஆம்வண்ணத்தாற்குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த
ஆம்வண்ணவொண்டமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்
ஆம்வண்ணத்தாலுரைப்பாரமைந்தார்தமக்கென்றைக்குமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆக திருவாய்மொழி-௬௰௮-இ-பாசுரம்-௬௱௮௰.

௯-வது. என்றைக்கும்.

அவற்றுடையதான லீலாவிபூதியி லென்னை யென்னை வைத்தாயென்றுகேட்க அச்சமான் எனக்கு மென்னடியார்க்கும் ச்ராவ்யமான ப்ரபந்தம பண்ணிவைக்கவேண்டுமென வைத்தேனென்றுசொல்ல அந்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமென்று சொல்லப் போகிறதென்று தடுமாறினதை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-கட்டபாடை-தாளம்-ஐம்பதொத்து.

என்றைக்குமென்னையுய்யக்கொண்டுபோகிய
அன்றைக்கன்றென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னை
இன்றமிழ்பாடியவீசனையாதியாய்
நின்றவென்சோதியையென்சொல்லிநிற்பனோ. (௧)

என்சொல்லிநிற்பனென்னின்னுயிரின்றொன்றாய்
என்சொல்லால்யான்சொன்னவின்கவியென்பித்து
தன்சொல்லாற்றான்றன்னைக்கீர்த்தித்தமாயனென்
முன்சொல்லுமூவுருவாமுதல்வனே. (௨)

ஆமுதல்வனிவனென்றுதற்றேற்றியென்
நாமுதல்வந்துபுகுந்துநல்லின்கவி
தூமுதற்பத்தர்க்குத்தான்றன்னைச்சொன்னவென்
வாய்முதலப்பனையென்றுமறப்பனோ.

அப்பனையென்றுமறப்பனென்னாகியே
தப்புதலின்றித்தனைக்கவிதான்சொல்லி
ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு
செப்பமேசெய்துதிரிகின்றசீர்கண்டே. (௪)

சீர்கண்டுகொண்டுதிருந்துநல்லின்கவி
நேர்படயான்சொல்லுநீர்மையிலாமையில்
ஏர்விலாவென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னைப்
பார்பரவின்கவிபாடும்பரமரே. (௫)

இன்கவிபாடும்பரமகவிகளாற்
றன்கவிதான்றன்னைப்பாடுவியாதின்று
நன்குவந்தென்னுடனாக்கியென்னாற்றன்னை
வன்கவிபாடுமென்வைகுந்தநாதனே. (௬)

வைகுந்தநாதனெனவல்வினைமாய்ந்தறச்
செய்குந்தன்றன்னையென்னாக்கியென்னாற்றன்னை
வைகுந்தனாகப்புகழவண்டீங்கவி
செய்குந்தன்றன்னையெந்நாள்சிந்தித்தார்வனோ. (௭)

ஆர்வனோவாழியங்கையெம்பிரான்புகழ்
பார்விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலும்
ஏர்விலாவென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னைச்
சீர்பெறவின்கவிசொன்னதிறத்துக்கே. (௮)

திறத்துக்கேதுப்புரவாந்திருமாலின்சீர்
இறப்பெதிர்காலம்பருகிலுமார்வனோ
மறப்பிலாவென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னை
உறப்பலவின்கவிசொன்னவுதவிக்கே. (௯)

உதவிக்கைம்மாறென்னுயிரென்னவுற்றெண்ணில்
அதுவுமற்றாங்கவன்றன்னதென்னாற்றன்னைப்

பதவியவின்கவிபாடியவப்பனுக்கு
ஏதுவுமொன்றுமில்லைசெய்வதிங்குமங்கே. (௧௦)

இங்குமங்குந்திருமாலன்றியின்மைகண்டு
அங்ஙனேவண்குருகூர்ச்சடகோபன்
இங்ஙனேசொன்னவோராயிரத்திப்பத்தும்
எங்ஙனேசொல்லினுமின்பம்பயக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ- திருவாய்மொழி.௬௯ - இ - பாசுரம்.௭௫௯.

---

௧௦ - வது. இன்பம்.

இவ்வண்ணமென்றும் ப்ரபந்தஞ்செய்வித்த ஸர்வேச்வர னெழுந்தருளி
யிருக்கிற திருவாறன்விளையாகிற திருப்பதிக்குப்போய் ப்ரபந்தம்
விண்ணப்பஞ்செய்யவேண்டுமென் றபேக்ஷித்ததை
அருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண்-பழம்பஞ்சுரம்-தாளம்-ஏழொத்து.

இன்பம்பயக்கவெழில்மலர்மாதருந்தானுமிவ்வேழுலகை
இன்பம்பயக்கவினிதுடன்வீற்றிருந்தாள்கின்றவெங்கள்பிரான்
அன்புற்றமர்ந்துறைகின்றவணிபொழில்சூழ்திருவாறன்விளை
அன்புற்றமர்ந்துவலஞ்செய்துகைதொழுநாள்களுமாகுங்கொலோ. (௧)

ஆகுங்கொலையமொன்றின்றியகலிடமுற்றவுமீரடியே
ஆகும்பரிசுநிமிர்ந்ததிருக்குறளப்பனமர்ந்துறையும்
மாகந்திகழ்கொடிமாடங்கணீடுமதிட்டிருவாறன்விளை
மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொலோ. (௨)

கூடுங்கொல்வைகலுங்கோவிந்தனைமதுசூதனைக்கோளரியை
ஆடும்பறவைமிசைக்கண்டுகைதொழுதன்றியவனுறையும்
பாடும்பெரும்புகழ்நான்மறைவேள்வியைந்தாறங்கம்பன்னினர்வாழ்
நீடுபொழிற்றிருவாறன்விளைதொழவாய்க்குங்கொனிச்சலுமே. (௩)

வாய்க்குங்கொனிச்சலுமெப்பொழுதும்மனத்தீங்குநினைக்கப்பெற
வாய்க்குங்கரும்பும்பெருஞ்செந்நெலும்வயல்சூழ்திருவாறன்விளை
வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன்வடமதுரைப்பிறந்த
வாய்க்குமணிநிறக்கண்ணபிரான்றன்மலரடிப்போதுகளே. (௪)

மலரடிப்போதுகளென்னெஞ்சத்தெப்பொழுதுமிருத்திவணங்கப்
பலரடியார்முன்பருளியபாம்பணையப்பனமர்ந்துறையும்
மலரில்மணிநெடுமாடங்கள்நீடுமதிட்டிருவாறன்விளையுலகு
மலிபுகழ்ப்பாடநம்மேல்வினையொன்றுநில்லாகெடுமே. (௫)

ஒன்றுநில்லாகெடுமுற்றவுந்தீவினையுள்ளித்தொழுமின்றொண்டீர்
அன்றங்கமர்வென்றுருப்பிணிநங்கையணிநெடுந்தோள்புணர்ந்தான்
என்றுமெப்போதுமென்னெஞ்சந்துதிப்பவுள்ளேயிருக்கின்றபிரான்
நின்றவணிதிருவாறன்விளையென்னுநீணகரமதுவே. (௬)

நீணகரமதுவேமலர்ச்சோலைகள்சூழ்திருவாறன்விளை
நீணகரத்துறைகின்றபிரான்நெடுமால்கண்ணன்விண்ணவர்கோன்
வாணபுரம்புக்குமுக்கட்பிரானைத்தொலையவெம்போர்கள்செய்து
வாணனையாயிரந்தோள்துணித்தான்சரணன்றிமற்றொன்றிலமே. (௭)

அன்றிமற்றொன்றிலம்நின்சரணேயென்றகலிரும்பொய்கையின்வாய்
நின்றுதன்னீள்கழலேத்தியவானையினெஞ்சிடர்தீர்த்தபிரான்
சென்றங்கினிதுறைகின்றசெழும்பொழில்சூழ்திருவாறன்விளை
ஒன்றிவலஞ்செய்யவொன்றுமோதீவினையுள்ளத்தின்சார்வல்லவே. (௮)

தீவினையுள்ளத்தின்சார்வல்லவாகித்தெளிவிசும்பேறலுற்றால்
நாவினுள்ளுமுள்ளத்துள்ளுமமைந்ததொழிலினுள்ளுநவின்று
யாவரும்வந்துவணங்கும்பொழிற்றிருவாறன்விளையதனை
மேவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொலோவென்றுமென்சிந்தனையே. ௯

சிந்தைமற்றொன்றின்திறத்ததல்லாத்தன்மைதேவபிரானறியுஞ்
சிந்தையினாற்செய்வதானறியாதனமாயங்களொன்றுமில்லைச்
சிந்தையினாற்சொல்லினாற்செய்கையால்நிலத்தேவர்குழுவணங்குஞ்
சிந்தைமகிழ்திருவாறன்விளையுறைதீர்த்தனுக்கற்றபின்னே. (௧௦)

தீர்த்தனுக்கற்றபின்மற்றோர்சரணில்லையென்றெண்ணித் தீர்த்தனுக்கே
தீர்த்தமனத்தனனாகிச்செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன
தீர்த்தங்களாயிரத்துள்ளிவைபத்துமவல்லார்களைத்தேவர்வைகல்
தீர்த்தங்களேயென்றுபூசித்துநல்கியுரைப்பர்தந்தேவியர்க்கே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஏழாம்பத்து முற்றிற்று.

ஆ பத்து-௭-ல்-திருவாய்மொழி-௭௦-இ-பாசுரம்-௭௭௨.

எட்டாம்பத்து.

௧ - வது. தேவி.

சக்திஹாநியாலே அந்தத் திருப்பதிக்குப் போகமாட்டாமல் நடுவேகிடந்து
புருஷகார பூதையான பிராட்டி கிட்டவிருக்கவும் ஆச்ரிதபாரதந்
த்ர்யாதிகுணங்க ளிருக்கையாலுந் தமக்குப் பலவித்தியான
இல்லையென்று குணங்கள்மேலே அதிசங்கைபண்ணுகையில் ஸர்வேச்வரன்
விச்வாஸ ஹேதுவான கல்யாணகுணங்களைக் காட்டுகையால் அந்த
அதிசங்கைதீர்ந்த ப்ரீதாநதை யருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண் புறநீர்மை-தாளம்-ஒன்பதொத்து.

தேவிமாராவார்திருமகள்பூமியேவமற்றமரராட்செய்வார்
*மேவியவுலகம்மூன்றவையாட்சிவேண்டுவேண்டுருவம்நின்னுருவம்
பாவியேன்றன்னையடுகின்றகமலக்கண்ணதோர்பவளவாய்மணியே
ஆவியேயமுதேயலைகடல்கடைந்தவப்பனேகாணுமாறருளாய். (௧)

காணுமாறருளாயென்றென்றேகலங்கிக்கண்ணநீரலமரவினையேன்
பேணுமாறெல்லாம்பேணிநின்பெயரேபிதற்றுமாறருளெனக்கந்தோ
காணுமாறருளாய்காகுத்தாகண்ணாதொண்டனேன்கற்பகக்கனியே
பேணுவாரமுதேபெரியதண்புனல்சூழ்பெருநிலமெடுத்தபேராளா. (௨)

எடுத்தபேராளனந்தகோபன்றனின்னுயிர்ச்சிறுவனேயசோதைக்
கடுத்தபேரின்பக்குலவிளங்களிறேயடியனேன்பெரியவம்மானே
கடுத்தபோரவுணனுடலிருபிளவாக்கையுகிராண்டவெங்கடலே
அடுத்ததோருருவாயின்றுநீவாராயெங்ஙனந்தேறுவருமரே. (௩)

உமருகந்துகந்தவுருவம்நின்னுருவமாகியுன்றனக்கன்பரானார்
அவருகந்தமர்ந்தசெய்கையுன்மாயையறிவொன்றுஞ்சங்கிப்பன்வினை
அமரதுபண்ணியகலிடம்புடைசூழடுபடையவித்தவம்மானே [யேன்
அமர்தமமுதேயசுரர்கணஞ்சேயென்னுடையாருயிரேயோ. (௪)

ஆருயிரேயோவகலிடமுழுதும்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்த
பேருயிரேயோபெரியநீர்படைத்தங்குறைந்ததுகடைந்தடைத்துடைத்
சீருயிரேயோமனிசர்க்குத்தேவர்போலத்தேவர்க்குந்தேவாவோ [த
ஒருயிரேயோவுலகங்கட்கெல்லாமுன்னைநானெங்குவந்துறுகோ. (௫)

எங்குவந்துறுகோவென்னையாள்வானேயேழுலகங்களுநீயே
அங்கவர்க்கமைத்ததெய்வமுநீயேயவற்றவைகருமமுநீயே
பொங்கியபுறம்பாற்பொருளுளவேலுமவையுமோநீயின்னேயானால்
மங்கியவருவாநேர்ப்பமுநீயேவான்புலனிறந்ததுநீயே. (௬)

இறந்ததுநீயேயெதிர்ந்ததுநீயேநிகழ்வதோநீயின்னேயானால் [ன்
சிறந்தநின்றன்மையதுவிதுவுதுவென்றறிவொன்றுஞ்சங்கிப்பன்வினையே
கறந்தபால்நெய்யேநெய்யினின்சுவையேகடலினுளமுதமேயமுதில்
பிறந்தவின்சுவையேசுவையதுபயனேபின்னைதோள் மணந்தபேராயா.

மணந்தபேராயமாயத்தால்முழுதும்வல்வினையேனையீர்கின்ற (ர்த்தாய்
குணங்களையுடையாயசுரர்வன்கையர்வெங்கூற்றமே கொடியபுள்ளுய
பணங்களாயிரமுடையபைந்நாகப்பள்ளியாய்பாற்கடற்சேர்ப்பா
வணங்குமாறறியேன்மனமும்வாசகமுஞ்செய்கையும்யானுநீதானே. ௮

யானுநீதானேயாவதோமெய்யேயருநரகவையுநீயானால்
வானுயரின்பமெய்திலென்மற்றைநரகமேயெய்திலெனெனினும்
யானுநீதானாய்த்தெளிதொறுநன்றுமஞ்சுவனரகநானடைதல்
வானுயரின்பமன்னிவீற்றிருந்தாயருளுநின்றாள்களையெனக்கே. (௯)

தாள்களையெனக்கேதலைத்தலைச்சிறப்பத்தந்தபேருதவிக்கைம்மாறாத் [ய்
தோள்களையாரத்தழுவியென்னுயிரையறவிலைசெய்தனன்சோதீ
தோள்களாயிரத்தாய்முடிகளாயிரத்தாய்துணைமலர்க்கண்களாயிரத்தா
தாள்களாயிரத்தாய்பேர்களாயிரத்தாய்தமியனேன் பெரியவப்பனே.

பெரியவப்பனைப்பிரமனப்பனையுருத்திரனப்பனைமுனிவர்க்
குரியவப்பனையமரரப்பனையுலகுக்கோர்தனியப்பன்றன்னைப்
பெரியவண்குருகூர்வண்சடகோபன்பேணினவாயிரத்துள்ளும்
உரியசொன்மாலையிவையும்பத்திவற்றாலுய்யலாந்தொண்டீர்நங்கட்கே.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ_திருவாய்மொழி-௭௧-இ-பாசுரம்-௭௱௮௰௧.

௨ - ௮. நங்கள்.

உபாயபூதனான ஈச்வரன்வந்து முகங்காட்டாமலிருக்கைக்கு ஹேது ஈச்வரனறியும்படி ஸம்ஸாரஸம்பந்தமுண்டாயிருக்குமென்று சங்கித்துத் தமக்கு ஸம்ஸாரம்நைராச்யமென்று நாயகி லயி தாய்களைக்குறித்துத்தங்களோடு ஸம்பந்தமில்லையென்று சொன்னதாக வருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண்-கொல்லி-தாளம்-ஏறொத்து.

நங்கள்வரிவளையாயங்காளோநம்முடையேதலர்முன்புநாணி, நுங்கட்குயானென்றுரைக்குமாற்றம்நோக்குகின்றேனெங்குங் காணமாட்டேன், சங்கஞ்சரிந்தனசாயிழந்தேன்றடமுலைபொன்னிறமாய்த்தளர்ந்தேன், வெங்கட்பறவையின்பாகனெங்கோன் வேங்கடவாணனைவேண்டிச்சென்றே. (௧)

வேண்டிச்சென்றொன்றுபெறுகிற்பாரிலென்னுடைத்தோழியர்நுங்கட்கேலும், ஈண்டிதுரைக்கும்படியையந்தோகாண்கின்றிலேனிடராட்டியேனேன், காண்டகுதாமரைக்கண்ணன்கள்வன்விண்ணவர்கோனங்கள்கோனைக்கண்டால், ஈண்டியசங்குநிறைவுங்கொள்வானெத்தனைகாலமிளைக்கின்றேனே. (௨)

காலமிளைக்கிலல்லால்வினையேனானிளைக்கின்றிலன்கண்டுகொண்மின்
ஞாலமறியப்பழிசுமந்தேனன்னுதலீரினிநாணித்தானென்
நீலமலர்நெடுஞ்சோதிசூழ்ந்தநீண்டமுகில்வண்ணன்கண்ணன்கொண்ட
கோலவளையொடுமாமைகொள்வானெத்தனைகாலமுங்கூடச்சென்றே

கூடச்சென்றேனினியென்கொடுக்கேன்கோல்வளைநெஞ்சத்தொடக்கமெ
பாடற்றொழியவிழந்துவைகல்பல்வளையார்முன்பரிசழிந்தேன் [ல்லாம்
மாடக்கொடிமதிட்டென்குளந்தைவண்குடபால்நின்றமாயக்கூத்தன்
ஆடற்பறவையுயர்த்தவெல்போராழிவலவனையாதரித்தே. (௪)

ஆழிவலவனையாதரிப்புமாங்கவனம்மில்வரவுமெல்லாந்
தோழியர்காணம்முடையமெய்தான்சொல்லுவதோவிங்கரியதுதான்
ஊழிதோறூழியொருவனாகநன்குணர்வார்க்குமுணரலாகாச்
சூழலுடையசுடர்கொளாதித்தொல்லைஞ்சோதிநினைக்குங்காலே. (௫)

தொல்லைஞ்சோதிநினைக்குங்காலென்சொல்லளவன்றிமையோர்தமக்கும், எல்லையில்லாதனகூழ்ப்புச்செய்யுமத்திறம்நிற்கவெம்மாமைகொண்டான், அல்லிமலர்த்தண்டுழாயுந்தாரானார்க்கிடு கோவினிப்பூ

நல்சொல்லீர், வல்லிவளவயல்சூழ் குடந்தைமாமலர்க்கண் வளர்கின்ற மாலே. (௬)

மாலரிகேசவன்நாரணன்சீமாதவன்கோவிந்தன்வைகுந்தனென்றென்று, ஓலமிடவென்னைப்பண்ணிவிட்டிட்டொன்றுமுருவுஞ்சுவடுங்காட்டான், ஏலமலர்க்குழலன்னைமீர்காளென்னுடைத்தோழியர்காளென்செய்கேன், காலம்பலசென்றுங்காண்பதாணையுங்களோடெங்களிடையில்லையே. (௭)

இடையில்லையான்வளர்த்தகிளிகாள்பூவைகள்காள்குயில்காள்மயில்காள், உடையநம்மாமையுஞ்சங்கும்நெஞ்சுமொன்றுமொழியவொட்டாதுகொண்டான், அடையும்வைகுந்தமும்பாற்கடலுமஞ்சனவெற்புமவைநணிய, கடையறப்பாசங்கள்விட்டபின்னையன்றியவனவைகாண்கொடானே. (௮)

காண்கொடுப்பானல்லனார்க்குந்தன்னைக்கைசெயப்பாலதோர்மாயந்தன்னால், மாண்குறட்கோலவடிகாட்டிமண்ணும்விண்ணும்நிறையமலர்ந்த, சேண்சுடர்த்தோள்கள்பலதழைத்ததேவபிரார்க்கென்னிறைவினோடு, நாண்கொடுத்தேனினியென்கொடுக்கேனென்னுடைநன்னுதல்நங்கைமீர்காள். (௯)

என்னுடைநன்னுதல்நங்கைமீர்காள்யானினிச்செய்வதென்னென்னெஞ்சென்னை, நின்னிடையேனல்லேனென்றுநீங்கிநேமியுஞ்சங்குமிருகைக்கொண்டு, பன்னெடுஞ்சூழ்சுடர்ஞாயிற்றோடுபான்மதியேந்தியோர்கோலநீல, நன்னெடுங்குன்றம்வருவதொப்பானாண்மலர்ப்பாதமடைந்தது. (௰)

பாதமடைவதன்பாசத்தாலேமற்றவன்பாசங்கள்முற்றவிட்டுக், கோதில்புகழ்க்கண்ணன்றன்னடிமேல்வண்குருகூர்ச்சடகோபன்சொன்ன, தீதிலந்தாதியோராயிரத்துளிவையுமோர்பத்திசையொடும்வல்லார், ஆதுமோர்தீதிலராகியிங்குமங்குமெல்லாமமைவார்கள்தாமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௭௨-இ-பாசுரம்-௭௯௨.

௩-வது. அங்கும்.

ஸம்ஸாரஸம்பந்த மில்லையென்று சொல்ல ஈச்வரன் மாநஸ ஸாக்ஷாத்காரம் பண்ண அவன் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளைப் பார்த்துத் தாம் பட்ட துக்கமும்மறந்து இப்படிப்பட்ட திவ்ய மங்கள விக்ரஹத்தோடே யவதரித்த ஸர்வேச்வரனுக்கு மங்களாசாஸனபரரொருவருமில்லையென்றுத் தாமொருவருமே மங்களாசாஸனம்பண்ணுகைக்கு இருக்கிறோமென்று மிப்படி பயப்படுகையில் ஈச்வரன் நமக்கு மங்களாசாஸனபரராய் நித்யமுக்தரிருக்க முமுக்ஷுக்களிருக்க நீரேன் பயப்படுகிறீரென்றுசொல்ல பயந்தீர்ந்ததை யருளிச்செய்கிறார்.

கலித்துறைவிருத்தம்-பண்-நட்டபாடை-தாளம்-ஏழொத்து.

அங்குமிங்ும்வானவர்தானவர்யாவரும்
எங்குமினையையென்றுன்னையறியகிலாதலற்றி
அங்கஞ்சேரும்பூமகள்மண்மகளாய்மகள்
சங்குசக்கரக்கையவனென்பர்சரணமே. (௧)

சரணமாகியநான்மறைநூல்களுஞ்சாராதே
மரணந்தோற்றம்வான்பிணிமூப்பென்றிவைமாய்த்தோம்
கரணப்பல்படைபற்றறவோடுங்கனலாழி
யரணத்தின்படையேந்தியவீசற்காளாயே. (௨)

ஆளுமாளாராழியுஞ்சங்குஞ்சுமப்பார்தாம்
வாளும்வில்லுங்கொண்டுபின்செல்வார்மற்றில்லைத்
தாளுந்தோளுங்கைகளையாரத்தொழக்காணேன்
நாளுநாளுநாடுவனடியேன்ஞாலத்தே. (௩)

ஞாலம்போனகம்பற்றியோர்முற்றாவுருவாகி
ஆலம்பேரிலையன்னவசஞ்செய்யுமம்மானே
காலம்பேர்வதோர்காரிருளூழியொத்துளதாலுன்
கோலங்காரெழில்காணலுற்றாழுங்கொடியேற்கே. (௪)

கொடியார்மாடக்கோளூரகத்தும்புளிங்குடியும்
மடியாதின்னேநீதுயில்மேவிமகிழ்ந்ததுதான்
அடியாரல்லல்தவிர்த்தவசைவோவன்றேலிப்
படிதான்நீண்டுதாவியவசைவோபணியாயே. (௫)

னைக்கொள்சீர்மூவாயிரவர்வண் சிவனுமயனுந்தானுமொப்பார்வாழ்,
கனக்கொள்திண்மாடத் திருச்செங்குன்றூரிற்றிருச்சிற்றாறங்கரையானைக்கண்
டேனே. (௬)

திருச்செங்குன்றூரிற்றிருச்சிற்றாறங்கரையானைக்கண்டவத்திருவடியென்றுந்
திருச்செய்யகமலக்கண்ணுஞ்செவ்வாயுஞ்செவ்வடியுஞ்செய்யகையுந்
திருச்செய்யகமலவுந்தியுஞ்செய்யகமலமார்புஞ்செய்யவுடையுந்
திருச்செய்யமுடியுமாரமும்படையுந்திகழவென்சிந்தையுள்ளானே. ()

திகழவென்சிந்தையுள்ளிருந்தானைச்செழுநிலத்தேவர்நான்மறை
யோர், திசைகைகூப்பியேத்துந்திருச்செங்குன்றூரிற்றிருச்சிற்றாறங்
கரையானைப், புகர்கொள்வானவர்கள்புகலிடந்தன்னையசுரர்வன்கைய
ர்வெங்கூற்றைப், புகழுமாறறியேன்பொருந்துமூவுலகும்படைப்பொ
டுகெடுப்புக்காப்பவனே. (அ)

படைப்பொடுகெடுப்புக்காப்பவன்பிரமபரம்பரன்சிவப்பிரானவ
னே, இடைப்புக்கோருருவுமொழிவில்லையவனேபுகழ்வில்லையாவையு
ந்தானே, கொடைப்பெரும்புகழாரினையர்தன்னானார்கூரியவிச்சையோ
டொழுக்கம், நடைப்பலியியற்கைத்திருச்செங்குன்றூரிற்றிருச்சிற்று
றமர்ந்தநாதனே. (௯)

அமர்ந்தநாதனையவரவராகியவர்க்கருளருளுமம்மானை
அமர்ந்ததண்பழனத்திருச்செங்குன்றூரிற் றிருச்சிற்றாறங்கரையானை
அமர்ந்தசீர்மூவாயிரவர்வேதியர்கள்தம்பதியவனிதேவர்வாழ்வு
அமர்ந்தமாயோனைமுக்கணம்மானைநான்முகனையமர்ந்தேனே. (௧0)

தேனைநன்பாலைக்கன்னலையமுதைத் திருந்துலகுண்டவம்மானை,
வானநான்முகனைமலர்ந்ததண்கொப்பூழ் மலர்மிசைப்படைத்தமாயோ
னைக், கோனைவண்குருகூர்வண்சடகோபன்சொன்னவாயிரத்துளிப்ப
த்தும், வானின்மேலேற்றியருள்செய்துமுடிக்கும்பிறவிமாமாயக்கூத்தி
னையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௭௪-இ-பாசுரம்-௮௧௪.

௫ - வது. மாய.

இவ்வாறு பயம்போக்கினதெல்லாம் மானஸாநுபவ மாத்ரமாகையால் பாஹ்யஸம்ச்லேஷ அபேக்ஷையாலே முன்புண்டான ப்ரீதியெல்லாம்போய் பயப்படப்பட்ட ஸர்வேச்வரனைக்குறித்து ப்ரத்யக்ஷமாக வேணுமென்று தாமும் தம்முடைய இந்த்ரியமுங் கூப்பிட்டதாக வருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம் பண்-பழம்பஞ்சுரம்-தாளம்-ஏழொத்து.

மாயக்கூத்தாவாமனாவினையேன்கண்ணாகண்கைகால்
தூயசெய்யமலர்களாச்சோதிச்செவ்வாய்முகிழதா
சாயச்சாயத்திருமேனித்தண்பாசடையாத்தாமரைநீள்
வாசத்தடம்போல்வருவானேயொருநாள்காணவாராயே. (௧)

காணவாராயென்றென்றுகண்ணும்வாயுந்துவர்ந்தடியேன்
நாணிநன்னாட்டலமந்தாலிரங்கியொருநாணீயந்தோ
காணவாராய்கருநாயிறுதிக்குங்கருமாமாணிக்க
நாணன்மலைபோல்சுடர்ச்சோதிமுடிசேர்சென்னியம்மானே. (௨)

முடிசேர்சென்னியம்மாநின்மொய்பூந்தாமத்தண்டுழாய்
கடிசேர்கண்ணிப்பெருமானேயென்றென்றேங்கியழுதக்கால்
படிசேர்மகரக்குழைகளும்பவளவாயுநாற்றோளுந்
துடிசேரிடையுமமைந்ததோர்தூநீர்முகில்போற்றோன்றாயே. (௩)

தூநீர்முகில்போற்றோன்றுநின்சுடர்கொள்வடிவுங்கனிவாயுந்
தேநீர்க்கமலக்கண்களும்வந்தென்சிந்தைநிறைந்தவா
மாநீர்வெள்ளிமலைதன்மேல்வண்கார்நீலமுகில்போலத்
தூநீர்க்கடலுட்டுயில்வானேயெந்தாய்சொல்லமாட்டேனே. (௪)

சொல்லமாட்டேனடியேனுன்றுளங்குசோதித்திருப்பாதம்
எல்லையிற்சீரிளநாயிறிரண்டுபோலென்னுள்ளவா
அல்லலென்னுமிருள்சேர்தற்குபாயமென்னேயாழிசூழ்
மல்லைஞாலமுழுதுண்டமாநீர்க்கொண்டல்வண்ணனே. (௫)

கொண்டல்வண்ணாகுடக்கூத்தாவினையேன்கண்ணாகண்ணாவென்
அண்டவாணாவென்றென்னையாளக்கூப்பிட்டழைத்தக்கால்
விண்டன்மேற்றோன்றுமண்மேற்றுஞ்சிமிர்கடற்றுன்மற்றுந்தான்
தொண்டேனுன்கழல்காணவொருநாள்வந்துதோன்றாயே. (௬)

வந்துதோன்றாயன்றேலுன்வையந்தாயமலரடிக்கீழ்
முந்திவந்தியானிற்பமுகப்பேகூவிப்பணிகொள்ளாய்
செந்தண்கமலக்கண்கைகால்சிவந்தவாயோர்கருநாயி
றந்தமில்லாக்கதிர்பரப்பியலர்ந்ததொக்குமம்மானே. (௭)

ஒக்குமம்மானுருவமென்றுள்ளங்குழைந்துநாணாளுந்
தொக்கமேகப்பல்குழாங்கள்காணுந்தோறுந்தொலைவன்றான்
தக்கவைவர்தமக்காயன்றீரைம்பதின்மர்தாள்சாயப்
புக்கநற்றேர்த்தனிப்பாகாவாராயிதுவோபொருத்தமே. (௮)

இதுவோபொருத்தமின்னாழிப்படையாயேறுமிருஞ்சிறைப்புள்
அதுவேகொடியாவுயர்த்தானேயென்றென்றேங்கியழுதக்கால்
எதுவேயாகக்கருதுங்கொலிம்மாஞாலம்பொறைதீர்ப்பான்
மதுவார்சோலையுத்தரமதுராப்பிறந்தமாயனே. (௯)

பிறந்தமாயாபாரதம்பொருதமாயாநீயின்னே
சிறந்தகால்தீநீர்வான்மண்பிறவுமாயபெருமானே
கறந்தபாலுண்ணெய்யேபோலிவற்றுளெங்குங்கண்டுகொள்
இறந்துநின்றபெருமாயாவுன்னையெங்கேகாண்கேனே. (௧௦)

எங்கேகாண்கேனீன்றுழாயம்மான்றன்னையானென்றென்று
அங்கேதாழ்ந்தசொற்களாலந்தண்குருகூர்ச்சடகோபன்
செங்கேழ்சொன்னவாயிரத்துளிவையும்பத்தும்வல்லார்கள்
இங்கேகாணவிப்பிறப்பேமகிழ்வரெல்லியுங்காலையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

அ. திருவாய்மொழி-எரு-ஐ-பாசுரம்-அஉஎ.

அ - ௬ தி. எல்லியும்.

ஆழ்வார் தம்மாலுகப்பிக்கையில் ஆழ்வாரைக்காட்டில் ஈச்வரனுக்கு ஆழ்வார்
இடத்தில் திருவுள்ள அதிசயம் ஆக்ரோசம்பண்ணுமதுக்கு முன்னேயும்
தோ பின்னேயென்று வஸ்தித்த ஆழ்வாராத்திருமேனி வகை
வைத்தாளுக்கோடே அதுதானாகப்போருமென்று மோவுதீபடிரெ
ன்று திருக்கடித்தானத் திருப்பதியில் சேவித்தருளின
தரித்து பரிஜ் வாத்தித்தவா ரே முகங்காட்டுமேவ
மென் திருத்தலத்தை டாழ்வார் பிரியமே
ரத்தை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-வியந்தம்-தாளம்-எழுத்து.

எல்லியுங்காலையுந்தன்னைநினைந்தெழ
நல்லவருள்கள்நமக்கேதந்தருள்செய்வான்

அல்லியந்தண்ணந்துழாய்முடியப்பனூர்
செல்வர்கள்வாழுந்திருக்கடித்தானமே. (௧)

திருக்கடித்தானமுமென்னுடைச்சிந்தையும்
ஒருக்கடுத்துள்ளேயுறையும்பிரான்கண்டீர்
செருக்கடுத்தன்றுதிகைத்தவரக்கரை
உருக்கெடவாளிபொழிந்தவொருவனே. (௨)

ஒருவரிருவரோர்மூவரெனநின்று
உருவுகரந்துள்ளுந்தோறுந்தித்திப்பான்
திருவமர்மார்பன்றிருக்கடித்தானத்தை
மருவியுறைகின்றமாயப்பிரானே. (௩)

மாயப்பிரானெனவல்வினைமாய்ந்தற
நேசத்தினால்நெஞ்சநாடுகுடிகொண்டான்
தேசத்தமரர்திருக்கடித்தானத்தை
வாசப்பொழில்மன்னுகோயில்கொண்டானே. (௪)

கோயில்கொண்டான்றன்திருக்கடித்தானத்தைக்
கோயில்கொண்டானதனோடுமென்னெஞ்சகங்
கோயில்கொள்தெய்வமெல்லாந்தொழவைகுந்தங்
கோயில்கொண்டகுடக்கூத்தவம்மானே. (௫)

கூத்தவம்மான்கொடியேனிடர்முற்றவும்
மாய்த்தவம்மான்மதுசூதவம்மானுறை
பூத்தபொழிற்றண்திருக்கடித்தானத்தை
ஏத்தநில்லாகுறிக்கொண்மினிடரே. (௬)

கொண்மினிடர்கெடவுள்ளத்துக்கோவிந்தன்
மண்விண்முழுதுமளந்தவொண்டாமரை
மண்ணவர்தாந்தொழவானவர்தாம்வந்து
நண்ணுதிருக்கடித்தானநகரே. (௭)

தானநகர்கள்தலைச்சிறந்தெங்கெங்கும்
வானிந்நிலங்கடல்முற்றுமெம்மாயற்கே
ஆனவிடத்துமென்னெஞ்சந்திருக்கடித்
தானநகருந்தனதாயப்பதியே. (௮)

தாயப்பதிகள்தலைச்சிறந்தெங்கெங்கும்
மாயத்தினால்மன்னிவீற்றிருந்தானுறை
தேசத்தமர்திருக்கடித்தானத்துள்
ஆயர்க்கதிபதியற்புதன்றானே. (௯)

அற்புதன்நாராயணனரிவாமனன்
நிற்பதுமேவியிருப்பதென்னெஞ்சகம்
நற்புகழ்வேதியர்நான்மறைநின்றதிர்
கற்பகச்சோலைத்திருக்கடித்தானமே. (௰)

சோலைத்திருக்கடித்தானத்துறைதிரு
மாலைமதிட்குருகூர்ச்சடகோபன்சொல்
பாலோடமுதன்னவாயிரத்திப்பத்தும்
மேலைவைகுந்தத்திருத்தும்வியக்கவே. (௰௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆறாந்திருவாய்மொழி ௭௬-இ-பாசுரம்-௮௮.

---

௭ - வது: இருத்தும்.

திருக்கடித்தானத்தில் ஸர்வேச்வரன் ஆழ்வார்மனோரதமெல்லாம் தீரும்படி வந்திருக்க இது ஸ்வப்னமோ மோஹமோவென் றுசங்கித்து இது ஸ்வப்னமன்று யதார்த்தமென்றுதெரிந்து அதிப்ரீதி யடைந்ததை யருளிச்செய்கிறார்.

கலிவிருத்தம்-பண்-இந்தளம்-தாளம்-ஏழொத்து.

இருத்தும்வியந்தென்னைத்தன்பொன்னடிக்கீழென்று
அருத்தித்தெனைத்தோர்பலநாளழைத்தேற்கு
பொருத்தமுடைவாமனன்றான்புகுந்தென்றன்
கருத்தையுறவீற்றிருந்தான்கண்டுகொண்டே. (௧)

இருந்தான்கண்டுகொண்டெனதேழைநெஞ்சாளும்
திருந்தாதவோரைவரைத்தேய்ந்தறமன்னிப்
பெருந்தாட்களிற்றுக்கருள்செய்தபெருமான்
தருந்தானருள்தானினியானறியேனே. (௨)

அருள்தானினியானறியேனவனென்னுள்
இருள்தானறவீற்றிருந்தானிதுவல்லால்
பொருள்தானெனில்மூவுலகும்பொருளல்ல
மருள்தானீதோமாயமயக்குமயக்கே. (௩)

மாயமயக்குமயக்கானென்னைவஞ்சித்து
ஆயனமரர்க்கரியேறெனதம்மான்

தூயசுடர்ச்சோதிதனதென்னுள்வைத்தான்
தேசந்திகழுந்தன்திருவருள்செய்தே. (௪)

திகழுந்தன்திருவருள்செய்துலகத்தார்
புகழும்புகழ்தானதுகாட்டித்தந்தென்னுள்
திகழும்மணிக்குன்றமொன்றேயொத்துநின்றான்
புகழும்புகழ்மற்றெனக்குமோர்பொருளே. (௫)

பொருள்மற்றெனக்குமோர்பொருள்தன்னிற்சீர்க்கத்
தருமேற்பின்னையார்க்கவன்றன்னைக்கொடுக்கும்
கருமாணிக்கக்குன்றத்துத்தாமரைபோல்
திருமார்புகால்கண்கைசெவ்வாயுந்தியானே. (௬)

செவ்வாயுந்திவெண்பற்சுடர்க்குழைதம்மோடு
எவ்வாய்ச்சுடருந்தம்மில்முன்வளாய்க்கொள்ளச்
செவ்வாய்முறுவலோடெனதுள்ளத்திருந்த
அவ்வாயன்றியானறியேன்மற்றருளே. (௭)

அறியேன்மற்றருளென்னையாளும்பிரானார்
வெறிதேயருள்செய்வர்செய்வார்கட்குகந்து
சிறியேனுடைச்சிந்தையுள்மூவுலகுந்தன்
நெறியாவயிற்றிற்கொண்டுநின்றொழிந்தாரே. (௮)

வயிற்றிற்கொண்டுநின்றொழிந்தாருமெவரும்
வயிற்றிற்கொண்டுநின்றொருமூவுலகுந்தம்
வயிற்றிற்கொண்டுநின்றவண்ணம்நின்றமாலை
வயிற்றிற்கொண்டுமன்னவைத்தேன்மதியாலே. (௯)

வைத்தேன்மதியாலெனதுள்ளத்தகத்தே
எய்த்தேயொழிவேனல்லேனென்றுமெப்போதும்
மொய்த்தேய்திரைமோதுதண்பாற்கடலுளான்
பைத்தேய்சுடர்ப்பாம்பணைநம்பரனையே. (௰)

சுடர்ப்பாம்பணைநம்பரனைத்திருமாலை
அடிச்சேர்வகைவண்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்னவாயிரத்திப்பத்துஞ்சன்மம்
விடத்தேய்ந்தறநோக்குந்தன்கண்கள்சிவந்தே. (௰௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஏழாந்திருவாய்மொழி ௭௭-இ-பாசுரம்-௮௯.

அ - வது. கண்கள்.

ஸ்ரீயப்பதியினுடைய ஸர்வஸ்வாமித்வத்தை
அருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண்-தக்கேசி-தாளம்-ஏழொத்து.

கண்கள்சிவந்துபெரியவாய்வாயுஞ்சிவந்துகனிந்துள்ளே
வெண்பலிலகுசுடரிலகுவிலகுமகரகுண்டலத்தன்
கொண்டல்வண்ணன்சுடர்முடியன்நான்குதோளன்குனிசார்ங்கன்
ஒண்சங்கதைவாளாழியானொருவனடியேனுள்ளானே. (௧)

அடியேனுள்ளானுடலுள்ளானண்டத்தகத்தான்புறத்துள்ளான்
படியேயிதுவென்றுரைக்கலாம்படியனல்லன்பரம்பரன்
கடிசேர்நாற்றத்துள்ளாலையின்பத்துன்பக்கழிநேர்மை
ஒடியாவின்பப்பெருமையோனுணர்விலும்பரொருவனே. (௨)

உணர்விலும்பரொருவனையவனதருளாலுறற்பொருட்டென்
உணர்வினுள்ளேயிருத்தினேனதுவுமவனதின்னருளே
உணர்வுமுயிருமுடம்புமற்றுலப்பிலனவும்பழுதேயாம்
உணர்வைப்பெறவூர்ந்திறவேறியானுந்தானாயொழிந்தானே. (௩)

யானுந்தானாயொழிந்தானையாதுமெவர்க்குமுன்னோனைத்
தானுஞ்சிவனும்பிரமனுமாகிப்பணைத்ததனிமுதலைத்
தேனும்பாலுங்கன்னலுமமுதுமாகித்தித்தித்தென்
னூனிலுயிரிலுணர்வினில்நின்றவொன்றையுணர்ந்தேனே. (௪)

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுண்நேர்மையதுவிதுவென்று
ஒன்றுமொருவர்க்குணரலாகாதுணர்ந்துமேலுங்காண்பரிது
சென்றுசென்றுபரம்பரமாயாதுமின்றித்தேய்ந்தற்று
நன்றுதீதென்றறிவரிதாய்நன்றாய்ஞானங்கடந்ததே. (௫)

நன்றாய்ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியமெல்லாமீர்த்து
ஒன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பத்துன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்றால்
அன்றேயப்போதேவீடதுவேவீடுவீடாமே. (௬)

அதுவேவீடுவீடுபேற்றின்பந்தானுமதுதேறி
எதுவேதானும்பற்றின்றியாதுமிலிகளாகிற்கில்
அதுவேவீடுவீடுபேற்றின்பந்தானுமதுதேறாது
எதுவேவீடேதின்பமென்றெய்த்தாரெய்த்தாரெய்த்தாரே. (௭)

எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்றில்லத்தாரும்புறத்தாரும்
மொய்த்தாங்கலறிமுயங்கத்தாம்போகும்போதுன்மத்தர்போற்
பித்தேயேறியனுராகம்பொழியும்போதெம்பெம்மானோடு
ஒத்தேசென்றங்குள்ளங்கூடக்கூடிற்றாகில்நல்லுறைப்பே. (௮)

கூடிற்றாகில்நல்லுறைப்புக்கூடாமையைக்கூடினால்
ஆடற்பறவையுயர்கொடியெம்மாயனாவததுவதுவே
வீடைப்பண்ணியொருபரிசேயெதிர்வும்நிகழ்வுங்கழிவுமாய்
ஓடித்திரியும்யோகிகளுமுளருமில்லையல்லரே. (௯)

உளருமில்லையல்லராயுளராயில்லையாகியே
உளரெம்மொருவரவர்வந்தென்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்
வளரும்பிறையுந்தேய்பிறையும்போலவசைவுமாக்கமும்
வளருஞ்சுடருமிருளும்போல்தெருளும்மருளும்மாய்த்தோமே. (௧௦)

தெருளும்மருளும்மாய்த்துத்தன்திருந்துசெம்பொற்கழலடிக்கீழ்
அருளியிருத்துமம்மானாமயனாம்சிவனாம்திருமாலால்
அருளப்பட்டசடகோபனோராயிரத்துளிப்பத்தால்
அருளியடிக்கீழிருத்துநம்மண்ணல்கருமாணிக்கமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆகத் திருவாய்மொழி-௭௭-பாசுரம்-௮௪௭.

௯ - வது. கருமாணிக்கம்.

[illegible]

ஆசிரியவிருத்தம்-பண்-தக்கேசி-தாளம்-ஏழொத்து.

கருமாணிக்கமலைமேல்மணித்தடந்தாமரைக்காடுகள்போல்
திருமார்புவாய்கண்கையுந்திகாலுடையாடைகள்செய்யபிரான்
திருமாலெம்மான்செழுநீர்வயற்குட்டநாட்டுத்திருப்புலியூர்
அருமாயன்பேரன்றிப்பேச்சிலளன்னைமீரிதற்கென்செய்கேனோ. (௧)

அன்னைமீரிதற்கென்செய்கேனணிமேருவின்மீதுலவும்
துன்னுசூழ்சுடர்ஞாயிறுமன்றியும்பல்சுடர்களும்போல்
மின்னுநீள்முடியாரம்பல்கலன்தானுடையெம்பெருமான்
புன்னையம்பொழில்சூழ்திருப்புலியூர்புகழுமிவளே. (௨)

புகழுமிவள்நின்றிராப்பகற்பொருநீர்க்கடற்றீப்பட்டெங்கும்
திகழுமெரியொடுசெல்வதொப்பச்செழுங்கதிராழிமுதற்
புகழும்பொருபடையேந்திப்போர்புக்கசுரரைப்பொன்றுவித்தான்
திகழுமணிநெடுமாடநீடுதிருப்புலியூர்வளமே. (௩)

ஊர்வளங்கிளர்சோலையுங்கரும்பும்பெருஞ்செந்நெலுஞ்சூழ்ந்
தேர்வளங்கிளர்தண்பணைக்குட்டநாட்டுத்திருப்புலியூர்
சீர்வளங்கிளர்மூவுலகுண்டுமிழ்ந்தேவபிரான்
பேர்வளங்கிளர்ந்தன்றிப்பேச்சிலளின்றிப்புனையிழையே. (௪)

புனையிழைகளணிவுமாடையுடையும்புதுக்கணிப்பும்
நினையுந்நீர்மையதன்றிவட்கிதுநின்றுநினைக்கப்புக்காற்
சுனையினுட்டடந்தாமரைமலருந்தண்திருப்புலியூர்
முனைவன்மூவுலகாளியப்பன்திருவருண்மூழ்கினளே. (௫)

திருவருண்மூழ்கிவைகலுஞ்செழுநீர்நிறக்கண்ணபிரான்
திருவருள்களுஞ்சேர்ந்தமைக்கடையாளந்திருந்தவுள
திருவருளருளாலவன்சென்றுசேர்தண்திருப்புலியூர்
திருவருட்கமுகொண்பழத்ததுமெல்லியல்செவ்விதழே. (௬)

வெய்யவிரிச்செல்வவன்கொடிப்புள்கவிக்கிளக்காட்கமுகின்
மல்லிலைமடல்வாழையீன்கனிசூழ்ந்துமணங்கமழ்ந்து
புல்லிலைத்தெங்கினூடுகாலுலவுந்தண்திருப்புலியூர்
மல்லலஞ்செல்வக்கண்ணன்றாளடைந்தாளிம்மடவரலே. (௭)

மடவரலன்னைமீர்கட்கென்சொல்லிச்சொல்லுகேன்மல்லைச்செல்வ
வடமொழிமறைவாணர்வேள்வியுள்நெய்யழல்வான்புகைபோய்த்
திடவிசும்பிலமரர்நாட்டைமறைக்குந்தண்திருப்புலியூர்ப்
படவரவணையான்றன்னாமமல்லால்பரவாளிவளே. (௮)

பரவாளிவள்நின்றிராப்பகற்பனிநீர்நிறக்கண்ணபிரான்
விரவாரிசைமறைவேதியரொலிவேலையின்நின்றொலிப்பக்
கரவார்தடந்தொறுந்தாமரைக்கயத்தீவிகைநின்றலரும்
புரவார்கழனிகள்சூழ்திருப்புலியூர்ப்புகழன்றிமற்றே. (௯)

அன்றிமற்றோருபாயமென்னிவளந்தண்டுழாய்கமழ்தல்
குன்றமாமணிமாடமாளிகைக்கோலக்குழாங்கண்மல்கித்
தென்றிசைத்திலதம்புரைக்குட்டநாட்டுத்திருப்புலியூர்
நின்றமாயப்பிரான்றிருவருளாமிவணேர்பட்டதே. (௧௦)

நேர்பட்டநிறைமூவுலகுக்குநாயகன்றனடிமை
நேர்பட்டதொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன்சொல்
நேர்பட்டதமிழ்மாலையாயிரத்துள்ளிவைபத்தும்
நேர்பட்டாரவர்நேர்பட்டார்நெடுமாற்கடிமைசெய்யவே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௭௯-க்கு-பாசுரம்-௮௬௯.

௮-ம் ௰-ம். நெடுமால்.

இதுவுமது.

ஆசிரியவிருத்தம்-பண்-தக்கேசி-தாளம்-ஏழொத்து.

நெடுமாற்கடிமைசெய்வேன்போலவனைக்கருதவஞ்சித்
தடுமாற்றற்றதீக்கதிகள்முற்றத்தவிர்ந்தசதிர்நினைந்தாற்
கொடுமாவினையேனவனடியாரடியேகூடுமிதுவல்லால்
விடுமாறென்பதென்னந்தோவியன்மூவுலகுபெறினுமே. (௧)

வியன்மூவுலகுபெறினும்போய்த்தானேதானேயானாலும்
புயன்மேகம்போற்றிருமேனியம்மான்புனைபூங்கழலடிக்கீழ்ச்
சயமேயடிமைதலைநின்றார்திருத்தாள்வணங்கியிம்மையே
பயனேயின்பம்யான்பெற்றதுறுமோபாவியேனுக்கே. (௨)

உறுமோபாவியேனுக்கிவ்வுலகமூன்றுடனிறையச்
சிறுமாமேனிநிமிர்ந்தசெந்தாமரைக்கட்டிருக்குறளன்
நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதலன்றியவனடியார்
சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கேதிரியவே. (௩)

இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்னிருமாநிலமுன்னுண்டுமிழ்ந்த
செங்கோலத்தபவளவாய்ச்செந்தாமரைக்கண்ணென்னம்மான்
பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப்புலன்கொள்வடிவென்மனத்ததாய்
அங்கேய்மலர்கள்கையவாய்வழிபட்டோடவருளிலே. (௪)

வழிபட்டோடவருள்பெற்றுமாயன்கோலமலரடிக்கீழ்ச்
சுழிபட்டோடுஞ்சுடர்ச்சோதிவெள்ளத்தின்புற்றிருந்தாலும்
இழிபட்டோடுமுடலினிற்பிறந்துதன்சீர்யான்கற்று
மொழிபட்டோடுங்கவியமுதநுகர்ச்சியுறுமோமுழுதுமே. (௫)

நுகர்ச்சியுறுமோமூவுலகின்வீடுபேறுதன்கேழில்
புகர்ச்செம்முகத்தகளிறட்டபொன்னாழிக்கையென்னம்மான்
நிகர்ச்செம்பங்கியெரிவிழிகள்நீண்டவசுரருயிரெல்லாந்
தகர்த்துண்டுழலும்புட்பாகன்பெரியதனிமாப்புகழே. (௬)

தனிமாப்புகழேயெஞ்ஞான்றுநிற்கும்படியாத்தான்றோன்றி
முனிமாப்பிரமமுதல்வித்தாயுலகுமூன்றும்முளைப்பித்த
தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப்புகுதலன்றியவனடியார்
நனிமாக்கலவியின்பமேநாளும்வாய்க்கநங்கட்கே. (௭)

நாளும்வாய்க்கநங்கட்குநளிர்நீர்க்கடலைப்படைத்துதன்
தாளுந்தோளும்முடிகளுஞ்சமனிலாதபலபரப்பி
நீளும்படர்பூங்கற்பகக்காவும்நிறைபன்னாயிற்றின்
கோளுரையுடையமணிமலைபோற்கிடந்தான்றமர்கள்கூட்டமே. (௮)

தமர்கள்கூட்டவல்வினையைநாசஞ்செய்யுஞ்சதுமூர்த்தி
அமர்கொளாழிசங்குவாள்விற்றண்டாதிபல்படையன்
குமரன்கோலவைங்கணைவேள்தாதைகோதிலடியார்தந்
தமர்கள்தமர்கள்தமர்களாஞ்சதிரேவாய்க்கதமியேற்கே. (௯)

வாய்க்கதமியேற்கூழிதோறூழியூழிமாகாயாம்
பூக்கொள்மேனிநான்குதோட்பொன்னாழிக்கையென்னம்மான்
நீக்கமில்லாவடியார்தம்மடியாரடியாரடியாரெங்
கோக்களவர்க்கேகுடிகளாய்ச்செல்லும்நல்லகோட்பாடே. (௧௦)

நல்லகோட்பாட்டுலகங்கள்மூன்றினுள்ளுந்தானிறைந்த
அல்லிக்கமலக்கண்ணனையந்தண்குருகூர்ச்சடகோபன்
சொல்லப்பட்டவாயிரத்துளிவையும்பத்தும்வல்லார்கள்
நல்லபதத்தால்மனைவாழ்வர்கொண்டபெண்டிர்மக்களே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

எட்டாம்பத்து முற்றிற்று.

ஆகப்பத்து-அல்-திருவாய்மொழி-அ௰-இ-பாசுரம்-அ௲உ.

ஒன்பதாம்பத்து.

க - வது - கொண்ட.

ஸர்வருக்குச் சேதனன்செய்யும் நித்யகைங்கர்யத்தை
அருளிச்செய்கிறார்.

ஆசிரியவிருத்தம்-பண்-பழந்தக்கராகம் தாளம்-ஏகதாளம்.

கொண்டபெண்டிர்மக்களுற்றார்சுற்றத்தவர்பிறரும்
கண்டதோடுபட்டதல்லாற்காதல்மற்றியாதுமில்லை
எண்டிசையுங்கீழும்மேலும்முற்றவுண்டபிரான்
தொண்டரோமாயுய்யலல்லாலில்லைகண்டீர்துணையே. (௧)

துணையுஞ்சார்வுமாகுவார்போற்சுற்றத்தவர்பிறரும்
அணையவந்தவாக்கமுண்டேலட்டைகள்போற்சுவைப்பர்
கணையொன்றாலேயேழ்மரமுமெய்தவெங்கார்முகிலைப்
புணையென்றுய்யப்போகிலல்லாலில்லைகண்டீர்பொருளே. (௨)

பொருள்கையுண்டாய்ச்செல்லக்காணிற்போற்றியென்றேற்றெழுவர்
இருள்கொள்துன்பத்தின்மைகாணிலென்னேயென்பாருமில்லை
மருள்கொள்செய்கையசுரர்மங்கவடமதுரைப்பிறந்தாற்
கருள்கொளாளாயுய்யலல்லாலில்லைகண்டீரரணே. (௩)

அரணமாவரற்றகாலைக்கென்றென்றமைக்கப்பட்டார்
இரணங்கொண்டதெப்பராவரின்றியிட்டவந்நேரத்து
வருணித்தென்னேவடமதுரைப்பிறந்தவன்வண்புகழே
சரணென்றுய்யப்போகிலல்லாலில்லைகண்டீர்சதிரே. (௪)

சதிரமென்றுதம்மைத்தாமேசம்மதித்தின்மொழியார்
மதுரபோகந்துற்றவரேவைகிமற்றொன்றுறுவர்
அதிர்கொள்செய்கையசுரர்மங்கவடமதுரைப்பிறந்தாற்
கெதிர்கொளாளாயுய்யலல்லாலில்லைகண்டீரின்பமே. (௫)

இல்லைகண்டீரின்பமந்தோவுள்ளதுநினையாதே
தொல்லையார்களெத்தனைவர்தோன்றிக்கழிந்தொழிந்தார்
மல்லைமூதூர்வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே
சொல்லியுய்யப்போகிலல்லால்மற்றொன்றில்லைசுருக்கே. (௬)

மற்றொன்றில்லைசுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்குஞ்
சிற்றவேண்டாசிந்திப்பேயமையுங்கண்டீர்களந்தோ
குற்றமன்றெங்கள்பெற்றத்தாயன்வடமதுரைப்பிறந்தான்
குற்றமில்சீர்கற்றுவைகல்வாழ்தல்கண்டீர்குணமே. (௭)

வாழ்தல்கண்டீர்குணமிதந்தோமாயவனடிபரவிப்
போழ்துபோகவுள்ளகிற்கும்புன்மையிலாதவர்க்கும்
வாழ்துணையாவடமதுரைப்பிறந்தவன்வண்புகழே
வீழ்துணையாப்போமிதனில்யாதுமில்லைமிக்கதே. (௮)

யாதுமில்லைமிக்கதனிலென்றன்றதுகருதிக்
காதுசெய்வான்கூதைசெய்துகடைமுறைவாழ்க்கையும்போம்
மாதுகிலின்கொடிக்கொள்மாடவடமதுரைப்பிறந்த
தாதுசேர்தோட்கண்ணனல்லாலில்லைகண்டீர்சரணே. (௯)

கண்ணனல்லாலில்லைகண்டீர்சரணதுநிற்கவந்து
மண்ணின்பாரம்நீக்குதற்கேவடமதுரைப்பிறந்தான்
திண்ணமாநும்முடைமையுண்டேலவனடிசேர்த்துய்ம்மினோ
எண்ணவேண்டாநும்மதாதுமவனன்றிமற்றில்லையே. (௧௦)

ஆதுமில்லைமற்றவனிலென்றதுவேதுணிந்து
தாதுசேர்தோட்கண்ணனைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
தீதிலாதவொண்டமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்
ஓதவல்லபிராக்கள்நம்மையாளுடையார்கள்பண்டே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ திருவாய்மொழி-௮௧ = ௯ - பாசுரம்-௮௯௧.

---

௨ - ம் திரு. பண்டை.

இ ச வ ம ஆ.

ஆசிரியவிருத்தம் பண்-புறநீர்மை-தாளம்-ஒரபடதாளம்.

பண்டைநாளாலேநின்றிருவருளும் பங்கயத்தாள்திருவருளுங்
கொண்டுநின்கோயில்சீய்த்துப்பல்படிகால்குடிகுடிவழிவந்தாட்செய்யு
ந், தொண்டரோர்க்கருளிச்சோதிவாய்திறந்துன் றாமரைக்கண்களால்
நோக்காய், தெண்டிரைப்பொருநற்றண்பணைசூழ்ந்ததிருப்புளிங்குடிக்
கிடந்தானே. (௧)

குடிக்கிடந்தாக்கஞ்செய்துநின்றீர்த்த வடிமைக்குற்றேவல்செய்
துன்பொன், அடிக்கடவாதேவழிவருகின்றவடியரோர்க்கருளிநீயொரு
நாள், படிக்களவாகநிமிர்த்தநின்பாதபங்கயமேதலைக்கணியாய், கொடி
க்கொள்பொன்மதிள்சூழ்குளிர்வயற்சோலைத் திருப்புளிங்குடிக்கிடந்
தானே. (௨)

கிடந்தநாள்கிடந்தாயெத்தனைகாலங் கிடத்தியுன்திருவுடம்பசை
யத், தொடர்ந்துகுற்றேவல்செய்துதொல்லடிமை வழிவருந்தொண்ட
ரோர்க்கருளித், தடங்கொள்தாமரைக்கண்விழித்துநீயெழுந்துன் தாம
ரைமங்கையும்நீயும், இடங்கொள்மூவுலகுந்தொழவிருந்தருளாய் திரு
ப்புளிங்குடிக்கிடந்தானே. (௩)

புளிங்குடிக்கிடந்துவரகுணமங்கையிருந்துவைகுந்தத்துள்நின்று
தெளிந்தவென்சிந்தையகங்கழியாமேயென்னையாள்வாயெனக்கருளி
நளிர்ந்தசீருலகமூன்றுடன்வியப்பநாங்கள்கூத்தாடிநின்றார்ப்பப்
பளிங்குநீர்முகிலின்பவளம்போற்கனிவாய்சிவப்பநீகாணவாராயே. (௪)

பவளம்போற்கனிவாய்சிவப்பநீகாணவந்துநின்பன்னிலாமுத்தந்,
தவழ்கதிர்முறுவல்செய்துநின்றிருக்கண்டாமரைதயங்கநின்றருளாய், ப
வளநன்படர்க்கீழ்ச்சங்குறைபொருநற் றண்டிருப்புளிங்குடிக்கிடந்தா
ய், கவளமாகளிற்றினிடர்கெடத்தடத்துக்காய்சினப்பறவையூர்ந்தானே

காய்சினப்பறவையூர்ந்துபொன்மலையின்மீமிசைக்கார்முகில்போல
மாசினமாலிமாலிமானென்றங்கவர்படக்கனன்றுமுன்னின்ற
காய்சினவேந்தேகதிர்முடியானேகலிவயல்திருப்புளிங்குடியாய்
காய்சினவாழிசங்குவாள்வில்தண்டேந்தியெம்மிடர்கடிவானே. (௬)

எம்மிடர்கடிந்திட்டென்னையாள்வானே இமையவர்தமக்குமாங்கனை
யாய், செம்மடல்மலருந்தாமரைப்பழனத்தண்டிருப்புளிங்குடிக்கி
டந்தாய், நம்முடையடியர்கவ்வைகண்டுகந்து நாங்களித்துளநலங்கூர,
இம்மடவுலகர்காணநீயொருநாளிருந்திடாயெங்கள்கண்முகப்பே. (௭)

எங்கள்கண்முகப்பேயுலகர்களெல்லாமிணையடிதொழுதெழுதிறைஞ்
சித், தங்களன்பாரத்தமதுசொல்வலத்தால்தலைத்தலைச்சிறந்துபூசிப்
பத், திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய்த்திருவைகுந்தத்துள்ளாய்
தேவா, இங்கண்மாஞாலத்திதனுளுமொருநாள் இருந்திடாய்வீற்றிடங்
கொண்டே. (௮)

வீற்றிடங்கொண்டுவியன்கொண்மாஞாலத்திதனுளுமிருந்திடாயடியோ
ம், போற்றியோவாதேகண்ணிணைகுளிரப்புதுமலராகத்தைப்பருக

ருகச், சேற்றிளவாளைச்செந்நெலூடுகளுஞ்செழும்பணைத்திருப்புளிங்குடியாய், கூற்றமாயசுரர்குலமுதலரிந்த கொடுவினைப்படைகள்வல்லானே. (௯)

கொடுவினைப்படைகள்வல்லையாயமரர்க்கிடர்கெடவசுரர்கட்கிடர்செய் கடுவினைநஞ்சேயென்னுடையமுதே கலிவயற்றிருப்புளிங்குடியாய் வடிவிணையில்லாமலர்மகள்மற்றைநிலமகள்பிடிக்குமெல்லடியைக் கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள்கூவுதல்வருதல்செய்யாயே. ()

கூவுதல்வருதல்செய்திடாயென்றுகுரைகடல்கடைந்தவன்றன்னை மேவிநன்கமர்ந்தவியன்புனற்பொருநல்வழுதிநாடன்சடகோபன் நாவியல்பாடலாயிரத்துள்ளிவையும்பத்தும்வல்லார்கள் ஓவுதலின்றியுலகம்மூன்றளந்தானடியிணையுள்ளத்தோர்வாரே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி அ௨-இ-பாசுரம்-௧௦௭.

௩ - வது. ஓராயிரம்.

இ ர வு ம து.

கலிவிருத்தம்-பண்-காந்தாரம்-தாளம்-வரோத்து.

ஓராயிரமாயுலகேழளிக்கும்
பேராயிரங்கொண்டதோர்பீடுடையன்
காராயினகாளநன்மேனியினன்
நாராயணன்நங்கள்பிரானவனே. (௧)

அவனேயகல்ஞாலம்படைத்திடந்தான்
அவனேயஃதுண்டுமிழ்ந்தானளந்தான்
அவனேயவனுமவனுமவனும்
அவனேமற்றெல்லாமுமறிந்தனமே. (௨)

அறிந்தனவேதவரும்பொருணூல்கள்
அறிந்தனகொள்கவரும்பொருளாதல்
அறிந்தனரெல்லாமரியைவணங்கி
அறிந்தனர்நோய்களறுக்குமருந்தே. (௩)

மருந்தேநங்கள்போகமகிழ்ச்சிக்கென்று
பெருந்தேவர்குழாங்கள்பிதற்றும்பிரான்

கருந்தேவனெம்மான்கண்ணன்விண்ணுலகம்
தருந்தேவனைச்சோரேற்கண்டாய்மனமே. (௪)

மனமேயுன்னைவல்வினையேனிரந்து
கனமேசொல்லினேனிதுசோரேற்கண்டாய்
புனமேவியபூந்தண்டுழாயலங்கல்
இனமேதுமிலானையடைவதுமே. (௫)

அடைவதுமணியார்மலர்மங்கைதோள்
மிடைவதுமசுரர்க்குவெம்போர்களே
கடைவதுங்கடலுளமுதமென்மனம்
உடைவதுமவற்கேயொருங்காகவே. (௬)

ஆகஞ்சேர்நரசிங்கமதாகியோர்
ஆகம்வள்ளுகிரால்பிளந்தானுறை
மாகவைகுந்தங்காண்பதற்கென்மனம்
ஏகமெண்ணுமிராப்பகலின்றியே. (௭)

இன்றிப்போகவிருவினையுங்கெடுத்
தொன்றியாக்கைபுகாமையுய்யக்கொள்வான்
நின்றவேங்கடநீணிலத்துள்ளது
சென்றுதேவர்கள்கைதொழுவார்களே. (௮)

தொழுதுமாமலர்நீர்சுடர்தூபங்கொண்
டெழுதுமென்னுமிதுமிகையாதலில்
பழுதில்தொல்புகழ்ப்பாம்பணைப்பள்ளியாய்
தழுவுமாறறியேனுனதாள்களே. (௯)

தாளதாமரையானுனதுந்தியான்
வாள்கொணீண்மழுவாளியுன்னாகத்தான்
ஆளராய்த்தொழுவாருமமரர்கள்
நாளுமென்புகழ்கோனுனசீலமே. (௧௦)

சீலமெல்லையிலானடிமேலணி
கோலநீள்குருகூர்ச்சடகோபன்சொல்
மாலையாயிரத்துள்ளிவைபத்தினின்
பாலர்வைகுந்தமேறுதல்பான்மையே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ. திருவாய்மொழி-அ௩-இ-பாசுரம்-௧௧௮.

ச - வது. மையார்.

இதுவுமது.

கலிவிருத்தம்-பண்-கொல்லி-தாளம்-ஏகதாளம்.

மையார்கருங்கண்ணிகமலமலர்மேற்
செய்யாள்திருமார்வினிற்சேர்திருமாலே
வெய்யார்சுடராழிசுரிசங்கமேந்துங்
கையாவுனைக்காணக்கருதுமென்கண்ணே. (க)

கண்ணேயுன்னைக்காணக்கருதியென்னெஞ்சம்
எண்ணேகொண்டசிந்தையதாய்நின்றியம்பும்
விண்ணோர்முனிவர்க்கென்றுங்காணபரியாயை
நண்ணாதொழியேனென்றுநானழைப்பேனே. (உ)

அழைக்கின்றவடிநாயேன்நாய்கூழைவாலால்
குழைக்கின்றதுபோலவென்னுள்ளக்குழையும்
மழைக்கன்றுகுன்றமெடுத்தாநிரைகாத்தாய்
பிழைக்கின்றதருளென்றுபேதுறுவனே. (௩)

உறுவதிதுவென்றுனக்காட்பட்டுநின்கட்
பெறுவதெதுகொலென்றுபேதையேன்னெஞ்சம்
மறுகல்செய்யும்வானவர்தானவர்க்கென்றும்
அறிவதரியவரியாயவம்மானே. (ச)

அரியாயவம்மானையமரர்பிரானைப்
பெரியானைப்பிரமனைமுன்படைத்தானை
வரிவாளரவினணைப்பள்ளிகொள்கின்ற
கரியான்கழல்காணக்கருதுங்கருத்தே. (ரு)

கருத்தேயுன்னைக்காணக்கருதியென்னெஞ்சத்
திருத்தாகவிருத்தினேன்றேவர்கட்கெல்லாம்
விருத்தாவிளங்குஞ்சுடர்ச்சோதியுயரத்
தொருத்தாவுன்னையுள்ளுமென்னுள்ளமகத்தே. (௬)

உகத்தேயுன்னையுள்ளுமென்னுள்ளத்தகம்பால்
அகத்தானமர்ந்தேயிடங்கொண்டவமலா
மிகத்தானவன்மார்பகலமிருகூறு
நகத்தாய்நரசிங்கமதாயவுருவே. (எ)

உருவாகியவாறுசமயங்கட்கெல்லாம்
பொருவாகிநின்றானவனெல்லாப்பொருட்கும்
அருவாகியவாதியைத்தேவர்கட்கெல்லாம்
கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேனே. (அ)

கண்டுகொண்டென்கண்ணிணையாரக்களித்துப்
பண்டைவினையாயினபற்றோடறுத்துத்
தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்
அண்டத்தமரர்பெருமானடியேனே. (௯)

அடியானிவனென்றெனக்காரருள்செய்யும்
நெடியானைநிறைபுகழஞ்சிறைப்புள்ளின்
கொடியானைக்குன்றாமலுலகமளந்த
அடியானையடியேனடைந்துய்ந்தவாறே. (க0)

ஆறாமதயானையடர்த்தவன்றன்னைச்
சேறார்வயற்றென்குருகூர்ச்சடகோபன்
நூறேசொன்னவோராயிரத்துளிப்பத்தும்
ஏறேதரும்வானவர்தமின்னுயிர்க்கே. (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-அச-ரு-பாசுரம்-கஉள.

ரு - வது. இன்னுயிர்.

இதுவுமது.

கலித்துறைவிருத்தம்-பண்-கொல்லி-தாளம்-ஏகதாளம்.

இன்னுயிர்ச்சேவலும்நீருங்கூவிக்கொண்டிங்கெத்தனை
என்னுயிர்நோவமிழற்றேன்மின்குயிற்பேடைகாள்
என்னுயிர்க்கண்ணபிரானைநீர்வரக்கூவுகிலீர்
என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்குமித்தனைவேண்டுமோ. (க)

இத்தனைவேண்டுவதன்றந்தோவன்றிற்பேடைகாள்
எத்தனைநீருந்நுஞ்சேவலுங்கரைந்தேங்குதிர்
வித்தகன்கோவிந்தன்மெய்யனல்லனொருவர்க்கும்
அத்தனையாமினியென்னுயிரவன்கையதே. (உ)

அவன்கையதேயெனதாருயிரன்றிற்பேடைகாள்
எவஞ்சொல்லிநீர்குடைந்தாடுதிர்புடைசூழவே
தவஞ்செய்திலாவினையாட்டியேனுயிரித்தனை
எவஞ்சொல்லிநின்றுநும்மேங்குகூக்குரல்கேட்டுமே. (௩)

கூக்குரல்கேட்டும்நங்கண்ணன்மாயன்வெளிப்படான்
மேற்கிளைகொள்ளேல்மினீருஞ்சேவலுங்கோழிகாள்
வாக்குமனமுங்கருமமுநமக்காங்கதே
யாக்கையுமாவியுமந்தரம்நின்றுழலுமே. (௪)

அந்தரம்நின்றுழல்கின்றயானுடைப்பூவைகாள்
நுந்திறத்தேதுமிடையில்லைகுழறேன்மினோ
இந்திரஞாலங்கள்காட்டியிவ்வேழுலகுங்கொண்ட
நந்திருமார்பனம்மாவியுண்ணநன்கெண்ணினன். (௫)

நன்கெண்ணிநான்வளர்த்தசிறுகிளிப்பைதலே
இன்குரல்நீமிழற்றேலென்னாருயிர்க்காகுத்தன்
நின்செய்யவாயொக்கும்வாயன்கண்ணன்கைகாலினன்
நின்பசுஞ்சாமநிறத்தன்கூட்டுண்டுநீங்கினான். (௬)

கூட்டுண்டுநீங்கியகோலத்தாமரைக்கட்செவ்வாய்
வாட்டமிலென்கருமாணிக்கங்கண்ணன்மாயன்போல்
கோட்டியவில்லொடுமின்னுமேகக்குழாங்கள்காள்
காட்டேல்மின்னும்முருவென்னுயிர்க்கதுகாலனே. (௭)

உயிர்க்கதுகாலனென்றும்மையானிரந்தேற்குநீர்
குயிற்பைதல்காள்கண்ணன்நாமமேகுழறிக்கொன்றீர்
தயிர்ப்பழஞ்சோற்றொடுபாலடிசிலுந்தந்துசொல்
பயிற்றியநல்வளமூட்டினீர்பண்புடையீரே. (௮)

பண்புடைவண்டொடுதும்பிகாள்பண்மிழற்றேல்மின்
புண்புரைவேல்கொடுகுத்தாலொக்கும்நும்மின்குரல்
தண்பெருநீர்த்தடந்தாமரைமலர்ந்தாலொக்குங்
கண்பெருங்கண்ணனம்மாவியுண்டெழநண்ணினான். (௯)

எழநண்ணிநாமும்வானநாடனோடொன்றினோம்
பழனநன்னாரைக்குழாங்கள்காள்பயின்றென்னினி
இழைநல்லவாக்கையும்பையவேபுயக்கற்றது
தழைநல்லவின்பந்தலைப்பெய்தெங்குந்தழைக்கவே (௰)

இன்பந்தலைப்பெய்தெங்குந்தழைத்தபல்லூழிக்குந்
தன்புகழேத்தத்தனக்கருள்செய்தமாயனைத்
தென்குருகூர்ச்சடகோபன்சொல்லாயிரத்துளிவை
ஒன்பதோடொன்றுக்குமூவுலகுமுருகுமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-அ௱-இ-பாசுரம்-௧௲௭

---

௯ - வது. ௬ - டு.

இன்னமுது.

கலிவிருத்தம் - பண் - கட்டராகம் - தாளம் - ஏழொத்து.

உருகுமால்நெஞ்சமுயிரின்பரமன்றிப்
பெருகுமால்வேட்கையுமென்செய்கேன்றொண்டனேன்
தெருவெல்லாங்காவிகமழ்திருக்காட்கரை
மருவியமாயன்றன்மாயம்நினைதொறே (௧)

நினைதொறுஞ்சொல்லுந்தொறும்நெஞ்சிடிந்துகும்
வினைகொள்சீர்பாடிலும்வேமெனதாருயிர்
சுனைகொள்பூஞ்சோலைத்தென்காட்கரையென்னப்பா
நினைகிலேன்நானுனக்காட்செய்யும்நீர்மையே. (௨)

நீர்மையால்நெஞ்சம்வஞ்சித்துப்புகுந்தென்னை
ஈர்மைசெய்தென்னுயிராயென்னுயிருண்டான்
சீர்மல்குசோலைத்தென்காட்கரையென்னப்பன்
கார்முகில்வண்ணன்றன்கள்வமறிகிலேன். (௩)

அறிகிலேன்றன்னுளனைத்துலகும்நிற்க
நெறிமையால்தானுமவற்றுள்நிற்கும்பிரான்
வெறிகமழ்சோலைத்தென்காட்கரையென்னப்பன்
சிறியவென்னாருயிருண்டதிருவருளே. (௪)

திருவருள்செய்பவன்போலவென்னுள்புகுந்
துருவமுமாருயிருமுடனேயுண்டான்
திருவளர்சோலைத்தென்காட்கரையென்னப்பன்
கருவளர்மேனியென்கண்ணன்கள்வங்களே. (௫)

என்கண்ணன்கள்வமெனக்குச்செம்மாய்நிற்கும்
அங்கண்ணனுண்டவென்னாருயிர்க்கோதிது
புன்கண்மையெய்திப்புலம்பியிராப்பகல்
என்கண்ணனென்றவன்காட்கரையேத்துமே. (௬)

காட்கரையேத்துமதனுட்கண்ணாவென்னும்
வேட்கைநோய்கூரநினைந்துகரைந்துகும்
ஆட்கொள்வானொத்தென்னுயிருண்டமாயனாற்
கோட்குறைபட்டதென்னாருயிர்கோளுண்டே. (௭)

கோளுண்டானன்றிவந்தென்னுயிர்தானுண்டான்
நாளுநாள்வந்தென்னைமுற்றவுந்தானுண்டான்
காளநீர்மேகத்தென்காட்கரையென்னப்பற்
காளன்றேபட்டதென்னாருயிர்பட்டதே. (௮)

ஆருயிர்பட்டதெனதுயிர்பட்டது
பேரிதழ்த்தாமரைக்கட்கனிவாயதோர்
காரெழில்மேகத்தென்காட்கரைக்கோயில்கொள்
சீரெழில்நாற்றடந்தோட்டெய்வவாரிக்கே. (௯)

வாரிக்கொண்டுன்னைவிழுங்குவன்காணிலென்
றார்வுற்றவென்னையொழியவென்னின்முன்னம்
பாரித்துத்தானென்னைமுற்றப்பருகினான்
காரொக்குங்காட்கரையப்பன்கடியனே. (௧௦)

கடியனாய்க்கஞ்சனைக்கொன்றபிரான்றன்னை
கொடிமதிட்டென்குருகூர்ச்சடகோபன்சொல்
வடிவமையாயிரத்திப்பத்தினாற்சன்மம்
முடிவெய்திநாசங்கண்டீர்களெங்காணலே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஆ திருவாய்மொழி-௮௬-இ-பாசுரம்-௯௪௬

௭ - வது - எங்கா.

[illegible]

கலிவிருத்தம் - பண் - காந்தாரம் - தாளம் - ஏழொத்து.

எங்கானலகங்கழிவாயிரைதேர்ந்திங்கினிதமருஞ்
செங்காலமடநாராய்திருமூழிக்களத்துறையுங்

கொங்கார்பூந்துழாய்முடியெங்குடக்கூத்தர்க்கென்றூதாய்
நுங்கால்களென்றலைமேற்கெழுமீரோநுமரோடே. (௧)

நுமரோடும்பிரியாதேநீரும்நுஞ்சேவலுமாய்
அமர்காதற்குருகினங்காளணிமூழிக்களத்துறையும்
எமராலும்பழிப்புண்டிங்கென்றம்மாலிழிப்புண்டு
தமரோடங்குறைவார்க்குத்தக்கிலமேகேளீரே. (௨)

தக்கிலமேகேளீர்கள்தடம்புனல்வாயிரைதேருங்
கொக்கினங்காள்குருகினங்காள்குளிர்மூழிக்களத்துறையுஞ்
செக்கமலத்தலர்போலுங்கண்கைகால்செங்கனிவாய்
அக்கமலத்திலைபோலுந்திருமேனியடிகளுக்கே. (௩)

திருமேனியடிகளுக்குத்தீவினையேன்விடுதூதாய்த்
திருமூழிக்களமென்னுஞ்செழுநகர்வாயணிமுகில்காள்
திருமேனியவட்கருளீரென்றக்காலும்மைத்தன்
திருமேனியொளியகற்றித்தெளிவிசும்புகடியுமே. (௪)

தெளிவிசும்புகடிதோடித்தீவளைத்துமின்னிலகும்
ஒளிமுகில்காள்திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்குத்
தெளிவிசும்புதிருநாடாத்தீவினையேன்மனத்துறையுந்
துளிவார்கட்குழலார்க்கென்றூதுரைத்தல்செப்புமினே. (௫)

தூதுரைத்தல்செப்புமின்கள்தூமொழிவாய்வண்டினங்காள்
போதிரைத்துமதுநுகரும்பொழில்மூழிக்களத்துறையும்
மாதரைத்தம்மார்பகத்தேவைத்தார்க்கென்வாய்மாற்றந்
தூதுரைத்தல்செப்புதிரேற்சுடர்வளையுங்கலையுமே. (௬)

சுடர்வளையுங்கலையுங்கொண்டருவினையேன்றோடுறந்த
படர்புகழான்றிருமூழிக்களத்துறையும்பங்கயக்கட்
சுடர்பவளவாயனைக்கண்டொருநாளோர்தூய்மாற்றம்
படர்பொழில்வாய்க்குருகினங்காளெனக்கொன்றுபணியீரே. (௭)

எனக்கொன்றுபணியீர்களிரும்பொழில்வாழ்மாகுயில்காள்
மனக்கின்பம்படமேவும்வண்டினங்காள்தும்பிகாள்
கனக்கொள்திண்மதிள்புடைசூழ்திருமூழிக்களத்துறையும்
புனக்கொள்காயாமேனிப்பூந்துழாய்முடியார்க்கே. (௮)

பூந்துழாய்முடியார்க்குப்பொன்னாழிக்கையாருக்
கேந்துநீரிளங்குருகேதிருமூழிக்களத்தார்க்
கேந்துபூண்முலைபயந்தென்னிணைமலர்க்கண்ணீர்ததும்பத்
தாந்தம்மைக்கொண்டகல்தல்தகவன்றென்றுரையீரே. (௯)

தகவன்றென்றுரையீர்கள்தடம்புனல்வாயிரைதேர்ந்து
மிகவின்பம்படமேவும்மென்னடையவன்னங்காள்
மிகமேனிமெலிவெய்திமேகலையுமீடழிந்தென்
அகமேனியொழியாமேதிருமூழிக்களத்தார்க்கே. (௰)

ஒழிவின்றித்திருமூழிக்களத்துறையுமொண்சுடரை
ஒழிவில்லாவணிமழலைக்கிளிமொழியாளலற்றியசொல்
வழுவில்லாவண்குருகூர்ச்சடகோபன்வாய்ந்துரைத்த
அழிவில்லாவாயிரத்திப்பத்துநோயறுக்குமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ_திருவாய்மொழி-௮௭-இ-பாசுரம்-௯௫௭.

௮-வது. அறுக்கும்.

இ ஊ வு ம ஊ.

கலிவிருத்தம் பண்-கொல்லி-தாளம் இடையொத்து.

அறுக்கும்வினையாயினவாகத்தவனை
நிறுத்தும்மனத்தொன்றியசிந்தையினார்க்கு
வெறித்தண்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்
குறுக்கும்வகையுண்டுகொலோகொடியேற்கே. (௧)

கொடியேரிடைக்கோகனகத்தவள்கேள்வன்
வடிவேற்றடங்கண்மடப்பின்னைமணாளன்
நெடியானுறைசோலைகள்சூழ்திருநாவாய்
அடியேனணுகப்பெறுநாளெவைகொலோ. (௨)

எவைகொலணுகப்பெறுநாளென்றெப்போதுங்
கவையில்மனமின்றிக்கண்ணீர்கள்கலுழ்வன்
நவையிற்றிருநாரணன்சேர்திருநாவாய்
அவையுட்புகலாவதோர்நாளறியேனே. (௩)

நாளேலறியேனெனக்குள்ளனநானும்
மீளாவடிமைப்பணிசெய்யப்புகுந்தேன்
நீளார்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்
வாளேதடங்கண்மடப்பின்னைமணாளா. (௪)

மணாளன்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்கும்
கண்ணாளனுலகத்துயிர்தேவர்கட்கெல்லாம்
விண்ணாளன்விரும்பியுறையுந்திருநாவாய்
கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே. (௫)

கண்டேகளிக்கின்றதிங்கென்றுகொல்கண்கள்
தொண்டேயுனக்காயொழிந்தேன்றுரிசின்றி
வண்டார்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்
கொண்டேயுறைகின்றவெங்கோவலர்கோவே. (௬)

கோவாகியமாவலியைநிலங்கொண்டாய்
தேவாசுரஞ்செற்றவனேதிருமாலே
நாவாயுறைகின்றவென்னாரணநம்பீ
ஆவாவடியானிவனென்றருளாயே. (௭)

அருளாதொழிவாயருள்செய்தடியேனைப்
பொருளாக்கியுன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்
மருளேயின்றியுன்னையென்னெஞ்சத்திருத்துந்
தெருளேதருதென்திருநாவாயென்றேவே. (௮)

தேவர்முனிவர்க்கென்றுங்காண்டற்கரியன்
மூவர்முதல்வனொருமூவுலகாளி
தேவன்விரும்பியுறையுந்திருநாவாய்
யாவரணுகப்பெறுவாரினியந்தோ. (௯)

அந்தோவணுகப்பெறுநாளென்றெப்போதுஞ்
சிந்தைகலங்கித்திருமாலென்றழைப்பன்
கொந்தார்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்
வந்தேயுறைகின்றவெம்மாமணிவண்ணா. (௰)

வண்ணம்மணிமாடநன்னாவாயுள்ளானைத்
திண்ணம்மதிட்டென்குருகூர்ச்சடகோபன்
பண்ணார்தமிழாயிரத்திப்பத்தும்வல்லார்
மண்ணாண்டுமணங்கமழ்வர்மல்லிகையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ_திருவாய்மொழி-௮௮-இ-பாசுரம்-௯௬௮.

௯ - வது. மல்லிகை.

இதுவுமது.

ஆசிரியவிருத்தம் பண்-பஞ்சமம்-தாளம்-ஏழொத்து.

மல்லிகைகமழ்தென்றலீருமாலோ வண்குறிஞ்சியிசைதவழுமாலோ, செல்கதிர்மாலையும்மயக்குமாலோ செக்கர்நன்மேகங்கள்சிதைக்குமாலோ, அல்லியந்தாமரைக்கண்ணனெம்மா னாயர்களேறரியேறெம்மாயோன், புல்லியமுலைகளுந்தோளுங்கொண்டு புகலிடமறிகிலந்தமியமாலோ. (௧)

புகலிடமறிகிலந் தமியமாலோ புலம்புறுமணி தென்றலாம்பலாலோ, பகலடுமாலைவண்சாந்தமாலோ பஞ்சமமுல்லைதண்வாடையாலோ, அகலிடம்படைத்திடந்துண்டுமிழ்ந்தெங்குமளிக்கின்றவாயன் மாயோன், இகலிடத்தசுரர்கள்கூற்றம்வாரானினியிருந்தென்னுயிர்காக்குமாறென். (௨)

இனியிருந்தென்னுயிர்காக்குமாறெனிணைமுலைநமுகநுண்ணிடை நுடங்கத், துனியிருங்கலவிசெய்தாகந்தோய்ந்துதுறந்தெம்மையிட்டகல்கண்ணன்கள்வந், தனியிளஞ்சிங்கமெம்மாயன்வாரான்றாமரைக்கண்ணுஞ்செவ்வாயுநீலப், பனியிருங்குழல்களுநான்குதோளும்பாவியேன்மனத்தேநின்றீருமாலோ. (௩)

பாவியேன்மனத்தேநின்றீருமாலோ வாடைதண்வாடைவெவ்வாடையாலோ, மேவுதண்மதியம்வெம்மதியமாலோ மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளியாலோ, தூவியம்புள்ளுடைத்தெய்வவண்டுதுதைந்தவெம்பெண்மையம்பூவிதாலோ, ஆவியின்பரமல்லவகைகளாலோ யாமுடைநெஞ்சமுந்துணையன்றாலோ. (௪)

யாமுடைநெஞ்சமுந் துணையன்றாலோ வாபுகுமாலையுமாகின்றாலோ, யாமுடையாயன்றன்மனங்கல்லாலோவவனுடைத்தீங்குழலீருமாலோ, யாமுடைத்துணையென்னுந்தோழிமாருமெம்மின்முன்னவனுக்குமாய்வராலோ, யாமுடையாருயிர்காக்குமாறென்னவனுடையருள்பெறும்போதரிதே. (௫)

அவனுடையருள்பெறும்போதரிதாலவ்வருளல்லனவருளுமல்ல அவனருள்பெறுமளவாவிநில்லாதடுபகல்மாலையுநெஞ்சுங்காணேன், சிவனொடுபிரமன்வண்டிருமடந்தைசேர்திருவாகமெம்மாவியீரும், எவ

னினிப்புகுமிடமெவன்செய்கேனேதுவர்க்கென்சொல்லுகேனன்னைமீர்காள். (௬)

ஆருக்கென்சொல்லுகேனன்னைமீர்காளாருயிரளவன்றிக்கூர்தண்வாடை, காரொக்குமேனிநங்கண்ணன்கள்வங்கவர்ந்தவத்தனிநெஞ்சமவன்கணஃதே, சீருற்றவகிற்புகையாழ்நரம்புபஞ்சமந்தண்பசுஞ்சாந்தணைந்து, போருற்றவாடைதண்மல்லிகைப்பூப்புதுமணமுகந்துகொண்டெறியுமாலோ. (௭)

புதுமணமுகந்துகொண்டெறியுமாலோ பொங்கிளவாடைபுன்செக்கராலோ, அதுமணந்தகன்றநங்கண்ணன்கள்வங்கண்ணினிற்கொடிதினியதனிலும்பர், மதுமணமல்லிகைமந்தகோவைவண்பசுஞ்சாந்தினிற்பஞ்சமம்வைத், ததுமணந்தின்னருளாய்ச்சியர்க்கேயூதுமத்தீங்குழற்கேயுய்யேனான். (௮)

ஊதுமத்தீங்குழற்கேயுய்யேனானதுமொழிந்திடையிடைத்தன்செய்கோலத், தூதுசெய்கண்கள்கொண்டொன்றுபேசித்தூமொழியிசைகள்கொண்டொன்றுநோக்கிப், பேதுறுமுகஞ்செய்துநொந்துநொந்துபேதைநெஞ்சறவறப்பாடும்பாட்டை, யாதுமொன்றறிகிலமம்மவம்மமாலையும்வந்ததுமாயன்வாரான். (௯)

மாலையும்வந்ததுமாயன்வாரான்மாமணிபுலம்பவல்லேறணைந்த, கோலநன்னாகுகளுகளுமாலோகொடியனகுழல்களுங்குழறுமாலோ, வாலொளிவளர்முல்லைகருமுகைகள்மல்லிகையலம்பிவண்டாலுமாலோ, வேலையும்விசும்பில்விண்டலறுமாலோவென்சொல்லியுய்வனிங்கவனைவிட்டே. (௰)

அவனைவிட்டகன்றுயிராற்றகில்லாவணியிழையாய்ச்சியர்மாலைப்பூசல், அவனைவிட்டகல்வதற்கேயிரங்கியணிகுருகூர்ச்சடகோபன்மாறன், அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்தவாயிரத்துளிவைபத்துங்கொண்டவனியுளலற்றிநின்றுய்ம்மின்றொண்டீரச்சொன்னமாலைநண்ணித்தொழுதே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி [illegible] பாசுரம் [illegible]

௧௦ - வது. மாலை.

திருக்கண்ணபுரத்தெம்பெருமான் விஷயம்.

கலிவிருத்தம் - பண் - நட்டபாடை - தாளம் ஒன்பதொத்து.

மாலைநண்ணித்தொழுதெழுமினோவினைகெடக்
காலைமாலைகமலமலரிட்டுநீர்
வேலைமோதும்மதிள்சூழ்திருக்கண்ணபுரத்
தாலின்மேலாலமர்ந்தானடியிணைகளே. (௧)

கள்ளவிழும்மலரிட்டுநீரிறைஞ்சுமின்
நள்ளிசேரும்வயல்சூழ்கிடங்கின்புடை
வெள்ளியேய்ந்தமதிள்சூழ்திருக்கண்ணபுரம்
உள்ளிநாளுந்தொழுதெழுமினோதொண்டரே. (௨)

தொண்டர்நுந்தந்துயர்போகநீரேகமாய்
விண்டுவாடாமலரிட்டுநீரிறைஞ்சுமின்
வண்டுபாடும்பொழில்சூழ்திருக்கண்ணபுரத்
தண்டவாணனமரர்பெருமானையே. (௩)

மானைநோக்கிமடப்பின்னைதன்கேள்வனைத்
தேனைவாடாமலரிட்டுநீரிறைஞ்சுமின்
வானையுந்துமதிள்சூழ்திருக்கண்ணபுரந்
தானயந்தபெருமான்சரணாகுமே. (௪)

சரணமாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம்
மரணமானால்வைகுந்தங்கொடுக்கும்பிரான்
அரணமைந்தமதிள்சூழ்திருக்கண்ணபுரத்
தரணியாளன்றனதன்பர்க்கன்பாகுமே. (௫)

அன்பனாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாஞ்
செம்பொனாகத்தவுணனுடல்கீண்டவன்
நன்பொனேய்ந்தமதிள்சூழ்திருக்கண்ணபுரத்
தன்பனாளுந்தனமெய்யர்க்குமெய்யனே. (௬)

மெய்யனாகும்விரும்பித்தொழுவார்க்கெல்லாம்
பொய்யனாகும்புறமேதொழுவார்க்கெல்லாஞ்
செய்யில்வாளையுகளுந்திருக்கண்ணபுரத்
தையனாகத்தணைப்பார்கட்கணியனே. (௭)

அணியனாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம்
பிணியுஞ்சாராபிறவிகெடுத்தாளும்
மணிபொன்னேய்ந்தமதிள்சூழ்திருக்கண்ணபுரம்
பணிமினாளும்பரமேட்டிதன்பாதமே. (௮)

பாதநாளும்பணியத்தணியும்பிணி
ஏதஞ்சாராவெனக்கேலினியென்குறை
வேதநாவர்விரும்புந்திருக்கண்ணபுரத்
தாதியானையடைந்தார்க்கல்லலில்லையே. (௯)

இல்லையல்லலெனக்கேலினியென்குறை
அல்லிமாதரமருந்திருமார்பினன்
கல்லிலேய்ந்தமதிள்சூழ்திருக்கண்ணபுரஞ்
சொல்லநாளுந்துயர்பாடுசாராவே. (௧௦)

பாடுசாராவினைபற்றறவேண்டுவீர்
மாடநீடுகுருகூர்ச்சடகோபன்சொல்
பாடலானதமிழாயிரத்துளிப்பத்தும்
பாடியாடிப்பணிமினவன்றாள்களே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம்பத்து முற்றிற்று.

ஆ-பத்து-௯-திருவாய்மொழி-௯௦-பாசுரம்-௯௯௨.

பத்தாம்பத்து.

௧ - வது. தாளதாமரை.

கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிவர்த்தனத்தை அருளிச்செய்கிறார்.

கலித்துறைவிருத்தம்-பண்-இந்தளம்-தாளம்-ஏழொத்து.

தாளதாமரைத்தடமணிவயற்றிருமோகூர்
நாளுமேவிநன்கமர்ந்துநின்றசுரரைத்தகர்க்குந்
தோளுநான்குடைச்சுரிகுழற்கமலக்கட்கனிவாய்க்
காளமேகத்தையன்றிமற்றொன்றிலங்கதியே. (௧)

இலங்கதிமற்றொன்றெம்மைக்குமீர்ந்தண்டுழாய்
அலங்கலங்கண்ணியாயிரம்பேருடையம்மான்
நலங்கொள்நான்மறைவாணர்கள்வாழ்திருமோகூர்
நலங்கழலவனடிநிழற்றடமன்றியாமே. (உ)

அன்றியாமொருபுகலிடமிலமென்றென்றலற்றி
நின்றுநான்முகனரனொடுதேவர்கணாட
வென்றிமூவுலகளித்துழல்வான்றிருமோகூர்
நன்றுநாமினிநணுகுதும்நமதிடர்கெடவே. (௩)

இடர்கெடவெம்மைப்போந்தளியாயென்றென்றேத்திச்
சுடர்கொள்சோதியைத்தேவருமுனிவருந்தொடரப்
படர்கொள்பாம்பணைப்பள்ளிகொள்வான்றிருமோகூர்
இடர்கெடவடிபரவுதுந்தொண்டீர்வம்மினே. (௪)

தொண்டீர்வம்மினஞ்சுடரொளியொருதனிமுதல்வன்
அண்டமூவுலகளந்தவனணிதிருமோகூர்
எண்டிசையுமீன்கரும்பொடுபெருஞ்செந்நெல்விளையக்
கொண்டகோயிலைவலஞ்செய்திங்காடுதுங்கூத்தே. (௫)

கூத்தன்கோவலன்குதற்றுவல்லசுரர்கள்கூற்றம்
ஏத்துநங்கட்குமமரர்கட்குமுனிவர்க்குமின்பன்
வாய்த்ததண்பணைவளவயல்சூழ்திருமோகூர்
ஆத்தன்றாமரையடியன்றிமற்றிலமரணே. (௬)

மற்றிலமரண்வான்பெரும்பாழ்தனிமுதலாச்
சுற்றுநீர்படைத்ததன்வழித்தொன்முனிமுதலாம்
முற்றுந்தேவரோடுலகுசெய்வான்றிருமோகூர்
சுற்றிநாம்வலஞ்செய்யநந்துயர்கெடுங்கடிதே. (௭)

துயர்கெடுங்கடிதடைந்துவந்தடியவர்தொழுமின்
உயர்கொள்சோலையொண்டடமணியொளிதிருமோகூர்
பெயர்களாயிரமுடையவல்லரக்கர்புக்கழுந்தத்
தயரதன்பெற்றமரதகமணித்தடத்தினையே. (௮)

மணித்தடத்தடிமலர்க்கண்கள்பவளச்செவ்வாய்
அணிக்கொள்நாற்றடந்தோட்டெய்வமசுரரையென்றும்
துணிக்கும்வல்லரட்டனுறைபொழிற்றிருமோகூர்
நணித்துநம்முடைநல்லரண்நாமடைந்தனமே. (௯)

நாமடைந்தநல்லரண்நமக்கென்றுநல்லமரர்
தீமைசெய்யும்வல்லசுரரையஞ்சிச்சென்றடைந்தால்
காமரூபங்கொண்டெழுந்தருளிப்பான்றிருமோகூர்
நாமமேநவின்றெண்ணுமினேத்துமினமர்காள். (௧௦)

ஏத்துமினமர்காளென்றுதான்குடமாடு
கூத்தனைக்குருகூர்ச்சடகோபன்குற்றேவல்கள்
வாய்ந்தவாயிரத்துளிவைவண்டிருமோகூர்க்
கீந்தபத்திவையேத்தவல்லார்க்கிடர்கெடுமே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக-திருவாய்மொழி-௯௧-இ-பாசுரம்-௧௦௦௧.

உ - வது. கெடுமிடர்.

திருவனந்தபுரத்தெம்பெருமான்விஷயம்.

ஆசிரியவிருத்தம்-பண்-இந்தளம் தாளம்-ஏறொத்து.

கெடுமிடராயவெல்லாங்கேசவாவென்னநாளுங்
கொடுவினைசெய்யுங்கூற்றின்றமர்களுங்குறுககில்லார்
விடமுடையரவிற்பள்ளிவிரும்பினான்சுரும்பலற்றுந்
தடமுடைவயலனந்தபுரநகர்புகுதுமின்றே. (௧)

இன்றுபோய்ப்புகுதிராகிலெழுமையுமேதஞ்சாரக்
குன்றுநேர்மாடமாடேகுருந்துசேர்செருந்திபுன்னை
மன்றலர்பொழிலனந்தபுரநகர்மாயன்நாமம்
ஒன்றுமோராயிரமாமுள்ளுவார்க்கும்பரூரே. (உ)

ஊரும்புட்கொடியுமஃதேயுலகெல்லாமுண்டுமிழ்ந்தான்
சேருந்தண்ணனந்தபுரஞ்சிக்கெனப்புகுதிராகில்
தீருநோய்வினைகளெல்லாந்திண்ணநாமறியச்சொன்னோம்
பேருமோராயிரத்துளொன்றுநீர்பேசுமினே. (௩)

பேசுமின்கூசமின்றிப்பெரியநீர்வேலைசூழ்ந்து
வாசமேமருதுசோலைவயலணியனந்தபுரம்
நேசஞ்செய்துறைகின்றானைநெறிமையால்மலர்கள்தூவிப்
பூசனைசெய்கின்றார்கள்புண்ணியஞ்செய்தவாறே. (௪)

புண்ணியஞ்செய்துநல்லபுனலொடுமலர்கள்தூவி
எண்ணுமினெந்தைநாமமிப்பிறப்பறுக்குமப்பால்
திண்ணநாமறியச்சொன்னோஞ்செறிபொழிலனந்தபுரத்து
அண்ணலார்கமலபாதமணுகுவாரமரராவார். (௫)

அமரராய்த்திரிகின்றார்கட்காதிசேரனந்தபுரத்து
அமரர்கோனர்ச்சிக்கின்றங்ககப்பணிசெய்வர்விண்ணோர்
நமர்களோசொல்லக்கேண்மின்னாமும்போய்நணுகவேண்டுங்
குமரனார்தாதைதுன்பந்துடைத்தகோவிந்தனாரே. (௬)

துடைத்தகோவிந்தனாரேயுலகுயிர்தேவுமற்றும்
படைத்தவெம்பரமமூர்த்திபாம்பணைப்பள்ளிகொண்டான்
மடைத்தலைவாளைபாயும்வயலணியனந்தபுரங்
கடைத்தலைசீய்க்கப்பெற்றாற்கடுவினைகளையலாமே. (௭)

கடுவினைகளையலாகுங்காமனைப்பயந்தகாளை
இடவகைகொண்டதென்பரெழிலணியனந்தபுரம்
படமுடையரவிற்பள்ளிபயின்றவன்பாதங்காண
நடமினோநமர்களுள்ளீர்நாமுமக்கறியச்சொன்னோம். (௮)

நாமுமக்கறியச்சொன்னநாள்களுநணியவான
சேமநன்குடைத்துக்கண்டீர்செறிபொழிலனந்தபுரத்
தூமநல்விரைமலர்கள்துவளறவாய்ந்துகொண்டு
வாமனனடிக்கென்றேத்தமாய்ந்தறும்வினைகள்தாமே. (௯)

மாய்ந்தறும்வினைகள்தாமேமாதவாவென்னநாளும்
ஏய்ந்தபொன்மதிளனந்தபுரநகரெந்தைக்கென்று
சாந்தொடுவிளக்கந்தூபந்தாமரைமலர்கள்நல்ல
வாய்ந்துகொண்டேத்தவல்லாரந்தமில்புகழினாரே. (௰)

அந்தமில்புகழனந்தபுரநகராதிதன்னைக்
கொந்தலர்பொழிற்குருகூர்மாறன்சொல்லாயிரத்துள்
ஐந்தினோடைந்தும்வல்லாரணைவர்போயமருலகில்
பைந்தொடிமடந்தையர்தம்வேய்மருதோளிணையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௯௨-இ-பாசுரம்-௧௦௧௪.

௩ - வது. வேய்மரு.

இஷயமஆ.

ஆசிரியவிருத்தம்-பண்-பஞ்சமம் தாளம்-ஒரொத்து.

வேய்மருதோளிணைமெலியுமாலோ மெலியுமென்றனிமையும்யாமறியோம், காமருகுயில்களுங்கூவுமாலோ கணமயிலவைகலந்தாலுமாலோ, ஆமருவினநிரைமேய்க்கநீபோக்கொருபகலாயிரவூழியாலோ, தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ தகவிலைதகவிலையேநீகண்ணா. (௧)

தகவிலைதகவிலையேநீகண்ணாதடமுலைபுணர்தொறும்புணர்ச்சிக்காராச், சுகவெள்ளம்விசும்பிறந்தறிவைமூழ்கச்சூழ்ந்ததுகனவெனநீங்கியாங்கே, அகவுயிரகமகந்தோறுமுள்புக்காவியின்பரமல்லவேட்கையந்தோ, மிகமிகவினியுன்னைப்பிரிவையாமால்வீவநின்பசுநிரைமேய்க்கப்போக்கே. (௨)

வீவநின்பசுநிரைமேய்க்கப் போக்குவெவ்வுயிர்க்கொண்டெனதாவிவேமால், யாவருந்துணையில்லையானிருந்துன்னஞ்சனமேனியையாட்டங்காணேன், போவதன்றொருபகல்நீயகன்றாற்பொருகயற்கண்ணிணைநீருநில்லா, சாவதிவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப்பிறந்தவித்தொழுத்தையோந்தனிமைதானே. (௩)

தொழுத்தையோந்தனிமையுந்துணைபிரிந்தார்துயரமுநினைகிலைகோவிந்தாநின், தொழுத்தனிப்பசுக்களையேவிரும்பித் துறந்தெம்மையிட்டவைமேய்க்கப்போதி, பழுத்தநல்லமுதினின்சாற்றுவெள்ளம்பாவியேன்மனமகந்தோறுமுள்புக், கழுந்தநின்செங்கனிவாயின்கள்வப்பணிமொழிநினைதொறுமாவிவேமால். (௪)

பணிமொழிநினைதொறுமாவி வேமாற்பகனிரைமேய்க்கியபோயகண்ணா, பிணியவிழ்மல்லிகைவாடைதூவப்பெருமதமாலையும்வந்தின்றாலோ, மணிமிகுமார்பினின்முல்லைப்போதென்வனமுலைகமழ்வித்துன்வாயமுதந்தந்து, அணிமிகுதாமரைக்கையையந்தோவடிச்சியோந்தலைமிசைநீயணியாய். (௫)

அடிச்சியோந்தலைமிசைநீயணியாய் ஆழியங்கண்ணாவுன்கோலப்பாதம், பிடித்ததுநடுவுனக்கரிவையரும் பலரதுநிற்கவெம்பெண்மையாற்றோம், வடித்தடங்கண்ணிணைநீருநில்லா மனமுநில்லாவெமக்கது

தன்றாலே, வெடிப்புகின்பசுநிரைமேய்க்கப்போக்குவேமெனதுயிரழல் மெழுகிலுக்கே. (௬)

வேமெனதுயிரழல்மெழுகிலுக்குவெள்வளைமேகலைகழன்றுவீழத் தூமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோரத் துணைமுலைபயந்தெனதோள்கள் வாட, மாமணிவண்ணாவுன்செங்கமலவண்ணமென்மலரடிநோவநீபோய், ஆமிழந்து கந்தவைமேய்க்கின்றுன்னொடு அசுரர்கள்தலைப் பெய்யி லெவன்கொலாங்கே. (௭)

அசுரர்கள்தலைப்பெய்யிலெவன்கொலாங்கென்றாழுமென்னாருயி ரான்பின்போகேல், கசிகையும்வேட்கையுமுடன்கலந்து கலவியுநலியு மென்கைகழியேல், வசிசெய்யுன்றாமரைக்கண்ணும்வாயும்கைகளும்பீத கவுடையுங்காட்டி, ஒசிசெய்நுண்ணிடையிளவாய்ச்சியர்நீயுகக்குநல்ல வரொடுமுழிதராயே. (௮)

உகக்குநல்லவரொடுமுழிதந்துன்றிருவுள்ளமிடர்கெடுந்தோறும் நாங்கள், வியக்கவின்புறுதுமெம்பெண்மையாற்றோமெம்பெருமான்ப சுமேய்க்கப்போகேல், மிகப்பலவசுரர்கள்வேண்டுருவங்கொண்டுநின்றுழி தருவர்கஞ்சனேவ, அகப்படிலவரொடுநின்னொடாங்கேயவத்தங்கள் விளையுமென்சொற்கொள்ளந்தோ. (௯)

அவத்தங்கள்விளையுமென்சொற்கொள்ளந்தோவசுரர்கள்வன்கைய ர்கஞ்சனேவ, தவத்தவர்மறுகநின்றுழிதருவர்தனிமையும்பெரிதுனக்கி ராமனையும், உவத்தலையுடன்திரிகிலையுமென்றென்றழிந்தெனன்னுடை யாவிவேமால், திவத்திலும்பசுநிரைமேய்ப்புகத்திசெங்கனிவாயெங்க ளாயர்தேவே. (௧௦)

செங்கனிவாயெங்களாயர் தேவத்திருவடி திருவடிமேற்பொருந ற்சங்கணிதுறைவன்வண்தென்குருகூர்வண்சடகோபன்சொல்லாயிரத் துள், மங்கையராய்ச்சியராய்ந்தமாலையவனொடும்பிரிவதற்கிரங்கித்தை யல், அங்கவன்பசுநிரைமேய்ப்பொழிப்பானுரைத்தனவிவையும்பத்த வற்றின்சார்வே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி-௯௩-ம்-பாசுரம்-௧௦௨௫.

௰ - ௪. சார்வே த.

இ[illegible]

கலிவிருத்தம்-பண்-கொல்லி-தாளம்-நடையொத்து.

சார்வேதவநெறிக்குத்தாமோதரன்றாள்கள்
கார்மேகவண்ணன்கமலநயனத்தன்
நீர்வானம்மண்ணெரிகாலாய்நின்றநேமியான்
பேர்வானவர்கள்பிதற்றும்பெருமையனே. (௧)

பெருமையனேவானத்திமையோர்க்குங்காண்டற்
கருமையனேயாகத்தணையாதார்க்கென்றும்
திருமெய்யுறைகின்றசெங்கண்மானாளும்
இருமைவினைகடிந்திங்கென்னையாள்கின்றானே. (௨)

ஆள்கின்றானாழியானாரால்குறையுடையம்
மீள்கின்றதில்லைப்பிறவித்துயர்கடிந்தோம்
வாள்கெண்டையொண்கண்மடப்பின்னைதன்கேள்வன்
தாள்கண்டுகொண்டென்றலைமேற்புனைந்தேனே. (௩)

தலைமேற்புனைந்தேன்சரணங்களாலின்
இலைமேற்றுயின்றவிமையோர்வணங்க
மலைமேற்றான்நின்றென்மனத்துளிருந்தானை
நிலைபேர்க்கலாகாமைநிச்சித்திருந்தேனே. (௪)

நிச்சித்திருந்தேனென்னெஞ்சங்கழியாமை
கைச்சக்கரத்தண்ணலைக்கள்வம்பெரிதுடையன்
மெச்சப்படான்பிறர்க்குமெய்போலும்பொய்வல்லன்
நச்சப்படும்நமக்குநாகத்தணையானே. (௫)

நாகத்தணையானைநாடோறுஞானத்தால்
ஆகத்தணைப்பார்க்கருள்செய்யுமம்மானை
மாகத்திளமதியஞ்சேருஞ்சடையானைப்
பாகத்துவைத்தான்றன்பாதம்பணிந்தேனே. (௬)

பணிநெஞ்சேநாளும்பரம்பரம்பரனைப்
பிணியொன்றுஞ்சாராப்பிறவிகெடுத்தாளும்
மணிநின்றசோதிமதுசூதனென்னம்மான்
அணிநின்றசெம்பொனடலாழியானே. (௭)

ஆழியானாழியமரர்க்குமப்பாலான்
ஊழியானூழிபடைத்தானிரைமேய்த்தான்
பாழியந்தோளால்வரையெடுத்தான்பாதங்கள்
வாழியென்னெஞ்சேமறவாதுவாழ்கண்டாய். (௮)

கண்டேன்கமலமலர்ப்பாதங்காண்டலுமே
விண்டேயொழிந்தவினையாயினவெல்லாந்
தொண்டேசெய்தென்றுந்தொழுதுவழியொழுகப்
பண்டேபரமன்பணித்தபணிவகையே. (௯)

வகையால்மனமொன்றிமாதவத்தைநாளும்
புகையால்விளக்கால்பூமலரால்நீரால்
திசைதோறமரர்கள்சென்றிறைஞ்சநின்ற
தகையான்சரணந்தமர்கட்கோர்பற்றே. (௧0)

பற்றென்றுபற்றிப்பரமபரம்பரனை
மற்றிண்டோள்மாலைவழுதிவளநாடன்
சொற்றொடையந்தாதியோராயிரத்துளிப்பத்தும்
கற்றார்க்கோர்பற்றாகுங்கண்ணன்கழலிணையே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி ௯௪-பாசுரம்-௧0௩௪.

௫-வது. கண்ணன்.

இ ஆ வ ம து.

வஞ்சித்துறை-பண்-நாட்டம்-தாளம்-இடையொத்து.

கண்ணன்கழலிணை
நண்ணும்மனமுடையீர்
எண்ணுந்திருநாமந்
திண்ணம்நாரணமே. (௧)

நாரணனெம்மான்
பாரணங்காளன்
வாரணந்தொலைத்த
காரணந்தானே. (௨)

தானேயுலகெல்லாந்
தானேபடைத்திடந்து
தானேயுண்டுமிழ்ந்து
தானேயாள்வானே. (௩)

ஆள்வானாழிநீர்க்
கோள்வாயரவணையான்
தாள்வாய்மலரிட்டு
நாள்வாய்நாடீரே. (௪)

நாடீர்நாடோறும்
வாடாமலர்கொண்டு
பாடீரவன்நாமம்
வீடேபெறலாமே. (௫)

மேயான்வேங்கடங்
காயாமலர்வண்ணன்
பேயார்முலையுண்ட
வாயான்மாதவனே. (௬)

மாதவனென்றென்
றோதவல்லீரேல்
தீதொன்றுமடையா
ஏதஞ்சாராவே. (௭)

சாராவேதங்கள்
நீரார்முகில்வண்ணன்
பேராரோதுவார்
ஆராரமரரே. (௮)

அமரர்க்கரியானைத்
தமர்கட்கெளியானை
அமரத்தொழுவார்கட்
கமராவினைகளே. (௯)

வினைவல்லிருளென்னும்
முனைகள்வெருவிப்போம்
சுனைநன்மலரிட்டு
நினைமின்நெடியானே. (௧0)

நெடியானருள்சூடும்
படியான்சடகோபன்
நொடியாயிரத்திப்பத்
தடியார்க்கருள்பேறே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ-திருவாய்மொழி-௯௫-பாசுரம்-௧0௪௫.

௬-வது. அருள்.

திருவாட்டாறு எம்பெருமான்விஷயம்.

கலிவிருத்தம் பண்-இந்தளம்-தாளம் நடையொத்து.

அருள்பெறுவாரடியார்தம்மடியனேற்காழியான்
அருடருவானமைகின்றானதுநமதுவிதிவகையே
இருடருமாஞாலத்துளினிப்பிறவியான்வேண்டேன்
மருளொழிநீமடநெஞ்சேவாட்டாற்றானடிவணங்கே. (௧)

வாட்டாற்றானடிவணங்கிமாஞாலப்பிறப்பறுப்பான்
கேட்டாயேமடநெஞ்சேகேசவனெம்பெருமானைப்
பாட்டாயபலபாடிப்பழவினைகள்பற்றறுத்து
நாட்டாரோடியல்வொழிந்துநாரணனைநண்ணினமே. (௨)

நண்ணினநாராயணனைநாமங்கள்பலசொல்லி
மண்ணுலகில்வளமிக்கவாட்டாற்றான்வந்தின்று
விண்ணுலகந்தருவானாய்விரைகின்றான்விதிவகையே
எண்ணினவாறாகாவிக்கருமங்களென்னெஞ்சே. (௩)

என்னெஞ்சத்துள்ளிருந்திங்கிருந்தமிழ்நூலிவைமொழிந்து
வன்னெஞ்சத்திரணியனைமார்பிடந்தவாட்டாற்றான்
மன்னஞ்சபாரதத்துப்பாண்டவர்க்காய்ப்படைதொட்டான்
நன்னெஞ்சேநம்பெருமானமக்கருடான்செய்வானே. (ச)

வானேறவழிதந்தவாட்டாற்றான்பணிவகையே
நானேறப்பெறுகின்றேனரகத்தைநகுநெஞ்சே
தேனேறுமலர்த்துளவந்திகழ்பாதன்செழும்பறவை
தானேறித்திரிவான்றன்றாளிணையென்றலைமேலே (ரு)

தலைமேலதாளிணைகள்தாமரைக்கண்ணென்னம்மான்
நிலைபேரானென்னெஞ்சத்தெப்பொழுதுமெம்பெருமான்
மலைமாடத்தரவணைமேல்வாட்டாற்றான்மதம்மிக்க
கொலையானைமருப்பொசித்தான்குரைகழல்கள்குறுகினமே (சு)

குரைகழல்கள்குறுகினநங்கோவிந்தன்குடிகொண்டான்
திரைகுழுவுகடல்புடைசூழ்தென்னாட்டுத்திலதமன்ன
வரைகுழுவுமணிமாடவாட்டாற்றான்மலரடிமேல்
விரைகுழுவுநறுந்துளவம்மெய்ந்நின்றுகமழுமே (எ)

மெய்ந்நின்றுகமழ்துளவவிரையேறுதிருமுடியன்
கைந்நின்றசக்கரத்தன்கருதுமிடம்பொருதுபுனல்
மைந்நின்றவரைபோலுந்திருவுருவவாட்டாற்றாற்
கென்னன்றிசெய்தேனாவென்னெஞ்சிற்றிகழ்வதுவே. (அ)

திகழ்கின்றதிருமார்பிற்றிருமங்கைதன்னோடுந்
திகழ்கின்றதிருமாலார்சேர்விடந்தண்வாட்டாறு
புகழ்நின்றபுள்ளூர்திப்போரரக்கர்குலங்கெடுத்தான்
இகழ்வின்றியென்னெஞ்சத்தெப்பொழுதும்பிரியானே. (கூ)

பிரியாதாட்செய்யென்றுபிறப்பறுத்தாளறக்கொண்டான்
அரியாகியிரணியனையாகங்கீண்டானன்று
பெரியார்க்காட்பட்டக்காற்பெறாதபயன்பெறுமாறு
வரிவாள்வாயரவணைமேல்வாட்டாற்றான்காட்டினனே. (க0)

காட்டித்தன்கனைகழல்கள்கடுநரகம்புகலொழித்த
வாட்டாற்றெம்பெருமானைவளங்குருகூர்ச்சடகோபன்
பாட்டாயதமிழ்மாலையாயிரத்துளிப்பத்துங்
கேட்டாரார்வானவர்கள்செவிக்கினியசெஞ்சொல்லே. (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ- திருவாய்மொழி-கஅ-இ-பாசுரம்-க0ருச.

எ - வது செஞ்சொல்

திருமாலிருஞ்சோலை விஷயம்.

ஆசிரியவிருத்தம்-பண்-தக்கேசி-தாளம்-ஏகதாளம்.

செஞ்சொற்கவிகாளுயிர்காத்தாட்செய்ம்மின்றிருமாலிருஞ்சோலை
வஞ்சக்கள்வன்மாமாயன்மாயக்கவியாய்வந்தென்
னெஞ்சுமுயிருமுட்கலந்துநின்றாரறியாவண்ணமென்
னெஞ்சுமுயிருமவையுண்டுதானேயாகிநிறைந்தானே. (க)

தானேயாகிநிறைந்தெல்லாவுலகுமுயிருந்தானேயாய்த்
தானேயானென்பானாகித்தன்னைத்தானேதுதித்தெனக்குத்
தேனேபாலேகன்னலேயமுதேதிருமாலிருஞ்சோலைக்
கோனேயாகிநின்றொழிந்தானென்னைமுற்றுமுயிருண்டே (உ)

என்னைமுற்றுமுயிருண்டென்மாயவாக்கையிதனுட்புக்
கென்னைமுற்றுந்தானேயாய்நின்றமாயவம்மான்சேர்
தென்னன்றிருமாலிருஞ்சோலைத்திசைகைகூப்பிச்சேர்ந்தயான்
இன்னம்போவேனேகொலோவென்கொலம்மான்றிருவருளே. (ங)

என்கொலம்மான்றிருவருள்களுலகுமுயிருந்தானேயாய்
நன்கென்னுடலங்கைவிடான்ஞாலத்தூடேநடந்துழக்கித்
தென்கொடிசைக்குத்திலதமாய்நின்றதிருமாலிருஞ்சோலை
நங்கள்குன்றங்கைவிடானண்ணாவசுரர்நலிவெய்த (ச)

நண்ணாவசுரர்நலிவெய்தநல்லவமரர்பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணுநன்முனிவரின்பந்தலைசிறப்பப்
பண்ணார்பாடலின்கவிகள்யானாய்த்தன்னைத்தான்பாடித்
தென்னாவென்னுமென்னம்மான்றிருமாலிருஞ்சோலையானே. (ரு)

திருமாலிருஞ்சோலையானேயாகிச்செழுமூவுலகுந்தன்
னொருமாவயிற்றினுள்ளேவைத்தூழியூழிதலையளிக்குந்
திருமாலென்னையாளுமாற்சிவனும்பிரமனுங்காணா
தருமாலெய்தியடிபரவவருளையீந்தவம்மானே. (சு)

அருளையீயென்னம்மானேயென்னுமுக்கணம்மானுந்
தெருள்கொள்பிரமனம்மானுந்தேவர்கோனுந்தேவரும்

இருள்கள்கடியும்முனிவருமேத்துமம்மான்றிருமலை
மருள்கள்கடியும்மணிமலைதிருமாலிருஞ்சோலைமலையே. (எ)

திருமாலிருஞ்சோலைமலையேதிருப்பாற்கடலேயென்றலையே
திருமால்வைகுந்தமேதண்டிருவேங்கடமேயெனதுடலே
அருமாமாயத்தெனதுயிரேமனமேவாக்கேகருமமே
ஒருமாநொடியும்பிரியானென்னூழிமுதல்வனொருவனே. (அ)

ஊழிமுதல்வனொருவனேயென்னுமொருவனுலகெல்லாம்
ஊழிதோறுந்தன்னுள்ளேபடைத்துக்காத்துக்கெடுத்துழலும்
ஆழிவண்ணனென்னம்மானந்தண்டிருமாலிருஞ்சோலை
வாழிமனமேகைவிடேலுடலுமுயிருமங்கவொட்டே (௯)

மங்கவொட்டுன்மாமாயைதிருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனேயானேநீயாகியென்னையளித்தானே
பொங்கைம்புலனும்பொறியைந்துங்கருமேந்திரியமைம்பூதம்
இங்கிவ்வுயிரேய்பிரகிருதிமானாங்காரமனங்களே. (௰)

மானாங்காரமனங்கெடவைவர்வன்கையர்மங்கத்
தானாங்காரமாய்ப்புக்குத்தானேதானேயானானை
தேனாங்காரப்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொல்லாயிரத்துள்
மானாங்காரத்திவைபத்துந்திருமாலிருஞ்சோலைமலைக்கே. (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆக திருவாய்மொழி-௯௭-பாசுரம்-௧௦௬௭

---

௮ - வது. திருமால்.

தென்திருப்பேர் நகரம்பெருமான் விஷயம்.

கலிவிருத்தம் பண்-இந்தளம்-தாளம்-ஏழொத்து.

திருமாலிருஞ்சோலைமலையென்றேனென்னத்
திருமால்வந்தென்னெஞ்சுநிறையப்புகுந்தான்
குருமாமணியுந்துபுனற்பொன்னித்தென்பால்
திருமால்சென்றுசேர்விடந்தென்றிருப்பேரே. (௧)

பேரேயுறைகின்றபிரானின்றுவந்து
பேரேனென்றென்னெஞ்சுநிறையப்புகுந்தான்
காரேழ்கடலேழ்மலையேழுலகுண்டும்
ஆராவயிற்றானையடங்கப்பிடித்தேனே (௨)

பிடித்தேன்பிறவிகெடுத்தேன்பிணிசாரேன்
மடித்தேன்மனைவாழ்க்கையுணிற்பதோர்மாயையைக்
கொடிக்கோபுரமாடங்கள்சூழ்திருப்பேரான்
அடிச்சேர்வதெனக்கெளிதாயினவாறே (௩)

எளிதாயினவாறென்றென்கண்கள்களிப்பக்
களிதாகியசிந்தையனாய்க்களிக்கின்றேன்
கிளிதாவியசோலைகள்சூழ்திருப்பேரான்
தெளிதாகியசேண்விசும்புதருவானே (௪)

வானேதருவானெனக்காயென்னோடொட்டி
ஊனேய்குரம்பையிதனுட்புகுந்தின்று
தானேதடுமாற்றவினைகள்தவிர்த்தான்
தேனேபொழிற்றென்றிருப்பேர்நகரானே. (௫)

திருப்பேர்நகரான்றிருமாலிருஞ்சோலைப்
பொருப்பேயுறைகின்றபிரானின்றுவந்
திருப்பேனென்றென்னெஞ்சுநிறையப்புகுந்தான்
விருப்பேபெற்றமுதமுண்டுகளித்தேனே. (௬)

உண்டுகளித்தேற்கும்பரென்குறைமேலைத்
தொண்டுகளித்தந்திதொழுஞ்சொல்லுப்பெற்றேன்
வண்டுகளிக்கும்பொழில்சூழ்திருப்பேரான்
கண்டுகளிப்பக்கண்ணுள்நின்றகலானே (௭)

கண்ணுள்நின்றகலான்கருத்தின்கட்பெரியன்
எண்ணில்நுண்பொருளேழிசையின்சுவைதானே
வண்ணநன்மணிமாடங்கள்சூழ்திருப்பேரான்
திண்ணமென்மனத்துப்புகுந்தான்செறிந்தின்றே. (௮)

இன்றென்னைப்பொருளாக்கித்தன்னையென்னுள்வைத்தான்
அன்றென்னைப்புறம்போகப்புணர்த்ததென்செய்வான்
குன்றென்னத்திகழ்மாடங்கள்சூழ்திருப்பேரான்
ஒன்றெனக்கருள்செய்யவுணர்த்தலுற்றேனே. (௯)

உற்றேனுகந்துபணிசெய்துனபாதம்
பெற்றேனீதேயின்னம்வேண்டுவதெந்தாய்
கற்றார்மறைவாணர்கள்வாழ்திருப்பேராற்கு
அற்றாரடியார்தமக்கல்லனில்லாவே. (௰)

நில்லாவல்லனீள்வயல்சூழ்திருப்பேர்மேல்
நல்லார்பலர்வாழ்குருகூர்ச்சடகோபன்

சொல்லார்தமிழாயிரத்துளிப்பத்தும்
வல்லார்தொண்டராள்வதுசூழ்பொன்விசும்பே. (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.
ஆக திருவாய்மொழி-கூஅ-இ-பாசுரம்-க0அ0.

கூ - வது. சூழ்விசும்பு.

அர்ச்சிராதிமார்க்கம்.

கலிவிருத்தம்-பண்-கொல்லி-தாளம் ஏழொத்து.

சூழ்விசும்பணிமுகில்தூரியமுழக்கின
ஆழ்கடலலைதிரைகையெடுத்தாடின
ஏழ்பொழிலும்வளமேந்தியவென்னப்பன்
வாழ்புகழ்நாரணன்தமரைக்கண்டுகந்தே. (க)

நாரணன்தமரைக்கண்டுகந்துநன்னீர்முகில்
பூரணபொற்குடம்பூரித்தவுயர்விண்ணில்
நீரணிகடல்கள்நின்றார்த்தனநெடுவரைத்
தோரணம்நிரைத்தெங்குந்தொழுதனருலகே. (உ)

தொழுதனருலகர்கள்தூபநன்மலர்மழை
பொழிவனர்பூமியன்றளந்தவன்தமர்முன்னே
எழுமினென்றிருமருங்கிசைத்தனர்முனிவர்கள்
வழியிதுவைகுந்தற்கென்றுவந்தெதிரே. (ங)

எதிரெதிரிமையவரிருப்பிடம்வகுத்தனர்
கதிரவரவரவர்கைநிரைகாட்டினர்
அதிர்குரல்முரசங்களலைகடல்முழக்கொத்த
மதுவிரிதுழாய்முடிமாதவன்தமர்க்கே. (ச)

மாதவன்தமரென்றுவாசலில்வானவர்
போதுமினெமதிடம்புகுதுகவென்றலும்
கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்கள்
வேதநல்வாயவர்வேள்வியுள்மடுத்தே. (ரு)

வேள்வியுள்மடுத்தலும்விரைகமழ்நறும்புகை
காளங்கள்வலம்புரிகலந்தெங்குமிசைத்தனர்
ஆண்மின்கள்வானகமாழியான்தமரென்று
வாளொண்கண்மடந்தையர்வாழ்த்தினர்மகிழ்ந்தே. (சா)

மடந்தையர்வாழ்த்தலும்மருதரும்வசுக்களும்
தொடர்ந்தெங்குந்தோத்திரஞ்சொல்லினர்தொடுகடல்
கிடந்தவெங்கேசவன்கிளரொளிமணிமுடிக்
குடந்தையெங்கோவலன்குடியடியார்க்கே. (எ)

குடியடியாரிவர்கோவிந்தன்றனக்கென்று
முடியுடைவானவர்முறைமுறையெதிர்கொள்ளக்

கொடியணிநெடுமதிட்கோபுரங்குறுகினர்
வடிவுடைமாதவன்வைகுந்தம்புகவே. (அ)

வைகுந்தம்புகுதலும்வாசலில்வானவர்
வைகுந்தன்தமரெமரெமதிடம்புகுதென்று
வைகுந்தத்தமரரும்முனிவரும்வியந்தனர்
வைகுந்தம்புகுவதுமண்ணவர்விதியே. (கூ)

விதிவகைபுகுந்தனரென்றுநல்வேதியர்
பதியினிற்பாங்கினிற்பாதங்கள்கழுவினர்
நிதியுநற்சுண்ணமும்நிறைகுடவிளக்கமும்
மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே. (க0)

வந்தவரெதிர்கொள்ளமாமணிமண்டபத்து
அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை
கொந்தலர்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொல்
சந்தங்களாயிரத்திவைவல்லார்முனிவரே. (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்
ஆக திருவாய்மொழி-கூகூ-இ-பாசுரம்-க0கூக.

க0 - வது. முனியே.

ப்ரம்மாநுபவம்.

கலித்துறை - பண் - பஞ்சமம் - தாளம் - ஏழொத்து.

முனியேநான்முகனேமுக்கண்ணப்பாஎன்பொல்லாக்
கனிவாய்த்தாமரைக்கட்கருமாணிக்கமேஎன்கள்வா
தனியேனாருயிரேஎன்தலைமிசையாய்வந்திட்டு
இனிநான்போகலொட்டேன்ஒன்றும்மாயஞ்செய்யேலென்னையே. (க)

மாயஞ்செய்யேலென்னையுன்திருமார்வத்துமாலைநங்கை
வாசஞ்செய்பூங்குழலாள்திருவாணைநின்னாணைகண்டாய்
நேசஞ்செய்துன்னோடென்னையுயிர்வேறின்றியொன்றாகவே
கூசஞ்செய்யாதுகொண்டாயென்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ. ()

கூவிக்கொள்ளாய்வந்தந்தோவென்பொல்லாக்கருமாணிக்கமே
ஆவிக்கோர்பற்றுக்கொம்புநின்னலாலறிகின்றிலேனான்
மேவித்தொழும்பிரமன்சிவனிந்திரனாதிக்கெல்லாம்
நாபிக்கமலமுதற்கிழங்கேயும்பரந்ததுவே. (ங)

உம்பரந்தண்பாழேயோவதனுள்மிசைநீயேயோ
அம்பரநற்சோதியதனுட்பிரமனரன்நீ
உம்பரும்யாதவருமபடைத்தமுனிவனவன்நீ
எம்பரஞ்சாதிக்கலுற்றென்னைப்போரவிட்டிட்டாயே. (ச)

போரவிட்டிட்டென்னைநீபுறம்போக்கலுற்றுப்பின்னையான்
ஆரைக்கொண்டெத்தையந்தோவெனதென்பதென்யானென்பதென்
தீரவிரும்புண்டநீரதுபோலவென்னாருயிரை
ஆரப்பருகவெனக்காராவமுதானாயே. (௫)

எனக்காராவமுதாயெனதாவியையின்னுயிரை
மனக்காராமைமன்னியுண்டிட்டாயினியுண்டொழியாய்
புனக்காயாநிறத்தபுண்டரீகக்கட்செங்கனிவாய்
உனக்கேற்குங்கோலமலர்ப்பாவைக்கன்பாவென்னன்பேயோ. (௬)

கோலமலர்ப்பாவைக்கன்பாகியவென்னன்பேயோ
நீலவரையிரண்டுபிறைகவ்விநிமிர்ந்ததொப்பக்
கோலவராகமொன்றாய்நிலங்கோட்டிடைக்கொண்டவெந்தாய்
நீலக்கடல்கடைந்தாயுன்னைப்பெற்றினிப்போக்குவனோ. (௭)

பெற்றினிப்போக்குவனோவுன்னையென்றனிப்பேருயிரை
உற்றவிருவினையாயுயிராய்ப்பயனாயவையாய்
முற்றவிம்மூவுலகும்பெருந்தூறாய்த்தூற்றிற்புக்கு
முற்றக்கரந்தொளித்தாயென்முதற்றனிவித்தேயோ. (௮)

முதற்றனிவித்தேயோமுழுமூவுலகாதிக்கெல்லாம்
முதற்றனியுன்னையுன்னையெனைநாள்வந்துகூடுவன்யான்
முதற்றனியங்குமிங்கும்முழுமுற்றுறுவாழ்பாழாய்
முதற்றனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவிலீயோ. (௯)

சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவில்பெரும்பாழேயோ
சூழ்ந்ததனிற்பெரியபரநன்மலர்ச்சோதீயோ
சூழ்ந்ததனிற்பெரியசுடர்ஞானவின்பமேயோ
சூழ்ந்ததனிற்பெரியவென்னவாவறச்சூழ்ந்தாயே. (௰)

அவாவறச்சூழரியையயனையரனையலற்றி
அவாவற்றுவீடுபெற்றகுருகூர்ச்சடகோபன்சொன்ன
அவாவிலந்தாதிகளாலிவையாயிரமுமுடிந்த
அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே. (௧௧)

பத்தாம்பத்து முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ. திருவாய்மொழி-௧00-இ-பாசுரம்-௧௧0௨.

ஆழ்வாராதிகள் திருவாய்மலர்ந்தருளிய
த்ராவிடவேதப்ரபந்தங்களாகிய
திருவாய்மொழி
முற்றிற்று.
ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

த்ராவிடவேதமாகிய
நாலாயிரப்ரபந்தங்களுள்
பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
திருமழிசையாழ்வார், நம்மாழ்வார்
திருமங்கையாழ்வார்
திருவரங்கத்தமுதனாராகிய
இவர்கள் திருவாய்மலர்ந்தருளிய

இயற்பா.

காலக்ஷேபஸ்வாமிகள் முன்னிலையில்
பலவித்வான்களுக்கிணங்க
திருக்குடந்தை - நட்டை,
கிருஷ்ணமாசாரியரால்
பரிசோதிக்கப்பட்டு

அ - வீரசாமிநாயகரவர்களால்
சென்னைக்
கலாநிதி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

உடையவர்திருவவதாரஞு ௮௱௫௰௧-இ
கலி - ௪௯௬௰௯ வருஷம்
விபவஞு ஐப்பசிமீ.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

நாலாயிரப்பிரபந்தங்களுள்

இயற்பாவின்

அட்டவணை.

பக்கம்.		பாசுரம்.
௫0௩	முதற்றிருவந்தாதி	௧00
௫௧௪	இரண்டாந்திருவந்தாதி	௧00
[illegible]	மூன்றாந்திருவந்தாதி	௧00
௫௪0	நான்காந்திருவந்தாதி	௯௬
௫௫௨	திருவிருத்தம்	௧00
௫௬௫	திருவாசிரியம்	௭
௫௬௭	பெரியதிருவந்தாதி	௮௭
௫௭௮	திருவெழுகூற்றிருக்கை	௧
௫௮0	சிறியதிருமடல்	௪0
௫௮௬	பெரியதிருமடல்	௭௮
௫௯௯	இராமானுசநூற்றந்தாதி	௧0௮

ஆ பிரபந்தம்-௧௧-இ-இயற்பாவின் பாசுரம்-௮௱௧௭.

இயற்பாவின்

அட்டவணை

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆழ்வாராதிகள் திருவாய்மலர்ந்தருளிய

திராவிடவேதமாகியநாலாயிரப்பிரபந்தத்துள்

இயற்பா.

பொய்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

௧ - திருவந்தாதி.

தனியன்.

நேரிசைவெண்பா.

கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த
பொய்கைப்பிரான்கவிஞர்போரேறு — வையத்
தடியவர்கள்வாழவருந்தமிழ்நூற்றந்தாதி
படிவிளங்கச்செய்தான்பரிந்து.

வையந்தகளியாவார்கடலேநெய்யாக
வெய்யகதிரோன்விளக்காகச்—செய்ய
சுடராழியானடிக்கேசூட்டினேன்சொன்மாலை
இடராழிநீங்குகவேயென்று. (க)

என்றுகடல்கடைந்ததெவ்வுலகம்நீரேற்றது
ஒன்றுமதனையுணரேன்நான்—அன்று
அதடைத்துடைத்துக்கண்படுத்தவாழியிதுநீ
படைத்திடந்துண்டுமிழ்ந்தபார். (உ)

பாரளவுமோரடிவைத்தோரடியும்பாருடுத்த
நீரளவுஞ்செல்லநிமிர்ந்ததே—சூருருவிற்
பேயளவுகண்டபெருமானறிகிலேன்
நீயளவுகண்டநெறி. (ங)

நெறிவாசல்தானேயாய்நின்றானையைந்து
பொறிவாசல்போர்க்கதவஞ்சாத்தி—அறிவானாம்
ஆலமரநீழலறநால்வர்க்கன்றுரைத்த
ஆலமமர்கண்டத்தரன். (ச)

அரன்நாரணன்நாமமான்விடைபுள்ளூர்தி
உரைநூல்மறையுறையுங்கோயில்—வரைநீர்
கருமமழிப்பளிப்புக்கையதுவேல்நேமி
உருவமெரிகார்மேனியொன்று. (ரு)

ஒன்றுமறந்தறியேனோதநீர்வண்ணனைநான்
இன்றுமறப்பனோவேழைகாள்—அன்று
கருவரங்கத்துட்கிடந்துகைதொழுதேன்கண்டேன்
திருவரங்கமேயான்திசை. (சு)

திசையுந்திசையுறுதெய்வமுந்தெய்வத்
திசையுங்கருமங்களெல்லாம்—அசைவில்சீர்க்
கண்ணன்நெடுமால்கடல்கடைந்தகாரோத
வண்ணன்படைத்தமயக்கு. (எ)

மயங்கவலம்புரிவாய்வைத்துவானத்
தியங்குமெறிகதிரோன்றன்னை—முயங்கமருட்
டேராழியால்மறைத்ததென்னீதிருமாலே
போராழிக்கையாற்பொருது. (அ)

பொருகோட்டோரேனமாய்ப்புக்கிடந்தாய்க்கன்றுன்
ஒருகோட்டின்மேற்கிடந்ததன்றே—விரிதோட்ட

சேவடியைநீட்டித்திசைநடுங்கவிண்டுளங்க
மாவடிவினீயளந்தமண். (கூ)

மண்ணும்மலையும்மறிகடலும்மாருதமும்
விண்ணும்விழுங்கியதுமெய்யென்பர்—எண்ணில்
அலகளவுகண்டசீராழியாய்க்கன்றிவ்
வுலகளவுமுண்டோவுன்வாய். (க0)

வாயவனையல்லதுவாழ்த்தாதுகையுலகந்
தாயவனையல்லதுதாந்தொழா—பேய்முலைநஞ்
சூணாகவுண்டானுருவொடுபேரல்லாற்
காணாகண்கேளாசெவி. (கக)

செவிவாய்கண்மூக்குடலென்றைம்புலனுஞ்செந்தீ
புவிகால்நீர்விண்பூதமைந்தும்—அவியாத
ஞானமும்வேள்வியும்நல்லறமுமென்பரே
ஏனமாய்நின்றார்க்கியல்பு. (கஉ)

இயல்பாகவீன்றுழாயானடிக்கேசெல்ல
முயல்வாரியலமரர்முன்னம்—இயல்பாக
நீதியாலோதிநியமங்களாற்பரவ
ஆதியாய்நின்றாரவர். (கங)

அவரவர்தாந்தாமறிந்தவாறேத்தி
இவரிவரெம்பெருமானென்று—சுவர்மிசைச்
சாத்தியும்வைத்துந்தொழுவருலகளந்த
மூர்த்தியுருவேமுதல். (கச)

முதலாவார்மூவரேயம்மூவருள்ளும்
முதலாவான்மூரிநீர்வண்ணன்—முதலாய
நல்லானருளல்லால்நாமநீர்வையகத்துப்
பல்லாரருளும்பழுது. (கரு)

பழுதேபலபகலும்போயினவென்றஞ்சி
அழுதேனரவணைமேற்கண்டு—தொழுதேன்
கடலோதங்காலலைப்பக்கண்வளருஞ்செங்கண்
அடலோதவண்ணரடி. (கசு)

அடியும்படிகடப்பத்தோள்திசைமேற்செல்ல
முடியும்விசும்பளந்ததென்பர்—வடிவுகிரால்
ஈர்ந்தானிரணியனதாகமிருஞ்சிறைப்புள்
ஊர்ந்தானுலகளந்தநான்று. (கஎ)

நான்றமுலைத்தலைநஞ்சுண்டுறிவெண்ணெய்
தோன்றவுண்டான்வென்றிசூழ்களிற்றை — ஊன்றிப்
பொருதுடைவுகண்டானும்புள்ளின்வாய்கீண்டானும்
மருதிடைபோய்மண்ணளந்தமால். (கஅ)

மாலுங்கருங்கடலேயென்னோற்றாய்வையகமுண்
டாலிலைத்துயின்றவாழியான் — கோலக்
கருமேனிச்செங்கண்மால்கண்படையுளென்றும்
திருமேனிநீதீண்டப்பெற்று. (க௯)

பெற்றார்தளைகழலப்பேர்ந்தோர்குறளுருவாய்ச்
செற்றார்படிகடந்தசெங்கண்மால் — நற்றா
மரைமலர்ச்சேவடியைவானவர்கைகூப்பி
நிரைமலர்கொண்டேத்துவராநின்று. (உ0)

நின்றுநிலமங்கைநீரேற்றுமூவடியாற்
சென்றுதிசையளந்தசெங்கண்மாற் — கென்றும்
படையாழிபுள்ளூர்திபாம்பணையான்பாதம்
அடையாழிநெஞ்சேயறி. (உக)

அறியுமுலகெல்லாம்யானேயுமல்லேன்
பொறிகொள்சிறையுவணமூர்ந்தாய் — வெறிகமழும்
காம்பேய்மென்றோளிகடைவெண்ணெயுண்டாயைத்
தாம்பேகொண்டார்த்ததழும்பு. (உஉ)

தழும்பிருந்தசார்ங்கநாண்டோய்ந்தவாமங்கை
தழும்பிருந்ததாள்சகடஞ்சாடி — தழும்பிருந்த
பூங்கோதையாள்வெருவப்பொன்பெயரோன்மார்பிடந்த
வீங்கோதவண்ணர்விரல். (உ௩)

விரலொடுவாய்தோய்ந்தவெண்ணெய்கண்டாய்ச்சி
உரலொடுறப்பிணித்தஞான்று — குரலோவா
தேங்கிநினைந்தயலார்காணவிருந்திலையே
யோங்கோதவண்ணாவுரை. (உ௪)

உரைமேற்கொண்டென்னுள்ளமோவாதெப்போதும்
வரைமேல்மரகதமேபோலத் — திரைமேற்
கிடந்தானைக்கீண்டானைக்கேழலாய்ப்பூமி
இடந்தானையேத்தியெழும். (உ௫)

எழுவார்விடைகொள்வாரீன்றுழாயானை
வழுவாவகைநினைந்துவைகல் — தொழுவார்

வினைச்சுடரைநந்துவிக்கும்வேங்கடமேவானோர்
மனச்சுடரைத்தூண்டுமலை. (உ௬)

மலையாற்குடைகவித்துமாவாய்பிளந்து
சிலையால்மராமரமேழ்செற்றுக் — கொலையானைப்
போர்க்கோடொசித்தனவும்பூங்குருந்தஞ்சாய்த்தனவும்
கார்க்கோடுபற்றியான்கை. (உ௭)

கையவலம்புரியுநேமியுங்கார்வண்ணத்
தையமலர்மகணின்னாகத்தாள் — செய்ய
மறையானின்னுந்தியான்மாமதின்மூன்றெய்த
இறையானின்னாகத்திறை. (உஅ)

இறையுநிலனுமிருவிசும்புங்காற்றும்
அறைபுனலுஞ்செந்தீயுமாவான் — பிறைமருப்பிற்
பைங்கண்மால்யானைபடுதுயரங்காத்தளித்த
செங்கண்மால்கண்டாய்தெளி. (உ௯)

தெளிதாகவுள்ளத்தைச்செந்நிறீஇஞானத்
தெளிதாகநன்குணர்வார்சிந்தை — எளிதாகத்
தாய்நாடிகன்றேபோற்றண்டுழாயானடிக்கே
போய்நாடிக்கொள்ளும்புரிந்து. (௩0)

புரியொருகைப்பற்றியோர்பொன்னாழியேந்தி
அரியுருவுமாளுருவுமாகி — எரியுருவ
வண்ணத்தான்மார்பிடந்தமாலடியையல்லான்மற்
றெண்ணத்தானாமோவிமை. (௩க)

இமையாதகண்ணாலிருளகலநோக்கி
அமையாப்பொறிபுலனைந்தும் — நமையாமல்
ஆகத்தணைப்பாரணைவரேயாயிரவாய்
நாகத்தணையானகர். (௩உ)

நகரமருள்புரிந்துநான்முகற்குப்பூமேல்
பகரமறைபயந்தபண்பன் — பெயரினையே
புந்தியாற்சிந்தியாதோதியுருவெண்ணும்
அந்தியாலாம்பயனங்கென். (௩௩)

என்னொருவர்மெய்யென்பரேழுலகுண்டாலிலையின்
முன்னொருவனாயமுகில்வண்ணா — நின்னுருகிப்
பேய்த்தாய்முலைதந்தாள்பேர்ந்திலளாற்பேரமர்க்கண்
ஆய்த்தாய்முலைதந்தவாறு. (௩௪)

ஆரியன்பிலடியார்தமர்வத்தாற்
கூரியகுற்றமாக்கொள்ளல்நீ—தேரின்
நெடியோயடியடைதற்கன்றேயீரைந்து
முடியான்படைத்தமுரண். (௩௫)

முரணவலிதொலைதற்காமன்றேமுன்னந்
தரணிதனதாகத்தானே—இரணியனைப்
புண்ணிரந்தவள்ளுகிராற்பொன்னாழிக்கையாநீ
மண்ணிரந்துகொண்டவகை. (௩௬)

வகையறுநுண்கேள்விவாய்வார்கணாளும்
புகைவிளக்கும்பூம்புனலுமேந்தித்—திசைதிசையின்
வேதியர்கள்சென்றிறைஞ்சும்வேங்கடமேவெண்சங்கம்
ஊதியவாய்மாலுகந்தவூர். (௩௭)

ஊரும்வரியரவமொண்குறவர்மால்யானை
பேரவெறிந்தபெருமணியைக்—காருடைய
மின்னென்றுபுற்றடையும்வேங்கடமேமேலசுரர்
என்னின்றமாலதிடம். (௩௮)

இடந்ததுபூமியெடுத்ததுகுன்றங்
கடந்ததுகஞ்சனைமுன்னஞ்சக்—கிடந்ததுவும்
நீரோதமாகடலேநின்றதுவும்வேங்கடமே
பேரோதவண்ணர்பெரிது. (௩௯)

பெருவிற்பகழிக்குறவர்கைச்செந்தீ
வெருவிப்புனந்துறந்தவேழம்—இருவிசும்பின்
மீன்வீழக்கண்டஞ்சும்வேங்கடமேமேலசுரர்
கோன்வீழக்கண்டுகந்தான்குன்று (௪௰)

குன்றனையகுற்றஞ்செயினுங்குணங்கொள்ளும்
இன்றுமுதலாகவென்னெஞ்சே—என்றும்
புறனுரையேயாயினும்பொன்னாழிக்கையான்
திறனுரையேசிந்தித்திரு. (௪௧)

திருமகளும்மண்மகளுமாய்மகளுஞ்சேர்ந்தால்
திருமகட்கேதீர்ந்தவாறென்கொல்—திருமகண்மேற்
பாலோதஞ்சிந்தப்படநாகணைக்கிடந்த
மாலோதவண்ணர்மனம். (௪௨)

மனமாசுதீருமருவினையுஞ்சாரா
தனமாயதானேகைகூடும்—புனமேய

பூந்துழாயானடிக்கேபோதொடுநீரேந்தித்
தாந்தொழாநிற்பார்தமர். (௪௩)

தமருகந்ததெவ்வுருவமவ்வுருவந்தானே
தமருகந்ததெப்பேர்மற்றப்பேர்—தமருகந்த
தெவ்வண்ணஞ்சிந்தித்திமையாதிருப்பரே
அவ்வண்ணமாழியானாம். (௪௪)

ஆமேயமரர்க்கறியவதுநிற்க
நாமேயறிகிற்போநன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன்றாள்பணிந்தவாளரக்கனீண்முடியைப்
பாதமத்தாலெண்ணினான்பண்பு. (௪௫)

பண்புரிந்தநான்மறையோன்சென்னிப்பலியேற்ற
வெண்புரிநூன்மார்பன்வினைதீரப்—புண்புரிந்த
ஆகத்தான்றாள்பணிவார்கண்டீரமரர்தம்
போகத்தாற்பூமியாள்வார். (௪௬)

வாரிசுருக்கிமதக்களிறைந்தினையுஞ்
சேரிதிரியாமற்செந்நிறீஇக்—கூரிய
மெய்ஞ்ஞானத்தாலுணர்வார்காண்பரேமேலொருநாள்
கைந்நாகங்காத்தான்கழல். (௪௭)

கழலொன்றெடுத்தொருகைசுற்றியோர்கைமேற்
சுழலுஞ்சுராசுரர்களஞ்ச—அழலுஞ்
செருவாழியேந்தினான்சேவடிக்கேசெல்ல
மருவாழிநெஞ்சேமகிழ். (௪௮)

மகிழலகொன்றேபோன்மாறும்பல்யாக்கை
நெகிழமுயல்கிற்பார்க்கல்லால்—முகிழ்விரிந்த
சோதிபோற்றோன்றுஞ்சுடர்ப்பொன்னெடுமுடியெம்
ஆதிகாண்பார்க்குமரிது. (௪௯)

அரியபுலனைந்தடக்கியாய்மலர்கொண்டார்வம்
புரியபரிசினாற்புல்கில்—பெரியனாய்
மாற்றாதுவீற்றிருந்தமாவலிபால்வண்கைநீர்
ஏற்றானைக்காண்பதெளிது. (௫௰)

எளிதிரண்டடியுங்காண்பதற்கென்னுள்ளந்
தெளியத்தெளிந்தொழியுஞ்செவ்வே—களியிற்
பொருந்தாதவனைப்பொரலுற்றரியாய்
இருந்தான்றிருநாமமெண். (௫௧)

எண்மர்பதினொருவரீரறுவரோரிருவர்
வண்ணமலரேந்திவைகலும்—நண்ணி
ஒருமாலையாற்பரவியோவாதெப்போதுந்
திருமாலைக்கைதொழுவர்சென்று. (௫௨)

சென்றாற்குடையாமிருந்தாற்சிங்காசனமாம்
நின்றான்மரவடியாநீள்கடலுள்—என்றும்
புணையாமணிவிளக்காம்பூம்பட்டாம்புல்கும்
அணையாந்திருமாற்கரவு. (௫௩)

அரவமடல்வேழமான்குருந்தம்புள்வாய்
குரவைகுடமுலைமற்குன்றம்—கரவின்றி
விட்டிறுத்துமேய்த்தொசித்துக்கீண்டுகோத்தாடியுண்
டட்டெடுத்தசெங்கணவன். (௫௪)

அவன்றமரெவ்வினையராகிலுமெங்கோன்
அவன்றமரேயென்றொழிவதல்லால்—நமன்றமரால்
ஆராயப்பட்டறியார்கண்டீரரவணைமேற்
பேராயர்க்காட்பட்டார்பேர். (௫௫)

பேரேவரப்பிதற்றலல்லாலெம்பெம்மானை
யாரேயறிவாரதுநிற்க—நேரே
கடிக்கமலத்துள்ளிருந்துங்காண்கிலான்கண்ணன்
அடிக்கமலந்தன்னையயன். (௫௬)

அயனின்றவல்வினையையஞ்சினேனஞ்சி
உயநின்றிருவடியேசேர்வான்—நயனின்ற
நன்மாலைகொண்டுநமோநாரணவென்னுஞ்
சொன்மாலைகற்றேன்றொழுது. (௫௭)

தொழுதுமலர்கொண்டுதூபங்கையேந்தி
எழுதுமெழுவாழிநெஞ்சே—பழுதின்றி
மந்திரங்கள்கற்பனவுமாலடியேகைதொழுவான்
அந்தரமொன்றில்லையடை. (௫௮)

அடைந்தவருவினையோடல்லனோய்பாவம்
மிடைந்தவைமீண்டொழியவேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கைவைத்தான்முரணழியமுன்னொருநாள்
தன்னிலங்கைவைத்தான்சரண். (௫௯)

சரணாமறைபயந்ததாமரையானோடும்
மரணாயமன்னுயிர்கட்கெல்லாம்—அரணாய
பேராழிகொண்டபிரானன்றிமற்றறியா
தோராழிசூழ்ந்தவுலகு. (௬௦)

உலகுமுலகிறந்தவூழியுமொண்கேழ்
விலகுகருங்கடலும்வெற்பும்—உலகினில்
செந்தீயுமாருதமும்வானுந்திருமால்தன்
புந்தியிலாயபுணர்ப்பு. (௬௧)

புணர்மருதினூடுபோய்ப்பூங்குருந்தஞ்சாய்த்து
மணமருவமால்விடையேழ்செற்று—கணம்வெருவ
ஏழுலகுந்தாயினவுமெண்டிசையும்போயினவுஞ்
சூழரவப்பொங்கணையான்றோள். (௬௨)

தோளவனையல்லாற்றொழாவென்செவியிரண்டுங்
கேளவனதின்மொழியேகேட்டிருக்கும்—நாநாளுங்
கோணாகணையான்குரைகழலேகூறுமே
நாணாமைநள்ளேனயம். (௬௩)

நயவேன்பிறர்பொருளைநள்ளேன்கீழாரோ
டுயவேனுயர்ந்தவரோடல்லால்—வியவேன்
திருமாலையல்லதுதெய்வமென்றேத்தேன்
வருமாறென்னென்மேல்வினை. (௬௪)

வினையாலடர்ப்படார்வெந்நரகிற்சேரார்
தினையேனுந்தீக்கதிக்கட்செல்லார்—நினைதற்
கரியானைச்சேயானையாயிரம்பேர்ச்செங்கட்
கரியானைக்கைதொழுதக்கால். (௬௫)

காலையெழுந்துலகங்கற்பனவுங்கற்றுணர்ந்த
மேலைத்தலைமறையோர்வேட்பனவும்—வேலைக்கண்
ணோராழியானடியேயோதுவதுமோர்ப்பனவும்
பேராழிகொண்டான்பெயர். (௬௬)

பெயருங்கருங்கடலேநோக்குமாறொண்பூ
உயருங்கதிரவனேநோக்கும்—உயிருந்
தருமனையேநோக்குமொண்டாமரையாள்கேள்வன்
ஒருவனையேநோக்குமுணர்வு. (௬௭)

உணர்வாராருன்பெருமையூழிதோறூழி
உணர்வாராருன்னுருவந்தன்னை—உணர்வாரார்
விண்ணகத்தாய்மண்ணகத்தாய்வேங்கடத்தாய்நால்வேதப்
பண்ணகத்தாய்நீகிடந்தபால். (௬௮)

பாலன்றனதுருவாயேழுலகுண்டாலிலையின்
மேலன்றுநீகிடந்தமெய்யென்பர்—ஆலன்று
வேலைநீருள்ளதோவிண்ணதோமண்ணதோ
சோலைசூழ்குன்றெடுத்தாய்சொல்லு. (௬௯)

சொல்லுந்தனையுந்தொழுமின்விழுமுடம்பு
செல்லுந்தனையுந்திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால்வேள்வியாற்றந்திரத்தான்மந்திரத்தால்
நாமத்தாலேத்துதிரேனன்று. (௭௰)

நன்றுபிணிமூப்புக்கையகற்றிநான்கூழி
நின்றுநிலமுழுதுமாண்டாலும்—என்றும்
விடலாழிநெஞ்சமேவேண்டினேன்கண்டாய்
அடலாழிகொண்டான்மாட்டன்பு. (௭௧)

அன்பாழியானையணுகென்னுநாவவன்றன்
பண்பாழித்தோள்பரவியேத்தென்னும்—முன்பூழி
காணானைக்காணென்னுங்கண்செவிகேளென்னும்
பூணாரம்பூண்டான்புகழ். (௭௨)

புகழ்வாய்பழிப்பாய்நீபூந்துழாயானை
இகழ்வாய்கருதுவாய்நெஞ்சே—திகழ்நீர்க்
கடலுமலையுமிருவிசும்புங்காற்றும்
உடலுமுயிருமேற்றான். (௭௩)

ஏற்றான்புள்ளூர்ந்தானெயிலெரித்தான்மார்விடந்தான்
நீற்றானிழன்மணிவண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான்பூமகளான்வார்சடையானீண்முடியான்
கங்கையானீள்கழலான்காப்பு. (௭௪)

காப்புன்னையுன்னக்கழியுமருவினைகள்
ஆப்புன்னையுன்னவவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க்கில்லைதிருமாலேநின்னடியை
வந்திப்பார்காண்பர்வழி. (௭௫)

வழிநின்றுநின்னைத்தொழுவார்வழுவா
மொழிநின்றமூர்த்தியரேயாவர்—பழுதொன்றும்
வாராதவண்ணமேவிண்கொடுக்கும்மண்ணளந்த
சீரான்திருவேங்கடம். (௭௬)

வேங்கடமும்விண்ணகரும்வெஃகாவுமஃகாத
பூங்கிடங்கினீள்கோவற்பொன்னகரும்—நான்கிடத்தும்

நின்றானிருந்தான்கிடந்தானடந்தானே
என்றாற்கெடுமாமிடர். (௭௭)

இடரார்படுவாரெழுநெஞ்சேவேழந்
தொடர்வான்கொடுமுதலைசூழ்ந்த—படமுடையப்
பன்னாகப்பள்ளியான்பாதமேகைதொழுதுங்
கொன்னாகப்பூம்போதுகொண்டு. (௭௮)

கொண்டானையல்லாற்கொடுத்தாரையார்பழிப்பார்
மண்டாவெனவிரந்துமாவலியை—ஒண்டாரை
நீரங்கைதோயநிமிர்ந்திலையேநீள்விசும்பில்
ஆரங்கைதோயவடுத்து. (௭௯)

அடுத்தகடும்பகைஞற்காற்றேனென்றோடிப்
படுத்தபெரும்பாழிசூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன்கைக்கொடுத்தமாமேனிமாயவனுக்
கல்லாதுமாவரோவாள். (௮௰)

ஆளமர்வென்றியடுகளத்துளஞ்ஞான்று
வாளமர்வேண்டிவரைநட்டு—நீளரவைச்
சுற்றிக்கடைந்தான்பெயரன்றேதொல்லைநாம்
பற்றிக்கடத்தும்படை. (௮௧)

படையாரும்வாட்கண்ணார்பாரசிலர்பைம்பூந்
தொடையலோடேந்தியதூபம்—இடையிடையின்
மீனமாய்மாசூணும்வேங்கடமேமேலொருநாள்
மானமாய்வெய்தான்வரை. (௮௨)

வரைகுடைதோள்காம்பாகவாநிரைகாத்தாயர்
நிரைவிடையேழ்செற்றவாறென்னே—உரவுடைய
நீராழியுட்கிடந்துநேராநிசாசரர்மேல்
பேராழிகொண்டபிரான். (௮௩)

பிரானுன்பெருமைபிறராரறிவார்
உராயுலகளந்தஞான்று—வராகத்
தெயிற்றளவுபோதாவாறென்கொலோவெந்தை
அடிக்களவுபோந்தபடி. (௮௪)

படிகண்டறிதியேபாம்பணையினான்புட்
கொடிகண்டறிதியேகூறாய்—வடிவிற்
பொறியைந்துமுள்ளடக்கிப்போதொடுநீரேந்தி
நெறிநின்றநெஞ்சமேநீ. (௮௫)

நீயுந்திருமகளும்நின்றாயாற்குன்றெடுத்துப்
பாயும்பனிமறைத்தபண்பாளா—வாசற்
கடைகழியாவுள்புகாக்காமருபூங்கோவல்
இடைகழியேபற்றியினி. (௮௬)

இனியார்புகுவாரெழுநாகவாசல்
முனியாதுமூரித்தாள்கோண்மின்—கனிசாயக்
கன்றெறிந்ததோளான்கனைகழலேகாண்பதற்கு
நன்கறிந்தநாவலஞ்சூழ்நாடு. (௮௭)

நாடிலும்நின்னடியேநாடுவன்நாடோறும்
பாடிலும்நின்புகழேபாடுவன்—சூடிலும்
பொன்னாழியேந்தினான்பொன்னடியேசூடுவேற்
கென்னாகிலென்னேயெனக்கு. (௮௮)

எனக்காவாராரொருவரேயெம்பெருமான்
தனக்காவான்றானேமற்றல்லால்—புனக்காயாம்
பூமேனிகாணப்பொதியவிழும்பூவைப்பூ
மாமேனிகாட்டும்வரம். (௮௯)

வரத்தால்வலிநினைந்துமாதவநின்பாதம்
சிரத்தால்வணங்கானாமென்றே—உரத்தினால்
ஈரரியாய்நேர்வலியோனாயவிரணியனை
ஓரரியாய்நீயிடந்ததூன். (௯௰)

ஊனக்குரம்பையினுள்புக்கிருள்நீக்கி
ஞானச்சுடர்கொளீஇநாடோறும்—ஏனத்
துருவாயுலகிடந்தவூழியான்பாதம்
மருவாதார்க்குண்டாமோவான். (௯௧)

வானாகித்தீயாய்மறிகடலாய்மாருதமாய்த்
தேனாகிப்பாலாந்திருமாலே—ஆனாய்ச்சி
வெண்ணெய்விழுங்கநிறையுமேமுன்னொருநாள்
மண்ணையுமிழ்ந்தவயிறு. (௯௨)

வயிறழலவாளுருவிவந்தானையஞ்ச
எயிறிலகவாய்மடித்ததென்னீ—பொறியுகிராற்
பூவடியையீடழித்தபொன்னாழிக்கையாநின்
சேவடிமேலீடழியச்செற்று. (௯௩)

செற்றெழுந்துதீவிழித்துச்சென்றவிந்தவேழுலகும்
மற்றிவையாவென்றுவாயங்காந்து—முற்றும்

மறைப்பவர்க்குக்காட்டியமாயவனையல்லால்
இறையேனுமேத்தாதென்னா. (௯௪)

நாவாயிலுண்டேநமோநாரணவென்
றோவாதுரைக்குமுரையுண்டே—மூவாத
மாக்கதிக்கட்செல்லும்வகையுண்டேயென்னொருவர்
தீக்கதிக்கட்செல்லுந்திறம். (௯௫)

திறம்பாதென்னெஞ்சமேசெங்கண்மால்கண்டாய்
அறம்பாவமென்றிரண்டுமாவான்—புறந்தானிம்
மண்டான்மறிகடல்தான்மாருதந்தான்வான்றானே
கண்டாய்கடைக்கட்பிடி. (௯௬)

பிடிசேர்களிறளித்தபேராளாவுன்றன்
அடிசேர்ந்தருள்பெற்றாளன்றே—பொடிசேர்
அனற்கங்கையேற்றானவிர்சடைமேற்பாய்ந்த
புனற்கங்கையென்னும்பேர்ப்பொன். (௯௭)

பொன்திகழுமேனிப்புரிசடையம்புண்ணியனும்
நின்றுலகந்தாயநெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால்திரிவரேலுமொருவன்
ஒருவனங்கத்தென்றுமுளன். (௯௮)

உளன்கண்டாய்நன்னெஞ்சேயுத்தமனென்றும்
உளன்கண்டாயுள்ளுவாருள்ளத்—துளன்கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும்வேங்கடத்தின்மேயானும்
உள்ளத்தினுள்ளானென்றோர். (௯௯)

ஓரடியுஞ்சாடுதைத்தவொண்மலர்ச்சேவடியும்
ஈரடியுங்காணலாமென்னெஞ்சே—ஓரடியில்
தாயவனைக்கேசவனைத்தண்டுழாய்மாலைசேர்
மாயவனையேமனத்துவை. (௱)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பாஞ்சஜந்யாம்சரானபொய்கையாழ்வார்திருநக்ஷத்ரம்
ஐப்பசிமாசம் திருவோணம்.

பொய்கையாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய
முதற்றிருவந்தாதி முற்றும்.

ஆ-பாசுரம்-௱.

பூதத்தாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

உ - ம். திருவந்தாதி.

தனியன்.

நேரிசைவெண்பா.

திருக்குருகைப்பிரான்பிள்ளானருளிச்செய்தது.

என்பிறவிதீரவிறைஞ்சினேனின்னமுதா
அன்பேதகளியளித்தானை — நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துக்கள்சேருங்கடன்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல்.

அன்பேதகளியாவார்வமேநெய்யாக
இன்புருகுசிந்தையிடுதிரியா — நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேனாரணற்கு
ஞானத்தமிழ்புரிந்தநான். (௧)

ஞானத்தால்நன்குணர்ந்துநாரணன்றன்னாமங்கள்
தானத்தால்மற்றவன்பேர்சாற்றினால் — வானத்
தணியமராக்குவிக்குமஃதன்றேநங்கள்
பணியமரர்கோமான்பரிசு. (௨)

பரிசுநறுமலரால்பாற்கடலான்பாதம்
புரிவார்புகப்பெறுவர்போலாம் — புரிவார்கள்
தொல்லமரர்கேள்வித்துலங்கொளிசேர்தோற்றத்து
நல்லமரர்கோமானகர். (௩)

நகரிழைத்துநித்திலத்துநாண்மலர்கொண்டாங்கே
திகழுமணிவயிரஞ்சேர்த்து — நிகரில்லாப்
பைங்கமலமேந்திப்பணிந்தேன்பனிமலரா
னங்கமலக்கண்ணனடி. (௪)

அடிமூன்றிலிவ்வுலகமன்றளந்தாய்போலும்
அடிமூன்றிரந்தவனிகொண்டாய் — படிநின்ற
நீரோதமேனிநெடுமாலேநின்னடியை
யாரோதவல்லாரறிந்து. (௫)

அறிந்தைந்துமுள்ளடக்கியாய்மலர்கொண்டார்வம்
செறிந்தமனத்தராய்ச்செவ்வே — அறிந்தவன்றன்
பேரோதியேத்தும்பெருந்தவத்தோர்காண்பரே
காரோதவண்ணன்கழல். (௬)

கழலெடுத்துவாய்மடித்துக்கண்சுழன்றுமாற்றார்
அழலெடுத்தசிந்தையராயஞ்ச — தழலெடுத்த
போராழியேந்தினான்பொன்மலர்ச்சேவடியை
ஓராழிநெஞ்சேயுகந்து. (௭)

உகந்துன்னைவாங்கியொளிநிறங்கொள்கொங்கை
அகங்குளிரவுண்ணென்றாளாவி — உகந்து
முலையுண்பாய்போலேமுனிந்துண்டாய்நீயும்
அலைபண்பாலானமையாலன்று. (௮)

அன்றதுகண்டஞ்சாதவாய்ச்சியுனக்கிரங்கி
நின்றுமுலைதந்தவிந்நீர்மைக்கு — அன்று
வரன்முறையால்நீயளந்தமாகடல்சூழ்ஞாலம்
பெருமுறையாலெய்துமோபேர்த்து. (௯)

பேர்த்தனைமாசகடம்பிள்ளையாய்மண்ணிரந்து
காத்தனைபல்லுயிருங்காவலனே — ஏத்திய
நாவுடையேன்பூவுடையேனின்னுள்ளிநின்றமையால்
காவடியேன்பட்டகடை. (௧௦)

கடைநின்றமரர்கழல்தொழுதுநாளும்
இடைநின்றவின்பத்தராவர் — புடைநின்ற

நீரோதமேனிநெடுமாலேநின்னடியை
யாரோதவல்லாரவர். (௧௧)

அவரிவரென்றில்லையரவணையான்பாதம்
எவர்வணங்கியேத்தாதாரெண்ணில்—பவரும்
செழுங்கதிரோனொண்மலரோன்கண்ணுதலோனன்றே
தொழுந்தகையார்நாளுந்தொடர்ந்து. (௧௨)

தொடரெடுத்தமால்யானைசூழ்கயம்புக்கஞ்சிப்
படரெடுத்தபைங்கமலங்கொண்டன்—றிடரடுத்த
ஆழியான்பாதம்பணிந்தன்றேவானவர்கோன்
பாழிதானெய்திற்றுப்பண்டு. (௧௩)

பண்டிப்பெரும்பதியையாக்கிப்பழிபாவம்
கொண்டிங்குவாழ்வாரைக்கூறாதே—எண்டிசையும்
பேர்த்தகரநான்குடையான்பேரோதிப்பேதைகாள்
தீர்த்தகரராமின்றிரிந்து. (௧௪)

திரிந்ததுவெஞ்சமத்துத்தேர்கடவியன்று
பிரிந்ததுசீதையைமான்பின்போய்—புரிந்ததுவும்
கண்பள்ளிகொள்ளவழகியதேநாகத்தின்
தண்பள்ளிகொள்வான்றனக்கு. (௧௫)

தனக்கடிமைபட்டதுதானறியானேனும்
மனத்தடையவைப்பதாமாலை—வனத்திடரை
ஏரியாம்வண்ணமியற்றுமிதுவல்லால்
மாரியார்பெய்கிற்பார்மற்று. (௧௬)

மற்றாரியலாவார்வானவர்கோன்மாமலரோன்
சுற்றும்வணங்குந்தொழிலானை—ஒற்றைப்
பிறையிருந்தசெஞ்சடையான்பின்சென்றுமாலைக்
குறையிரந்துதான்முடித்தான்கொண்டு. (௧௭)

கொண்டதுலகங்குறளுருவாய்க்கோளரியாய்
ஒண்டிறலோன்மார்வத்துகிர்வைத்த—துண்டதுவும்
தான்கிடந்தவேழுலகேதாமரைக்கண்மாலொருநாள்
வான்கிடந்தான்செய்தவழக்கு. (௧௮)

வழக்கன்றுகண்டாய்வலிசகடஞ்செற்றாய்
வழக்கென்றுநீமதிக்கவேண்டா—குழக்கன்று
தீவிளவின்காய்க்கெறிந்ததீமைதிருமாலே
பார்விளங்கச்செய்தாய்பழி. (௧௯)

பழிபாவங்கையகற்றிப்பல்காலுநின்னை
வழிவாழ்வார்வாழ்வராமாதோ—வழுவின்றி
நாரணன்றன்னாமங்கணன்குணர்ந்துநன்கேத்தும்
காரணங்கடாமுடையார்தாம். (௨0)

தாமுளரேதம்முள்ளமுள்ளுளதேதாமரையின்
பூவுளதேயேத்தும்பொழுதுண்டே—வாமன்
திருமருவுதாண்மருவுசென்னியரேசெவ்வே
அருநரகஞ்சேர்வதரிது. (௨௧)

அரியதெளிதாகுமாற்றலாமாற்றிப்
பெருகமுயல்வாரைப்பெற்றால்—கரியதோர்
வெண்கோட்டுமால்யானைவென்றுமுடித்தன்றே
தண்கோட்டுமாமலரால்தாழ்ந்து. (௨௨)

தாழ்ந்துவரங்கொண்டுதக்கவகைகளால்
வாழ்த்துவழிவாரைவாழ்விக்கும்—தாழ்ந்த
விளங்கனிக்குக்கன்றெறிந்துவேற்றுருவாய்ஞாலம்
அளந்தடிக்கீழ்க்கொண்டவவன். (௨௩)

அவன்கண்டாய்நன்னெஞ்சேயாருளுங்கேடும்
அவன்கண்டாயைம்புலனாய்நின்றான்—அவன்கண்டாய்
காற்றுத்தீநீர்வான்கருவரைமண்காரோத
சீற்றத்தீயாவானுஞ்சென்று. (௨௪)

சென்றதிலங்கைமேற்செவ்வேதன்சீற்றத்தால்
கொன்றதிராவணனைக்கூறுங்கால்—நின்றதுவும்
வேயோங்குதண்சாரல்வேங்கடமேவிண்ணவர்தம்
வாயோங்குதொல்புகழான்வந்து. (௨௫)

வந்தித்தவனைவழிநின்றவைம்பூதம்
ஐந்துமகத்தடக்கியார்வமாய்—உந்திப
படியமரர்வேலையான்பண்டமரர்க்கீந்த
படியமரர்வாழும்பதி. (௨௬)

பதியமைந்துநாடிப்பருத்தெழுந்தசிந்தை
மதியுரிஞ்சிவான்முகடுநோக்கி—கதிமிகுத்தங்
கோல்தேடியோடுங்கொழுந்ததேபோன்றதே
மால்தேடியோடுமனம். (௨௭)

மனத்துள்ளான்வேங்கடத்தான்மாகடலான்மற்றும்
நினைப்பரியனீரகத்துள்ளான்—எனைப்பலரும்

தேவாதிதேவனெனப்படுவான்முன்னொருநாள்
மாவாய்பிளந்தமகன். (௨௮)

மகனாகக்கொண்டெடுத்தாள்மாண்பாயகொங்கை
அகனாரவுண்பனென்றுண்டு—மகனைத்தாய்
தேறாதவண்ணந்திருத்தினாய்தென்னிலங்கை
நீறாகவெய்தழித்தாய்நீ. (௨௯)

நீயன்றுலகளந்தாய்நீண்டதிருமாலே
நீயன்றுலகிடந்தாயென்பரால்—நீயன்று
காரோதமுன்கடைந்துபின்னடைத்தாய்மாகடலைப்
பேரோதமேனிப்பிரான். (௩௦)

பிரானென்றுநாளும்பெரும்புலரியென்றும்
குராநற்செழும்போதுகொண்டு—வராகத்
தணியுருவன்பாதம்பணியுமவர்கண்டீர்
மணியுருவங்காண்பார்மகிழ்ந்து. (௩௧)

மகிழ்ந்ததுசிந்தைதிருமாலேமற்றும்
மகிழ்ந்ததுன்பாதமேபோற்றி—மகிழ்ந்த
தழலாழிச்சங்கமவைபாடியாடும்
தொழிலாகஞ்சூழ்ந்துதுணிந்து. (௩௨)

துணிந்ததுசிந்தைதுழாயலங்கலங்கம்
அணிந்தவன்பேருள்ளத்துப்பல்கால—பணிந்ததுவும்
வேய்பிறங்குசாரல்விறல்வேங்கடவனையே
வாய்திறங்கள்சொல்லும்வகை. (௩௩)

வகையாலவனியிரந்தளந்தாய்பாதம்
புகையால்நறுமலரால்முன்னே—மிகவாய்ந்த
அன்பாக்கியேத்தியடிமைப்பட்டேனுனக்
கென்பாக்கியத்தாலினி. (௩௪)

இனியென்பர்காமமதனிலுமாற்ற
இனிதென்பர்தண்ணீருமெந்தாய்—இனிதென்று
காமநீர்வேளாதுநின்பெருமைவேட்பரேல்
சேமநீராகுஞ்சிறிது. (௩௫)

சிறியார்பெருமைசிறிதின்கணெய்தும்
அறியாருந்தாமறியாராவர்—அறியாமை
மண்கொண்டுமண்ணுண்டுமண்ணுமிழ்ந்தமாயனென்
றெண்கொண்டேனென்னெஞ்சேயிரு (௩௬)

இருந்தண்கமலத்திருமலரினுள்ளே
திருந்துதிசைமுகனைத்தந்தாய்—பொருந்தியநின்
பாதங்களேத்திப்பணியாவேல்பல்பிறப்பும்
ஏதங்களெல்லாமெமக்கு. (௩௭)

எமக்கென்றிருநிதியமேமாந்திராதே
தமக்கென்றுசார்புமறிந்து—நமக்கென்றும்
மாதவனேயென்னுமனம்படைத்துமற்றவன்பேர்
ஓதுவதேநாவினொத்து. (௩௮)

ஓத்தின்பொருண்முடிவுமித்தனையேயுத்தமன்பேர்
ஏத்துந்திறமறிமினேழைகாள்—ஓத்ததனை
வல்லீரேல்நன்றதனைமாட்டீரேல்மாதவன்பேர்
சொல்லுவதேயோத்தின்சுருக்கு. (௩௯)

சுருக்காகவாங்கிச்சுலாவிநின்றையார்
நெருக்காமுன்னீர்நினைமின்கண்டீர்—திருப்பொலிந்த
ஆகத்தான்பாதமறிந்துமறியாத
போகத்தாலில்லைபொருள். (௪௦)

பொருளாலமருலகம்புக்கியலலாகா
அருளாலறமருளுமன்றே—அருளாலே
மாமறையோர்க்கீந்தமணிவண்ணன்பாதமே
நீமறவேல்நெஞ்சேநினை. (௪௧)

நினைப்பன்திருமாலைநீண்டதோள்காண
நினைப்பார்பிறப்பொன்றுநேரார்—மனைப்பாற்
பிறந்தார்பிறந்தெய்தும்பேரின்பமெல்லாம்
துறந்தார்தொழுதாரத்தோள். (௪௨)

தோளிரண்டெட்டேழுமூன்றுமுடியனைத்துந்
தாளிரண்டும்வீழச்சரந்துரந்தான்—தாளிரண்டும்
ஆர்தொழுவார்பாதமவைதொழுவதன்றேயென்
சீர்கெழுதோள்செய்யுஞ்சிறப்பு. (௪௩)

சிறந்தார்க்கெழுதுணையாஞ்செங்கண்மால்நாமம்
மறந்தாரைமானிடமாவையேன்—அறந்தாங்கும்
மாதவனேயென்னுமனம்படைத்துமற்றவன்பேர்
ஓதுவதேநாவினுள்ளது. (௪௪)

உளதென்றிறுமாவாருண்டில்லையென்று
தளர்தலதனருகுஞ்சாரார்—அளவரிய

வேதத்தான்வேங்கடத்தான்விண்ணோர்முடிதோயும்
பாதத்தான்பாதம்பயின்று. (௬௫)

பயின்றதரங்கந்திருக்கோட்டிபன்னாள்
பயின்றதுவும்வேங்கடமேபன்னாள்—பயின்ற
தணிதிகழுஞ்சோலையணிநீர்மலையே
மணிதிகழும்வண்டடக்கையால். (௬௬)

மாலையரியுருவன்பாதமலரணிந்து
காலைதொழுதெழுமின்கைகோலி—ஞாலம்
அளந்திடந்துண்டுமிழ்ந்தவண்ணலைமற்றல்லால்
உளங்கிடந்தவாற்றாலுணர்ந்து. (௬௭)

உணர்ந்தாய்மறைநான்குமோதினாய்நீதி
மணந்தாய்மலர்மகள்மாலே—மணந்தாய்போய்
வேயிருஞ்சாரல்வியலிருஞாலஞ்சூழ்
மாயிருஞ்சோலைமலை. (௬௮)

மலையேழும்மாநிலங்களேழுமதிரக்
குலைசூழ்குரைகடல்களேழும்—முலைசூழ்ந்த
நஞ்சுரத்துப்பெண்ணைநவின்றுண்டநாவனென்
றஞ்சாதென்னெஞ்சேயழை. (௬௯)

அழைப்பன்றிருமாலையாங்கவர்கள்சொன்ன
பிழைப்பில்பெரும்பெயரேபேசி—இழைப்பரிய
வாயவனேயாதவனேயென்றவனையார்முகப்பும்
மாயவனேயென்றுமதித்து. (௭0)

மதிக்கண்டாய்நெஞ்சேமணிவண்ணன்பாதம்
மதிக்கண்டாய்மற்றவன்பேர்தன்னை—மதிக்கண்டாய்
பேராழிநின்றுபெயர்ந்துகடல்கடைந்த
நீராழிவண்ணனிறம். (௭௧)

நிறங்கரியன்செய்யநெடுமலராள்மார்வன்
அறம்பெரியனாரதறிவார்—மறம்புரிந்த
வாளரக்கன்போல்வானைவானவர்கோன்றானத்து
நீளிருக்கைக்குய்த்தாய்நெறி (௭௨)

நெறியார்குழற்கற்றைமுன்னின்றுபின்றாழ்ந்
தறியாதிளங்கிரியென்றெண்ணி—பிரியாது
பூங்கொடிக்கள்வைகும்பொருபுனற்குன்றென்னும்
வேங்கடமேயாம்விரும்பும்வெற்பு. (௭௩)

வெற்பென்றிருஞ்சோலைவேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்றுநீமதிக்குநீர்மைபோல்—நிற்பென்
றுளங்கோயிலுள்ளம்வைத்துள்ளினேன்வெள்ளத்
திளங்கோயில்கைவிடேலென்று. (௭௪)

என்றுமறந்தறியேனேழ்பிறப்புமெப்பொழுதும்
நின்றுநினைப்பொழியாநீர்மையால்—வென்றி
அடலாழிகொண்டவறிவனேயின்பக்
கடலாழியீயருளிக்காண் (௭௫)

காணக்கழிகாதல்கைமிக்குக்காட்டினால்
நாணப்படுமென்றானாணுமே—பேணிக்
கருமாலைப்பொன்மேனிகாட்டாமுன்காட்டும்
திருமாலைநங்கள்திரு. (௭௬)

திருமங்கைநின்றருளுந்தெய்வநாவாழ்த்துங்
கருமங்கடைப்பிடிமின்கண்டீர்—உரிமையால்
ஏத்தினோம்பாதமிருந்தடக்கையெந்தைபேர்
நாற்றிசையுங்கேட்டீரோநாம். (௭௭)

நாம்பெற்றநன்மையுநன்மங்கைநெஞ்சத்
தோம்பியிருந்தெம்மையோதுவித்து—வேம்பின்
பொருணீர்மையாயினும்பொன்னாழியானென்
றருணீர்மைதந்தவருள். (௭௮)

அருள்புரிந்தசிந்தையடியார்மேல்வைத்துப்
பொருள்தெரிந்துகாண்குற்றபோது—இருள்தெரிந்து
நோக்கினேனோக்கிநினைந்தேனதொண்கமலம்
ஓக்கினேனென்னையுமங்கோர்ந்து. (௭௯)

ஓருருவனல்லையொளியுருவநின்னுருவம்
ஈருருவனென்பரிருநிலத்தோர்—ஓருருவம்
ஆதியாம்வண்ணமறிந்தாரவர்கண்டீர்
நீதியால்மண்காப்பார்நின்று. (௮0)

நின்றதோர்பாதநிலம்புதைப்பநீண்டதோள்
சென்றளந்ததென்பர்திசையெல்லாம்—அன்று
கருமாணியாயிரந்தகள்வனேயுன்னைப்
பிரமாணித்தார்பெற்றபேறு. (௮௧)

பேறொன்றுமுன்னறியேன்பெற்றறியேன்பேதைமையால்
மாறொன்றுசொல்லிவணங்கினேன்—ஏறின்

பெருந்தெருக்கண் கோடொசியப் பெண்ணசையின் பின்போய்
எருத்திறுத்த நல்லாயரேறு. (௬௨)

ஏறேழும் வென்றடர்த்த வெந்தையெரியுருவத்
தேறேறிப்பட்ட விடுசாபம் — பாறேறி
உண்டதலைவாய்நிறையக் கோட்டங்கையொண்குருதி
கண்டபொருள் சொல்லிற் கதை. (௬௩)

கதையின் பெரும்பொருளுங் கண்ணா நின்பேரே
இதயமிருந்தவையே யேத்திற் — கதையின்
திருமொழியாய் நின்ற திருமாலே யுன்னைப்
பருமொழியாற் காணப் பணி. (௬௪)

பணிந்தேன் திருமேனி பைங்கமலங் கையால்
அணிந்தேனுன் சேவடிமேலன்பாய் — துணிந்தேன்
புரிந்தேத்தி யுன்னைப் புகலிடம் பார்த்தாங்கே
இருந்தேத்தி வாழுமிது. (௬௫)

இதுகண்டாய் நன்னெஞ்சே யிப்பிறவியாவ
திதுகண்டா யெல்லாநா முற்ற — திதுகண்டாய்
நாரணன் பேரோதி நரகத்தருகணையாக்
காரணமும் வல்லையேற் காண். (௬௬)

கண்டேன் றிருமேனியான் கனவிலாங்கவன் கைக்
கண்டேன் கனலுஞ் சுடராழி — கண்டேன்
உறுநோய் வினையிரண்டு மோட்டுவித்துப் பின்னும்
அறுநோய் செறுவான் வலி. (௬௭)

வலிமிக்க வாளெயிற்று வாளவுணர் மாள
வலிமிக்க வாள்வரை மத்தாக — வலிமிக்க
வாணாகஞ் சுற்றி மறுகக் கடல் கடைந்தான்
கோணாகங் கொம்பொசித்த கோ. (௬௮)

கோவாகி மாநிலங் காத்து நங்கண்முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும் — பூமேவும்
செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்பும்
தங்கமலப் பேர்த்தார் தமர். (௬௯)

தமருள்ளந் தஞ்சை தலையரங்கந் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை — தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக்கிடம். (௭௦)

இடங்கை வலம்புரி நின்றார்ப்ப வெரிகான்
றடங்கா ரொடுங்குவித்த தாழி — விடங்காலும்
தீவாயரவணைமேற் றோன்றல் திசையளப்பான்
பூவாரடி நிமிர்த்த போது. (௭௧)

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனை புக்காங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போதுள்ளம் — போது
மணிவேங்கடவன் மலரடிக்கே செல்ல
அணிவேங்கடவன் பேராய்ந்து. (௭௨)

ஆய்ந்துரைப்ப னாயிரம்பேராதி நெடுந்திவாய்
வாய்ந்தமலர் தூவி வைகலும் — ஏய்ந்த
பிறைக்கோட்டுச் செங்கட் கரிவிடுத்த பெம்மான்
இறைக்காட் படத்துணிந்தயான். (௭௩)

யானே தவஞ்செய்தே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
யானே தவமுடையே னெம்பெருமான் — யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழ னல்லேன் பெரிது. (௭௪)

பெருகுமத வேழம் மாப்பிடிக்கு முன்னின்
றிருகணிள மூங்கில் வாங்கி — அருகிருந்த
தேன்கலந்து நீட்டுந் திருவேங்கடங் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை. (௭௫)

வரைச்சந்தனக் குழம்பும் வான்கலனும் பட்டும்
விரைப்பொலிந்த வெண்மல்லிகையும் — நிரைத்துக்கொண்
டாதிக்கண் நின்ற வறிவனடியிணையே
ஓதிப் பணிவதுறும். (௭௬)

உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமனற் பாதம்
உறுங்கண்டா யொண்கமலந் தன்னால் — உறுங்கண்டாய்
ஏத்திப் பணிந்தவன் பேரீரைஞ்ஞூ றெப்பொழுதுஞ்
சாற்றி யுரைத்தல் தவம். (௭௭)

தவஞ்செய்து நான்முகனே பெற்றான் றரணி
நிவர்க்கப் பரப்பிடப் பொற்பாதம் — சிவந்ததன்
கையனைத்துமாரக் கழுவினான் கங்கைநீர்
பெய்தனைத்துப் பேர்மொழிந்தபின். (௭௮)

பின்னின்று தாயிரப்பக் கேளான் பெரும்பணைத்தோள்
முன்னின்று தானிரப்பாள் மொய்ம்மலராள் — சொன்னின்ற

தோளவன்றானேரில்லாத்தோன்றலவனளந்த
நீணிலந்தானெத்தனைக்குநேர். (எகூ)

நேர்ந்தேனடிமைநினைந்தேனதொண்கமலம்
ஆர்ந்தேனுன்சேவடிமேலன்பாய்— ஆர்ந்த
அடிக்கோலங்கண்டவர்க்கென்கொலோமுன்னைப்
படிக்கோலங்கண்டபகல். (அ0)

பகற்கண்டேனாரணனைக்கண்டேன்கனவில்
மிகக்கண்டேன்மீண்டவனைமெய்யே— மிகக்கண்டேன்
ஊன்றிகழுநேமியொளிதிகழுஞ்சேவடியான்
வான்றிகழுஞ்சோதிவடிவு. (அக)

வடிக்கோலவாணெடுங்கண்மாமலராள்செவ்விப்
படிக்கோலங்கண்டகலாள்பன்னாள்— அடிக்கோலி
ஞாலத்தாள்பின்னுநலம்புரிந்ததென்கொலோ
கோலத்தாலில்லைகுறை. (அஉ)

குறையாகவெஞ்சொற்கள்கூறினேன்கூறி
மறையாங்கெனவுரைத்தமாலை— இறையேனும்
ஈயுங்கொலென்றேயிருந்தேனெனைப்பகலும்
மாயன்கட்சென்றவரம். (அங)

வரங்கருதித்தன்னைவணங்காதவன்மை
உரங்கருதிமூர்க்கத்தவனை— நரங்கலந்த
சிங்கமாய்க்கீண்டதிருவனடியிணையே
அங்கண்மாஞாலத்தமுது. (அச)

அமுதென்றுந்தேனென்றுமாழியானென்றும்
அமுதன்றுகொண்டுகந்தானென்றும்— அமுதன்ன
சொன்மாலையேத்தித்தொழுதேன்சொலப்பட்ட
நன்மாலையேத்திநவின்று. (அரு)

நவின்றுரைத்தநாவலர்கணாண்மலர்கொண்டாங்கே
பயின்றதனாற்பெற்றபயனென்கொல்— பயின்றார்தம்
மெய்த்தவத்தாற்காண்பரியமேகமணிவண்ணனையான்
எத்தவத்தாற்காண்பன்கொலின்று. (அசு)

இன்றாவறிகின்றேனல்லேனிருநிலத்தைச்
சென்றாங்களந்ததிருவடியை— அன்று
கருக்கோட்டியுட்கிடந்துகைதொழுதேன்கண்டேன்
திருக்கோட்டியெந்தைதிறம். (அஎ)

திறம்பிற்றினியறிந்தேன்றென்னரங்கத்தெந்தை
திறம்பாவழிசென்றார்க்கல்லால்— திறம்பாச்
செடிநரகைநீக்கித்தான்செல்வதன்முன்வானோர்
கடிநகரவாசற்கதவு. (அஅ)

கதவிக்கதஞ்சிறந்தகஞ்சனைமுற்காய்ந்
ததவிப்போர்யானையொசித்துப்— பதவியாய்ப்
பாணியால்நீரேற்றுப்பண்டொருகால்மாவலியை
மாணியாய்க்கொண்டிலையேமண். (அகூ)

மண்ணுலகமாளேனேவானவர்க்கும்வானவனாய்
விண்ணுலகந்தன்னகத்துமேவேனே— நண்ணித்
திருமாலைச்செங்கணெடியானையெங்கள்
பெருமானைக்கைதொழுதபின். (கூ0)

பின்னாலருநரகஞ்சேராமற்பேதுறுவீர்
முன்னால்வணங்கமுயன்மினோ— பன்னூல்
அளந்தானைக்கார்க்கடல்சூழ்ஞாலத்தையெல்லாம்
அளந்தானவன்சேவடி. (கூக)

அடியான்முற்கஞ்சனைச்செற்றமரரேத்தும்
படியான்கொடிமேற்புட்கொண்டான்— நெடியான்றன்
நாமமேயேத்துமின்களேத்தினால்தாம்வேண்டும்
காமமேகாட்டுங்கடிது. (கூஉ)

கடிதுகொடுநரகம்பிற்காலுஞ்செய்கை
கொடிதென்றதுகூடாமுன்னம்— வடிசங்கம்
கொண்டானைக்கூந்தல்வாய்கீண்டானைக்கொங்கைநஞ்சு
உண்டானையேத்துமினோவுற்று. (கூங)

உற்றுவணங்கித்தொழுமினுலகேழும்
முற்றும்விழுங்குமுகில்வண்ணன்— பற்றிப்
பொருந்தாதான்மார்பிடந்துபூம்பாடகத்துள்
இருந்தானையேத்துமென்னெஞ்சு. (கூச)

என்னெஞ்சமேயானென்சென்னியான்றானவனை
வன்னெஞ்சங்கீண்டமணிவண்ணன்— முன்னஞ்சேய்
ஊழியானூழிபெயர்த்தானுலகேத்தும்
ஆழியானத்தியூரான். (கூரு)

அத்தியூரான்புள்ளையூர்வானணிமணியின்
துத்திசேர்நாகத்தின்மேற்றுயில்வான் — முத்தீ
மறையாவான்மாகடல்நஞ்சுண்டான்றனக்கும்
இறையாவானெங்கள்பிரான். (௯௬)

எங்கள்பெருமானிமையோர்தலைமகனீ
செங்கணெடுமால்திருமார்பா — பொங்கு
படமூக்கினாயிரவாய்ப்பாம்பணைமேற்சேர்ந்தாய்
குடமூக்கில்கோயிலாக்கொண்டு. (௯௭)

கொண்டுவளர்க்கக்குழவியாய்த்தான்வளர்ந்த
துண்டதுலகேழுமுள்ளொடுங்க — கொண்டு
குடமாடிக்கோவலனாய்மேவியென்னெஞ்சம்
இடமாகக்கொண்டவிறை. (௯௮)

இறையெம்பெருமானருளென்றிமையோர்
முறைநின்றுமொய்ம்மலர்கடூவ — அறைகழல
சேவடியான்செங்கணெடியான்குறளுருவாய்
மாவடிவில்மண்கொண்டான்மால். (௯௯)

மாலேநெடியோனேகண்ணனேவிண்ணவர்க்கு
மேலாவியன்றுழாய்க்கண்ணியனே — மேலால்
விளவின்காய்கன்றினால்வீழ்த்தவனேயென்றன்
அளவன்றால்யானுடையவன்பு. (௧௦௦)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பூதத்தாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
இரண்டாந்திருவந்தாதிமுற்று.
ஆ பாசுரம் - ௨௦௦.

கதாம்சரான பூதத்தாழ்வார்திருநக்ஷத்ரம்
ஐப்பசிமீ அவிட்டம்.

பேயாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

௩.—திருவந்தாதி.

தனியன்.

நேரிசைவெண்பா.

சீராரும்மாடத்திருக்கோவலூரதனுட்
காரார்கருமுகிலைக்காணப்புக்கு — ஓரா
திருக்கண்டேனென்றுரைத்தசீரான்கழலே
உரைக்கண்டாய்நெஞ்சேயுகந்து.

திருக்கண்டேன்பொன்மேனிகண்டேன்றிகழும்
அருக்கனணிநிறமுங்கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன்புரிசங்கங்கைக்கண்டேன்
என்னாழிவண்ணன்பாலின்று. (௧)

இன்றேகழல்கண்டேனேழ்பிறப்புமியானறுத்தேன்
பொன்றோய்வரைமார்பிற்பூந்துழாய் — அன்று
திருக்கண்டுகொண்டதிருமாலேயுன்னை
மருக்கண்டுகொண்டேன்மனம். (௨)

மனத்துள்ளான்மாகடல்நீருள்ளான்மலராள்
தனத்துள்ளான்றண்டுழாய்மார்பன்—சினத்துச்
செருநருகச்செற்றுகந்ததேங்கோதவண்ணன்
வருநரகந்தீர்க்குமருந்து. (௩)

மருந்தும்பொருளுமமுதமுந்தானே
திருந்தியசெங்கண்மாலாங்கே—பொருந்தியும்
நின்றுலகமுண்டுமிழ்ந்துநீரேற்றுமூவடியால்
அன்றுலகந்தாயோனடி. (௪)

அடிவண்ணந்தாமரையன்றுலகந்தாயோன்
படிவண்ணம்பார்கடல்நீர்வண்ணம்—முடிவண்ணம்
ஓராழிவெய்யோனொளியஃதன்றே
ஆராழிகொண்டார்க்கழகு. (௫)

அழகன்றேயாழியார்க்காழிநீர்வண்ணம்
அழகன்றேயண்டங்கடத்தல்—அழகன்றே
அங்கைநீரேற்றார்க்கலர்மேலோன்கால்கழுவக்
கங்கைநீர்கான்றகழல். (௬)

கழல்தொழுதும்வாநெஞ்சேகார்கடல்நீர்வேலைப்
பொழிலளந்தபுள்ளூர்திச்செல்வன்—எழிலளந்தங்
கெண்ணற்கரியானையெப்பொருட்குஞ்சேயானை
நண்ணற்கரியானைநாம். (௭)

நாமம்பலசொல்லிநாரணாவென்று
நாமங்கையாற்றொழுதுநன்னெஞ்சே—வாமருவி
மண்ணுலகமுண்டுமிழ்ந்தவண்டறையுந்தண்டுழாய்க்
கண்ணனையேகாண்கநங்கண். (௮)

கண்ணுங்கமலங்கமலமேகைத்தலமும்
மண்ணளந்தபாதமுமற்றவையே—எண்ணில்
கருமாமுகில்வண்ணன்கார்க்கடல்நீர்வண்ணன்
திருமாமணிவண்ணன்தேசு. (௯)

தேசுந்திறலுந்திருவுமுருவமும்
மாசில்குடிப்பிறப்புமற்றவையும்—பேசில்
வலம்புரிந்தவான்சங்கங்கொண்டான்பேரோத
நலம்புரிந்துசென்றடையுநன்கு. (௰)

நன்கோதுநால்வேதத்துள்ளானறவிரியும்
பொன்கோதருவிப்புனல்வண்ணன்—சங்கோதப்

பாற்கடலான்பாம்பணையின்மேலான்பயின்றுரைப்பான்
நூற்கடலான்நுண்ணறிவினான். (௧௧)

அறிவென்னுந்தாள்கொளுவியைம்புலனுந்தம்மிற்
செறிவென்னுந்திண்கதவஞ்செம்மி—மறையென்னும்
நன்கோதிநன்குணர்வார்காண்பரேநாடோறும்
பைங்கோதவண்ணன்படி. (௧௨)

படிவட்டத்தாமரைபண்டுலகநீரேற்ற
அடிவட்டத்தாலளப்பநீண்ட—முடிவட்டம்
ஆகாயமூடறுத்தண்டம்போய்நீண்டதே
மாகாயமாய்நின்றமாற்கு. (௧௩)

மாற்பால்மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு
நூற்பால்மனம்வைக்கநொய்விதாம்—நாற்பால
வேதத்தான்வேங்கடத்தான்விண்ணோர்முடிதோயும்
பாதத்தான்பாதம்பணிந்து. (௧௪)

பணிந்துயர்ந்தபௌவப்படுதிரைகள்மோதப்
பணிந்தபணிமணிகளாலே—அணிந்தங்
கனந்தனணைக்கிடக்குமம்மானடியேன்
மனந்தனணைக்கிடக்கும்வந்து. (௧௫)

வந்துதித்தவெண்டிரைகள்செம்பவளவெண்முத்தம்
அந்திவிளக்குமணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித்தாமரையாளொன்றியசீர்மார்பன்
திருவல்லிக்கேணியான்சென்று. (௧௬)

சென்றநாள்செல்லாதசெங்கண்மாலெங்கண்மால்
என்றநாளெந்நாளுநாளாகும்—என்றும்
இறவாதவெந்தையிணையடிக்கேயாளாய்
மறவாதுவாழ்த்துகவென்வாய். (௧௭)

வாய்மொழிந்துவாமனனாய்மாவலிபால்மூவடிமண்
நீயளந்துகொண்டநெடுமாலே—தாவியநின்
எஞ்சாவிணையடிக்கேயேழ்பிறப்புமாளாகி
அஞ்சாதிருக்கவருள். (௧௮)

அருளாதொழியுமேயாலிலைமேலன்று
தெருளாதபிள்ளையாய்ச்சேர்ந்தான்—இருளாத
சிந்தையராய்ச்சேவடிக்கேசெம்மலர்தூய்க்கைதொழுது
முந்தையராய்நிற்பார்க்குமுன். (௧௯)

மூன்றுலகமுண்டுமிழ்ந்தாக்கியவ்வுலகமீரடியால்
பின்னளந்துகோடல்பெரிதன்றே—என்னே
திருமாலேசெங்கணெடியானேயெங்கள்
பெருமானேநீயிதனைப்பேசு. (௨0)

பேசுவாரெவ்வளவுபேசுவரவ்வளவே
வாசமலர்த்துழாய்மாலையான்—தேசுடைய
சக்கரத்தான்சங்கினான்சார்ங்கத்தான்பொங்கரவ
அக்கரனைக்கொன்றான்வடிவு. (௨௧)

வடிவார்முடிகோட்டிவானவர்கணாளும்
கடியார்மலர்தூவிக்காணும்—படியானைச்
செம்மையாலுள்ளுருகிச்செவ்வனேநெஞ்சமே
மெய்ம்மையேகாணவிரும்பு. (௨௨)

விரும்பிவிண்மண்ணளந்தவஞ்சிறையவண்டார்
சுரும்புதொளையிற்சென்றூத—அரும்பும்
புனந்துழாய்மாலையான்பொன்னங்கழற்கே
மனந்துழாய்மாலாய்வரும். (௨௩)

வருங்காலிருநிலனும்மால்விசும்புங்காற்றும்
நெருங்குதீநீருருவமானான்—பொருந்தும்
சுடராழியொன்றுடையான்சூழ்கழலேநாளும்
தொடராழிநெஞ்சேதொழுது. (௨௪)

தொழுதாற்பழுதுண்டேதூநீருலகம்
முழுதுண்டுமொய்குழலாளாய்ச்சி—இழுதுண்ட
வாயானைமால்விடையேழ்செற்றானைவானவர்க்கும்
சேயானைநெஞ்சேசிறந்து. (௨௫)

சிறந்தவென்சிந்தையுஞ்செங்கணரவும்
நிறைந்தசீர்நீள்கச்சியுள்ளும்—உறைந்ததுவும்
வேங்கடமும்வெஃகாவும்வேளுக்கைப்பாடியுமே
தாங்கடவார்தண்டுழாயார். (௨௬)

யாரேதுயருழக்கார்துன்புற்றாராண்டையார்
காரேமலிந்தகருங்கடலை—நேரே
கடைந்தானைக்காரணனைநீரணைமேற்பள்ளி
அடைந்தானைநாளுமடைந்து. (௨௭)

அடைந்தவரவணைமேலைவர்க்காயன்று
மிடைந்தபாரதவெம்போர்—உடைந்ததுவும்

ஆய்ச்சிபால்மத்துக்கேயம்மனைவாளெயிற்றுப்
பேய்ச்சிபாலுண்டபிரான். (௨௮)

பேய்ச்சிபாலுண்டபெருமானைப்பேர்த்தெடுத்து
ஆய்ச்சிமுலைகொடுத்தாளஞ்சாதே—வாய்த்த
இருளார்திருமேனியின்பவளச்செவ்வாய்த்
தெருளாமொழியானைச்சேர்ந்து. (௨௯)

சேர்ந்ததிருமால்கடல்குடந்தைவேங்கடம்
நேர்ந்தவென்சிந்தைநிறைவிசும்பு—வாய்ந்த
மறைபாடகமனந்தன்வண்டுழாய்க்கண்ணி
இறைபாடியாயவிவை. (௩0)

இவையவன்கோயிலிரணியனதாகம்
அவைசெய்தரியுருவமானான்—செவிதெரியா
நாகத்தான்நால்வேதத்துள்ளானறவேற்றான்
பாகத்தான்பாற்கடலுளான். (௩௧)

பாற்கடலும்வேங்கடமும்பாம்பும்பனிவிசும்பும்
நூற்கடலுந்நுண்ணூலதாமரைமேல்—பாற்பட்
டிருந்தார்மனமுமிடமாகக்கொண்டான்
குருந்தொசித்தகோபாலகன். (௩௨)

பாலகனாயாலிலைமேற்பையவுலகெல்லாம்
மேலொருநாளுண்டவனேமெய்ம்மையே—மாலவனே
மந்தரத்தால்மாநீர்க்கடல்கடைந்துவாளரவம்
அந்தரத்தார்க்கீந்தாய்நீயன்று. (௩௩)

அன்றிவ்வுலகமளந்தவசைவேகொல்
நின்றிருந்துவேளுக்கைநீணகர்வாய்—அன்று
கிடந்தானைக்கேடில்சீரானைமுன்கஞ்சைக்
கடந்தானைநெஞ்சமேகாண். (௩௪)

காண்காணெனவிரும்புங்கண்கள்கதிரிலகு
பூண்டாரகலத்தான்பொன்மேனி—பாண்கட்
டொழில்பாடிவண்டறையுந்தொங்கலான்செம்பொற்
கழல்பாடியாந்தொழுதகை. (௩௫)

கையகனலாழிகார்க்கடல்வாய்வெண்சங்கம்
வெய்யகதைசார்ங்கம்வெஞ்சுடர்வாள்—செய்ய
படைபரவைபாழிபனிநீருலகம்
அடியளந்தமாயவர்க்கு. (௩௬)

அவர்க்கடிமைப்பட்டேனகத்தான்புறத்தான்
உவர்க்குங்கருங்கடல்நீருள்ளான் — அவர்க்கும்
பவளவாய்ப்பூமகளும்பன்மணிப்பூணாரந்
திகழுந்திருமார்பன்றான். (கஎ)

தானேதனக்குவமன்றன்னுருவேயெவ்வுருவுந்
தானேதவவுருவுந்தாரகையும் — தானே
எரிசுடரும்மால்வரையுமெண்டிசையுமண்டத்
திருசுடருமாயவிறை. (கஅ)

இறையாய்நிலனாகியெண்டிசையுந்தானாய்
மறையாய்மறைப்பொருளாய்வானாய்ப் — பிறைவாய்ந்த
வெள்ளத்தருவிவிளங்கொளிநீர்வேங்கடத்தான்
உள்ளத்தினுள்ளேயுளன். (க௯)

உளன்கண்டாய்நன்னெஞ்சேயுத்தமனென்றும்
உளன்கண்டாயுள்ளுவாருள்ளத் — துளன்கண்டாய்
விண்ணொடுங்கக்கோடுயரும்வீங்கருவிவேங்கடத்தான்
மண்ணொடுங்கத்தானளந்தமன். (உ0)

மன்னுமணிமுடிநீண்டண்டம்போயெண்டிசையுந்
துன்னுபொழிலனைத்துஞ்சூழ்கடலே — பின்னை
உடையாகக்கொண்டன்றுலகளந்தான்குன்றங்
குடையாவாகாத்தகோ. (உக)

கோவலனாயானிரைகள்மேய்த்துக்குழலூதி
மாவலனாய்க்கீண்டமணிவண்ணன் — மேவி
அரியுருவமாகியிரணியனதாகந்
தெரியுகிராற்கீண்டான்சினம். (உஉ)

சினமாமதகளிற்றின்திண்மருப்பைச்சாய்த்துப்
புனமேயபூமியதனைத் — தனமாகப்
பேரகலத்துள்ளொடுக்கும்பேராழிமார்பனார்
ஓரகலத்துள்ளதுலகு. (உ௩)

உலகுமுழுதுமாழியுமொண்கேழ
அலர்கதிருஞ்செந்தீயுமாவான் — பலகதிர்கள்
பாரித்தபைம்பொன்முடியானடியிணைக்கே
பூரித்தென்னெஞ்சேபுகு. (உச)

புரிந்துமதவேழம்மாப்பிடியோடூடித்
திரிந்துதினைத்தாற்பொருது — விரிந்தசீர்

வெண்கோட்டுமுத்துதிர்க்கும்வேங்கடமேமேலொருநாள்
மண்கோட்டுக்கொண்டான்மலை. (உ௫)

மலைமுகடுமேல்வைத்துவாசுகியைச்சுற்றித்
தலைமுகடுதானொருகைபற்றி — அலைமுகட்
டண்டம்போய்நீர்தெறிப்பவன்றுகடல்கடைந்தான்
பிண்டமாய்நின்றபிரான். (உ௬)

நின்றபெருமானேநீரேற்றுலகெல்லாஞ்
சென்றபெருமானேசெங்கண்ணா — அன்று
துரகவாய்கீண்டதுழாய்முடியாய்ஈங்க
ணரகவாய்கீண்டாயுகிர். (உஎ)

நீயன்றேநீரேற்றுலகமடியளந்தாய்
நீயன்றேநின்றுநிரைமேய்த்தாய் — நீயன்றே
மாவாயுரம்பிளந்துமாமருதினூடுபோய்த்
தேவாசுரம்பொருதாய்செற்று. (உஅ)

செற்றதுவுஞ்சேராவிரணியனைச்சென்றேற்றுப்
பெற்றதுவும்மாநிலம்பின்னைக்காய் — முற்றல்
முரியேற்றின்முன்னின்றுமொய்ம்பொழித்தாய்மூரிச்
சுரியேறுசங்கினாய்சூழ்ந்து. (உ௯)

சூழ்ந்ததுழாயலங்கல்சோதிமணிமுடிமால்
தாழ்ந்தவருவித்தடவரைவாய் — ஆழ்ந்த
மணிநீர்ச்சுனைவளர்ந்தமாமுதலைகொன்றான்
அணிநீலவண்ணத்தவன். (௩0)

அவனேயருவரையாலாநிரைகள்காத்தான்
அவனேயணிமருதஞ்சாய்த்தான் — அவனே
கலங்காப்பெருநகரங்காட்டுவான்கண்டீர்
இலங்காபுரமெரித்தானெய்து. (௩க)

எய்தான்மராமரமேழுமிராமனாய்
எய்தானம்மான்மறியையேந்திழைக்காய் — எய்ததுவுந்
தென்னிலங்கைக்கோன்வீழச்சென்றுகுறளுருவாய்
முன்னுலகங்கொண்டதுவுமுன். (௩உ)

முயன்றுதொழுநெஞ்சேமூரிநீர்வேலை
இயன்றமரத்தாலிலையின்மேலால் — பயின்றங்கோர்
மண்ணலங்கொள்வெள்ளத்துமாயக்குழவியாய்த்
தன்னலக்கண்டமாயோனன்றன். (௩௩)

தாளாற்சகடமுதைத்துப்பகடுந்திக்
கீளாமருதிடைபோய்க்கேழலாய்—மீளாது
மண்ணகலங்கீண்டங்கோர்மாதுகந்தமார்பற்குப்
பெண்ணகலங்காதல்பெரிது. (௫௪)

பெரியவரைமார்பிற்பேராரம்பூண்டு
கரியமுகிலிடைமின்போலத்—திரியுங்கால்
பாணொடுங்கவண்டறையும்பங்கயமேமற்றவன்றன்
நீணெடுங்கண்காட்டுந்நிறம். (௫௫)

நிறம்வெளிதுசெய்துபசிதுகரிதென்
றிறையுருவம்யாமறியோமெண்ணில்—நிறமுடைய
நாமங்கைதானுநலம்புகழவல்லளே
பூமங்கைகேள்வன்பொலிவு. (௫௬)

பொலிந்திருண்டகார்வானின்மின்னேபோற்றோன்றி
மலிந்துதிருவிருந்தமார்பன்—பொலிந்த
கருடன்மேற்கொண்டகரியான்கழலே
தெருடன்மேற்கண்டாய்தெளி. (௫௭)

தெளிந்தசிலாதலத்தின்மேலிருந்தமந்தி
அளிந்தகடுவனையேநோக்கி—விளங்கிய
வெண்மதியந்தாவென்னும்வேங்கடமேமேலொருநாள்
மண்மதியிற்கொண்டுகந்தான்வாழ்வு. (௫௮)

வாழும்வகையறிந்தேன்மைபோனெடுவரைவாய்த்
தாழுமருவிபோற்றார்கிடப்பச்—சூழும்
திருமாமணிவண்ணன்செங்கண்மாலெங்கள்
பெருமானடிசேரப்பெற்று. (௫௯)

பெற்றம்பிணைமருதம்பேய்முலைமாச்சகடம்
உற்றக்காத்தூடுபோயுண்டுதைத்துக்—கற்றுக்
குணிலைவிளங்கனிக்குக்கொண்டெறிந்தான்வெற்றிப்
பணிலம்வாய்வைத்துகந்தான்பண்டு. (௬௦)

பண்டெல்லாம்வேங்கடம்பாற்கடல்வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக்கோயில்போல்—வண்டு
வளங்கிளருநீள்சோலைவண்பூங்கடிகை
இளங்குமரன்றன்விண்ணகர். (௬௧)

விண்ணகரம்வெஃகாவிரிதிரைநீர்வேங்கடம்
மண்ணகரமாமாடவேளுக்கை—மண்ணகத்த

தென்குடந்தைதேனார்திருவரங்கந்தென்கோட்டி
தன்குடங்கைநீரேற்றான்றாழ்வு. (௬௨)

தாழ்சடையுநீண்முடியுமொண்மழுவுஞ்சக்கரமும்
சூழரவும்பொன்னாணுந்தோன்றுமால்—சூழுந்
திரண்டருவிபாயுந்திருமலைமேலெந்தைக்
கிரண்டுருவுமொன்றாயிசைந்து. (௬௩)

இசைந்தவரவும்வெற்புங்கடலும்
பசைந்தங்கமுதுபடைப்ப—அசைந்து
கடைந்தவருத்தமோகச்சிவெஃகாவிற்
கிடந்திருந்துநின்றதுவுமங்கு. (௬௪)

அங்கற்கிடரின்றியந்திப்பொழுதத்து
மங்கவிரணியனதாகத்தைப்—பொங்கி
அரியுருவமாய்ப்பிளந்தவம்மானவனே
கரியுருவக்கொம்பொசித்தான்காய்ந்து. (௬௫)

காய்ந்திருளைமாற்றிக்கதிரிலகுமாமணிகள்
ஏய்ந்தபணக்கதிர்மேல்வெவ்வுயிர்ப்ப—வாய்ந்த
மதுகைடபரும்வயிறுருகிமாண்டார்
அதுகேடவர்க்கிறுதியாங்கு. (௬௬)

ஆங்குமலருங்குவியுமாலுந்திவாய்
ஓங்குகமலத்தினொண்போ—தாங்கைத்
திகிரிசுடரென்றும்வெண்சங்கம்வானிற்
பகருமதியென்றும்பார்த்து. (௬௭)

பார்த்தகடுவன்சுனைநீர்நிழற்கண்டு
பேர்த்தோர்கடுவனெனப்பேர்ந்து—கார்த்த
களங்கனிக்குக்கைநீட்டும்வேங்கடமேமேனாள்
விளங்கனிக்குக்கன்றெறிந்தான்வெற்பு. (௬௮)

வெற்பென்றுவேங்கடம்பாடும்வியன்றுழாய்
கற்பென்றுசூடுங்கருங்குழல்மேல்—மற்பொன்ற
நீண்டதோண்மால்கிடந்தநீள்கடனீராடுவான்
பூண்டநாளெல்லாம்புகும். (௬௯)

புகுமதத்தால்வாய்பூசிக்கீழ்தாழ்ந்தருவி
உகுமதத்தாற்கால்கழுவிக்கையால்—மிகுமதத்தேன்
விண்டமலர்கொண்டுவிறல்வேங்கடவனையே
கண்டுவணங்குங்களிறு. (௭௦)

களிறுமுகில்குத்தக்கையெடுத்தோடி
ஒளிறுமருப்பொசிகையாளி—பிளிறி
விழக்கொன்றுநின்றதிரும்வேங்கடமேமேனாள்
குழக்கன்றுகொண்டெறிந்தான்குன்று. (௭௧)

குன்றொன்றினாயகுறமகளிர்கோல்வளைக்கை
சென்றுவிளையாடுந்தீங்கழைபோய்—வென்று
விளங்குமதிகோள்விடுக்கும்வேங்கடமேமேலை
இளங்குமரர்கோமானிடம். (௭௨)

இடம்வலமேழ்பூண்டவிரவித்தேரோட்டி
வடமுகவேங்கடத்துமன்னும்—குடநயந்த
கூத்தனாய்நின்றான்குரைகழலேகூறுவதே
நாத்தன்னாலுள்ளநலம். (௭௩)

நலமேவலிதுகொல்நஞ்சூட்டுவன்பேய்
நிலமேபுரண்டுபோய்வீழச்சலமேதான்
வெங்கொங்கையுண்டானைமீட்டாய்ச்சியூட்டுவான்
தன்கொங்கைவாய்வைத்தாள்சார்ந்து. (௭௪)

சாய்ந்தகடுதேய்ப்பத்தடாவியகோட்டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும்வெண்மதியினொண்முயலைச்—சேர்ந்து
சினவேங்கைபார்க்குந்திருமலையேயாயன்
புனவேங்கைநாறும்பொருப்பு. (௭௫)

பொருப்பிடையேநின்றும்புனல்குளித்துமைந்து
நெருப்பிடையேநிற்கவுநீவேண்டா—விருப்புடைய
வெஃகாவேசேர்ந்தானைமெய்ம்மலர்தூய்க்கைதொழுதால்
அஃகாவேதீவினைகளாய்ந்து. (௭௬)

ஆய்ந்தவருமறையோனான்முகத்தோனண்குறங்கில்
வாய்ந்தகுழவியாய்வாளரக்கன்—ஏய்ந்த
முடிப்போதுமூன்றேழென்றெண்ணினானார்ந்த
அடிப்போதெனக்கரண். (௭௭)

அரணாமக்கென்றுமாழிவலவன்
முரணாள்வலந்தழித்தமொய்ம்பன்—சரணாமேல்
ஏதுகதியேதுநிலையேதுபிறப்பென்னாதே
ஓதுகதிமாயனையேயோர்த்து. (௭௮)

ஓர்த்தமனத்தராயைந்தடக்கியாராய்ந்து
பேர்த்தாற்பிறப்பேழும்பேர்க்கலாம்—கார்த்த

விரையார்நறுந்துழாய்வீங்கோதமேனி
நிரையாரமார்பனையேநின்று. (௭௯)

நின்றெதிராயநிரைமணித்தேர்வாணன்றோள்
ஒன்றியவீரைஞ்ஞூறுடன்றுதிய—வென்றிலங்கும்
ஆர்படுவானேமியரவணையான்சேவடிக்கே
சேர்படுவான்றன்முயலுநெஞ்சு. (௮0)

நெஞ்சால்நினைப்பரியனேலுமிலைப்பெற்றென்
நெஞ்சமேபேசாய்நினைக்குங்கால்—நெஞ்சத்துப்
பேராதுநிற்கும்பெருமானையென்கொலோ
ஓராதுநிற்பதுணர்வு (௮௧)

உணர்விலுணர்வரியனுள்ளம்புகுந்து
உணர்விலுங்காண்பரியனுண்மை—இணர்கொய்யக்
கொங்கணைந்துவண்டறையுந்தண்டுழாய்க்கோமானை
எங்கணைந்துகாண்டுமினி. (௮௨)

இனியவன்மாயனெனவுரைப்பரேலும்
இனியவன்காண்பரியனேலும்—இனியவன்
கள்ளத்தால்மண்கொண்டுவிண்கடந்தபைங்கழலான்
உள்ளத்தினுள்ளேயுளன். (௮௩)

உளனாயநான்மறையினுட்பொருளையுள்ளத்
தளனாகத்தேர்ந்துணர்வரேலும்—உளனாய
வண்டாமரைநெடுங்கண்மாயவனையாவரே
கண்டாருகப்பார்கவி (௮௪)

கவியினார்கைபுனைந்துகண்ணார்கழல்போய்ச்
செவியினார்கேள்வியராய்ச்சேர்ந்தார்—புவியினார்
போற்றியுரைக்கப்பொலியுமேபின்னைக்காய்
ஏற்றுயிரையட்டானெழில். (௮௫)

எழில்கொண்டுமின்னுக்கொடியெடுத்துவேகத்
தொழில்கொண்டுதான்முழங்கித்தோன்றும்—எழில்கொண்ட
நீர்மேகமன்னநெடுமால்நிறம்போலக்
கார்வானங்காட்டுங்கலந்து. (௮௬)

கலந்துமணியிமைக்குங்கண்ணாநின்மேனி
மலர்ந்துமரகதமேகாட்டும்—நலந்திகழும்
கொந்தின்வாய்வண்டறையுந்தண்டுழாய்க்கோமானை
அந்திவான்காட்டுமது. (௮௭)

அதுநன்றிதுதீதென்றையப்படாதே
மதுநின்றதண்டுழாய்மார்பன்—பொதுநின்ற
பொன்னங்கழலேதொழுமின்முழுவினைகள்
முன்னங்கழலுமுடிந்து. (௮௮)

முடிந்தபொழுதிற்குறவாணரேனம்
படிந்துழுசால்பைந்தினைகள்வித்தத்—தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய்விண்டிறக்கும்வேங்கடமேமேலொருநாள்
தீங்குழல்வாய்வைத்தான்சிலம்பு. (௮௯)

சிலம்புஞ்செறிகழலுஞ்சென்றிசைப்பவிண்ணாறு
அலம்பியசேவடிபோயண்டம்—புலம்பியதோள்
எண்டிசையுஞ்சூழவிடம்போதாதென்கொலோ
வண்டுழாய்மாலளந்தமண். (௯௰)

மண்ணுண்டும்பேய்ச்சிமுலையுண்டுமாற்றாதாய்
வெண்ணெய்விழுங்கவெருண்டாய்ச்சி—கண்ணிக்
கயிற்றினாற்கட்டத்தான்கட்டுண்டிருந்தான்
வயிற்றினோடாற்றாமகன். (௯௧)

மகனொருவர்க்கல்லாதமாமேனிமாயன்
மகனாமவன்மகன்றன்காதல்—மகனைச்
சிறைசெய்தவாணன்றோள்செற்றான்கழலே
நிறைசெய்தென்னெஞ்சேநினை. (௯௨)

நினைத்துலகிலார்தெளிவார்நின்றதிருமால்
அனைத்துலகுமுள்ளொடுக்கியாலின்மேல்—கனைத்துலவு
வெள்ளத்தோர்பிள்ளையாய்மெள்ளத்துயின்றானை
உள்ளத்தேவைநெஞ்சேயுய்த்து. (௯௩)

உய்த்துணர்வென்னுமொளிகொள்விளக்கேற்றி
வைத்தவனைநாடிவலைப்படுத்தேன்—மெத்தெனவே
நின்றானிருந்தான்கிடந்தானென்னெஞ்சத்துப்
பொன்றாமைமாயன்புகுந்து. (௯௪)

புகுந்திலங்குமந்திப்பொழுதத்தரியாய்
இகழ்ந்தவிரணியனதாகஞ்—சுகிர்ந்தெங்குஞ்
சிந்தப்பிளந்ததிருமால்திருவடியே
வந்தித்தென்னெஞ்சமேவாழ்த்து. (௯௫)

வாழ்த்தியவாயராய்வானோர்மணிமகுடந்
தாழ்த்திவணங்கத்தழும்பாமே—கேழ்த்த

அடித்தாமரைமலர்மேல்மங்கைமணாளன்
அடித்தாமரையாமலர். (௯௬)

அலரெடுத்தவுந்தியானாங்கெழிலாய
மலரெடுத்தமாமேனிமாயன்—அலரெடுத்த
வண்ணத்தான்மாமலரான்வார்சடையானென்றிவர்கட்
கெண்ணத்தானாமோவிமை. (௯௭)

இமஞ்சூழ்மலையுமிருவிசும்புங்காற்றும்
அமஞ்சூழ்ந்தறவிளங்கித்தோன்றும்—நமஞ்சூழ்
நரகத்துநம்மைநணுகாமற்காப்பான்
துரகத்தைவாய்பிளந்தான்றொட்டு. (௯௮)

தொட்டபடையெட்டுந்தோலாதவென்றியான்
அட்டபுயகரத்தானஞ்ஞான்று—குட்டத்துக்
கோண்முதலைதுஞ்சக்குறித்தெறிந்தசக்கரத்தான்
தாள்முதலேநங்கட்குச்சார்பு. (௯௯)

சார்புநமக்கென்றுஞ்சக்கரத்தான்றண்டுழாய்த்
தார்வாழ்வரைமார்பன்றான்முயங்கும்—காரார்ந்த
வானமருமின்னிமைக்கும்வண்டாமரைநெடுங்கட்
டேனமரும்பூமேற்றிரு. (௧௦௦)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பேயாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய

மூன்றாந்திருவந்தாதிமுற்றும்.

ஆ பாசுரம் - ௩௦௦.

நந்தகாம்சரான பேயாழ்வார்திருநக்ஷத்ரம்

ஐப்பசி சதயம்.

திருமழிசையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

௪ - திருவந்தாதி.

தனியன்.

கேரிசைவெண்பா.

நாராயணன்படைத்தான்நான்முகனைநான்முகனுக்
கேரார்சிவன்பிறந்தானென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பிவாழலாம்நெஞ்சமேமொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து.

நான்முகனைநாராயணன்படைத்தான்நான்முகனும்
தான்முகமாய்ச்சங்கரனைத்தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதிமேலிட்டறிவித்தேனாழ்பொருளைச்
சிந்தாமற்கொண்மினீர்தேர்ந்து. (௧)

தேருங்காற்றேவனொருவனேயென்றுரைப்பன்
யாருமறியாரவன்பெருமை—ஓரும்
பொருண்முடிவுமித்தனையேயெத்தவஞ்செய்தார்க்கும்
அருண்முடிவதாழியான்பால். (௨)

பாலிற்கிடந்ததுவும்பண்டரங்கமேயதுவும்
ஆலிற்றுயின்றதுவுமாரறிவார்—ஞாலத்
தொருபொருளைவானவர்தம்மெய்ப்பொருளையப்பில்
அருபொருளையானறிந்தவாறு. (௩)

ஆறுசடைக்கரந்தானண்டர்கோன்றன்னோடும்
கூறுடையனென்பதுவுங்கொள்கைத்தே—வேறொருவர்
இல்லாமைநின்றானையெம்மானையெப்பொருட்கும்
சொல்லானைச்சொன்னேன்றொகுத்து. (௪)

தொகுத்தவரத்தனைத்தோலாதான்மார்பம்
வகிர்ந்தவளையுகிர்த்தோண்மாலே—யுகத்தில்
ஒருநான்றுநீயுயர்த்தியுள்வாங்கிநீயே
அருணான்குமானாயறி. (௫)

அறியார்சமணரயர்த்தார்பவுத்தர்
சிறியார்சிவப்பட்டார்செப்பில்—வெறியாய
மாயவனைமாலவனைமாதவனையேத்தாதார்
ஈனவரேயாதலாலின்று. (௬)

இன்றாகநாளையேயாகவினிச்சிறிதும்
நின்றாகநின்னருளென்பாலதே—நன்றாக
நானுன்னையன்றியிலேன்கண்டாய்நாரணனே
நீயென்னையன்றியிலை. (௭)

இலைதுணைமற்றென்னெஞ்சேயீசனைவென்ற
சிலைகொண்டசெங்கண்மால்சேராக்—குலைகொண்ட
ஈரைந்தலையானிலங்கையையீடழித்த
கூரம்பனல்லாற்குறை. (௮)

குறைகொண்டுநான்முகன்குண்டிகைநீர்பெய்து
மறைகொண்டமந்திரத்தால்வாழ்த்திக்—கறைகொண்ட
கண்டத்தான்சென்னிமேலேறக்கழுவினான்
அண்டத்தான்சேவடியையாங்கு. (௯)

ஆங்காரவாரமதுகேட்டழலுமிழும்
பூங்காரரவணையான்பொன்மேனி—யாங்காண
வல்லமேயல்லமேமாமலரான்வார்சடையான்
வல்லரேயல்லரேவாழ்த்து. (௧௦)

வாழ்த்துகவாய்காண்கண்கேட்கசெவிமகுடம்
தாழ்த்திவணங்குமின்கடண்மலரால்—சூழ்த்த

தழாய்மன்னுநீண்முடியென்றொல்லையான்றன்னை
வழாவண்கைகூப்பிமதித்து. (௮)

மதித்தாய்போய்நான்கின்மதியார்போய்வீழ
மதித்தாய்மதிகோள்விடுத்தாய்—மதித்தாய்
மடுக்கிடந்தமாமுதலைகோள்விடுப்பானாழி
விடற்கிரண்டும்போயிரண்டும்வீடு. (௯)

வீடாக்கும்பெற்றியறியாதுமெய்வருந்திக்
கூடாக்கிநின்றுண்டுகொண்டுழல்வீர்—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான்வேதமுதற்பொருள்தான்விண்ணவர்க்கு
நற்பொருள்தான்நாராயணன். (௧௦)

நாராயணனென்னையாளிநரகத்துச்
சேராமற்காக்குந்திருமால்தன்—பேரான
பேசப்பெறாதபிணச்சமயர்பேசக்கேட்
டாசைப்பட்டாழ்வார்பலர். (௧௧)

பலதேவரேத்தப்படிகடந்தான்பாதம்
மலரேறவிட்டிறைஞ்சிவாழ்த்த—வலராகில்
மார்க்கண்டன்கண்டவகையேவருங்கண்டீர்
நீர்க்கண்டன்கண்டநிலை. (௧௨)

நிலைமன்னுமென்னெஞ்சமந்நான்றுதேவர்
தலைமன்னர்தாமேமாற்றாகப்—பலமன்னர்
போர்மாளவெங்கதிரோன்மாயப்பொழின்மறையத்
தேராழியால்மறைத்தாரால். (௧௩)

ஆலநிழற்கீழறநெறியைநால்வர்க்கு
மேலையுகத்துரைத்தான்மெய்த்தவத்தோன்—ஞாலம்
அளந்தானையாழிக்கிடந்தானையால்மேல்
வளர்ந்தானைத்தான்வணங்குமாறு. (௧௪)

மாறாயதானவனைவள்ளுகிரால்மார்பிரண்டு
கூறாகக்கீறியகோளரியை—வேறாக
ஏத்தியிருப்பாரைவெல்லுமேமற்றவரைச்
சாத்தியிருப்பார்தவம். (௧௫)

தவஞ்செய்துநான்முகனாற்பெற்றவரத்தை
அவஞ்செய்தவாழியாயன்றே—உவந்தெம்மைக்
காப்பாய்நீகாப்பதனையாவாய்நீவைகுந்தம்
ஈப்பாயுமெவ்வுயிர்க்குநீ. (௧௬)

நீயேயுலகெல்லாம்நின்னருளேநிற்பனவும்
நீயேதவத்தேவதேவனும்—நீயே
எரிசுடரும்மால்வரையுமெண்டிசையுமண்டத்
திருசுடருமாயவிவை. (௨௦)

இவையாபிலவாய்திறந்தெரிகான்ற
இவையாவெரிவட்டக்கண்கள்—இவையா
எரிபொங்கிக்காட்டுமிமையோர்பெருமான்
அரிபொங்கிக்காட்டுமழகு. (௨௧)

அழகியான்றானேயரியுருவன்றானே
பழகியான்றானேபணியின்—குழவியாய்த்
தானேழுலகுக்குந்தன்மைக்குந்தன்மையனே
மீனுயிரளிக்கும்வித்து. (௨௨)

வித்துமிடவேண்டுங்கொலோவிடையடர்த்த
பத்தியுழவன்பழம்புனத்து—மொய்த்தெழுந்த
கார்மேகமன்னகருமால்திருமேனி
நீர்வானங்காட்டும்நிகழ்ந்து. (௨௩)

நிகழ்ந்தாய்பால்பொன்பசுப்புக்கார்வண்ணம்நான்கும்
இகழ்ந்தாயிருவரையும்வீயப்—புகழ்ந்தாய்
சினப்போர்ச்சுவேதனைச்சேனாபதியாய்
மனப்போர்முடிக்கும்வகை. (௨௪)

வகையால்மதியாதுமண்கொண்டாய்மற்றும்
வகையால்வருவதொன்றுண்டே—வகையால்
வயிரங்குழைத்துண்ணும்மாவலிதானென்னும்
வயிரவழக்கொழித்தாய்மற்று. (௨௫)

மற்றுத்தொழுவாரொருவரையும்யானின்மை
கற்றைச்சடையான்கரிக்கண்டாய்—எற்றைக்குங்
கண்டுகொள்கண்டாய்கடல்வண்ணாயானுன்னைக்
கண்டுகொள்கிற்குமாறு. (௨௬)

மாறான்புகுந்தமடநெஞ்சம்மற்றதுவும்
பேறாகக்கொள்வனோபேதைகாள்—நீறாடி
தான்காணமாட்டாததாரகலச்சேவடியை
யான்காணவல்லேற்கிது. (௨௭)

இதுவிலங்கையீடழியக்கட்டியசேது
இதுவிலங்குவாலியைவீழ்த்ததுவும்—இதுவிலங்கை

தானொடுங்கவில்நுடங்கத்தண்டாரிராவணனை
ஊனொடுங்கவெய்தானுகப்பு. (௨௮)

உகப்புருவன்றானேயொளியுருவன்றானே
மகப்புருவன்றானேமதிக்கில்—மிகப்புருவம்
ஒன்றுக்கொன்றோசனையான்வீழவொருகணையால்
அன்றிக்கொண்டெய்தானவன். (௨௯)

அவனென்னையாளியரங்கத்தரங்கில்
அவனென்னையெய்தாமற்காப்பான்—அவனென்ன
துள்ளத்துநின்றானிருந்தான்கிடக்குமே
வெள்ளத்தரவணையின்மேல். (௩0)

மேல்நான்முகனரனையிட்டவிடுசாபம்
தான்நாரணனொழித்தான்றாரகையுள்—வானோர்
பெருமானையேத்தாதபேய்காள்பிறக்கும்
கருமாயம்பேசிற்கதை. (௩௧)

கதைப்பொருள்தான்கண்ணன்றிருவயிற்றினுள்ள
உதைப்பளவுபோதுபோக்கின்றி—வதைப்பொருள்தான்
வாய்ந்தகுணத்துப்படாததடைமினோ
ஆய்ந்தகுணத்தானடி. (௩௨)

அடிச்சகடஞ்சாடியரவாட்டியானை
பிடித்தொசித்துப்பேய்முலைநஞ்சுண்டு—வடிப்பவள
வாய்ப்பின்னைத்தோளிக்காய்வல்லேற்றெருத்திறுத்துக்
கோப்பின்னுமானான்குறிப்பு. (௩௩)

குறிப்பெனக்குக்கோட்டியூர்மேயானையேத்தக்
குறிப்பெனக்குநன்மைபயக்க—வெறுப்பனோ
வேங்கடத்துமேயானைமெய்வினைநோயெய்தாமல்
தான்கடத்துந்தன்மையான்றாள். (௩௪)

தாளாலுலகமளந்தவசைவேகொல்
வாளாகிடந்தருளும்வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்குமாமயிலைமாவல்லிக்கேணியான்
ஐந்தலைவாய்நாகத்தணை. (௩௫)

நாகத்தணைக்குடந்தைவெஃகாத்திருவெவ்வுள்
நாகத்தணையரங்கம்பேரன்பில்—நாகத்
தணைப்பாற்கடற்கிடக்குமாதிநெடுமால்
அணைப்பார்கருத்தனவான். (௩௬)

வானுலவுதீவளிமாகடல்மாபொருப்புத்
தானுலவுவெங்கதிருந்தண்மதியும்—மேனிலவு
கொண்டற்பெயருந்திசையெட்டுஞ்சூழ்ச்சியும்
அண்டந்திருமாலகைப்பு. (௩௭)

அகைப்பில்மனிசரையாறுசமயம்
புகைத்தான்பொருகடல்நீர்வண்ணன்—உகைக்கும்
எத்தேவர்வாலாட்டுமெவ்வாறுசெய்கையும்
அப்போதொழியுமழைப்பு. (௩௮)

அழைப்பன்றிருவேங்கடத்தானைக்காண
இழைப்பன்றிருக்கூடல்கூட—மழைப்பேர்
அருவிமணிவரன்றிவந்திழியயானை
வெருவியரவொடுங்கும்வெற்பு. (௩௯)

வெற்பென்றுவேங்கடம்பாடினேன்வீடாக்கி
நிற்கின்றேனின்றுநினைக்கின்றேன்—கற்கின்ற
நூல்வலையிற்பட்டிருந்தநூலாட்டிகேள்வனார்
கால்வலையிற்பட்டிருந்தேன்காண். (௪0)

காணலுறுகின்றேன்கல்லருவிமுத்துதிர
ஓணவிழவிலொலியதிரப்—பேணி
வருவேங்கடவாவென்னுள்ளம்புகுந்தாய்
திருவேங்கடமதனைச்சென்று. (௪௧)

சென்றுவணங்குமினோசேணுயர்வேங்கடத்தை
நின்றுவினைகெடுக்குநீர்மையால்—என்றும்
கடிக்கமலநான்முகனுங்கண்மூன்றத்தானும்
அடிக்கமலமிட்டேத்துமங்கு. (௪௨)

மங்குல்தோய்சென்னிவடவேங்கடத்தானைக்
கங்குல்புகுந்தார்கள்காப்பணிவான்—திங்கள்
சடையேறவைத்தானுந்தாமரைமேலானுங்
குடையேறத்தாங்குவித்துக்கொண்டு. (௪௩)

கொண்டுகுடங்கால்மேல்வைத்தகுழவியாய்த்
தண்டவரக்கன்றலைதாளால்—பண்டெண்ணிப்
போங்குமரர்நிற்கும்பொழில்வேங்கடமலைக்கே
போங்குமரருள்ளீர்புரிந்து. (௪௪)

புரிந்துமலரிட்டுப்புண்டரீகப்பாதம்
பரிந்துபடுகாடுநிற்பத்—தெரிந்தெங்கும்

தானோங்கி நிற்கின்றான் றண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. (௪௫)

வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென்
றெப்பொழுதுங் கைநீட்டும் யானையை — எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே
நாடுவளைத் தாடுமேல் நன்று. (௪௬)

நன்மணி வண்ணனூ ராளியுங் கோளரியும்
பொன்மணியும் முத்தமும் பூமரமும் — பன்மணிநீர்
ஓடுபொருதுருளுங் கானமும் வானரமும்
வேடுமுடை வேங்கடம். (௪௭)

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும் — வேங்கடமே
தானவரை வீழத் தன்னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை. (௪௮)

மலையாமை மேல்வைத்து வாசுகியைச் சுற்றித்
தலையாமை தானொருகை பற்றி — அலையாமல்
பீறக் கடைந்த பெருமான் திருநாமம்
கூறுவதே யாவர்க்குங் கூற்று. (௪௯)

கூற்றமுஞ் சாரா கொடுவினையுஞ் சாராதீ
மாற்றமுஞ் சாரா வகையறிந்தேன் — ஆற்றங்
கரைக்கிடக்குங் கண்ணன் கடற்கிடக்கு மாயன்
உரைக்கிடக்கு முள்ளத் தெனக்கு. (௫௦)

எனக்காவா ராரொருவரே யெம்பெருமான்
தனக்காவான் றானேமற் றல்லால் — புனக்காயா
வண்ணனே யுன்னைப் பிறரறியா ரென்மதிக்கு
விண்ணெல்லா முண்டோ விலை. (௫௧)

விலைக்காட் படுவர் விசாதியேற் றுண்பர்
தலைக்காட் பலிதிரிவர் தக்கோர் — முலைக்கால்
விடமுண்ட வேந்தனையே வேறாக வேத்தார்
கடமுண்டார் கல்லா தவர். (௫௨)

கல்லா தவரிலங்கை கட்டழித்த காகுத்தன்
அல்லா லொருதெய்வம் யானிலேன் — பொல்லாத
தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத்
தேவரைத் தேறேன்மின் தேவு. (௫௩)

தேவராய் நிற்குமத் தேவுமத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் — யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாங் கடை. (௫௪)

கடைநின் றமரர் கழல்தொழுது நாளும்
இடைநின்ற வின்பத்த ராவர் — புடைநின்ற
நீரோத மேனி நெடுமாலே நின்னடியை
யாரோத வல்லா ரவர். (௫௫)

அவரிவரென் றில்லை யனங்கவேள் தாதைக்
கெவரு மெதிரில்லை கண்டீர் — உவரிக்
கடல்நஞ்ச முண்டான் கடனென்று வாணற்
குடனின்று தோற்றா னொருங்கு. (௫௬)

ஒருங்கிருந்த நல்வினையுந் தீவினையு மாவான்
பெருங்குருந்தஞ் சாய்த்தவனே பேசில் — மருங்கிருந்த
வானவர்தாந் தானவர்தாந் தாரகைதா னென்னெஞ்சம்
ஆனவர்தா மல்லாத தென். (௫௭)

என்னெஞ்ச மேயா னிருள்நீக்கி யெம்பிரான்
மன்னஞ்ச முன்னொருநாள் மண்ணளந்தான் — என்னெஞ்ச
மேயானை இல்லா விடையேற்றான் வெவ்வினைதீர்த்
தாயானுக் காக்கினே னன்பு. (௫௮)

அன்பாவா யாரமுதமாவா யடியேனுக்
கின்பாவா யெல்லாமும் நீயாவாய் — பொன்பாவை
கேள்வா கிளரொளியெங் கேசவனே கேடின்றி
ஆள்வாய்க் கடியேனா னாள். (௫௯)

ஆட்பார்த் துழிதருவாய் கண்டுகொ ளென்றுநின்
தாட்பார்த் துழிதருவேன் றன்மையைக் — கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற வரங்கனே யுன்னை
விரும்புவதே விள்ளேன் மனம். (௬௦)

மனக்கேதஞ் சாரா மதுசூதன் றன்னைத்
தனக்கேதான் றஞ்சமாக் கொள்ளில் — எனக்கேதான்
இன்றொன்றி நின்றுலகை யேழாணை யோட்டினான்
சென்றொன்றி நின்ற திரு. (௬௧)

திருநின்ற பக்கந் திறவிதென் றோரார்
கருநின்ற கல்லார்க் குரைப்பர் — திருவிருந்த

மார்பிற்சிரீதரன்றன்வண்டுலவுதண்டுழாய்
தார்தன்னைச்சூடித்தரித்து. (௬௨)

தரித்திருந்தேனாகவேதாரகணப்போர்
விரித்துரைத்தவெந்நாகத்துன்னைத்—தெரித்தெழுதி
வாசித்துங்கேட்டும்வணங்கிவழிபட்டும்
பூசித்தும்போக்கினேன்போது. (௬௩)

போதானவிட்டிறைஞ்சியேத்துமினோபொன்மகரக்
காதானையாதிப்பெருமானை—நாதானை
நல்லானைநாரணனைநம்மேழ்பிறப்பறுக்கும்
சொல்லானைச்சொல்லுவதேசூது. (௬௪)

சூதாவதென்னெஞ்சத்தெண்ணினேன்சொன்மாலை
மாதாயமாதவனைமாலவனை—யாதானும்
வல்லவாசிந்தித்திருப்பேற்குவைகுந்தத்
தில்லையோசொல்லீரிடம். (௬௫)

இடமாவதென்னெஞ்சமின்றெல்லாம்பண்டு
படநாகணைநெடியமாற்கு—திடமாக
வையேன்மதிசூடிதன்னோடயனைநான்
வையேனாட்செய்யேன்வலம். (௬௬)

வலமாகமாட்டாமைதானாகவைகல்
குலமாகக்குற்றந்தானாக—நலமாக
நாரணனைநாபதியைஞானப்பெருமானைச்
சீரணனையேத்துந்திறம். (௬௭)

திறம்பேன்மின்கண்டீர்திருவடிதன்னாமம்
மறந்தும்புறந்தொழாமாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப்போதுமின்களென்றான்நமனுந்தன்
றூதுவரைக்கூவிச்செவிக்கு. (௬௮)

செவிக்கின்பமாவதுவுஞ்செங்கண்மால்நாமம்
புவிக்கும்புவியதுவேகண்டீர்—கவிக்கும்
நிறைபொருளாய்நின்றானைநேர்பட்டேன்பார்க்கில்
மறைபொருளுமத்தனையேதான். (௬௯)

தானொருவனாகித்தரணியிடந்தெடுத்து
ஏனொருவனாயெயிற்றிற்றாங்கியதும்—யானொருவன்
இன்றாவறிகின்றேனல்லேனிருநிலத்தைச்
சென்றாங்கடிப்படுத்தசேய். (௭௦)

சேயனணியன்சிறியன்மிகப்பெரியன்
ஆயன்றுவரைக்கோனாய்நின்ற—மாயனன்
றோதியவாக்கதனைக்கல்லாருலகத்தில்
ஏதிலராய்மெய்ஞ்ஞானமில். (௭௧)

இல்லறமில்லேற்றுறவறமில்லென்னுஞ்
சொல்லறமல்லனவுஞ்சொல்லல்லால்—நல்லறம்
ஆவனவுநால்வேதமாத்தவமுநாரணனே
ஆவதீதன்றென்பாரார். (௭௨)

ஆரேயறிவாரனைத்துலகுமுண்டுமிழ்ந்த
பேராழியான்றன்பெருமையைக்—கார்செறிந்த
கண்டத்தானெண்கண்ணான்காணானவன்வைத்த
பண்டைத்தானத்தின்பதி. (௭௩)

பதிப்பகைஞர்க்காற்றாதுபாய்திரைநீர்ப்பாழி
மதித்தடைந்தவாளரவந்தன்னை—மதித்தவன்றன்
வல்லாகத்தேற்றியமாமேனிமாயவனை
அல்லாதொன்றேத்தாதென்னா. (௭௪)

நாக்கொண்டுமானிடம்பாடேன்னலமாகத்
தீக்கொண்டசெஞ்சடையான்சென்றென்றும்—பூக்கொண்டு
வல்லவாறேத்தமகிழாதவைகுந்தச்
செல்வனார்சேவடிமேற்பாட்டு. (௭௫)

பாட்டுமுறையும்படுகதையும்பல்பொருளும்
ஈட்டியதீயுமிருவிசும்பும்—கேட்ட
மனுவுஞ்சுருதிமறைநான்குமாயன்
றனமாயையிற்பட்டதற்பு. (௭௬)

தற்பென்னைத்தானறியானேலுந்தடங்கடலைக்
கற்கொண்டுதூர்த்தகடல்வண்ணன்—எற்கொண்ட
வெவ்வினையுநீங்கவிலங்காமனம்வைத்தான்
எவ்வினையுமாயுமாற்கண்டு. (௭௭)

கண்டுவணங்கினார்க்கென்னாங்கொல்காமனுடல்
கொண்டதவத்தாற்குமையுணர்த்த—வண்டலம்பும்
தாரலங்கனீண்முடியான்றன்பெயரேகேட்டிருந்தங்
காரலங்கலானமையாலாய்ந்து. (௭௮)

ஆய்ந்துகொண்டவாதிப்பெருமானையன்பினால்
வாய்ந்தமனத்திருத்தவல்லார்கள்—ஏய்ந்ததம்

மெய்குந்தமாகவிரும்புவரேதாமும்
வைகுந்தங்காண்பார்விரைந்து. (௪௯)

விரைந்தடைமின்மேலொருநாள்வெள்ளம்பரக்கக்
கரந்துலகங்காத்தளித்தகண்ணன் — பரந்துலகம்
பாடினவாடினகேட்டுப்படுநரக
வீடினவாசற்கதவு. (௫0)

கதவுமனமென்றுங்காணலாமென்றுங்
குதையும்வினையாவிதீர்ந்தேன் — விதையாக
நற்றமிழைவித்தியென்னுள்ளத்தைநீவிளைத்தாய்
கற்றமொழியாகிக்கலந்து. (௫௧)

கலந்தானென்னுள்ளத்துக்காமவேள்தாதை
நலந்தானுமீதொப்பதுண்டே — அலர்ந்தலர்கள்
இட்டேத்துமீசனுநான்முகனுமென்றிவர்கள்
விட்டேத்தமாட்டாதவேந்து. (௫௨)

வேந்தராய்விண்ணவராய்விண்ணாகித்தண்ணளியாய்
மாந்தராய்மாதாமற்றெல்லாமாய்ச் — சார்ந்தவர்க்குத்
தன்னாற்றான்நேமியான்மால்வண்ணன்றான்கொடுக்கும்
பின்னாற்றான்செய்யும்பிதிர். (௫௩)

பிதிருமனமிலேன்பிஞ்ஞகன்றன்னோடு
எதிர்வனவனெனக்குநேரான் — அதிரும்
கழற்காலமன்னனையேகண்ணனையேநாளுந்
தொழுங்காதல்பூண்டேன்றொழில். (௫௪)

தொழிலெனக்குத்தொல்லைமால்தன்னாமமேத்தப்
பொழுதெனக்குமற்றதுவேபோதும் — கழிசினத்த
வல்லாளன்வானரக்கோன்வாலிமதமழித்த
வில்லாளனெஞ்சத்துளன். (௫௫)

உளன்கண்டாய்நன்னெஞ்சேயுத்தமனென்றும்
உளன்கண்டாயுள்ளுவாருள்ளத் — துளன்கண்டாய்
தன்னொப்பான்றானாயுளன்காண்டமியேற்கு
என்னொப்பார்க்கீசனிமை. (௫௬)

இமையப்பெருமலைபோலிந்திரனார்க்கிட்ட
சமையவிருந்துண்டார்காப்பான் — சமையங்கள்
கண்டானவைகாப்பான்கார்க்கண்டனான்முகனோ
டுண்டானுலகோடுயிர். (௫௭)

உயிர்கொண்டுடலொழியவோடும்போதோடி
அயர்வென்றதீர்ப்பான்பெயர்பாடிச் — செயல்தீரச்
சிந்தித்துவாழ்வாரேவாழ்வார்சிறுசமயப்
பந்தனையார்வாழ்வேல்பழுது. (௫௮)

பழுதாகாதொன்றறிந்தேன்பாற்கடலான்பாதம்
வழுவாவகைநினைந்துவைகல் — தொழுவாரைக்
கண்டிறைஞ்சிவாழ்வார்கலந்தவினைகெடுத்து
விண்டிறந்துவீற்றிருப்பார்மிக்கு. (௫௯)

வீற்றிருந்துவிண்ணாளவேண்டுவார்வேங்கடத்தான்
பாற்றிருந்தவைத்தாரேபன்மலர்கள் — மேற்றிருந்த
வாழ்வார்வருமதிபார்த்தன்பினராய்மற்றவர்க்கே
தாழ்வாயிருப்பார்தமர். (௬0)

தமராவார்யாவர்க்குந்தாமரைமேலார்க்கும்
அமரர்க்குமாடரவத்தார்க்கும் — அமரர்கள்
தாட்டாமரைமலர்களிட்டிறைஞ்சிமால்வண்ணன
தாட்டாமரையடைவோமென்று. (௬௧)

என்றுமறந்தறியேனென்னெஞ்சத்தேவைத்து
நின்றுமிருந்துநெடுமாலை — என்றுந்
திருவிருந்தமார்பிற்சிரீதரனுக்காளாய்க்
கருவிருந்தநான்முதலாக்காப்பு. (௬௨)

காப்புமறந்தறியேன்கண்ணனேயென்றிருப்பன்
ஆப்பங்கொழியவும்பல்லுயிர்க்கும் — ஆக்கை
கொடுத்தளித்தகோனேகுணப்பரனேயுன்னை
விடத்துணியார்மெய்தெளிந்தார்தாம். (௬௩)

மெய்தெளிந்தாரென்செய்யார்வேறானார்நீறாகக்
கைதெளிந்துகாட்டிக்களப்படுத்துப் — பைதெளித்த
பாம்பின்னணையாயருளாயடியேற்கு
வேம்புங்கறியாகுமென்று. (௬௪)

ஏன்றேனடிமையிழிந்தேன்பிறப்பிடும்பை
யான்றேனமரர்க்கமராமை — யான்றேன்
கடனாடுமண்ணாடுங்கைவிட்டுமேலை
இடனாடுகாணவினி. (௬௫)

இனியறிந்தேனீசற்குநான்முகற்குந்தெய்வம்
இனியறிந்தேனெம்பெருமானுன்னை — இனியறிந்தேன்

காரணனீகற்றவைநீகற்பவைநீநற்கிரிசை
நாரணனீநன்கறிந்தேனான். (௯௬)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

திருமழிசையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
நான்முகன்திருவந்தாதி முற்றிற்று.

ஆக பாசுரம் ...

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
ருக்வேதஸாரமான

திருவிருத்தம்.

தனியன்.

கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்
தொருவிருத்தம்புக்குழலுவரீர்ன்பொருநல்
சொருவிருத்தம்புகுதாமற்குருகையர்கோனுரைத்த
திருவிருத்தத்தோரடிகற்றிருமட்டகத்தே.

பொய்க்கின்றஞானமும்பொல்லாவொழுக்குமழுக்குடம்பு
மின்னின்றநீர்மையினியாமுறாமையுயிரளிப்பான்

எந்நின்றயோனியுமாய்ப்பிறந்தாயிமையோர்தலைவா
மெய்ந்நின்றுகேட்டருளாயடியேன்செய்யும்விண்ணப்பமே. (௧)

செழுநீர்த்தடத்துக்கயல்மிளிர்ந்தாலொப்பச்சேயரிக்கண்
அழுநீர்துளும்பவலமருகின்றனவாழியரோ
முழுநீர்முகில்வண்ணன்கண்ணன்விண்ணாட்டவர்மூதுவராம்
தொழுநீரிணையடிக்கேயன்புசூட்டியசூழ்குழற்கே. (௨)

குழற்கோவலர்மடப்பாவையும்மண்மகளுந்திருவும்
நிழற்போல்வனர்கண்டுநிற்குங்கொல்மீளுங்கொல்தண்ணந்துழாய்
அழற்போலடுஞ்சக்கரத்தண்ணல்விண்ணோர்தொழக்கடவும்
தழற்போல்சினத்தவப்புள்ளின்பின்போனதனிநெஞ்சமே. (௩)

தனிநெஞ்சமுன்னவர்புள்ளேகவர்ந்ததுதண்ணந்துழாய்க்
கினிநெஞ்சமிங்குக்கவர்வதுயாமிலம்நீநடுவே
முனிவஞ்சப்பேய்ச்சிமுலைசுவைத்தான்முடிசூடுதுழாய்ப்
பனிநஞ்சமாருதமேயெம்மதாவிபனிப்பியல்பே. (௪)

பனிப்பியல்பாகவுடையதண்வாடையிக்காலமிவ்வூர்
பனிப்பியல்பெல்லாந்தவிர்ந்தெரிவீசுமத்தண்ணந்துழாய்ப்
பனிப்புயல்சோருந்தடங்கண்ணிமாமைத்திறத்துக்கொல்லாம்
பனிப்புயல்வண்ணன்செங்கோலொருநான்றுதடாவியதே. (௫)

தடாவியவம்புமுரிந்தசிலைகளும்போகவிட்டுக்
கடாயினகொண்டொல்குவல்லியீதேனுமசுரர்மங்கக்
கடாவியவேகப்பறவையின்பாகன்மதனசெங்கோல்
நடாவியகூற்றங்கண்டீருயிர்காமின்கள்ஞாலத்துள்ளே. (௬)

ஞாலம்பனிப்பச்செறித்துநன்னீரிட்டுக்கால்சிதைந்து
நீலவல்லேறுபொராநின்றவானமிதுதிருமால்
கோலஞ்சுமந்துபிரிந்தார்கொடுமைகுழறுதண்பூங்
காலங்கொலோவறியேன்வினையாட்டியேன்காண்கின்றவே. (௭)

காண்கின்றனகளுங்கேட்கின்றனகளுங்காணிலிந்நாள்
பாண்குன்றநாடர்பயில்கின்றனவிதெல்லாமறிந்தோம்
மாண்குன்றமேந்திதண்மாமலைவேங்கடத்தும்பர்நம்பும்
சேண்குன்றஞ்சென்றுபொருள்படைப்பான்கற்றதிண்ணனவே. (௮)

திண்பூஞ்சுடர்நுதிநேமியஞ்செல்வர்விண்ணாடனைய
வண்பூமணிவல்லியாரேபிரிபவர்தாமிவையோ
கண்பூங்கமலங்கருஞ்சுடராடிவெண்முத்தரும்பி
வண்பூங்குவளைமடமான்விழிக்கின்றமாயிழையே. (௯)

மாயோன்வடதிருவேங்கடநாடவல்லிக்கொடிகாள்
நோயோவுரைக்கிலுங்கேட்கின்றிலீருறைவீர்நுமது
வாயோவதுவன்றிவல்வினையேனுங்கிளியுமெள்கும்
ஆயோவடுந்தொண்டையோவறையோவிதறிவரிதே. (௧௦)

அரியனயாமின்றுகாண்கின்றனகண்ணன்விண்ணனையாய்
பெரியனகாதம்பொருட்கோபிரிவெனஞாலமெய்தற்
குரியனவொண்முத்தும்பைம்பொன்னுமேந்தியோரோகுடங்கை
பெரியனகெண்டைக்குலமிவைபோவதுபேர்கின்றவே. (௧௧)

பேர்கின்றதுமணிமாமைபிறங்கியள்ளற்பயலை
யூர்கின்றதுகங்குலூழிகளேதெல்லாமெனவே
சார்கின்றசக்கரத்தெம்பெருமானெம்மான்றன்னைத்துழாய்ச்
சார்கின்றநன்னெஞ்சினார்தந்துபோனதனிவளமே. (௧௨)

தனிவளர்செங்கோல்நடாவுதழல்வாயரசவியப்
பனிவளர்செங்கோலிருள்வீற்றிருந்ததுபார்முழுதும்
துனிவளர்காதற்றுழாயைத்துழாவுதண்வாடைதடிந்
தினிவளைகாப்பவராரெனையூழிகளீர்வனவே. (௧௩)

ஈர்வனவேலுமஞ்சேலுமுயிர்மேன்மிளிர்ந்திவையோ
பேர்வனவோவல்லதெய்வநல்வேள்கணைபேரொளியே
சோர்வனநீலச்சுடர்விடுமேனியம்மான்விசும்பூர்
தேர்வனதெய்வமன்னீர்கண்ணோவிச்செழுங்கயலே. (௧௪)

கயலோநுமகண்களென்றுகளிறுவினவிநிற்றீர்
அயலோரறியிலுமீதென்னவார்த்தைகடல்கவர்ந்த
புயலோடுலாங்கொண்டல்வண்ணன்புனவேங்கடத்தெம்மொடும்
பயலோவிலீர்கொல்லைகாக்கின்றநாளும்பலபலவே. (௧௫)

பலபலவூழிகளாயிடுமன்றியோர்நாழிகையைப்
பலபலகூறிட்டகூறாயிடுங்கண்ணன்விண்ணனையாய்
பலபலநாளன்பர்கூடிலுநீங்கிலும்யாமெலிதும்
பலபலசூழலுடைத்தம்மவாழியிப்பாயிருளே. (௧௬)

இருள்விரிந்தாலன்னமாநீர்த்திரைகொண்டுவாழியரோ
இருள்பிரிந்தாரன்பர்தேர்வழிதூரலரவணைமேல்
இருள்விரிநீலக்கருநாயிறுசுடர்கால்வதுபோல்
இருள்விரிசோதிப்பெருமானுறையுமெறிகடலே. (௧௭)

கடல்கொண்டெழுந்ததுவானமவ்வானத்தையன்றிச்சென்று
கடல்கொண்டொழிக்கத்தருவதுகண்ணன்மண்ணும்விண்ணுமளந்

இயற்பா. ௩௪௫

கடல்கொண்டெழுந்தவக்காலங்கொலோபுயற்காலங்கொலோ
கடல்கொண்டகண்ணீரருவிசெய்யாநிற்குமாரிகையே. (௧௮)

காரிகையார்நிறைகாப்பவர்யாரெனக்கார்கொண்டின்னே
மாரிகையேறியறைகின்றகாலத்தும்வாழியரோ
சாரிகைப்புள்ளரந்தண்ணந்துழாயிறைகூயருளார்
சேரிகையேதும்பழியாய்விளைந்ததென்சின்மொழிக்கே. (௧௯)

சின்மொழிநோயோகழிபெருந்தெய்வமின்னோயினதென்
றின்மொழிகேட்குமிளந்தெய்வமன்றிதுவேலநில்நீ
என்மொழிகேண்மின்னென்மம்மனைமீருலகேழுமுண்டான்
சொன்மொழிமாலையந்தண்ணந்துழாய்கொண்டுசூட்டுமினே. (௨௦)

சூட்டுநன்மாலைகள்தூயனவேந்திவிண்ணோர்கள்நன்னீர்
ஆட்டியந்தூபந்தராநிற்கவேயங்கோர்மாயையினால்
ஈட்டியவெண்ணெய்தொடுவுண்ணப்போந்திமிலேற்றுவன்கூன்
கோட்டிடையாடினைகூத்தடலாயர்தங்கொம்பினுக்கே. (௨௧)

கொம்பார்தழைகைச்சிறுநாணெறிவிலங்குவேட்டைகொண்டாட்
டம்பார்களிறுவினவுவதையர்புனத்திருந்தவர்
தம்பாரகத்தென்றுமாடாதனதம்மிற்கூடாதன
வம்பார்விலங்கொல்லோவம்மனைவத்தகில்வான்புனத்தே. (௨௨)

புனமோபுனத்தயலேவழிபோகுமருவினையேன்
மனமோமகளிர்நுங்காவற்சொல்லீர்புண்டரீகத்தங்கேழ்
வனமோரனையகண்ணான்கண்ணன்வானாடமருந்தெய்வத்
தினமோரனையர்களேகளையோநும்மிடையவரே. (௨௩)

இயல்வாயினவஞ்சநோய்கொண்டுலாவுமோர்வாடையுண்டு
கயல்பாய்வனபெருநீர்க்கண்கள்தம்மொடுங்குன்றமொன்றால்
புயல்வாயினநிரைகாத்தபுனிதர்துழாய்க்
கொயல்வாய்மலர்மேல்மனத்தொடென்னாங்கொலெங்கோல்வளைக்கே. (௨௪)

எங்கோல்வளைமுதலாக்கண்ணன்மண்ணும்விண்ணுமளிக்கும்
செங்கோல்வலியாசிலைவிக்குமாலதிறல்சேரமர்
தங்கோனுடையதங்கோனும்பரெல்லாயவர்க்குந்தங்கோன்
நங்கோனுகக்குந்துழாயென்செய்யாதினியாவுலகத்தே. (௨௫)

காசிலம்வாய்க்கொண்டென்னீரறவென்றுதேகாவ்வொண்டு
வேலிலங்குசெவ்வன்சனைத்துழாய்பாவில்கடத்தபொன்னே
காலிலத்தேரய்த்துவின்றோய்தொழுக்கண்ணன்வெஃகாவுதம்பூந்
தேனலம்சோலையப்பாலதெப்பாலைக்குஞ்சேமத்ததே. (௨௬)

சேமஞ்செங்கோனருளே செறுவாருநட்பாகுவரென்
றேமம்பெறவையஞ்சொல்லும்மெய்யே பண்டெல்லாமறைகூய்
யாமங்கடோறெரிவீசுமென்கண்ணன்றுழாய்ப்புலம்பத்
தாமம்புனையவவ்வாடையீதோவந்துதண்ணென்றதே. (உஎ)

தண்ணந்துழாய்வளைகொள்வதுயாமிழப்போநடுவே
வண்ணந்துழாவியோர்வாடையுலாவும்வாள்வாயலகாற்
புண்ணந்துழாமைபொருநீர்த்திருவரங்காவருளாய்
எண்ணந்துழாவுமிடத்துளவோபண்டுமின்னன்னவே. (உஅ)

இன்னன்னதூதெம்மையாளற்றப்பட்டிரந்தாளிவளென்
றன்னன்னசொல்லாப்பெடையொடும்போய்வரும்நீலமுண்ட
மின்னன்னமேனிப்பெருமாறுலகிற்பெண்டூதுசெல்லா
வன்னன்னநீர்மைகொலோகுடிச்சீர்மையிலன்னங்களே. (உகூ)

அன்னஞ்செல்வீரும்வண்டானஞ்செல்வீருந்தொழுதிரந்தேன்
முன்னஞ்செல்வீர்கள்மறவேல்மினோகண்ணன்வைகுந்தனோ
டென்னெஞ்சினாரைக்கண்டாலென்னைச்சொல்லியவரிடைநீர்
இன்னஞ்செல்லீரோவிதுவோதகவென்றிசைமின்களே. (௩0)

இசைமின்கடூதென்றிசைத்தாலிசையிலமென்றலைமேல்
அசைமின்களென்றாலசையுங்கொலாமம்பொன்மாமணிகள்
திசைமின்மிளிருந்திருவேங்கடத்துவன்றாட்சிமயம்
மிசைமின்மிளிரியபோவான்வழிக்கொண்டமேகங்களே. (௩௧)

மேகங்களோவுரையீர்திருமால்திருமேனியொக்கும்
யோகங்களுங்களுக்கெவ்வாறுபெற்றீருயிரளிப்பான்
மாகங்களெல்லாந்திரிந்துநன்னீர்கள்சுமந்துநுந்தம்
ஆகங்கணோவவருந்துந்தவமாமருள்பெற்றதே. (௩௨)

அருளார்திருச்சக்கரத்தாலகல்விசும்புநிலனும்
இருளார்வினைகெடச்செங்கோனடாவுதிரீங்கோர்பெண்பாற்
பொருளோவெனுமிகழ்வோவிவற்றின்புறத்தாளென்றெண்ணோ
தெருளோமரவணையீரிவண்மாமைசிதைக்கின்றதே. (௩௩)

சிதைக்கின்றதாழியென்றாழியைச்சீறித்தன்சீறடியால்
உதைக்கின்றநாயகந்தன்னொடுமாலேயுனதுதண்டார்
ததைக்கின்றதண்ணந்துழாயணிவானதுவேமனமாய்ப்
பதைக்கின்றமாதின்றிறத்தறியேன்செயற்பாலதுவே. (௩௪)

பால்வாய்ப்பிறைப்பிள்ளையொக்கலைக்கொண்டுபகலிழந்த
மேல்பாற்றிசைப்பெண்புலம்புறுமாலையுலகளந்த

மால்பாற்றுழாய்க்குமனமுடையார்க்குநல்காற்றையெல்லாஞ்
சொல்வான்புகுந்திதுவோர்பனிவாடைதுழாகின்றதே. (௩௫)

துழாநெடுஞ்சூழிருளென்றுதன்றண்டாரதுபெயரா
வெழாநெடுவூழியெழுந்தவிக்காலத்துமீங்கிவளோ
வழாநெடுந்துன்பத்தளென்றிரங்காரம்மனோவிலங்கைக்
குழாநெடுமாடமிடித்தபிரானார்கொடுமைகளே. (௩௬)

கொடுங்காற்சிலையர்நிரைகோளுழவர்கொலையில்வெய்ய
கடுங்காளைநேர்துடிபடுங்கவ்வைத்தருவினைய
நெடுங்காலமுங்கண்ணனீண்மலர்ப்பாதம்பரவிப்பெற்ற
தொடுங்காலொசியுமிடையிளமான்சென்றசூழ்கடமே. (௩எ)

கடமாயினகள்கழித்துத்தன்கால்வன்மையாற்பலநாள்
தடமாயினபுக்குநீர்நிலைநின்றதவமிதுகொல்
குடமாடியிம்மண்ணும்விண்ணுங்குலுங்கவுலகளந்த
நடமாடியபெருமானுருவொத்தனநீலங்களே. (௩அ)

நீலத்தடவரைமேற்புண்டரீகநெடுந்தடங்கள்
போலப்பொலிந்தெமக்கெல்லாவிடத்தவும்பொங்குமுந்நீர்
ஞாலப்பிரான்விசும்புக்கும்பிரான்மற்றுநல்லோர்பிரான்
கோலங்கரியபிரானெம்பிரான்கண்ணின்கோலங்களே. (௩கூ)

கோலப்பகற்களிறொன்றுகற்புய்யக்குழாம்விரிந்த
நீலக்கங்குற்களிறெல்லாநிறைந்தனநேரிழையீர்
ஞாலப்பொன்மாதின்மணாளன்றுழாய்நங்குழல்குழாத்தே
யேலப்புனைந்தென்னைமாரெம்மைநோக்குவதென்றுகொலோ. (௪0)

என்றும்புன்வாடையிதுகண்டறிதுமிவ்வாறுவெம்மை
ஒன்றுமுருவுஞ்சுவடுந்தெரியிலமோங்கசுரர்
பொன்றும்வகைபுள்ளையூர்வானருளருளாதவிந்நாள்
மன்றின்னிறைபழிதூற்றிநின்றென்னைவன்காற்றடுமே. (௪௧)

வன்காற்றறையவொருங்கேமறிந்துகிடந்தலர்ந்த
மென்காற்கமலத்தடம்போற்பொலிந்தனமண்ணும்விண்ணும்
மென்காற்களவின்மைகாண்மினென்பானொத்துவானிமிர்ந்த
தன்பாற்பணிந்தவென்பாலெம்பிரானதடங்கண்களே. (௪௨)

கண்ணுஞ்செந்தாமரைகையுமவையடியோவவையே
வண்ணங்கரியதோர்மால்வரைபோன்றுமதிவிகற்பால்
விண்ணுங்கடந்தும்பரப்பான்மிக்குமற்றெப்பாலெவர்க்கும்
எண்ணுமிடத்ததுவோவெம்பிரானதெழினிறமே. (௪௩)

நிறமுயர்கோலமும்பேருமுருவுமிவையிவையென்
றறமுயல்ஞானச்சமயிகள்பேசிலுமங்கங்கெல்லாம்
உறவுயர்ஞானச்சுடர்விளக்காய்நின்றதன்றியொன்றும்
பெறமுயன்றாரில்லையாரும்பிரானைப்பெருமையையே. (௪௪)

பெருங்கேழலார்தம்பெருங்கண்மலர்ப்புண்டரீகநம்மேல்
ஒருங்கேபிறழவைத்தாரிவ்வகாலமொருவர்நம்போல்
வருந்தேர்பவருளரோதொல்லையூழியுஞ்சூழ்பிறப்பும்
மருங்கேவரப்பெறுமேசொல்லுவாழிமடநெஞ்சமே. (௪௫)

மடநெஞ்சமென்றுந்தமதென்றுமோர்கருமங்கருதி
விடநெஞ்சையுற்றார்விடவோவமையுமப்பொன்பெயரோன்
தடநெஞ்சங்கீண்டபிரானார்தமதடிக்கீழ்விடப்போய்த்
திடநெஞ்சமாயெம்மைநீத்தின்றுதாறுந்திரிகின்றதே. (௪௬)

திரிகின்றதுவடமாருதந்திங்கள்வெந்தீமுகந்து
சொரிகின்றதுவதுவுமதுகண்ணன்விண்ணூர்தொழவே
சரிகின்றசங்கந்தண்ணந்துழாய்க்குவண்ணம்பயலை
விரிகின்றதுமுழுமெய்யுமென்னாங்கொலென்மெல்லியற்கே. (௪௭)

மெல்லியலாக்கைக்கிருமிகுருவின்மிளிர்ந்தாங்கே
செல்லியசெல்கைத்துலகையென்காணுமென்னாலுந்தன்னைச்
சொல்லியசூழல்திருமாலவன்கவியாதுகற்றேன்
பல்லியின்சொல்லுஞ்சொல்லாக்கொள்வதோவுண்டுபண்டுபண்டே. ( )

பண்டும்பலபலவீங்கிருள்காண்டுமிப்பாயிருள்போற்
கண்டுமறிவதுங்கேட்பதும்யாமிலங்காளவண்ண
வண்டுண்டுழாய்ப்பெருமான்மதுசூதனன்தாமோதரன்
உண்டுமுமிழ்ந்துங்கடாயமண்ணோரன்னவொண்ணுதலே. (௪௯)

ஒண்ணுதல்மாமையொளிபயவாமைவிரைந்துநந்தேர்
நண்ணுதல்வேண்டும்வலவகடாவின்றுதேனவின்ற
வண்முதனாயகனீண்முடிவெண்முத்தவாசிகைத்தாய்
மண்முதல்சேர்வுற்றருவிசெய்யாநிற்குமாமலைக்கே. (௫௰)

மலைகொண்டுமத்தாவரவாற்சுழற்றியமாயப்பிரான்
அலைகண்டுகொண்டவமுதங்கொள்ளாதுகடல்பரதர்
விலைகொண்டுதந்தசங்கமிவைவேரித்துழாய்துணையாத்
துலைகொண்டுதாயங்கிளர்ந்துகொள்வானொத்தழைக்கின்றதே. (௫௧)

அழைக்குங்கருங்கடல்வெண்டிரைக்கைக்கொண்டுபோயலர்வாய்
மழைக்கண்மடந்தையரவணையேறமண்மாதர்விண்வாய்

அழைத்துப்புலம்பிமுலைமலைமேல்நின்றுமாறுகளாய்
மழைக்கண்ணநீர்திருமால்கொடியானென்றுவார்கின்றதே. (௫௨)

வாராயினமுலையாளிவள்வானோர்தலைமகனாஞ்
சீராயினதெய்வநன்னோயிதுதெய்வத்தண்ணந்துழாய்த்
தாராயினுந்தழையாயினுந்தண்கொம்பதாயினுங்கீழ்
வேராயினுநின்றமண்ணாயினுங்கொண்டுவீசுமினே. (௫௩)

வீசுஞ்சிறகாற்பறத்தீர்விண்ணாடுநுங்கட்கெளிது
பேசும்படியன்னபேசியும்போவதுநெய்தொடுவுண்
டேசும்படியன்னசெய்யுமெம்மீசர்விண்ணோர்பிரானார்
மாசின்மலரடிக்கீழெம்மைச்சேர்விக்கும்வண்டுகளே. (௫௪)

வண்டுகளோவம்மின்னீர்ப்பூநிலப்பூமரத்திலொண்பூ
உண்டுகளித்துழல்வீர்க்கொன்றுரைக்கியமேனமொன்றாய்
மண்டுகளாடிவைகுந்தமன்னாள்குழல்வாய்விரைபோல்
விண்டுகள்வாருமலருளவோநும்வியலிடத்தே. (௫௫)

வியலிடமுண்டபிரானார்விடுத்ததிருவருளால்
உயலிடம்பெற்றுய்ந்தமஞ்சலந்தோழியோர்தண்டென்றல்வந்
தயலிடையாருமறிந்திலரம்பூந்துழாயினின்றேன்
புயலுடைநீர்மையினாற்றடவிற்றென்புலன்கலனே. (௫௬)

புலக்குண்டலப்புண்டரீகத்தபோர்க்கெண்டைவல்லியொன்றால்
விலக்குண்டுலாகின்றுவேல்விழிக்கின்றனகண்ணன்கையால்
மலக்குண்டமுதஞ்சுரந்தமறிகடல்போன்றவற்றாற்
கலக்குண்டநான்றுகண்டாரெம்மையாருங்கழறலரே. (௫௭)

கழறலமொன்றேநிலமுழுதாயிற்றொருகழல்போய்
நிழறரவெல்லாவிசும்புநிறைந்ததுநீண்டவண்டத்
துழறலர்ஞானச்சுடர்விளக்காயுயர்ந்தோரையில்லா
அழறலர்தாமரைக்கண்ணனென்னோவிங்களக்கின்றதே. (௫௮)

அளப்பருந்தன்மையவூழியங்கங்குலந்தண்ணந்துழாய்க்
குளப்பெருங்காதலினீளியவாயுளவோங்குமுந்நீர்
வளப்பெருநாடன்மதுசூதனனென்னும்வல்வினையேன்
தளப்பருநீண்முறுவற்செய்யவாயதடமுலையே. (௫௯)

முலையோமுழுமுற்றும்போந்திலமொய்பூங்குழல்குறிய
கலையோவரையில்லைநாவோகுழறுங்கடன்மண்ணெல்லாம்
விலையோவெனமிளிருங்கணிவள்பரமேபெருமான்
மலையோதிருவேங்கடமென்றுகற்கின்றவாசகமே. (௬௰)

வாசகஞ்செய்வது நம்பரமே தொல்லைவானவர்தம்
நாயகனாயகரெல்லாந்தொழுமவன் ஞாலமுற்றும்
வேயகமாயினுஞ்சோராவகையிரண்டேயடியாற்
றாயவனாய்க்குலமாய்வந்துதோன்றிற்றுநம்மிறையே. (௬௧)

இறையோவிரக்கினுமீங்கோர்பெண்பாலெனவுமிரங்கா
தறையோவெனநின்றதிருங்கருங்கடலீங்கிவடன்
னிறையோவினியுன்றிருவருளாலன்றிக்காப்பரிதால்
முறையோவரவணைமேற்பள்ளிகொண்டமுகில்வண்ணனே. (௬௨)

வண்ணஞ்சிவந்துளவானாடமருங்குளிர்விழிய
தண்மென்கமலத்தடம்போற்பொலிந்தனதாமிவையோ
கண்ணன்றிருமால்திருமுகந்தன்னொடுங்காதல்செய்தேற்
கெண்ணம்புகுந்தடியேனொடிக்காலமிருக்கின்றவே. (௬௩)

இருக்கார்மொழியானெறியிழுக்காமையுலகளந்த
திருத்தாளிணைநிலத்தேவர்வணங்குவர்யாமுமவா
ஒருக்காவினையொடுமெம்மொடுநொந்துகனியின்மையிற்
கருக்காய்கடிப்பவர்போற்றிருநாமச்சொற்கற்றனமே. (௬௪)

கற்றுப்பிணைமலர்க்கண்ணின்குலம்வென்றோரோகருமம்
உற்றுப்பயின்றுசெவியொடுசாவியுலகமெல்லாம்
முற்றும்விழுங்கியுமிழ்ந்தபிரானார்திருவடிக்கீழ்
உற்றுமுறாதுமிளிர்ந்தகண்ணாயெம்மையுண்கின்றவே. (௬௫)

உண்ணாதுறங்காதுணர்வுறுமெத்தவமோவிவர்க்கு
எண்ணாய்மிளிருமியல்வினவாமெரிநீர்வளிவான்
மண்ணாகியவெம்பெருமான்றனதுவைகுந்தமன்னாள்
கண்ணாயருவினையேனுயிராயினகாவிகளே. (௬௬)

காவியுநீலமும்வேலுங்கயலும்பலபலவென்
றாவியின்றன்மையளவல்லபாரிப்பசுரர்செற்ற
மாவியம்புள்வல்லமாதவன்கோவிந்தன்வேங்கடஞ்சேர்
தூவியம்பேடையன்னாள்கண்களாயதுணைமலரே. (௬௭)

மலர்ந்தேயொழிந்திலமாலையுமாலைப்பொன்வாசிகையும்
புலந்தோய்தழைப்பந்தர்தண்டுறநாற்றிப்பொருகடல்சூழ்
நிலந்தாவியவெம்பெருமான்றனதுவைகுந்தமன்னாய்
கலந்தார்வரவெதிர்கொண்டுவன்கொன்றைகள்கார்த்தனவே. (௬௮)

காரேற்றிருள்செகிலேற்றின்சுடருக்குளைந்துவெல்வான்
போரேற்றெதிர்ந்ததுபுன்றலைமாலைபுவனியெல்லாம்

நீரேற்றளந்தநெடியபிரானருளாவிடுமே
வாரேற்றிளமுலையாய்வருந்தேலுன்வளைத்திறமே. (௬௯)

வளைவாய்த்திருச்சக்கரத்தெங்கள்வானவனார்முடிமேற்
றளைவாய்நறுங்கண்ணித்தண்ணந்துழாய்க்குவண்ணம்பயலை
விளைவான்மிகவந்துநாடிங்களாண்டூழிநிற்கவெம்மை
உளைவான்புகுந்திதுவோர்கங்குலாயிரமூழிகளே. (௭௦)

ஊழிகளாயுலகேழுமுண்டானென்றிலம்பழங்கண்
டாழிகளாம்பழவண்ணமென்றேற்கஃதேகொண்டன்னை
நாழிவளோவென்னுஞாலமுண்டான்வண்ணஞ்சொல்லித்தென்னுந்
தோழிகளோவுரையீரெம்மையம்மனைசூழ்கின்றவே. (௭௧)

சூழ்கின்றகங்குல்சுருங்காவிருளின்கருந்திணிமப்பாய்
போழ்கின்றதிங்களம்பிள்ளையும்போழ்கதுழாய்மலர்க்கே
தாழ்கின்றநெஞ்சத்தொருதமியாட்டியேன்மாமைக்கின்று
வாழ்கின்றவாறிதுவோவந்துதோன்றிற்றுவாலியதே. (௭௨)

வாலவெண்ணிலவுலகாரச்சுரக்கும்வெண்டிங்களென்னும்
பால்விண்சுரவிசுரமுதிர்மாலைப்பரிதிவட்டம்
போலுஞ்சுடரடலாழிப்பிரான்பொழிலேழளிக்கும்
சால்பின்றகைமைகொலாந்தமியாட்டிதளர்ந்ததுவே. (௭௩)

தளர்ந்துமுறிந்துவருதிரைப்பாயற்றிருநெடுங்கண்
வளர்ந்துமறிவுற்றும்வையம்விழுங்கியும்மால்வரையைக்
கிளர்ந்துமறிதரக்கீண்டெடுத்தான்முடிசூடுதுழாய்
அளைந்துண்டயாம்பசந்தென்றலந்தோவந்துலாகின்றதே. (௭௪)

உலாகின்றகெண்டையொளியம்பெம்மாவியையூடுருவக்
குலாகின்றவெஞ்சிலைவாண்முகத்தீர்குனிசங்கிடறிப்
புலாகின்றவேலைப்புணரியம்பள்ளியம்மானடியார்
நிலாகின்றவைகுந்தமோவையமோநும்நிலையிடமே. (௭௫)

இடம்போய்விரிந்திவ்வுலகளந்தானெழிலார்தண்டுழாய்
வடம்போதினையுமடநெஞ்சமேநங்கள்வெள்வளைக்கே
விடம்போல்விரிதலிதுவியப்பேவியன்றாமரையின்
தடம்போதொடுக்கமெல்லாம்பலலர்விக்கும்வெண்டிங்களே. (௭௬)

திங்களம்பிள்ளைபுலம்பத்தன்செங்கோலரசுபட்ட
செக்கரமாப்பர்ந்தின்றொருமுமாலைதென்பாவியங்கை
வெங்கசருசெய்தகம்பியின்றேறுசொற்றுழாயதுணையாய்
நங்கண்மனமைவென்றவாண்வந்துதோன்றிவிளிகின்றதே. (௭௭)

கவியுஞ்சரங்களைவிட்டுத்துரம்வாணன்புயங்கள்துணித்த
வலியும்பெருமையும்யான்சொல்லுநீர்த்தல்லமையவனைபோல்
பொலியுருவிற்பிரானார்புனைபூந்துழாய்மலர்க்கே
மெலியுமடநெஞ்சினார்தந்துபோயினவேதனையே. (எஅ)

வேதனைவெண்புரிநூலனைவிண்ணோர்பரவநின்ற
நாதனைஞாலம்விழுங்குமநாதனைஞாலந்தத்தும்
பாதனைப்பாற்கடற்பாம்பணைமேற்பள்ளிகொண்டருளும்
சீதனையேதொழுவார்விண்ணுளாரிலுஞ்சீரியரே. (எகூ)

சீரரசாண்டுதன்செங்கோல்சிலநாட்செலீஇக்கழிந்த
பாரரசொத்துமறைந்ததுஞாயிறுபாரளந்த
பேரரசேயெம்விசும்பரசேயெம்மைநீத்துவஞ்சித்
தோரரசேயருளாயிருளாய்வந்துறுகின்றதே. (அ0)

உறுகின்றகன்மங்கள்மேலனவோர்ப்பிலராயிவளைப்
பெறுகின்றதாயர்மெய்ந்நொந்துபெறார்கொல்துழாய்க்குழல்வாய்
துறுகின்றிலர்தொல்லைவேங்கடமாட்டவுஞ்சூழ்கின்றிலர்
இறுகின்றதாலிவளாகமெல்லாவியெரிகொள்ளவே. (அக)

எரிகொள்செஞ்ஞாயிறிரண்டுடனேயுதயமலைவாய்
விரிகின்றவண்ணத்தவெம்பெருமான்கண்கள்மீண்டவற்றுள்
எரிகொள்செந்தீவீழசுரரைப்போலவெம்போலியர்க்கும்
விரிவசொல்லீரிதுவோவையமுற்றும்விளரியதே. (அஉ)

விளரிக்குரலன்றில்மென்பெடைமேகின்றமுன்றிற்பெண்ணை
முளரிக்குரம்பையிதுவிதுவாகமுகில்வண்ணன்பேர்
கிளரிக்கிளரிப்பிதற்றுமெல்லாவியுநைவுமெல்லாம்
தளரிற்கொலோவறியேனுய்யலாவதித்தையலுக்கே. (அங)

தையனல்லார்கள்குழாங்கள்குழியகுழுவினுள்ளும்
ஐயநல்லார்கள்குழியவிழவினுமங்கங்கெல்லாம்
கையபொன்னாழிவெண்சங்கொடுங்காண்பானவாவுவன்நான்
மையவண்ணாமணியேமுத்தமேயென்றன்மாணிக்கமே. (அச)

மாணிக்கங்கொண்டுகுரங்கெறிவித்திருணோமுட்டி
ஆணிப்பொன்னன்னசுடர்படுமாலையுலகளந்த
மாணிக்கமேயென்மரகதமேமற்றொப்பாரையில்லா
ஆணிப்பொன்னேயடியேனுடையாவியடைக்கலமே. (அரு)

அடைக்கலத்தோங்குகமலத்தலரயன்சென்னியென்னும்
உடைக்கலத்தூண்முன்றுசாலுங்குறிக்கினையாழிசங்கம்

படைக்கலமேந்தியைவெண்ணெய்க்கன்றாய்ச்சிவன்றாம்புகளால்
புடைக்கலந்தானையெம்மானையென்சொல்லிப்புலம்புவனே. (அசு)

புலம்புங்கனைகுரல்போழ்வாயவன்றிலும்பூங்கழிபாய்ந்
தலம்புங்கனைதாற்றுந்திரையாழியுமாங்கவையின்
வலம்புள்ளதுலகம்யாவுமிரிந்துசுழ்றமாகவையத்து
சிலம்பும்படிசெய்வதேதிருமாலித்திருவினையே. (அஎ)

திருமாலுருவொக்கும்மேருவம்மேருவிற்செஞ்சுடரோன்
திருமால்திருக்கைத்திருச்சக்கரமொக்குமன்னகண்டும்
திருமாலுருவோடவன்சின்னமேபிதற்றுமிப்பேதை
திருமாற்றலைக்கொண்டநங்கட்கெங்கேவருந்தீவினையே. (அஅ)

தீவினைக்கருநஞ்சைநல்வினைக்கின்னமுதத்தினைப்
பூவினைமேவியதேவிமணாளனைப்புன்மையெழுகா
தாவினையெய்க்குமல்லாயனையன்றுலகீரடியால்
தாவினையேற்றையெம்மானையெஞ்ஞான்றுதலைப்பெய்வனே. (அகூ)

தலைப்பெய்துயானுன்றிருவடிச்சூடுந்தகைமையினால்
விலைப்பெய்தவாக்கைக்குசேற்றனிமாயமாயந்துசெல்லவே
இலைப்பெய்திலாதவிலைமையுக்காண்டோர்கார்குழாம்
தொலைப்பெய்தநேமியெந்தாய்தொல்லையூழிசுருங்கலதே. (கூ0)

சுருங்குறிவெண்ணெய்தொடுவுண்டகள்வனைவையமுற்றும்
ஒருங்குறவுண்டபெருவயிற்றாளனைமாவலிமாட்
டிருங்குறளாகியிசையவோர்மூவடிவேண்டிச்சென்ற
பெருங்கிறியானையல்லாலடியேனெஞ்சம்பேணலதே. (கூக)

பேணலமில்லாவரக்கர்முந்நீரப்பெரும்பதிவாய்
நீணகர்நீளெரிவைத்தருளாயென்றுநின்னைவிண்ணோர்
தாணிலந்தோய்ந்துதொழுவர்நின்மூர்த்திபலகூற்றிலொன்று
காணலுமாங்கொலென்றேவைகன்மாலையுங்காலையுமே. (கூஉ)

காலைவெய்யோற்குமுன்னோட்டுக்கொடுத்தகங்குற்குறும்பர்
மாலைவெய்யோன்படவையகம்பாவுவரன்னகண்டுங்
காலைநன்ஞானத்துறைபடிந்தாடிக்கண்போதுசெய்து
மாலைநன்றாவிற்கொள்ளாரினியாரவன்மைப்படியே. (கூங)

மைப்படிமேனியுஞ்செந்தாமரைக்கண்ணும்வைதிகரே
மெய்ப்படியானுன்றிருவடிச்சூடுந்தகைமையினார்
எப்படியூராமிலைக்கக்குருட்டாமிலைக்குமென்னும்
அப்படியானுன்சொன்னேனடியேன்மற்றியாதென்பனே. (கூச)

யாதானுமோராக்கையிற்புக்கங்காப்புண்டுமாப்பவிழ்ந்து
மூதாவியிற்றடுமாறுமுயிர்முன்னமேயதனால்
யாதானும்பற்றிநீங்கும்விரதத்தைநல்வீடுசெய்யும்
மாதாவினைப்பிதுவைத்திருமாலைவணங்குவனே. (கூரு)

வணங்குந்துறைகள்பலபலவாக்கிமதிவிகற்பால்
பிணங்குஞ்சமயம்பலபலவாக்கியவையவைதோ
றணங்கும்பலபலவாக்கிநின்மூர்த்திபரப்பிவைத்தாய்
இணங்குநின்னோரையில்லாய்நின்கண்வேட்கையெழுவிப்பனே. (கூசு)

எழுவதும்மீண்டேபடுவதும்பட்டெனையூழிகள்போய்க்
கழிவதுங்கண்டுகண்டெள்கலல்லாலிமையோர்கள்குழாந்
தொழுவதுஞ்சூழ்வதுஞ்செய்தொல்லைமாலைக்கண்ணாரக்கண்டு
கழிவதோர்காதலுற்றார்க்குமுண்டோகண்கள்துஞ்சுதலே. (கூஎ)

துஞ்சாமுனிவருமல்லாதவருந்தொடரநின்ற
எஞ்சாப்பிறவியிடர்கடிவானிமையோர்தமக்குந்
தஞ்சாரிலாதனிப்பெருமூர்த்திதன்மாயஞ்செவ்வே
நெஞ்சால்நினைப்பரிதால்வெண்ணெயூணென்னுமீனச்சொல்லே. (கூஅ)

ஈனச்செல்லாயினுமாகவெறிதிரைவையமுற்றும்
ஏனத்துருவாயிடந்தபிரானிருங்கற்பகஞ்சேர்
வானத்தவர்க்குமல்லாதவர்க்குமற்றெல்லாயவர்க்கும்
ஞானப்பிரானையல்லாலில்லைநான்கண்டநல்லதுவே. (கூகூ)

நல்லார்நவில்குருகூர்நகரான்திருமால்திருப்பேர்
வல்லாரடிக்கண்ணிசூடியமாறன்விண்ணப்பஞ்செய்த
சொல்லார்தொடையலிந்நூறும்வல்லாரழுந்தார்பிறப்பாம்
பொல்லாவருவினைமாயவன்சேற்றள்ளற்பொய்ந்நிலத்தே. (௧00)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

நம்மாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய

திருவிருத்தம்முற்றிற்று.

ஆ- ப்ரபந்தம்-ரு-இ-பாசுரம்-சகக

நம்மாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய.

யஜுர்வேதஸாரமான

திருவாசிரியம்

தனியன்.

காசினியோர்தாம்வாழக்கலியுகத்தேவந்துதித்
தாசிரியப்பாவதனாலருமறைநூல்விரித்தானைத்
தேசிகனைப்பராங்குசனைத்திகழ்வகுளத்தாரானை
மாசடையாமனத்துவைத்துமறவாமல்வாழ்த்துவமே.

செக்கர்மாமுகிலுடுத்துமிக்கசெஞ்சுடர்ப்
பரிதிசூடியஞ்சுடர்மதியம்பூண்டு
பலசுடர்புனைந்தபவளச்செவ்வாய்
திகழ்பசுஞ்சோதிமரகதக்குன்றம்
கடலோன்கைமிசைக்கண்வளர்வதுபோல்
பீதகவாடைமுடிபூண்முதலா
மேதகுபல்கலனணிந்துசோதி
வாயவுங்கண்ணவுஞ்சிவப்பமீதிட்டுப்
பச்சைமேனிமிகப்பகைப்ப
நச்சுவினைக்கவர்தலையரவினமளியேறி
யெறிகடல்நடுவுளறிதுயிலமர்ந்து
சிவனயனிந்திரனிவர்முதலனைத்தோர்
தெய்வக்குழாங்கள்கைதொழக்கிடந்த
தாமரையுந்திதனிப்பெருநாயக
மூவுலகளந்தசேவடியோயே. (௧)

உலகுபடைத்துண்டவெந்தையறைகழற்
சுடர்ப்பூந்தாமரைசூடுதற்கவாவா
ருயிருருகியுக்கநேரியகாத
லன்பிலின்பீன்தேறலமுத
வெள்ளத்தானாஞ்சிறப்புவிட்டொருபொருட்
கசைவோரசைகதிருவொடுமருவிய
இயற்கைமாயாப்பெருவிறலுலகம்
மூன்றினொடுநல்வீடுபெறினுங்
கொள்வதெண்ணுமோதெள்ளியோர்குறிப்பே. (௨)

குறிப்பிற்கொண்டுநெறிப்படவுலகம்
மூன்றுடன்வணங்குதோன்றுபுகழாணை
மெய்பெறநடாயதெய்வமூவரில்
முதல்வனாகிச்சுடர்விளங்ககலத்து
வரைபுரைதிரைபொருபெருவரைவெருவர
வுருமுரலொலிமலிநளிர்கடற்படவர
வரசுடற்றடவரைசுழற்றியதனிமாத்
தெய்வத்தடியவர்க்கினிநாமாளாகவே
இசையுங்கொலூழிதோறூழியோவாதே. (௩)

ஊழிதோறூழியோவாதுவாழிய
வென்றுயாந்தொழவிசையுங்கொல்
யாவகையுலகமும்யாவருமில்லா
மேல்வருபெரும்பாழ்க்காலத்திரும்பொருட்
கெல்லாமரும்பெறற்றனிவித்தொருதா
னாகித்தெய்வநான்முகக்கொழுமுளை
யீன்றுமுக்கணீசனொடுதேவுபலநுதலி
மூவுலகம்விளைத்தவுந்தி
மாயக்கடவுண்மாமுதலடியே. (௪)

மாமுதலடிப்போதொன்றுகவிழ்த்தலர்த்தி
மண்முழுதுமகப்படுத்தொண்சுடரடிப்போ
தொன்றுவிண்செலீஇநான்முகப்புத்தேள்
நாடுவியந்துவப்பவானவர்முறைமுறை
வழிபடநெறீஇத்தாமரைக்காடு
மலர்க்கண்ணொடுகனிவாயுடையது
மாயிருநாயிறாயிரமலர்ந்தன்ன
கற்பகக்காவுபற்பலவன்ன
முடிதோளாயிரந்தழைத்த
நெடியோய்க்கல்லதுமடியதோவுலகே. (௫)

ஓஒவுலகினதியல்வேயீன்றோளிருக்க
மணைநீராட்டிப்படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்துதேர்ந்துலகளிக்குமுதற்பெருங்
கடவுணிற்பப்புடைப்பலதானறி
தெய்வம்பேணுதறனாது
புல்லறிவாண்மைபொருந்தக்காட்டிக்

கொல்வனமுதலாவல்லனமுயலு
மினையசெய்கையின்புதுன்பளித்
தொன்மாமாயப்பிறவியுணீங்காப்
பன்மாமாயத்தழுந்துமாநளிர்ந்தே. (௬)

நளிர்மதிச்சடையனுநான்முகக்கடவுளுந்
தளிரொளியிமையவர்தலைவனுமுதலா
யாவகையுலகமும்யாவருமகப்பட
நிலநீர்தீகால்சுடரிருவிசும்பும்
மலர்சுடர்பிறவுஞ்சிறிதுடன்மயங்க
வொருபொருட்புறப்பாடின்றிமுழுவது
மகப்படக்கரந்தோராலிலைச்சேர்ந்தவெம்
பெருமாமாயனையல்ல
தொருமாதெய்வமற்றுடையமோயாமே. (௭)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

நம்மாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய
திருவாசிரியம் முற்றும்.
ஆ ப்ரபந்தம்-௩-௫-பாசுரம்-௫௱௮.

நம்மாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய
அதர்வணவேதஸாரமான

பெரியதிருவந்தாதி.

தனியன்.

முந்துற்றநெஞ்சேமுயற்றிதரித்துரைத்து
வந்தித்துவாயாரவாழ்த்திச்—சந்தம்
முருகூருஞ்சோலைசூழ்மொய்ப்பூம்பொருநற்
குருகூரன்மாறன்பேர்கூறு.

முயற்றிசுமந்தெழுந்துமுந்துற்றநெஞ்சே
இயற்றுவாயெம்மொடுநீகூடி—நயப்புடைய
நாவீன்தொடைக்கிளவியுட்பொதிவோநற்பூவைப்
பூவீன்றவண்ணன்புகழ். (௧)

புகழ்வோம்பழிப்போம்புகழோம்பழியோம்
இகழ்வோம்மதிப்போம்மதியோம் — இகழோமற்
றெங்கண்மால்செங்கண்மால்சீறல்நீதீவினையோம்
எங்கண்மால்கண்டாயிவை. (௨)

இவையன்றேநல்லவிவையன்றேதீய
இவையென்றிவையறிவனேலும் — இவையெல்லாம்
என்னாலடைப்புநீக்கொண்ணாதிறையவனே
என்னாற்செயற்பாலதென். (௩)

என்னின்மிகுபுகழார்யாவரேபின்னையுமற்
றென்னின்மிகுபுகழேன்யானல்லால் — அன்ன
கருஞ்சோதிக்கண்ணன்கடல்புரையுஞ்சீலப்
பெருஞ்சோதிக்கென்னெஞ்சாட்பெற்று. (௪)

பெற்றதாய்நீயேபிறப்பித்ததந்தைநீ
மற்றையாராவாரும்நீபேசில் — எற்றேயோ
மாயமாமாயவளைமாயமுலைவாய்வைத்த
நீயம்மாகாட்டும்நெறி. (௫)

நெறிகாட்டிநீக்குதியோநின்பாற்கருமா
முறிமேனிகாட்டுதியோமேனாள் — அறியோமை
என்செய்வானெண்ணினாய்கண்ணனேயீதுரையாய்
என்செய்தாலென்படோம்யாம். (௬)

யாமேயருவினையோஞ்சேயோமென்னெஞ்சினார்
தாமேயணுக்கராய்ச்சார்ந்தொழிந்தார் — பூமேய
செம்மாதைநின்மார்பிற்சேர்வித்துப்பாரிடந்த
அம்மாநின்பாதத்தருகு. (௭)

அருகுஞ்சுவடுந்தெரிவுணரோமன்பே
பெருகுமிகவிதுவென்பேசீர் — பருகலாம்
பண்புடையீர்பாரளந்தீர்பாவியேங்கண்காண்பரிய
நுண்புடையீர்நும்மைநுமக்கு. (௮)

நுமக்கடியோமென்றென்றுநொந்துரைத்தென்மாலார்
தமக்கவர்தாஞ்சார்வரியரானால் — எமக்கினி
யாதானுமாகிடுகாணெஞ்சேயவர்திறத்தே
யாதானுஞ்சிந்தித்திரு. (௯)

இருநால்வரீரைந்தின்மேலொருவரெட்டோ
டொருநால்வரோரிருவரல்லால் — திருமாற்கு

யாமார்வணக்கமாரேபாவநன்னெஞ்சே
நாமாமிகவுடையோம்நாழ். (௧௦)

நாழாலமர்முயன்றவல்லரக்கனின்னுயிரை
வாழாவகைவலிதனின்வலியே — ஆழாத
பாருநீவானுநீகாலுநீதீயுநீ
நீருநீயாய்நின்றநீ. (௧௧)

நீயன்றேயாழ்துயரில்வீழ்விப்பானின்னருகே
போயொன்றுசொல்லியென்போநெஞ்சே — நீயென்றும்
காழ்த்துபதேசந்தரினுங்கைக்கொள்ளாய்கண்ணன்றாள்
வாழ்த்துவதேகண்டாய்வழக்கு. (௧௨)

வழக்கொடுமாறுகொளன்றடியார்வேண்டற்
கிழக்கவுங்காண்டுமிறைவ — இழப்புண்டே
எம்மாட்கொண்டாகிலும்யான்வேண்டவென்கண்கள்
தம்மாற்காட்டுன்மேனிச்சாய். (௧௩)

சாயாற்கரியானையுள்ளறியாராய்நெஞ்சே
பேயார்முலைகொடுத்தாள்பேயாய் — நீயார்போய்த்
தேம்பூண்சுவைத்தூணறிந்தறிந்துந்தீயினோடாம்
பாம்பாராவாய்க்கைநீட்டல்பார்த்து. (௧௪)

பார்த்தோரெதிரிதாநெஞ்சேபடுதுயரம்
பேர்த்தோதப்பீடழிவாம்பேச்சில்லை — ஆர்த்தோதம்
தம்மேனித்தாள்தடவத்தாங்கிடந்துதம்முடைய
செம்மேனிக்கண்வளர்வார்சீர். (௧௫)

சீராற்பிறந்துசிறப்பால்வளராது
பேர்வாமனாகாக்காற்பேராளா — மார்பாரப்
புல்கிநீயுண்டுமிழ்ந்தபூமிநீரேற்பரிதே
சொல்லுநீயாமறியச்சூழ்ந்து. (௧௬)

சூழ்த்தடியார்வேண்டினக்காற்றோன்றாதுவிட்டாலும்
வாழ்த்தியவர்பின்னுந்தம்வாய்திறவார் — சூழ்த்தெங்கும்
வாள்வரைகள்போலரக்கன்வன்றலைகடாமிடியத்
தாள்வரைவில்லேந்தினார்தாம். (௧௭)

தாம்பாலாப்புண்டாலுமத்தழும்புதானிளகப்
பாம்பாலாப்புண்டுபாடுற்றாலும் — சோம்பாதிப்
பல்லுருவையெல்லாம்படர்வித்தவித்தாய்நின்
றொல்லுருவையாரறிவார்சொல்லு. (௧௮)

சொல்லிற்குறையில்லைச்சூதறியாநெஞ்சமே
எல்லிப்பகலென்னாதெப்போதும் — தொல்லைக்கண்
மாற்றானுக்கெல்லாமோரைவரையேமாறாகக்
காத்தானைக்காண்டிநீகாண். (௧௯)

காணப்புகலறிவுகைக்கொண்டநன்னெஞ்சம்
நாணப்படுமென்றேநம்பேசில் — மாணி
உருவாகிக்கொண்டவுலகநீரேற்றசீரான்
திருவாகந்தீண்டிற்றுச்சென்று. (௨௰)

சென்றங்குவெங்கோரமற்றாப்பதத்
தின்றிக்கென்னெஞ்சாவிழுக்குண்டே — அன்றங்குப்
பாருருவும்பார்வளைத்தநீருருவுங்கண்புதையக்
காருருவந்தானிமிர்த்தகால். (௨௧)

காலேபொதத்திரிந்துகத்துவராமினநாள்
மாலார்குடிபுகுந்தாரென்மனத்தே — மேலாந்
தருக்குமிடம்பாட்டிதெறுமிவ்வல்வினையார்தாம்வீற்
றிருக்குமிடங்காணாதிளைத்து. (௨௨)

இளைப்பாயிளையாப்பாய்நெஞ்சமேசொன்னேன்
இளைக்கநமன்றமர்கள்பற்றி — இளைப்பெய்த
நாய்தந்துமோதாமல்நல்குவான்காப்பான்
தாய்தந்தையெவ்வுயிர்க்குந்தான். (௨௩)

தானேதனித்தோன்றற்றன்னளப்பொன்றில்லாதான்
தானேபிறர்களுக்குந்தற்றோன்றல் — தானே
இளைக்கிற்பாரீழ்மேலாம்நீண்டமைப்பானானால்
அளக்கிற்பார்பாரின்மேலார். (௨௪)

ஆராணுமாதானுஞ்செய்யவகலிடத்தை
ஆராய்ந்ததுதிருத்தலாவதே — சீரார்
மனத்தலைவன்றுன்பத்தைமாற்றினேன்வானோர்
இனத்தலைவன்கண்ணனால்யான். (௨௫)

யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்வல்வினையைக்
கானும்மலையும்புகக்கடிவான் — தானோர்
இருளன்னமாமேனியெம்மிறையார்தந்த
அருளென்னுந்தண்டாலடித்து. (௨௬)

அடியாற்படிகடந்தமுத்தோவதன்றேல்
முடியால்விசும்பளந்தமுத்தோ — நெடியாய்ச்

செறிகழல்கள்தாள்நிமிர்த்துச்சென்றுலகமெல்லாம்
அறிகிலமால்நீயளந்தவன்று. (௨௭)

அன்றேநங்கண்காணுமாழியான்காருருவம்
இன்றேநாங்காணாதிருப்பதுவும் — என்றேனுங்
கட்கண்ணாற்காணாதவவ்வுருவைநெஞ்சென்னும்
உட்கண்ணேகாணுமுணர்ந்து. (௨௮)

உணரவொருவர்க்கெளியனேசெவ்வே
இணருந்துழாயலங்கலெந்தை — உணரத்
தனக்கெளியரெவ்வளவரவ்வளவனானால்
எனக்கெளியனெம்பெருமானிங்கு. (௨௯)

இங்கில்லைபண்டுபோல்வீற்றிருத்தலென்னுடைய
செங்கண்மால்சீர்க்குஞ்சிறிதுள்ளம் — அங்கே
மடியடக்கிநிற்பதனில்வல்வினையார்தாமீண்
டடிபெயர்ப்பதன்றிவழக்கு. (௩௰)

அழுகுமழியேவோமாய்வல்வினையுந்தீர்ப்பான்
கிழக்குமடிதாதுமாதேறு — கழலக்
குடங்கடலைமீதெடுத்துக்கொண்டாடிப்பந்தத்
தடங்கடலைமேயார்தமக்கு. (௩௧)

தமக்கடிமைவேண்டுவோர்தாமோதரனார்
தமக்கடிமைசெய்யென்றாற்செய்யா — தெமக்கென்றுந்
தாஞ்செய்யுந்தீவினைக்கேதாழ்வுறுவர்நெஞ்சினார்
யாஞ்செய்வதிவ்விடத்திங்கியாது. (௩௨)

யாதானுமொன்றறியிற்றன்னுகக்கிலென்கொலோ
யாதானுஞ்சேர்க்கொணாததுதான் — யாதானுந்
தேறுமாசெய்யாவசுரர்களைநேமியாற்
பாறுபாறாக்கினான்பால். (௩௩)

பாலாழிநீகிடக்கும்பண்பையாங்கேட்டேயுங்
காலாழுநெஞ்சழியுங்கண்சுழலும் — நீலாழிச்
சோதியாயாதியாய்தொல்வினையெம்பாற்கடியும்
நீதியாய்நிற்சார்ந்துநின்று. (௩௪)

நின்றுமிருந்துங்கிடந்துந்திரிதந்தும்
ஒன்றுமோவாற்றானென்னெஞ்சகலான் — அன்றங்கை
அன்புடையான்பொன்பெயரோன்வாய்தகர்த்துமார்விடந்தான்
அன்புடையனன்றேயவன். (௩௫)

அவனுமிவனுமுவனுமற்றும்பர்
அவனுமவனென்றிராதே—அவனும்
அவனேயெனத்தெளிந்துகண்ணனுக்கேதீர்தல்
அவனேயவனேனுமாம். (௰௬)

ஆமாறறிவுடையாராவாரரிதன்றே
நாமேயதுவுடையோம்நன்னெஞ்சே—பூமேய
மதுகரமேதண்டுழாய்மாலாரைவாழ்த்தா
மதுகரமேயன்பாலமை. (௰௭)

அமைக்கும்பொழுதுண்டேயாராயில்நெஞ்சே
இமைக்கும்பொழுதுமிடைச்சி—குமைத்திறங்கள்
ஏசியேயாயினுமீன்றுழாய்மாயனையே
பேசியேபோக்காய்பிழை. (௰௮)

பிழைக்கமுயன்றோமோநெஞ்சமேபேசாய்
தழைக்குந்துழாய்மார்பன்றன்னை—அழைத்தொருகால்
போயுபகாரம்பொலியக்கொள்ளாதவன்புகழே
வாயுபகாரங்கொண்டவாய்ப்பு. (௰௯)

வாய்ப்போவிதுவொப்பமற்றில்லைவாநெஞ்சே
போய்ப்போய்வெந்நரகிற்பூவியேல்—தீப்பால
பேய்த்தாயுயிர்கலாய்ப்பாலுண்டவளுயிரை
மாய்த்தானைவாழ்த்தேவலி. (௨௰)

வலியமெனநினைந்துவந்தெதிர்ந்தமல்லர்
வலியமுடியிடியவாங்கி—வலியநின்
பொன்னாழிக்கையாற்புடைத்திடுதிகீளாதே
பன்னாளுநிற்குமிப்பார். (௨௧)

பாருண்டான்பாருமிழ்ந்தான்பாரிடந்தான்பாரளந்தான்
பாரிடமுன்படைத்தானென்பரால்—பாரிடம்
ஆவானுந்தானானாலாரிடமேமற்றொருவர்க்
காவான்புகாவாலவை. (௨௨)

அவையமெனநினைந்துவந்தசுரர்பாலே
நவையைநளிர்விப்பான்றன்னைக்—கவையில்
மனத்துயரைவைத்திருந்துவாழ்த்தாதார்க்குண்டோ
மனத்துயரைமாய்க்கும்வகை. (௨௩)

வகைசேர்ந்தநன்னெஞ்சுநாவுடையவாயும்
மிகவோர்த்துவீழாவெனிலும்—மிகவாய்ந்து

மாலைத்தாம்வாழ்த்தாதிருப்பரிதுவன்றே
மேலைத்தாஞ்செய்யும்வினை. (௨௪)

வினையார்தருமுயக்கம்வெம்மையையஞ்சித்
தினையாஞ்சிறிதளவுஞ்செல்ல—நினையாது
வாசகத்தாலேத்தினேன்வானோர்தொழுதிறைஞ்சும்
நாயகத்தான்பொன்னடிக்கணான். (௨௫)

நான்கூறுங்கூற்றாவதித்தனையேநாளுநாள்
தேங்கோதநீருருவன்செங்கண்மால்—நீங்காத
மாகதியாம்வெந்நரகிற்சேராமற்காப்பதற்கு
நீகதியாய்நெஞ்சேநினை. (௨௬)

நினைத்திறைஞ்சிமானிடவரொன்றிரப்பரென்றே
நினைத்திடவும்வேண்டாநீநேரே—நினைத்திறைஞ்ச
எவ்வளவரெவ்விடத்தோர்மாலேயதுதானும்
எவ்வளவுண்டோவெமக்கு. (௨௭)

எமக்கியாம்விண்ணாட்டுக்குச்சமதாம்வீட்டை
அமைத்திருந்தோமஃதன்றேயாமா—றமைப்பொலிந்த
மென்றோளிகாரணமாவெங்கோட்டேறேழுடனே
கொன்றானையேமனத்துக்கொண்டு. (௨௮)

கொண்டல்தான்மால்வரைதான்மாகடல்தான்கூரிருள்தான்
வண்டறாப்பூவைதான்மற்றுத்தான்—கண்டநாள்
காருருவங்காண்டோறுநெஞ்சோடுங்கண்ணனார்
பேருருவென்றெம்மைப்பிரிந்து. (௨௯)

பிரிந்தொன்றுநோக்காதுதம்முடையபின்னே
திரிந்துழலுஞ்சிந்தனையார்தம்மைப்—புரிந்தொருகால்
ஆவாவெனவிரங்காரந்தோவலிதேகொல்
மாவாய்பிளந்தார்மனம். (௩௰)

மனமாசுதீருமணவின்றுமும்பர்தம்மைச்
சினமாள்வித்தோரிடத்தேசேர்த்துப்—புனமேய
தண்டுழாயானடியேதாங்காணுமஃதன்றே
வண்டுழாஞ்சீரார்க்குமாண்பு. (௩௧)

மாண்பாவித்தஞ்ஞான்றுமண்ணிரந்தான்மாயவனைத்
தண்பாவித்தன்றாளநேருருவம்—காண்பான்
நங்கண்ணவாமற்றொன்றுகாணுறாசீர்பரவா
துண்ணுவாய்தானுறுமோவொன்று. (௩௨)

ஒன்றுண்டுசெங்கண்மால்யானுரைப்பதுன்னடியார்க்
கென்செய்வனென்றேயிருத்திநீ—நின்புகழில்
வைகுந்தஞ்சிந்தையிலுமற்றினிதோநீயவர்க்கு
வைகுந்தமென்றருளும்வான். (௫௩)

வானோமறிகடலோமாருதமோதீயகமோ
கானோவொருங்கிற்றுங்கண்டிலமால்—ஆனீன்ற
கன்றுயரத்தாமெறிந்துகாயுதிர்த்தார்தாள்பணிந்தோம்
வன்றுயரையாவாமருங்கு. (௫௪)

மருங்கோதமோதும்மணிநாகணையார்
மருங்கேவரவரியரேனும்—ஒருங்கே
எமக்கவரைக்காணலாமெப்பொழுதுமுள்ளால்
மனக்கவலைதீர்ப்பார்வரவு. (௫௫)

வரவாறொன்றில்லையால்வாழ்வினிதாலெல்லே
ஒருவாறொருவன்புகாவா—றுருமாறும்
ஆயவர்தாஞ்சேயவர்தாமன்றுலகந்தாயவர்தாம்
மாயவர்தாங்காட்டும்வழி. (௫௬)

வழித்தங்குவல்வினையைமாற்றானோநெஞ்சே
தழீஇக்கொண்டுபோரவுணன்றன்னைச்—சுழித்தெங்கும்
தாழ்விடங்கள்பற்றிப்புலால்வெள்ளந்தானுகள
வாழ்வடங்கமார்விடந்தமால். (௫௭)

மாலேபடிச்சோதிமாற்றேலினியுனது
பாலேபோற்சீரிற்பழுத்தொழிந்தேன்—மேலால்
பிறப்பின்மைபெற்றடிக்கீழ்க்குற்றேவலன்று
மறப்பின்மையான்வேண்டும்மாடு. (௫௮)

மாடேவரப்பெறுவராமென்றேவல்வினையார்
காடானுமாதானுங்கைக்கொள்ளார்—ஊடேபோய்ப்
பேரோதஞ்சிந்துதிரைக்கண்வளரும்பேராளன்
பேரோதஞ்சிந்திக்கப்பேர்ந்து. (௫௯)

பேர்ந்தொன்றுநோக்காதுபின்னிற்பாய்நில்லாப்பாய்
ஈந்துழாய்மாயனையேயென்னெஞ்சே—பேர்ந்தெங்கும்
தொல்லைமாவெந்நரகிற்சேராமற்காப்பதற்
கில்லைகாண்மற்றோரிறை. (௬0)

இறைமுறையான்சேவடிமேல்மண்ணளந்தவந்நாள்
மறைமுறையால்வானாடர்கூடி—முறைமுறையின்

தாதிலகுபூத்தெளித்தாலொவ்வாதேதாழ்விசும்பின்
மீதிலகித்தான்கிடக்குமீன். (௬௧)

மீனென்னுங்கம்பில்வெறியென்னும்வெள்ளிவேய்
வானென்னுங்கேடிலாவான்குடைக்குத்—தானோர்
மணிக்காம்புபோனிமிர்ந்துமண்ணளந்தான்நங்கள்
பிணிக்காம்பெருமருந்துபின். (௬௨)

பின்றுரக்குங்காற்றிழந்தசூல்கொண்டல்பேர்ந்தும்போய்
வன்றிரைகண்வந்தணைந்தவாய்மைத்தே—அன்று
திருச்செய்யநேமியான்றீயரக்கிமூக்கும்
பருச்செவியுமீர்ந்தபரன். (௬௩)

பரனாமவனாதல்பாவிப்பராகில்
உரனாலொருமூன்றுபோதும்—மரமேழன்
றெய்தானைப்புள்ளின்வாய்கீண்டானையேயமரர்
கைதான்றொழாவேகலந்து. (௬௪)

கலந்துநலியுங்கடுந்துயரைநெஞ்சே
மலங்கவடித்துமடிப்பான்—விலங்கல்போல்
தொன்மாலைக்கேசவனைநாரணனைமாதவனைச்
சொன்மாலையெப்பொழுதுஞ்சூட்டு. (௬௫)

சூட்டாயநேமியான்றொல்லரக்கனின்னுயிரை
மாட்டேதுயரிழைத்தமாயவனை—ஈட்ட
வெறிகொண்டதண்டுழாய்வேதியனைநெஞ்சே
அறிகண்டாய்சொன்னேனது. (௬௬)

அதுவோநன்றென்றங்கமருலகோவேண்டில்
அதுவோபொருளில்லையன்றே—அதுவொழிந்து
மண்ணின்றாள்வேனெனினுங்கூடுமடநெஞ்சே
கண்ணன்றாள்வாழ்த்துவதேகல். (௬௭)

கல்லுங்கனைகடலும்வைகுந்தவானாடும்
புல்லென்றொழிந்தனகொலேபாவம்—வெல்ல
நெடியானிறங்கரியானுள்புகுந்துநீங்கான்
அடியேனதுள்ளத்தகம். (௬௮)

அகஞ்சிவந்தகண்ணினராய்வல்வினையராவார்
முகஞ்சிதைவராமன்றேமுக்கி—மிகுந்திருமால்
சீர்க்கடலையுள்பொதிந்தசிந்தனையேன்றன்னை
ஆர்க்கடலாஞ்செவ்வேயடர்த்து. (௬௯)

அடர்பொன்முடியானையாயிரம்பேரானைச்
சுடர்கொள்சுடராழியானை — இடர்கடியும்
மாதாபிதுவாக வைத்தேனெனதுள்ளே
யாதாகில்யாதேயினி. (எo)

இனிநின்றுநின்பெருமையானுரைப்பதென்னே
தனிநின்றசார்விலாமூர்த்தி — பனிநீர்
அகத்துலவுசெஞ்சடையானாகத்தானான்கு
முகத்தானின்னுந்திமுதல். (எக)

முதலாந்திருவுருவம்மூன்றென்பரொன்றே
முதலாகுமூன்றுக்குமென்பர் — முதல்வா
நிகரிலகுகாருருவாநின்னகத்ததன்றே
புகரிலகுதாமரையின்பூ. (எஉ)

பூவையுங்காயாவுநீலமும்பூக்கின்ற
காவிமலரென்றுங்காண்டோறும் — பாவியேன்
மெல்லாவிமெய்மிகவேபூரிக்குமவ்வவை
யெல்லாம்பிரானுருவேயென்று. (எங)

என்றுமொருநாளொழியாமையானிரந்தால்
ஒன்றுமிரங்காருருக்காட்டார் — குன்று
குடையாகவாகாத்தகோவலனார்நெஞ்சே
புடைதான்பெரிதேபுவி. (எச)

புவியுமிருவிசும்புநின்னகத்தநீயென்
செவியின்வழிபுகுந்தென்னுள்ளாய் — அவிவின்றி
யான்பெரியனீபெரியையென்பதனையாரறிவார்
ஊன்பருகுநேமியாயுள்ளு. (எரு)

உள்ளிலுமுள்ளந்தடிக்கும்வினைப்படலம்
விள்ளவிழித்துன்னைமெய்யுற்றால் — உள்ள
உலகளவும்யானுமுளனாவனென்கொலோ
உலகளந்தமூர்த்தியுரை. (எசா)

உரைக்கிலோர்சுற்றத்தாருற்றாரென்றாரே
இரைக்குங்கடற்கிடந்தவெந்தாய் — உரைப்பெல்லாம்
நின்னன்றிமற்றிலேன்கண்டாயெனதுயிர்க்கோர்
சொல்நன்றியாகுந்துணை. (எஎ)

துணைநாட்பெருங்கிளையுந்தொல்குலமுஞ்சுற்றத்
திணைநாளுமின்புடைத்தாமேலும் — கணைநாணில்
ஓவாத்தொழிற்சார்ங்கன்றொல்சீரைநன்னெஞ்சே
ஓவாதுரைக்குமுரை. (எஅ)

உண்ணாட்டுத்தேசன்றேயூழ்வினையையஞ்சுமே
விண்ணாட்டையொன்றாகமெச்சுமே — மண்ணாட்டில்
ஆராகியெவ்விழிவிற்றானாலுமாழியங்கைப்
பேராயர்க்காளாம்பிறப்பு. (எகூ)

பிறப்பிறப்புமூப்புப்பிணிதுறந்துபின்னும்
இறக்கவுமின்புடைத்தாமேலும் — மறப்பெல்லாம்
ஏதமேயென்றல்லாலெண்ணுவனேமண்ணளந்தான்
பாதமேயேத்தாப்பகல். (அo)

பகலிராவென்பதுவும்பாவியாதெம்மை
இகல்செய்திருபொழுதுமாள்வர் — தகவாத்
தொழும்பரிவர்சீர்க்குந்துணையிலரென்றோரார்
செழும்பரவைமேயார்தெரிந்து. (அக)

தெரிந்துணர்வொன்றின்மையாற்றீவினையேன்வாளா
இருந்தொழிந்தேன்கீழ்நாள்களெல்லாம் — கரந்துருவில்
அம்மனையந்நான்றுபின்தொடர்ந்தவாழியங்கை
அம்மானையேத்தாதயர்த்து. (அஉ)

அயர்ப்பாயயரப்பாய்நெஞ்சமேசொன்னேன்
உயப்போநெறியிதுவேகண்டாய் — செயற்பால
அல்லவேசெய்கிறுதிநெஞ்சமேயஞ்சினேன்
மல்லர்நாள்வவ்வினனைவாழ்த்து. (அங)

வாழ்த்தியவனடியைப்பூப்புனைந்துநின்றலையைத்
தாழ்த்திருகைகூப்பென்றாற்கூப்பாத — பாழ்த்தவிதி
எங்குற்றாயென்றவனையேத்தாதென்னெஞ்சமே
தங்கத்தானாமேலுந்தங்கு. (அச)

தங்காமுயற்றியவாய்த்தாழ்விசும்பின்மீதுபாய்ந்
தெங்கேபுக்கெத்தவஞ்செய்திட்டனகொல் — பொங்கோதத்
தண்ணம்பால்வேலைவாய்க்கண்வளருமென்னுடைய
கண்ணன்பால்நன்னிறங்கொள்கார். (அரு)

கார்கலந்தமேனியான்கைகலந்தவாழியான்
பார்கலந்தவல்வயிற்றான்பாம்பணையான் — சீர்கலந்த
சொன்னினைந்துபோக்காரேற்சூழ்வினையினாழ்துயரை
என்னினைந்துபோக்குவரிப்போது. (அசா)

இப்போதுமின்னுமினிச்சிறிதுநின்றாலும்
எப்போதுமீதேசொல்லென்னெஞ்சே—எப்பொழுதும்
கைகழலாநேமியானம்மேல்வினைகடிவான்
மொய்கழலேயேத்தமுயல். (அஎ)

நம்மாழ்வார்திருவடிகளேசரணம்.

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
பெரியதிருவந்தாதி முற்றிற்று.

ஆ. ப்ரபந்தம்-எ-இ-பாசுரம்-௧௧௦.

திருமங்கையாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

திருவெழுகூற்றிருக்கை.

தனியன்

நேரிசைவெண்பா.

வாழிபரகாலன்வாழிகலிகன்றி
வாழிகுறையலூராளிவேந்தன்—வாழியரோ
மாயோனைவாள்வலியான்மந்திரங்கொண்டமங்கையர்கோன்
தூயோன்சுடர்மானவேல்.

ஒருபேருந்தியிருமலர்த்தவிசி, லொருமுறையயனையீன்றனையொருமுறை, இருசுடர்மீதினிலியங்காமும்மதி, ளிலங்கையிருகால்வளைய வொருசிலை, யொன்றியவீரெயிற்றழல்வாய்வாளியி, லட்டனைமூவடிநானிலம்வேண்டி, முப்புரிநூலொடுமானுரியிலங்கு, மார்வினிலிருபிறப்பொருமாணாகி, யொருமுறையீரடிமூவுலகளந்தனை, நாற்றிசைநடுங்கவஞ்சிறைப்பறவை, யேறிநால்வாய்மும்மதத்திருசெவி, யொருதனிவேழத்தரந்தையையொருநா, ளிருநீர்மடுவுட்டீர்த்தனைமுத்தீ, நான்மறையைவகைவேள்வியறுதொழி,லந்தணர்வணங்குந்தன்மையையைம்புல, னகத்தினுட்செறுத்துநான்குடனடக்கி, முக்குணத்திரண்டவையகற்றி யொன்றினி, லொன்றிநின்றாங்கிருபிறப்பறுப்போ, ரறியுந்தன்மையை முக்கண்ணாற்றோ, ளைவாயரவொடாறுபொதிசடையோன், அறிவருந்தன்மைப்பெருமையுணின்றனை, யேழுலகெயிற்றினிற்கொண்டனைக்கூறிய, வறுசுவைப்பயனுமாயினைச்சுடர்விடு, மைம்படையங்கையுளமர்ந்தனைசுந்தர, நாற்றோண்முந்நீர்வண்ணநின்னீரடி, யொன்றியமனத்தாலொருமதிமுகத்து, மங்கையரிருவருமலரனவங்கையில், முப்பொழுதும்வருடவறிதுயிலமர்ந்தனை, நெறிமுறைநால்வகைவருணமுமாயினை, மேதகுமைம்பெரும்பூதமுநீயே, யறுபதமுரலுங்கூந்தல்காரண, மேழ்விடையடங்கச்செற்றனையறுவகைச், சமயமுமறிவருநிலையினையைம்பா, லோதியையாகத்திருத்தினையறமுத, னான்கவையாய்மூர்த்திமூன்றாய், இருவகைப்பயனாயொன்றாய்விரிந்து, நின்றனைக்குன்றாமதுமலர்ச்சோலை, வண்கொடிப்படப்பைவருபுனற்பொன்னி, மாமணியலைக்குஞ்செந்நெலொண்கழனித், திகழ்வனமுடுத்தகற்போர்புரிசைக், கனகமாளிகைநிமிர்கொடிவிசும்பி, னிளம்பிறைதுவக்குஞ்செல்வமல்குதென், றிருக்குடந்தையந்தணர்மந்திரமொழியுடன், வணங்கவாடரவமளியிலறிதுயிலமர்ந்த, பரமநின்னடியிணைபணிவன், வருமிடரகலமாற்றோவினையே.

இடங்கொண்டநெஞ்சத்திடங்கண்டிடப்படவென்றும்பொன்னித்
தடங்கொண்டதாமரை சூழுமலர்க்கண்பூங்குடந்தை
விடங்கொண்டவெண்பற்கருநாகத்திச் செக்கட்டமுதின்வாய்ப்
படங்கொண்டபாம்பணைப்பள்ளிகொண்டான்றிருப்பாதங்களே. (க)

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
திருவெழுகூற்றிருக்கை முற்றிற்று.

ஆ-ப்ரபந்தம்-அ-இ-பாசுரம்-௧௧௧.

திருமங்கையாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

சிறியதிருமடல்.

தனியன்.

நேரிசைவெண்பா.

முள்ளிச்செழுமலரோதாரான்முளைமதியங்
கொள்ளிக்கென்னுள்ளங்கொதியாமே—வள்ளல்
திருவாளன்சீர்க்கலியன்கார்க்கலியைவெட்டி
மருவாளன்றந்தான்மடல்.

காரார்வரைக்கொங்கைக்கண்ணார் கடலுடுக்கைச்சீரார்சுடர்ச்சுட்டி
ச்செங்கலுழிப்பேராற்றுப் பேராரமார்பிற் பெருமாமழைக்கூந்தல் நீ
ராரவேலிநிலமங்கையென்னுமிப்பாரோர் சொலப்பட்டமூன்றன்றே
(௧) அம்மூன்றுமாராயிற்றானே யறம்பொருளின்பமென்றாரிவற்றி
னிடையதனையெய்துவார் சீரிருகலையுமெய்துவர் (௨) சிக்கெனமற்
றாரானு முண்டென்பாரென்பதுதானதுவுமோராமையன்றேயுலகத்தா
ர்சொல்லுஞ்சொல் லோராமையாமாறதுவுரைக்கேன்கேளா மேகாரார்பு
ரவியேழ்பூண்டதனியாழித் தேரார்நிறைகதிரோன்மண்டலத்தைக்கீண்
டுபுக்காராவமுதங்கெய்தி(௩) அதினின்றும்வாராதொழிவதொன்றுண்
டேயதுநிற்கவேரார்முயல்விட்டுக்காக்கைப்பின்போவதேயேராரிளமு
லையீரென்றனக்குற்றதுதான்காரார்குழலெடுத்துக்கட்டி. (௪) கதிர்மு
லையைவாரார வீக்கி மணிமேகலைதிருத்தியாராரயில்வேற்கணஞ்சனத்
தினீறணிந்துசீரார்செழும்பந்துகொண்டடியாநின்றேனீரார்கமல
ம்போலச்செங்கண்மாலென்றொருவன், பாரோர்களெல்லாமகிழப்ப
றையறையச், சீரார்குடமிரண்டேந்தி (௫) செழுந்தெருவே, யாரானெ
ச்சொல்லியாடுமதுகண்டு, ஏராரிளமுலையாரென்னையருமெல்லாரும்,
வாராயோவென்றார்க்குச் சென்றேனென்வல்வினையாற், காரார்மணிநி
றமுங்கைவளையுங்காணேனான் - ஆரானுஞ்சொல்லுத்தாங்கொள்ளேன்
(௬) ஆங்கிழந்து - நீராடம்பொடுபேறுறவேற்கண்டிராகி - ஏரார்
கிளிக்கிளவியெம்மனைதான்வந்தென்னைச் - சீரார்செழும்புழுதிக்காப்பி
ட்டு (௭) செங்குறிஞ்சித் - தாரார்நறுமாலைச்சாத்தற்குத்தாம்பின்னும்-

நேராதனவொன்றுநேர்ந்தாள் (௮) அதனாலுந்-தீராதென்சிந்தைநோய்
தீராதென்பேதுறவு - வாராதுமாமையுங்கண்டுமற்றிங்கே - யாரா
னுமுதுபெண்டிருமம்மனைமார்சொல்லுவார் - பாரோர்சொலப்படுங்கட்டுப்படு
த்திரே - வாராமற்பறைகொண்டார் (௯) அதுகேட்டுக் - காரார்
குழற்கொண்டைக்கட்டுவிச்சிகட்டேறிச் - சீரார்சுளகிற்சில்நெற்பிடித்
தெறியா - வேராவிதிர்விதிராமெய்சிலிர்க்கைமோவாப் - பேராயிரமு
டையானென்றாள் (௧௦) பேர்த்தேயுங் - காரார்திருமேனிகாட்டினாள்
கையதுவுஞ் - சீரார்வலம்புரியேயென்றாள் - (௧௧) திருத்துழாய்த்-தா
ரார்நறுமாலைகட்டுரைத்தாள்கட்டுரையா - நீரேதுமஞ்சேன்மினும்
மகளைநோய்செய்தான் - ஆரானுமல்லனறிந்தேனவனை நான் - கூரார்வே
ற்கண்ணீருமக்கறியக்கூறுகேனோ - ஆராலிவ்வையமடியளப்புண்டது
தான் - ஆராலிலங்கைபொடிபொடியாவீழ்ந்தது மற் - றாராலேகன்மா
ரிகாத்ததுதான் (௧௨) ஆழி - யாராற்கடைந்திடப்பட்டதவன்காணீர்-
ஊராநிரைமேய்த்துலகெல்லாமுண்டுமிழ்ந்து - மாராதன்மையனு
யார்க்கொருவனாய்ப்பாடிச் - சீரார்கலையல்குற்சிறடிச்செந்துவர்வாய்-
வாரார்வனமுலையாள்மத்தாரப்பற்றிக்கொண் - டேராரிடைநோவவெ
த்தனையோர்போதுமாய்ச் - சீராற்றயிர்கடைந்துவெண்ணெய்திரண்ட
தனை - வேறாகதன்மடவாள்வேறிருக்கத்திட்டு - நாராருறியேற்றிசெ
மையகைத்ததனைப் போரார்வேற்கண்மடவாள் போந்தனையும்பொய்
யுறக்கமோராதவன்போலுறங்கியறிவுற்றுத் - தாரார்தடந்தோள்களு
ள்ளளவுங்கைநீட்டி - யாராதவெண்ணெய்விழுங்கி (௧௩) அருகிருந்த -
மோரார்குடமுருட்டிமுன்கிடந்ததானத்தே-யோராதவன்போற்கிடந்
தானைக்கண்டவளும் - வாராத்தானவைத்துக்காணாள் (௧௪) வயிறடித்திங்
காரார்புகுதுவாராயரிவரல்லால்-நீராமிதுசெய்தீரென்றோர்நெடுங்கயி
ற்றால் - ஊரார்களெல்லாருங்காணவுரலோடே-தீரவெகுளியளாய்ச்சி
க்கெனவார்த்தடிப்ப-வாராவயிற்றோடாற்றாதான் (௧௫) அன்றியும்-நீ
ரார்நெடுங்கயத்தைச்சென்றலைக்கநின்றுரப்பி - ஓராயிரம்பணவெங்
கோவியனாகந்தை - வாராயெனக்கென்றுமற்றதன்மத்தகத்துச் - சீரா
ர்திருவடியாற்பாய்ந்தான் (௧௬) தன்சீதைக்கு - நேராவனென்றோர்நி
சாசரிதான்வந்தாளைக் - கூரார்ந்தவாளாற்கொடிமூக்குங்காதிரண்டு - மீ
ராவிடுத்தவட்குமூத்தோனை (௧௭) வெந்நரகஞ் - சேராவகையேசிலைகு
னித்தான்செந்துவர்வாய் - வாரார்வனமுலையாள்வைதேவிகாரணமா-
வேரார்தடந்தோளிராவணனை (௧௮) ஈரைந்து - சீரார்சிரமறுத்துச்செ
ற்றுகந்தசெங்கண்மால் - போரார்நெடுவேலோன்பொன்பெயரோனாக
த்தைக் - கூரார்ந்தவள்ளுகிராற்கீண்டு (௧௯) குடல்மாலை - சீரார்திரு

மார்பின்மேற்கட்டிச்செங்குருதி - சோராக்கிடந்தானைக்குங்குமத்தோள் கொட்டி - யாராவெழுந்தானரியுருவாய் (௨0) அன்றியும - பேர்வாம னாகியகாலத்துமூவடிமண் - தாராயெனக்கென்றுவேண்டிச்சலத்தி னால் - நீரேற்றுலகெல்லாநின்றளந்தான்மாவலியை - ஆராதபோரிலசு ரர்களுந்தானுமாய்க் - காரார்வரைநட்டுநாகங்கயிறாகப் - பேராமற்று ங்கிக்கடைந்தான் (௨௧) திருத்துழாய்த் - தாரார்ந்தமார்பன்றடமால்வ ரைபோலும் - போரானைபொய்கைவாய்க்கோட்பட்டுநின்றலறி - நீரார் மலர்க்கமலங்கொண்டோர்நெடுங்கையால் - நாராயணாவோமணிவண் ணாநாகணையாய் - வாராயென்னாரிடரைநீக்காய் (௨௨) எனவெகுண்டு - தீராதசீற்றத்தாற்சென்றிரண்டுகூறாக - ஈராவதனையிடர்கடிந்தா னெம் பெருமான் - பேராயிரமுடையான்பேய்ப்பெண்டீர்நும்மகளைத் - தீரா தநோய்செய்தானெனவுரைத்தாள் (௨௩) சிக்கெனமற் - றாரானுமல் லாமைகேட்டெங்களம்மனையும் - போரார்வேற்கண்ணீரவனாகிற்பூந் துழாய் - தாராதொழியுமேதன்னடிச்சியல்லளேமற் - றாரானுமல் லனேயென்றொழிந்தாள் (௨௪) நானவனைக் - காரார்திருமேனிகண்ட துவேகாரணமாப் - பேராப்பிதற்றாத்திரிதருவன் (௨௫) பின்னையு - மீ ராப்புகுதலுமிவ்வுடலைத்தண்வாடை - சோராமறுக்கும்வகையறியே ன் (௨௬) சூழ்குழலார் - ஆரானுமேசுவரென்னுமதன்பழியை - வாராம ற்காப்பதற்குவாளாவிருந்தொழிந்தேன் - வாராய்மடநெஞ்சேவந்து (௨௭) மணிவண்ணன் - சீரார்திருத்துழாய்மாலைநமக்கருளித் - தாரான் றருமென்றிரண்டத்திலொன்றதனை - யாரானுமொன்றாதார் கேளாமே சொன்னக்கால் - ஆராயுமேலும்பணிகேட்டதன்றெனிலும் - போரா தொழியாதேபோந்திடுநீயென்றேற்குக் - காரார்கடல்வண்ணன் பின் போனநெஞ்சமும் - வாராதேயென்னைமறந்ததுதான் (௨௮) வல்வி னையேன் - ஊரார்உகப்பதேயாயினேன்மற்றெனக்கிங் - காராய்வாரில்லை யழல்வாய்மெழுகுபோல்-நீராயுருகுமென்னாவி (௨௯) நெடுங்கண்கள் ஊராருறங்கிலுந்தானுறங்காவுத்தமன்றன் - பேராயினவேபிதற்றுவன் (௩0) பின்னையுங் - காரார்கடல்போலுங்காமத்தராயினார் - ஆரேபொல் லாமையறியாதார்நிற்க - ஆரானுமாதானுமல்லளவள்காணீர் - வாரார் வனமுலைவாசவதத்தையென் - றாரானுஞ்சொல்லப்படுவாள் (௩௧) அவளுந்தன், பேராயமெல்லாமொழியப்பெருந்தெருவே, தாரார்தடந் தோள்தளைக்காலன்பின்போனா, ளூராரிகழ்ந்திடப்பட்டாளே. (௩௨) ம ற்றெனக்கிங், காரானுங்கற்பிப்பார்நாயகரேநானவனைக், காரார்திருமே னிகாணுமளவும்போய்ச், சீரார்திருவேங்கடமேதிருக்கோவ, லூரேமதி ட்கச்சியூரகமேபேரகமே, பேராமறுதிறத்தான் வெள்ளறையேவெஃ

காவே, பேராலிதண்காலூர்திருப்புலியூர்,ஆராமஞ்சூழ்ந்தவரங்கம் (௩௩) கணமங்கைக், காரார்மணிநிறக்கண்ணனூர்விண்ணகரம், சீரார் கணபுரஞ்சேறைதிருவழுந்தூர், காரார்குடந்தைகடிகைகடன்மல்லை, ஏரார்பொழில்சூழிடவெந்தைநீர்மலை, சீராருமாலிருஞ்சோலை திரு மோகூர் (௩௪) பாரோர்புகழும்வதரிவடமதுரை,ஊராயவெல்லாமொழி யாமேநானவனை, பேராலழைத்தோர்கொம்பொசித்தோரானைக்கோள்விடுத்த சீரானைச்செங்கணெடியானைத்தேன்றுழாய்த், தாரானைத்தாமரைபோற் கண்ணானை (௩௫) யெண்ணருஞ்சீர், பேராயிரமும்பிதற்றி (௩௬) பெ ருந்தெருவே, ஊராரிகழினுமூராதொழியேனான், வாரார்பூம்பெண்ணை மடல். (௩௭)

ஊராதொழியேனுலகறியவொண்ணுதலீர்
சீரார்முலைத்தடங்கள்சேராளவும் - பாரெல்லா
மன்றொடுக்கிநின்றானைக்கண்ணின்றதிருநறையூர்
மன்றுக்கூர்வன்மடல்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

திருமங்கையாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய
சிறியதிருமடல்முற்றிற்று.

ஆ-ப்பிரபந்தம்-௩௫-பாசுரம்-௩௭.

திருமங்கையாழ்வார்

திருவாய்மலர்ந்தருளிய

பெரியதிருமடல்.

தனியன்.

நேரிசைவெண்பா.

பொன்னுலகில்வானவரும்பூமகளும்போற்றிசெய்ய
நன்னுதலீர்நம்பிநறையூரர் — மன்னுலகில்
என்னிலைமைகண்டிரங்காரேயாமாகில்
மன்னுமடலூர்வன்வந்து.

மன்னியபல்பொறிசேராயிரவாய்வாளரவின், சென்னிமணிக்கு டுமித்தெய்வச்சுடர்நடுவுள், மன்னியநாகத்தணைமேலோர் மாமலைபோ ல், மின்னுமணிமகரகுண்டலங்கள்வில்வீசத், துன்னியதாரகையின் பேரொளிசேராகாச, மென்னும்விதானத்தின்கீழால் (௧) இருசுடரோ

மன்னும்விளக்காகவேற்றி, மறிகடலும்பன்னுதிரைக்கவரிவீச (௨) நில
மங்கை,தன்னைமுன்னாளளவிட்டதாமரைபோல், மன்னியசேவடியை
வானியங்குதாரகைமீன், என்னும்மலர்ப்பிணையலேய்ந்த (௩) மழைக்கூ
ந்தல், தென்னனுயர்பொருப்புந்தெய்வவடமலையும், என்னுமிவையே
முலையாவடிவமைந்த, அன்னநடையவணங்கே (௪) அடியிணையைத்,
தன்னுடையவங்கைகளாற்றான்றடவத்தான்கிடந்தோர்,உன்னியயோகத்
துறக்கந்தலைக்கொண்ட, பின்னைத்தன்னாபிவலயத்துப்பேரொளிசேர்-
மன்னியதாமரைமாமலர்பூத்தம்மலர்மேல், முன்னந்திசைமுகனைத் தா
ன்படைக்க (௫) மற்றவனும், முன்னம்படைத்தனன் னான்மறைகளம்
மறைதான்-மன்னுமறம்பொருளின்பம் வீடென்றுலகில் நன்னெறிமே
ம்பட்டனநான்கன்றே (௬) நான்கினிலும்-பின்னையதுபின்னைப்பெயர்
தருமென்பதோர் - தொன்னெறியைவேண்டுவார்வீழ்கனியுமூழிலையு-
மென்னுமிவையேநுகர்ந்துடலந் தாம்வருந்தித் - துன்னுமிலைக்குரம்
பைத்துஞ்சியும் (௭) வெஞ்சுடரோன்-மன்னுமழனுகர்ந்தும்வண்டடத்
தினுட்கிடந்து-மின்னதோர்தன்மையராய் ஈங்குடலம் விட்டெழுந்து-
தொன்னெறிக்கட்சென்றாரெனப்படுஞ்சொல்லல்லால் - இன்னதோர்கா
லத்தினையாரிதுபெற்றார் - என்னவுங்கேட்டறிவதில்லை (௮) உளதெ
ன்னில் மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுள்-அன்னதோரி
ல்லியினூடுபோய் (௯) வீடென்னும் - தொன்னெறிக்கட்சென்றாரை
ச்சொல்லுமின்கள்சொல்லாதே-யன்னதேபேசுமறிவில்சிறுமனத்தாங்
கன்னவரைக்கற்பிப்போமியாமே (௰) அதுநிற்க-முன்னனான்சொன்னவ
றத்தின்வழிமுயன்ற - அன்னவர்தாங்கண்டீர்களாயிரங்கண்வானவர்கோ
ன் - பொன்னகரம்புக்கமரர்போற்றிசைப்ப (௧௧) பொன்னொளிசேர்-
கொன்னவிலுங்கோளரிமாத்தன்னைக்கோலஞ்சேர்-மன்னியசிங்கா
சனத்தின்மேல் (௧௨) வாணெடுங்கண்- கன்னியரா லிட்டகவரிப்பொதி
யவிழ்த்தாங் கின்னிளம்பூந்தென்றல் (௧௩) இயங்கமருங்கிருந்த-மின்னனை
யநுண்மருங்குல்மெல்லியலார்வெண்முறுவல் - முன்னமுகிழ்த்தமுகி
ழ்நிலாவாந்தரும்ப- அன்னவர்தமானோக்கமுண்டாங்கணிமலர்சேர்-பொ
ன்னியல்கற்பகத்தின்காடுடுத்தமாடெல்லாம்-மன்னியமந்தாரம்பூத்தம
துத்திவலை-யின்னிசைவண்டமருஞ்சோலைவாய்மாலைசேர்-மன்னியமா
மயில்போற்கூந்தல் (௧௪) மழைத்தடங்கண்-மின்னிடையாரொடும்விளை
யாடிவேண்டிடத்து-மன்னுமணித்தலத்துமாணிக்கமஞ்சரியின் - மின்
னொளிசேர் பளிங்குவிளிம்படுத்த - மன்னும்பவளக்கால்செம்பொன்
செய்மண்டபத்து - அன்னநடையவரம்பையர்தங்கைவளர்த்த - வின்
னிசையாழ்ப்பாடல்கேட்டின்புற்று (௧௫) இருவிசும்பில்-மன்னுமழைதவ

ழும்வாணிலாநீண்மதிதோய் - மின்னொளிசேர்விசும்பூரும்மாளிகை
மேல்-மன்னுமணிவிளக்கைமாட்டி (௧௬) மழைக்கண்ணார்-பன்னுவிசித்
திரமாப்பாப்படுத்தபள்ளிமேல் - துன்னியசாலேகஞ்சூழ்கதவந்தாட்டிறப்
ப-வன்னமுழக்கநெரித்துக்கவாலிலச்-சின்னருக்கா துருடியோர் - கள
மந்தாரம் - தன்னுருமலராற்றேன்கொட்டிக் கற்பகத்தின்-மன்னும
லர்வாய்மணிவண்டின்றொடா-வின்னிளம்பூந்தென்றல்புகுந்தீங்கிள
முலைமேல் -நன்னறுஞ்சந்தனச்சேறுபுலர்த்த (௧௭) தாமரைநீர்-மின்
னிடைமேற்கைவைத்திருந்தேந்திளமுலைமேல் - பொன்னரும்பாரம்பு
ம்ப (௧௮) அங்குறைந்தாம்-இன்னவுருவிலிமையாத்தடங்கண்ணா - ரி
ன்னவர்தமானோக்கமுண்டாங்கணிமாவல - வின்னமுமாமதிக்கூப்ப
ர் (௨௰) இதுவன்றே - அன்னவறத்தின்பயனாவதொண்பொருளும் - ம
ன்னதிறத்தேயாதலால் (௨௧) காமத்தின் - மன்னும்வழிமுறையே
நிற்றுநாமேநக்கி-லன்னநடையாரலரேசவாடவர்மேல் - மன்னுமட
லூராரென்பதோர்வாசகமும் - தென்னுரையிற்கேட்டறிவதுண்டத
னை (௨௨) யாந்தெளியோம் - மன்னும்வடநெறியேவேண்டினோம் வே
ண்டாதார் - தென்னன்பொதியிற்செழுஞ்சந்தனக்குழம்பி - னன்ன
தோர்தன்மையறியாதார் (௨௩) ஆயன்வே-யின்னிசையோசைக் கிரங்
காதார்மால்விடையின் - மன்னுமணிபுலம்பவாடாதார் (௨௪) பொன்
னைமேற் - பின்னுமவன்றிற்பேடைவாய்ச்சிறுகுரலுக் - குன்னியுட
லுருகிநையாதார் (௨௫) உம்பர்வாய்த்-துன்னுமதியுகுத்த தூநிலாநீ
ணெருப்பிற் - றம்முடலம்வேவத்தளராதார் (௨௬) காமவேள் - மன்
னுஞ்சிலைவாய்மலர்வாளிகோத்தெய்யப்-பொன்னெடுவீதிபுகாதார்தம்
(௨௭) புலவிபோற் - பின்னுமலர்க்குழலுமல்குலுமென்முலையு-மி
ன்னிளவாடைதடவத்தாங்கண்டுயிலும்-பொன்னனையார்பின்னுந்திரு
வுறுக (௨௮) போர்வேந்தன் - றன்னுடையதாதை பணியாலரசொ
ழிந்து-பொன்னகரம்பின்னேபுலம்பவலங்கொண்டு - மன்னும்வளநா
டுகைவிட்டு (௨௯) மாதிரங்கள்-மின்னுருவில்விண்டேர்திரிந்து வெளி
ப்பட்டுக் - கன்னிறைந்துதீய்ந்து கழையுடைந்துகால்சுழன்று -பின்னு
ந்திரைவயிற்றுப்பேயேதிரிந்துலவாக்-கொன்னவிலும்வெங்கானத்தூடு
(௩௰) கொடுங்கதிரோன் - துன்னுவெயில்வறுத்தவெம்பரன்மேற்ப
ஞ்சடியால்-மன்னன்னிராமன்பின்வைதேவியென்றுரைக்கும் - அன்னந
டையவணங்குநடந்திலளே (௩௧) பின்னுங்கருநெடுங்கட்செவ்வாய்ப்பி
ணைநோக்கில்-மின்னனையநுண்மருங்குல்வேகவதியென்றுரைக்கும் - க
ன்னிதன்னின்னுயிராங்காதலனைக்கண்டு-தன்னுடையமுன்றோன்றல்
கொண்டேகத்தான்சென்றங்-கன்னவனைநேர்க்கீர்த்தழித்தாரைப்பி (௩௨)

வாளமருட் - கன்னவில்தோட்காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய் - பொன்னவிலுமாகம் புணர்ந்திலளே (௯௨) பூங்கங்கை - முன்னம் புனல்பரக்கும் நன்னாடன் மின்னாடும் - கொன்னவிலுங் கூர்வேற் குருக்கள் குலமதலை - தன்னிகரொன்றில்லாத வென்றித் தனஞ்சயனைப் - பன்னாகராயன் மடப்பாவை (௯௪) பாவைதன் - மன்னியநாணச்சம் மடமென்றிவை யகலத் - தன்னுடைய கொங்கைமுகநெரிய (௯௫) தானவன்றன் - பொன்வரையாகந் தழீக்கொண்டு போய்த்தனது - நன்னகரம்புக்கு நயந்தினிது வாழ்ந்ததுவும் - முன்னுரையிற் கேட்டறிவதில்லையே (௯௬) சூழ்கடலுட் - பொன்னகரஞ்செற்ற புரந்தரனோடொக்கும் - மன்னவன்வாணனவுணர்க்குவாள்வேந்தன் - தன்னுடையபாவையுலகத்துத் தன்னொக்குங் - கன்னியரையில்லாதகாட்சியாள் (௯௭) தன்னுடைய - இன்னுயிர்த்தோழியாலெம்பெருமானீன்றுழாய் - மன்னுமணிவரைத்தோள் மாயவன் (௯௮) பாவியேன் - என்னையிதுவிளைத்த வீரிரண்டுமால்வரைத்தோள் - மன்னவன்றன் காதலனை மாயத்தாற் கொண்டுபோய்க் - கன்னிதன்பால்வைக்க மற்றவனோடெத்தனையோ - மன்னியபேரின்பமெய்தினாள் (௯௯) மற்றிவைதான் - என்னாலே கேட்டீரே யேழைகாளென்னுரைக்கேன் - மன்னுமலையரையன் பொற்பாவை (௱) வாணிலா - மின்னுமணிமுறுவற் செவ்வாயுமையென்னும் - அன்னநடையவணங்கு நுடங்கிடைசேர் - பொன்னுடம்புவாடப் புலனைந்துநொந்தகலத் - தன்னுடையகூழைச் சடாபாரந்தான்றரித்தங் - கன்னவருந்தவத்தினூடுபோய் (௱௧) ஆயிரந்தோள் - மன்னுகரதலங்கள் மட்டித்துமாதிரங்கள் - மின்னியெரிவீச மேலெடுத்தசூழ்கழற்கால் - பொன்னுலகமேழுங் கடந்தும்பர்மேற்சிலும்ப - மன்னுகுலவரையும் மாருதமுந்தாரகையுந் - தன்னினுடனேசுழலச் சுழன்றாடுங் - கொன்னவிலுமூவிலைவேற் கூத்தன்பொடியாடி - அன்னவன்றன் பொன்னகலஞ்சென்றங்கணைந்திலளே - பன்னியுரைக்குங்காற் பாரதமாம் (௱௨) பாவியேற் - கென்னுறுநோயானுரைப்பக் கேண்மின் இரும்பொழில்சூழ் - மன்னுமறையோர் திருநறையூர் மாமலைபோற் - பொன்னியலுமாடக் கவாடங்கடந்துபுக் - கென்னுடைய கண்களிப்ப நோக்கினேன் (௱௩) நோக்குதலும் - மன்னன்றிருமார்பும் வாயுமடியிணையும் - பன்னுகரதலமுங் கண்களும் (௱௪) பங்கயத்தின் - பொன்னியல்காடோர் மணிவரைமேற்பூத்ததுபோல் - மின்னியொளிபடைப்ப வீழ்நாணுந் தோள்வளையும் - மன்னியகுண்டலமும் ஆரமுநீண்முடியுந் - துன்னுவெயில்விரித்த சூளாமணியிமைப்ப - மன்னுமரகதக்குன்றின் மருங்கே (௱௫) ஓர் - இன்னிளவஞ்சிக் கொடியொன்று நின்றதுதான் - அன்னமாய் மானாய் அணிமயிலாய் இடையே - மின்னாயிளவேயிரண்டாய் இணைச்செப்பாய்

- முன்னாயதொண்டையாய்க் கெண்டைக்குலமிரண்டாய் - அன்னதிருவுருவம் நின்றதறியாதே - என்னுடையநெஞ்சு மறிவு மினவளையும் - பொன்னியலுமேகலையு மாங்கொழியப்போந்தேற்கு - மன்னுமறிகடலுமார்க்கும் (௱௬) மதியுகுத்த - இன்னிலாவின்கதிரு மென்றனக்கேவெய்தாகும் - தன்னுடையதன்மைதவிரத்தானென்கொலோ - தென்னன்பொதியிற் செழுஞ்சந்தின்றாதளைந்து - மன்னிவ்வுலகை மனங்களிப்பவந்தியங்கும் - இன்னிளம்பூந்தென்றலும் வீசுமெரியெனக்கே - முன்னியபெண்ணைமேன் முளரிக்கூட்டகத்துப் - பின்னுமவ்வன்றிற் பெடைவாய்ச்சிறுகுரலும் - என்னுடையநெஞ்சுக்கோ ரீர்வாளாமென்செய்கேன் - கன்னவில்தோட்காமன் கருப்புச்சிலைவளையக் - கொன்னவிலும் பூங்கணைகள் கோத்துப் பொதவணைந்து - தன்னுடையதோள்கழியவாங்கி (௱௭) தமியேன்மேல் - என்னுடையநெஞ்சே யிலக்காகவெய்கின்றான் - பின்னிதனைக்காப்பீர்தாமில்லையே (௱௮) பேதையேன் - கன்னவிலுங்காட்டகத் தோர்வல்லிக்கடிமலரின் - நன்னறுவாசமற்றாரானுமெய்தாமே - மன்னும்வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோல் - என்னுடையபெண்மையு மென்னலனுமென்முலையும் - மன்னுமலர்மங்கைமைந்தன் (௱௯) கணபுரத்துப் - பொன்மலைபோல்நின்றவன்றன் பொன்னகலந்தோயாவேல் - என்னிவைதான் வாளாவெனக்கே பொறையாகி - முன்னிருந்துமூக்கின்று மூவாமைக்காப்பதோர் - மன்னுமருந்தறிவதில்லையே (௱௰) மால்விடையின் - துன்னுபிடரெருத்துத் தூக்குண்டுவன்றொடராற் - கன்னியர்கண்மிளிரக்கட்டுண்டு (௱௰௧) மாலைவாய் - தன்னுடையநாவொழியாதாடுந்தனிமணியின் - இன்னிசையோசையும்வந்தென்செவிதனக்கே - கொன்னவிலுமெஃகிற் கொடிதாகு - மென்னிதனைக்காக்குமா சொல்லீர் (௱௰௨) இதுவிளைத்த - மன்னன்நறுந்துழாய் வாழ்மார்பன் மாமதிகோள் - முன்னம்விடுத்த முகில்வண்ணன் (௱௰௩) காயாவின் - சின்னநறும்பூந்திகழ்வண்ணன் வண்ணம்போல் - அன்னகடலைமலையிட்டணைகட்டி - மன்னனிராவணனை மாமண்டுவெஞ்சமத்துப் - பொன்முடிகள்பத்தும்புரளச் சரந்துரந்து - தென்னுலகமேற்றுவித்த சேவகனை (௱௰௪) ஆயிரக்கண் - மன்னவன்வானமும் வானவர்தம் பொன்னுலகுந் - தன்னுடையதோள்வலியாற் கைக்கொண்டதானவனைப் - பின்னோரரியுருவமாகி யெரிவிழித்துக் - கொன்னவிலும்வெஞ்சமத்துக் கொல்லாதே (௱௰௫) வல்லாளன் - மன்னுமணிக்குஞ்சி பற்றிவரவீர்த்துத் - தன்னுடையதாள்மேற் கிடாத்தி (௱௰௬) அவனுடைய - பொன்னகலம்வள்ளுகிராற் போழ்ந்துபுகழ்படைத்த - மின்னிலங்குமாழிப்படைத்தடக்கையீரனை - மன்னிவ்வகலிடத்

ந்தையமாறுதிர்தான்விழுங்கப் - பின்னுமோரேனமாய்ப்புக்குவளைமரு
ப்பிற் - கொன்னவிலுங்கூர்நுதிமேல்வைத்தெடுத்தகூத்தனை-மன்னும்
வடமலையை மத்தாகமாசுணத்தால்-மின்னுமிருசுடரும்விண்ணும்பிற
ங்கொளியும் - தன்னினுடனேசுழலமலைதிரித்தாங் - கின்னமுதம்வா
னவரையூட்டியவருடைய - மன்னுந்துயர்கடிந்தவள்ளலை (௫௭) மற்ற
ன்றியும் - தன்னுருவமாருமறியாமற்றானங்கோர் - மன்னுங்குறளுரு
வின்மாணியாய் (௫௮) மாவலிதன் - பொன்னியலும்வேள்விக்கட்புக்
கிருந்துபோர்வேந்தர் - மன்னைமனங்கொள்ளவஞ்சித்துநெஞ்சுருக்கி-
யென்னுடையபாதத்தால் யானளப்பமூவடிமண் - மன்னாதருகென்று
வாய்திறப்ப (௫௯) மற்றவனும் - என்னாற்றரப்பட்டதென்றலுமேயத்
துணைக்கண் - மின்னார்மணிமுடிபோய்விண்டடவ (௬௦) மேலெடுத்த
பொன்னார்கனைகழற்காலேழுலகும்போய்க்கடந்தங் - கொன்றாவசுரர்
துளங்கச்செலநீட்டி - மன்னிவ்வகலிடத்தைமாவலியைவஞ்சித்துத் - த
ன்னுலகமாக்குவித்ததாளானை (௬௧) தாமரைமேல்-பின்னியையாள்நா
யகனைவிண்ணகருட்பொன்மலையைப் - பொன்னிமணிகொழிக்கும்பூங்
குடந்தைப்போர்விடையைத் - தென்னன்குறுங்குடியுட்செம்பவளக்
குன்றினை - மன்னியதண்சேறைவள்ளலை (௬௨) மாமலர்மே - லன்ன
ந்துயிலுமணிநீர்வயலாலி - என்னுடையவின்னமுதையெவ்வுட்பெரு
மலையைக் - கன்னிமதில்சூழ்கணமங்கைக்கற்பகத்தை - மின்னையிருசு
டரைவெள்ளறையுட்கல்லறைமேற் - பொன்னைமரகதத்தைப்புட்குழி
யெம்போரேற்றை - மன்னுமரங்கத்தெம்மாமணியை (௬௩) வல்லவா
ழ் - பின்னைமணாளனைப்பேரிற்பிறப்பிலியைத்-தொன்னீர்க்கடல்கிடந்த
தோளாமணிச்சுடரை - என்மனத்துமாலையிடவெந்தையீசனை - மன்
னுங்கடல்மல்லைமாயவனை (௬௪) வானவர்தஞ்-சென்னிமணிச்சுடரை
த்தண்கால்திறல்வலியை - தன்னைப்பிறரறியாத்தத்துவத்தைமுத்தினை-
யன்னத்தைமீனையரியையருமறையை - முன்னிவ்வுலகுண்ட மூர்த்தி
யை (௬௫) கோவலூர் - மன்னுமிடைகழியெம்மாயவனைப்பேயலறப்-
பின்னுமுலையுண்டபிள்ளையை (௬௬) யள்ளல்வாய் - யன்னமிரைதேர்
ழுந்தூரெழுஞ்சுடரைத் - தென்றில்லைச்சித்திரகூடத் தென்செல்வனை
(௬௭) மின்னுமழைதவழும்வேங்கடத்தெம்வித்தகனை - மன்னனைமா
லிருஞ்சோலைமணாளனைக் - கொன்னவிலுமாழிப்படையானை (௬௮)
கோட்டியூர் - அன்னவுருவிலரியைத் திருமெய்யத் - தின்னமுதவெள்ள
த்தையிந்தளூரந்தணனை - மன்னுமதிட்கச்சிவேளுக்கையாளரியை-ம
ன்னியபாடகத்தெம்மைந்தனை (௬௯) வெஃகாவில் - உன்னியயோகத்து
றக்கத்தையூரகத்து - ளன்னவனையட்டபுயகரத்தெம்மானேற்றை-என்

னைமனங்கவர்ந்தவீசனை (௭௦) வானவர்தம் - முன்னவனைமூழிக்களத்
துவிளக்கினை - யன்னவனையாதனூராண்டளக்குமையனை - நென்னலை
யின்றினைநாளையை (௭௧) நீர்மலைமேல் - மன்னுமறைநான்குமானானைப்
புல்லாணித் - தென்னன்றமிழைவடமொழியைநாங்கூரில் - மன்னுமணி
மாடக்கோயில்மணாளனை-நன்னீர்த்தலைச்சங்கநாண்மதியை (௭௨)
நான்வணங்குங் - கண்ணனைக்கண்ணபுரத்தானைத்தென்னறையூர்-மன்
னுமணிமாடக்கோயில்மணாளனை - கன்னவில்தோட்காளையைக்கண்டா
ங்குக்கைதொழுது - என்னிலைமையெல்லாமறிவித்தாலெம்பெருமான-
றன்னருளுமாகமுந்தாரானேல் (௭௩) தன்னைநான் - மின்னிடையார்
சேரியிலும்வேதியர்கள்வாழ்விடத்துந் - தன்னடியார்முன்புந்தரணிமு
முதாளுங் - கொன்னவிலும்வேல்வேந்தர்கூட்டத்துநாட்டகத்துந் - த
ன்னிலைமையெல்லாமறிவிப்பன் (௭௪) தான்முன்னம் - பின்னிடை
யார்க்கியர்தஞ்சேரிக்களவின்கண்- துன்னுபடல்திறந்துபுக்கு (௭௫) த
யிர்வெண்ணெய் - தன்வயிறாரவிழுங்கக்கொழுங்கயற்கண்-மன்னுமட
வோர்கள் பற்றியோர்வான்கயிற்றால் - பின்னுமுரலோடுகட்டுண்டபெ
ற்றிமையு - மன்னதோர்பூதமாயாயர்விழவின்கண் - துன்னுசகடத்தாற்
புக்கபெருஞ்சோற்றை - முன்னிருந்துமுற்றத்தான்றுற்றியதெற்றெனவு
மன்னர்பெருஞ்சவையுள்வாழ்வேந்தர்தூதனாய்த் - தன்னையிகழ்ந்
துரைப்பத்தான்முனநாள்சென்றதுவும் - மன்னுபறைகறங்கமங்கையர்
தங்கண்களிப்பக் - கொன்னவிலுங்கூத்தனாய்ப்பேர்த்துங்குடமாடி-
யென்னிவனென்னப்படுகின்றவீடறவுந் - தென்னிலங்கையாட்டியரக்
கர் குலப்பாவை-மன்னனிராவணன்றனல்தங்கை (௭௬) வாளெயிற்று
த்-துன்னுசுடுசினத்துச்சூர்ப்பணகாச்சோர்வெய்திப்-பொன்னிறங்கொ
ண்டுபுலர்ந்தெழுந்தகாமத்தால் - தன்னைநயந்தாளைத்தான்முனிந்துமூ
க்கரிந்து - மன்னியதிண்ணெனவும் வாய்த்தமலைபோலுந் - தன்னிக
ரொன்றில்லாததாடகையை (௭௭) மாமுனிக்காய்த் - தென்னுலக
மேற்றுவித்ததிண்டிறலும்மற்றிவைதா - னுன்னியுலவாவுலகறியவூர்
வன்நான் - முன்னிமுளைத்தெழுந்தோங்கியொளிபரந்து, மன்னியபூம்
பெண்ணைமடல் (௭௮)

நேரிசைவெண்பா.

என்னிலைமையெல்லாமறிவித்தாலெம்பெருமான்
தன்னருளுமாகமுந்தாரானேல்—பின்னைப்போய்
ஒண்டுறைநீர்வேலையுலகறியவூர்வன்நான்
வண்டறைபூம்பெண்ணைமடல்

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

திருமங்கையாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய
பெரியதிருமடல் - முற்றிற்று.

ஆக பாசுரம் ௧௦-௲-பாசுரம் - ௭௦௧.



இராமாநுஜன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவரங்கத்தமுதனார்

திருவாய்மலர்ந்தருளிய

இராமாநுசநூற்றந்தாதி.

தனியன்கள்.

நேரிசைவெண்பா.

முன்னைவினையகலமூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் — என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன்றென்புலத்தார்க்
கென்னுக்கடவுடையேன்யான்.

கட்டளைக்கலித்துறை.

நயந்தருபேரின்பமெல்லாம்பழுதென்றுநண்ணினர்பால்
சயந்தருகீர்த்திஇராமாநுசமுனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே.

சொல்லின்றொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்துமுன்னாமமெல்லாமென்றனாவினுள்ளே
அல்லும்பகலுமமரும்படிநல்கறுசமயம்
வெல்லும்பரமவிராமாநுசவிதென்விண்ணப்பமே.

பூமன்னுமாதுபொருந்தியமார்பன்புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்பல்கலையோர்
தாமன்னவந்தவிராமாநுசன்சரணாரவிந்தம்
நாமன்னிவாழநெஞ்சேசொல்லுவோமவன்னாமங்களே. (௧)

கள்ளார்பொழிற்றென்னரங்கன்கமலப்பதங்கணெஞ்சிற்
கொள்ளாமனிசரைநீங்கிக்குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமாநுசன்மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சொன்றறியேனெனக்குற்றபேரியல்வே. (௨)

பேரியனெஞ்சேயடிபணிந்தேனுன்னைப்பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ளசுற்றம்புலர்த்திப்பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மையிராமாநுசமுனிக்கன்புசெய்யுஞ்
சீரியபேறுடையாரடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே. (௩)

என்னைப்புவியிலொருபொருளாக்கிமருள்சுரந்த
முன்னைப்பழவினைவேரறுத்தூழிமுதல்வனையே
பன்னப்பணித்தவிராமாநுசன்பரன்பாதமுமென்
சென்னித்தரிக்கவைத்தானெனக்கேதுஞ்சிதைவில்லையே. (௪)

எனக்குற்றசெல்வமிராமாநுசனென்றிசையகில்லா
மனக்குற்றமாந்தர்பழிக்கிற்புகழவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன்திருநாமங்கள்சாற்றுமென்பா
வினக்குற்றங்காணகில்லார்பத்தியேய்ந்தவியல்விதென்றே. (௫)

இயலும்பொருளுமிசையத்தொடுத்தீன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்துமிராமாநுசனைமதியின்மையால்
பயிலுங்கவிகளிற்பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனனவன்றன்பெருங்கீர்த்திமொழிந்திடவே. (௬)

மொழியைக்கடக்கும்பெரும்புகழான்வஞ்சமுக்குறும்பாங்
குழியைக்கடக்குநங்கூரத்தாழ்வான்சரண்கூடியபின்
பழியைக்கடத்துமிராமாநுசன்புகழ்பாடியல்லா
வழியைக்கடத்தலெனக்கினியாதும்வருத்தமன்றே. (௭)

வருத்தும்புறவிருண்மாற்றவெம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையுஞ்செந்தமிழ்தன்னையுங்கூட்டியொன்றத்
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத்தன்றிருவுள்ளத்தே
இருத்தும்பரமனிராமாநுசனெம்மிறையவனே. (௮)

இறையவனைக்காணுமிதயத்திருள்கெடஞானமென்னும்
நிறைவிளக்கேற்றியபூதத்திருவடித்தாள்கணெஞ்சத்
துறையவைத்தாளுமிராமாநுசன்புகழோதுநல்லோர்
மறையினைக்காத்திந்தமண்ணகத்தேமன்னவைப்பவரே. (௯)

மன்னியபேரிருண்மாண்டபின்கோவலுண்மாமலராள்
தன்னொடுமாயனைக்கண்டமைகாட்டுந்தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றுமிராமாநுசற்கன்புபூண்டவர்தாள்
சென்னியிற்சூடுந்திருவுடையாரென்றுஞ்சீரியரே. (௧௦)

சீரியநான்மறைச்செம்பொருள்செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள்சரணாம்பதுமத்
தாரியல்சென்னியிராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்தம்
காரியவண்மையென்னாற்சொல்லொணாதிக்கடலிடத்தே. (௧௧)

இடங்கொண்டகீர்த்திமழிசைக்கிறைவனிணையடிப்போ
தடங்குமிதயத்திராமாநுசனம்பொற்பாதமென்றுங்

கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கேயடியேனன்புசெய்வதுவே. (௧௨)

செய்யும்பசுந்துளவத்தொழின்மாலையுஞ்செந்தமிழிற்
பெய்யுமறைத்தமிழ்மாலையும்பேராதசீரரங்கத்
தையன்கழற்கணியும்பரன்றாளன்றியாதரியா
மெய்யனிராமாநுசன்சரணேகதிவேறெனக்கே. (௧௩)

கதிக்குப்பதறிவெங்கானமுங்கல்லுங்கடலுமெல்லாங்
கொதிக்கத்தவஞ்செய்யுங்கொள்கையற்றேன்கொல்லிகாவலன்சொற்
பதிக்குங்கலைக்கவிபாடும்பெரியவர்பாதங்களே
துதிக்கும்பரமனிராமாநுசனென்னைச்சோர்விலனே. (௧௪)

சோராதகாதற்பெருஞ்சுழிப்பாற்றொல்லைமாலையொன்றும்
பாராதவனைப்பல்லாண்டென்றுகாப்பிடும்பான்மையன்றாள்
பேராதவுள்ளத்திராமாநுசன்றன்பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேனெனக்கென்னதாழ்வினியே. (௧௫)

தாழ்வொன்றுமில்லாமறைதாழ்ந்துதலமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள்வந்தளித்தவன்காண்மினரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச்சூடிக்கொடுத்தவள்தொல்லருளால்
வாழ்கின்றவள்ளலிராமாநுசனென்னுமாமுனியே. (௧௬)

முனியார்துயரங்கள்முந்திலுமின்பங்கள்மொய்த்திடினுங்
கனியாரமனங்கண்ணமங்கைநின்றானைக்கலைபரவுந்
தனியானையைத்தண்டமிழ்செய்தநீலன்றனக்குலகில்
இனியானையெங்களிராமாநுசனைவந்தெய்தினரே. (௧௭)

எய்தற்கரியமறைகளையாயிரமின்றமிழால்
செய்தற்குலகில்வருஞ்சடகோபனைச்சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும்பெரியவர்சீரையுயிர்களெல்லாம்
உய்தற்குதவுமிராமாநுசனம்முறுதுணையே. (௧௮)

உறுபெருஞ்செல்வமுந்தந்தையுந்தாயுமுயர்குருவும்
வெறிதருபூமகணாதனுமாறன்விளங்கியசீர்
நெறிதருஞ்செந்தமிழாரணமேயென்றிந்நீணிலத்தோர்
அறிதரநின்றவிராமாநுசனெனக்காரமுதே. (௧௯)

ஆரப்பொழிற்றென்குருகைப்பிரானமுதத்திருவாய்
ஈரத்தமிழினிசையுணர்ந்தோர்கட்கினியவர்தஞ்
சீரைப்பயின்றுய்யுஞ்சீலங்கொணாதமுனியைநெஞ்சால்
வாரிப்பருகுமிராமாநுசனென்றன்மாநிதியே. (௨௦)

நிதியைப்பொழியுமுகிலென்றுநீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகில்துவள்கின்றிலேனினித்தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன்யமுனைத்துறைவனிணையடியாம்
கதிபெற்றுடையவிராமாநுசனென்னைக்காத்தனனே. (௨௧)

கார்த்திகையானுங்கரிமுகத்தானுங்கனலுமுக்கண்
மூர்த்தியும்மோடியும்வெப்பும்முதுகிட்டுமூவுலகும்
பூத்தவனேயென்றுபோற்றிடவாணன்பிழைபொறுத்த
தீர்த்தனையேத்துமிராமாநுசனென்றன்சேமவைப்பே. (௨௨)

வைப்பாயவான்பொருளென்றுநல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும்வைக்குமிராமாநுசனையிருநிலத்தில்
ஒப்பாரிலாதவுறுவினையேன்வஞ்சநெஞ்சில்வைத்து
முப்போதும்வாழ்த்துவனென்னாமிதுவவன்மொய்புகழ்க்கே. (௨௩)

மொய்த்தவெந்தீவினையாற்பல்லுடல்தொறுமூத்ததனால்
எய்த்தொழிந்தேன்முனநாள்களெல்லாமின்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும்புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்திராமாநுசனென்னுங்கார்தன்னையே. (௨௪)

காரேய்கருணையிராமாநுசவிக்கடலிடத்தில்
ஆரேயறிபவர்நின்னருளின்றன்மையல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான்வந்துநீயென்னையுய்த்தபின்உன்
சீரேயுயிர்க்குயிராயடியேற்கின்றுதித்திக்குமே. (௨௫)

திக்குற்றகீர்த்தியிராமாநுசனையென்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தைமேவுநல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பேதியல்வாகநின்றோர்
அக்குற்றமப்பிறப்பப்பியல்வேநம்மையாட்கொள்ளுமே. (௨௬)

கொள்ளக்குறைவற்றிலங்கிக்கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளற்றனத்தினால்வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்
வெள்ளைச்சுடர்விடும்உன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்குமிராமாநுசவென்றனிநெஞ்சமே. (௨௭)

நெஞ்சிற்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்தநிமலன்நங்கள்
பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன்பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமாநுசன்புகழன்றியென்வாய்
கொஞ்சிப்பரவகில்லாதென்னவாழ்வின்றுகூடியதே. (௨௮)

கூட்டும்விதியென்றுகூடுங்கொலோதென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னைத்தன்பத்தியென்னும்

வீட்டின்கண்வைத்தவிராமாநுசன்புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னையென்னாட்டங்கள்கண்டின்பமெய்திடவே. (௨௯)

இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென்னெண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பலசூழிலென்தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன்மாயனெனமொழிந்த
அன்பனனகனிராமாநுசனென்னையாண்டனனே. (௩௰)

ஆண்டுகள்நாள்திங்களாய்நிகழ்காலமெல்லாம்மனமே
ஈண்டுபல்யோனிகள்தோறுழல்வோமின்றோரெண்ணின்றியே
காண்டகுதோளண்ணல்தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்
பூண்டவன்பாளனிராமாநுசனைப்பொருந்தினமே. (௩௧)

பொருந்தியதேசம்பொறையுந்திறலும்புகழும்நல்ல
திருந்தியஞானமும்செல்வமுஞ்சேருஞ்செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால்வந்தெடுத்தளித்த
அருந்தவனெங்களிராமாநுசனையடைபவர்க்கே. (௩௨)

அடையார்கமலத்தலர்மகள்கேள்வன்கையாழியென்னும்
படையோடுநாந்தகமும்படர்தண்டுமொண்சார்ங்கவில்லும்
புடையார்புரிசங்கமுமிந்தப்பூதலங்காப்பதற்கென்
றிடையேயிராமாநுசமுனியாயினவிந்நிலத்தே. (௩௩)

நிலத்தைச்செறுத்துண்ணுநீசக்கலியைநினைப்பரிய
பலத்தைச்செறுத்தும்பிறங்கியதில்லையென்பெய்வினைதென்
புலத்திற்பொறித்தவப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்
நலத்தைப்பொறுத்ததிராமாநுசன்றன்நயப்புகழே. (௩௪)

நயவேனொருதெய்வம்நானிலத்தேசிலமானிடத்தைப்
புயலேயெனக்கவிபோற்றிசெய்யேன்பொன்னரங்கமென்னில்
மயலேபெருகுமிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள்
அயரேனருவினையென்னையெவ்வாறின்றடர்ப்பதுவே. (௩௫)

அடல்கொண்டநேமியனாருயிர்நாதனன்றாரணச்சொற்
கடல்கொண்டவொண்பொருள்கண்டளிப்பப்பின்னுங்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்பொருள்கொண்டவர்பின்
படருங்குணனெம்மிராமாநுசன்றன்படியிதுவே. (௩௬)

படிகொண்டகீர்த்திஇராமாயணமென்னும்பத்திவெள்ளம்
குடிகொண்டகோயிலிராமாநுசன்குணங்கூறுமன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள்கலந்துள்ளங்கனியுநல்லோர்
அடிகண்டுகொண்டுகந்தென்னையுமாளவர்க்காக்கினரே. (௩௭)

ஆக்கியடிமைநிலைப்பித்தனையென்னையின்றவமே
போக்கிப்புறத்திட்டதென்பொருளால்முன்புபுண்ணியர்தம்
வாக்கிற்பிரியாவிராமாநுசநின்னருளின்வண்ணம்
நோக்கிற்றெரிவரிதாலுரையாயிந்தநுண்பொருளே. (௩௮)

பொருளும்புதல்வரும்பூமியும்பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்குநமக்குநெஞ்சேமற்றுளார்தரமோ
இருள்கொண்டவெந்துயர்மாற்றித்தன்னீறில்பெரும்புகழே
தெருளுந்தெருடந்திராமாநுசன்செய்யுஞ்சேமங்களே. (௩௯)

சேமநல்வீடும்பொருளுந்தருமமுஞ்சீரியநற்
காமமுமென்றிவைநான்கென்பர்நான்கினுங்கண்ணனுக்கே
ஆமதுகாமமறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்
வாமனன்சீலனிராமாநுசனிந்தமண்மிசையே. (௪0)

மண்மிசையோனிகள்தோறும்பிறந்தெங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலுங்காணகில்லாவுலகோர்களெல்லாம்
அண்ணலிராமாநுசன்வந்துதோன்றியவப்பொழுதே
நண்ணருஞானந்தலைக்கொண்டுநாரணற்காயினரே. (௪௧)

ஆயிழையார்கொங்கைதங்குமக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியைவந்தெடுத்தானின்றுமாமலராள்
நாயகனெல்லாவுயிர்கட்குநாதனரங்கனென்னுந்
தூயவன்றீதிலிராமாநுசன்றொல்லருள்சுரந்தே. (௪௨)

சுரக்குந்திருவுமுணர்வுஞ்சொலப்புகில்வாயமுதம்
பரக்குமிருவினைபற்றறவோடும்படியிலுள்ளீர்
உரைக்கின்றனனுமக்கியானறஞ்சீறுமுறுகலியைத்
துரக்கும்பெருமையிராமாநுசனென்றுசொல்லுமினே. (௪௩)

சொல்லார்தமிழொருமூன்றுஞ்சுருதிகணான்குமெல்லை
இல்லாவறநெறியாவுந்தெரிந்தவனெண்ணருஞ்சீர்
நல்லார்பரவுமிராமாநுசன்றிருநாமம்நம்பிக்
கல்லாரகலிடத்தோரெதுபேறென்றுகாமிப்பரே. (௪௪)

பேறொன்றுமற்றில்லைநின்சரணன்றியப்பேறளித்தற்
காறொன்றுமில்லைமற்றச்சரணன்றியென்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்தசெம்மைசொல்லாற்
கூறும்பரமன்றிராமாநுசமெய்ம்மைகூறிடிலே. (௪௫)

கூறுஞ்சமயங்களாறுங்குலையக்குவலயத்தே
மாறன்பணித்தமறையுணர்ந்தோனைமதியிலியேன்

தேறும்படியென்மனம்புகுந்தானைத்திசையனைத்தும்
ஏறுங்குணனையிராமாநுசனையிறைஞ்சினமே. (௪௬)

இறைஞ்சப்படும்பரனீசனரங்கனென்றிவ்வுலகத்
தறஞ்செப்புமண்ணலிராமாநுசனென்னருவினையின்
திறஞ்செற்றிரவும்பகலும்விடாதென்றன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தானெனக்காருநிகரில்லையே. (௪௭)

நிகரின்றிநின்றவென்னீசதைக்குநின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லையருட்குமஃதேபுகல்புன்மையிலோர்
பகரும்பெருமையிராமாநுசவினிநாம்பழுதே
அகலும்பொருளென்பயனிருவோமுக்குமானபின்னே. (௪௮)

ஆனதுசெம்மையறநெறிபொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றியிறந்ததுவெங்கலிபூங்கமலத்
தேனதிபாய்வயற்றென்னரங்கன்கழற்சென்னிவைத்துத்
தானதின்மன்னுமிராமாநுசனித்தலத்துதித்தே. (௪௯)

உதிப்பனவுத்தமர்சிந்தையுளொன்னலர்நெஞ்சமஞ்சிக்
கொதித்திடமாறிநடப்பனகொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தவென்புன்கவிப்பாவினம்பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதனிராமாநுசன்றனிணையடியே. (௫0)

அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காயன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந்தேர்விடுங்கோனைமுழுதுணர்ந்த
அடியர்க்கமுதமிராமாநுசனென்னையாளவந்திப்
படியிற்பிறந்ததுமற்றில்லைகாரணம்பார்த்திடினே. (௫௧)

பார்த்தானறுசமயங்கள்பதைப்பவிப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டுபுன்மையினேனிடைத்தான்புகுந்து
தீர்த்தானிருவினைதீர்த்தரங்கன்செய்யதாளிணையோ
டார்த்தானிவையெம்மிராமாநுசன்செய்யுமற்புதமே. (௫௨)

அற்புதன்செம்மையிராமாநுசனென்னையாளவந்த
கற்பகங்கற்றவர்காமுறுசீலன்கருதரிய
பற்பல்லுயிர்களும்பல்லுலகியாவும்பரனதென்னும்
நற்பொருடன்னையிந்நானிலத்தேவந்துநாட்டினனே. (௫௩)

நாட்டியநீசச்சமயங்கள்மாண்டனநாரணனைக்
காட்டியவேதங்களிப்புற்றதுதென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்டமிழ்மறைவாழ்ந்ததுமண்ணுலகில்
ஈட்டியசீலத்திராமாநுசன்றனியல்வுகண்டே. (௫௪)

கண்டவர்சிந்தைகவருங்கடிபொழிற்றென்னரங்கன்
றொண்டர்குலாவுமிராமாநுசனைத்தொகையிறந்த
பண்டருவேதங்கள்பார்மேல்நிலவிடப்பார்த்தருளுங்
கொண்டலைமேவித்தொழுங்குடியாமெங்கள்கோக்குலமே. (௫௫)

கோக்குலமன்னரைமூவெழுகாலொருகூர்மழுவால்
போக்கியதேவனைப்போற்றும்புனிதன்புவனமெங்கும்
ஆக்கியகீர்த்தியிராமாநுசனையடைந்தபின்என்
வாக்குரையாதென்மனம்நினையாதினிமற்றொன்றையே. (௫௬)

மற்றொருபேறுமதியாதரங்கன்மலரடிக்காள்
உற்றவரேதனக்குற்றவராய்க்கொள்ளுமுத்தமனை
நற்றவர்போற்றுமிராமாநுசனையிந்நானிலத்தே
பெற்றனன்பெற்றபின்மற்றறியேனொருபேதைமையே. (௫௭)

பேதையர்வேதப்பொருளிதென்றுன்னிப்பிரமநன்றென்
றோதிமற்றெல்லாவுயிருமஃதென்றுயிர்கள்மெய்விட்
டாதிப்பரனொடொன்றாமெனச்சொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றானெம்மிராமாநுசன்மெய்ம்மதிக்கடலே. (௫௮)

கடலளவாயதிசையெட்டினுள்ளுங்கலியிருளே
மிடைதருகாலத்திராமாநுசன்மிக்கநான்மறையின்
சுடரொளியாலவ்விருளைத்துரந்திலனேலுயிரை
உடையவன்நாரணனென்றறிவாரில்லையுற்றுணர்ந்தே. (௫௯)

உணர்ந்தமெய்ஞ்ஞானியர்யோகந்தொறுந்திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசைமன்னுமிடந்தொறும்மாமலராள்
புணர்ந்தபொன்மார்பன்பொருந்தும்பதிதொறும்புக்குநிற்குங்
குணந்திகழ்கொண்டலிராமாநுசனெங்குலக்கொழுந்தே. (௬0)

கொழுந்துவிட்டோடிப்படரும்வெங்கோள்வினையால்நிரயத்
தழுந்தியிட்டேனைவந்தாட்கொண்டபின்னுமருமுனிவர்
தொழுந்தவத்தோனெம்மிராமாநுசன்றொல்புகழ்சுடர்மிக்
கெழுந்ததத்தால்நல்லதிசயங்கண்டதிருநிலமே. (௬௧)

இருந்தேனிருவினைப்பாசங்கழற்றியின்றியானிறையும்
வருந்தேனினியெம்மிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கொன்றுநன்மைசெய்யாப்
பெருந்தேவரைப்பரவும்பெரியோர்தங்கழல்பிடித்தே. (௬௨)

பிடியைத்தொடருங்களிறென்னயானுன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படிநல்கவேண்டுமறுசமயச்

செடியைத்தொடரும்மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்திப்
படியைத்தொடருமிராமாநுசமிக்கபண்டிதனே. (௬௩)

பண்டருமாறன்பசுந்தமிழானந்தம்பாய்மதமாய்
விண்டிடவெங்களிராமாநுசமுனிவேழம்மெய்ம்மை
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக்குவலயத்தே
மண்டிவந்தேன்றதுவாதியர்காளுங்கள்வாழ்வற்றதே. (௬௪)

வாழ்வற்றதுதொல்லைவாதியர்க்கென்றும்மறையவர்தந்
தாழ்வற்றதுதவந்தாரணிபெற்றதுதத்துவநூல்
கூழற்றதுகுற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்கந்
நாழற்றதுநம்மிராமாநுசன்றந்தஞானத்திலே. (௬௫)

ஞானங்கனிந்தநலங்கொண்டுநாடொறுநைபவர்க்கு
வானங்கொடிப்பதுமாதவன்வல்வினையேன்மனத்தில்
ஈனங்கடிந்தவிராமாநுசன்றன்னையெய்தினர்க்கத்
தானங்கொடுப்பதுதன்றகவென்னுஞ்சரண்கொடுத்தே. (௬௬)

சரணமடைந்ததருமனுக்காப்பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன்றன்னைவணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென்றிராமாநுசனுயிர்கட்
கரணங்கமைத்திலனேலரணார்மற்றிவ்வாருயிர்க்கே. (௬௭)

ஆரெனக்கின்றுநிகர்சொல்லின்மாயனன்றைவர்தெய்வத்
தேரினிற்செப்பியகீதையின்செம்மைப்பொருள்தெரியப்
பாரினிற்சொன்னவிராமாநுசனைப்பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்ததென்னாவியுஞ்சிந்தையுமே. (௬௮)

சிந்தையினோடுகரணங்கள்யாவுஞ்சிதைந்துமுன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டிவையென்னிலங்கின்றருளால்
தந்தவரங்கனுந்தன்சரண்தந்திலன்றானதுதந்
தெந்தையிராமாநுசன்வந்தெடுத்தனனின்றென்னையே. (௬௯)

என்னையும்பார்த்தென்னியல்வையும்பார்த்தெண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கிலருள்செய்வதேநலமன்றியென்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதேயுன்பெருங்கருணை
தன்னையென்பார்ப்பரிராமாநுசவுன்னைச்சார்ந்தவரே. (௭0)

சார்ந்ததென்சிந்தையுன்றாளிணைக்கீழன்புதான்மிகவுங்
கூர்ந்ததத்தாமரைத்தாள்களுக்குன்றன்குணங்களுக்கே
தீர்ந்ததென்செய்கைமுன்செய்வினைநீசெய்வினையதனாற்
பேர்ந்ததுவண்மையிராமாநுசவெம்பெருந்தகையே. (௭௧)

கைத்தனன்றீயசமயக்கலகரைக்காசினிக்கே
உய்த்தனன்றூயமறைநெறிதன்னையென்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்துநிறைபுகழோருடனே
வைத்தனனென்னையிராமாநுசன்மிக்கவண்மைசெய்தே. (௭௨)

வண்மையினாலுந்தன்மாதகவாலும்மதிபுரையுந்
தண்மையினாலுமித்தாரணியோர்கட்குத்தான்சரணாய்
உண்மைநன்ஞானமுரைத்தவிராமாநுசனையுன்னுந்
திண்மையல்லாலெனக்கில்லைமற்றோர்நிலைதேர்ந்திடிலே. (௭௩)

தேரார்மறையின்றிறமென்றுமாயவன்றீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பதுகொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம்மிராமாநுசனவ்வெழின்மறையிற்
சேராதவரைச்சிதைப்பதப்போதொருசிந்தைசெய்தே. (௭௪)

செய்த்தலைச்சங்கஞ்செழுமுத்தமீனுந்திருவரங்கர்
கைத்தலத்தாழியுஞ்சங்கமுமேந்திநங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னைவிடேனென்றிருக்கினுநின்புகழே
மொய்த்தலைக்கும்வந்திராமாநுசவென்னைமுற்றுநின்றே. (௭௫)

நின்றவண்கீர்த்தியுநீள்புனலுநிறைவேங்கடப்பொற்
குன்றமும்வைகுந்தநாடுங்குலவியபாற்கடலும்
உன்றனக்கெத்தனையின்பந்தருமுன்னிணைமலர்த்தாள்
என்றனக்குமதிராமாநுசவிவையீந்தருளே. (௭௬)

ஈந்தனனீயாதவின்னருளெண்ணின்மறைக்குறும்பைப்
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளாலிப்படியனைத்தும்
ஏய்ந்தனன்கீர்த்தியினாலென்வினைகளைவேர்பறியக்
காய்ந்தனன்வண்மையிராமாநுசற்கென்கருத்தினியே. (௭௭)

கருத்திற்புகுந்துள்ளிற்கள்ளங்கழற்றிக்கருதரிய
வருத்தத்தினான்மிகவஞ்சித்துநீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபின்னென்னெஞ்சிற்
பொருத்தப்படாதெம்மிராமாநுசமற்றோர்பொய்ப்பொருளே. (௭௮)

பொய்யைச்சுரக்கும்பொருளைத்துரந்திந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்குமிராமாநுசனிற்கவேறுநம்மை
உய்யக்கொளவல்லதெய்வமிங்கியாதென்றுலர்ந்தவமே
ஐயப்படாநிற்பர்வையத்துளோர்நல்லறிவிழந்தே. (௭௯)

நல்லார்பரவுமிராமாநுசன்றிருநாமநம்ப
வல்லார்திறத்தைமறவாதவர்களெவரவர்க்கே

எல்லாவிடத்திலுமென்றுமெப்போதிலுமெத்தொழும்புஞ்
சொல்லான்மனத்தாற்கருமத்தினாற்செய்வன்சோர்வின்றியே. (௮௦)

சோர்வின்றியுன்றன்றுணையடிக்கீழ்த்தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்றவெனக்கரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றியின்றுபெறுத்துமிராமாநுசவினியுன்
சீரொன்றியகருணைக்கில்லைமாறுதெரிவுறிலே. (௮௧)

தெரிவுற்றஞானஞ்செறியப்பெறாதுவெந்தீவினையால்
உருவற்றஞானத்துழல்கின்றவென்னையொருபொழுதில்
பொருவற்றகேள்வியனாக்கிநின்றானென்னபுண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தியிராமாநுசனென்னுஞ்சீர்முகிலே. (௮௨)

சீர்கொண்டுபேரறஞ்செய்துநல்வீடுசெறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர்கூட்டனல்லேனுன்பதயுகமாம்
ஏர்கொண்டவீட்டையெளிதினிலெய்துவனுன்னுடைய
கார்கொண்டவண்மையிராமாநுசவிதுகண்டுகொள்ளே. (௮௩)

கண்டுகொண்டேனெம்மிராமாநுசன்றன்னைக்காண்டலுமே [நோய்
தொண்டுகொண்டேனவன்றொண்டர்பொற்றாளிலென்றொல்லைவெந்
விண்டுகொண்டேனவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்தின்
றுண்டுகொண்டேனின்னமுற்றனவோதிலுலப்பில்லையே. (௮௪)

ஓதியவேதத்தினுட்பொருளாயதனுச்சிமிக்க
சோதியைநாதனெனவறியாதுழல்கின்றதொண்டர்
பேதைமைதீர்த்தவிராமாநுசனைத்தொழும்பெரியோர்
பாதமல்லாலென்றனாருயிர்க்கியாதொன்றும்பற்றில்லையே. (௮௫)

பற்றாமனிசரைப்பற்றியப்பற்றுவிடாதவரே
உற்றாரெனவுழன்றோடிநையேனினியொள்ளியநூல்
கற்றார்பரவுமிராமாநுசனைக்கருதுமுள்ளம்
பெற்றாரெவரவரெம்மைநின்றாளும்பெரியவரே. (௮௬)

பெரியவர்பேசிலும்பேதையர்பேசிலுந்தன்குணங்கட்
குரியசொல்லென்றுமுடையவனென்றென்றுணர்வின்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தியிராமாநுசன்மறைதேர்ந்துலகிற்
புரியுநன்ஞானம்பொருந்தாதவரைப்பொருங்கலியே. (௮௭)

கலிமிக்கசெந்நெற்கழனிக்குறையற்கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலையுண்டுதன்னுள்ளந்தடித்ததனால்
வலிமிக்கசீயமிராமாநுசன்மறைவாதியராம்
புலிமிக்கதென்றிப்புவனத்தில்வந்தமைபோற்றுவனே. (௮௮)

போற்றருஞ்சீலத்திராமாநுசநின்புகழ்தெரிந்து
சாற்றுவனேலதுதாழ்வதுதீரிலுன்சீர்தனக்கோர்
ஏற்றமென்றேகொண்டிருக்கிலுமென்மனமேத்தியன்றி
ஆற்றகில்லாதிதற்கென்னினைவாயென்றிட்டஞ்சுவனே. (௮௯)

நினையார்பிறவியைநீக்கும்பிரானையிந்நீணிலத்தே
எனையாளவந்தவிராமாநுசனையிருங்கவிகள்
புனையார்புனையும்பெரியவர்தாள்களிற்பூந்தொடையல்
வனையார்பிறப்பில்வருந்துவர்மாந்தர்மருள்சுரந்தே. (௯0)

மருள்சுரந்தாகமவாதியர்கூறுமவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்தவுலகிருள்நீங்கத்தன்னீண்டியசீர்
அருள்சுரந்தெல்லாவுயிர்கட்குநாதனரங்கனென்னும்
பொருள்சுரந்தானெம்மிராமாநுசன்மிக்கபுண்ணியனே. (௯௧)

புண்ணியநோன்புபுரிந்துமிலேனடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்விநுவன்றுமிலேன்செம்மைநூற்புலவர்க்
கெண்ணருங்கீர்த்தியிராமாநுசவின்றுநீபுகுந்தென்
கண்ணுள்ளுநெஞ்சுள்ளுநின்றவிக்காரணங்கட்டுரையே. (௯௨)

கட்டப்பொருளைமறைப்பொருளென்றுகயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும்பிரானல்லனேயென்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடுதன்னருளென்னுமொள்வாளுருவி
வெட்டிக்களைந்தவிராமாநுசனென்னுமெய்த்தவனே. (௯௩)

தவந்தருஞ்செல்வந்தகவுந்தருஞ்சரியாப்பிறவிப்
பவந்தருந்தீவினைபாற்றித்தரும்பரந்தாமமென்னுந்
திவந்தருந்தீதிலிராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்கட்
குவந்தருந்தேனவன்சீரன்றியானொன்றுமுண்மகிழ்ந்தே. (௯௪)

உண்ணின்றுயிர்களுக்குற்றனவேசெய்தவர்க்குயவே
பண்ணும்பரனும்பரிவிலனாம்படிபல்லுயிர்க்கும்
விண்ணின்றலைநின்றுவீடளிப்பானெம்மிராமாநுசன்
மண்ணின்றலத்துதித்துய்மறைநாலும்வளர்த்தனனே. (௯௫)

வளரும்பிணிகொண்டவல்வினையால்மிக்கநல்வினையிற்
கிளருந்துணிவுகிடைத்தறியாதுமுடைத்தலையூன்
தளருமளவுந்தரித்தும்விழுந்துந்தனிதிரிவேற்
குளரெம்மிறைவரிராமாநுசன்றன்னையுற்றவரே. (௯௬)

தன்னையுற்றாட்செய்யுந்தன்மையினோர்மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்யவென்னையுற்றானின்றுதன்றகவால்

ணையுற்றாரன்றித்தன்மையுற்றாரில்லையென்றறிந்து
ணையுற்றாரையிராமாநுசன்குணஞ்சாற்றிடுமே. (௯௭)

மேயினியசுவர்க்கத்திலின்னுநரகிலிட்டுச்
மேயவற்றைத்தொடர்தருதொல்லைச்சுழல்பிறப்பில்
மேயினிநம்மிராமாநுசன்நம்மைநம்வசத்தே
மேசரணமென்றால்மனமேநையல்மேவுதற்கே. (௯௮)

ச்சமணருஞ்சாக்கியப்பேய்களுந்தாழ்சடையோன்
ற்கற்றசோம்பருஞ்சூனியவாதருநான்மறையும்
க்குறும்புசெய்நீசருமாண்டனர்நீணிலத்தே
ற்கற்பகமெம்மிராமாநுசமுனிபோந்தபின்னே. (௯௯)

ந்ததென்னெஞ்சென்னும்பொன்வண்டுனதடிப்போதிலொண்சீர்
தெளிதேனுண்டமர்ந்திடவேண்டிநின்பாலதுவே
டவேண்டுமிராமாநுசவிதுவன்றியொன்றும்
கில்லாதினிமற்றொன்றுகாட்டிமயக்கிடலே. (௧00)

குமிருவினைவல்லியிற்பூண்டுமதிமயங்கித்
க்கும்பிறவியிற்றோன்றியவென்னைத்துயரகற்றி
கொண்டுநல்குமிராமாநுசவென்றதுன்னையுன்னி
மவர்க்கிதிழுக்கென்பர்நல்லவரென்றுநைந்தே. (௧0௧)

மனமுன்குணங்களையுன்னியென்னாவிருந்தெம்
ராமாநுசனென்றழைக்குமருவினையேன்
ந்தொழுங்கண்கருதிடுங்காணக்கடல்புடைசூழ்
மிதனிலுன்வண்மையென்பாலென்வளர்ந்ததுவே. (௧0௨)

ந்தவெங்கோபமடங்கலொன்றாயன்றுவாளவுணன்
ந்தபொன்னாகங்கிழித்தவன்கீர்த்திப்பயிரெழுந்து
ந்திடுஞ்சிந்தையிராமாநுசனென்றன்மெய்வினைநோய்
நன்ஞானமளித்தனன்கையிற்கனியென்னவே. (௧0௩)

க்கனியென்னக்கண்ணனைக்காட்டித்தரினுமுன்றன்
ற்பிறங்கியசீரன்றிவேண்டிலன்யானிரயத்
யிற்கிடக்கினுஞ்சோதிவிண்சேரினுமிவ்வருள்நீ
ற்றரிப்பனிராமாநுசவென்செழுங்கொண்டலே. (௧0௪)

திரைப்பாற்கடற்கண்டுயில்மாயன்றிருவடிக்கீழ்
திருப்பார்நெஞ்சில்மேவுநன்ஞானிநல்வேதியர்கள்
ந்திருப்பாதனிராமாநுசனைத்தொழும்பெரியோர்
ரைத்தாடுமிடமடியேனுக்கிருப்பிடமே. (௧0௫)

இருப்பிடம்வைகுந்தம்வேங்கடம்மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம்மாயனுக்கென்பர்நல்லோரவைதன்னொடும்வந்
திருப்பிடம்மாயனிராமாநுசன்மனத்தின்றவன்வந்
திருப்பிடமென்றனிதயத்துள்ளேதனக்கின்புறவே. (௧0௬)

இன்புற்றசீலத்திராமாநுசவென்றுமெவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும்பிறந்திறந்தெண்ணரிய
துன்புற்றுவீயினுஞ்சொல்லுவதொன்றுண்டுன்றொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படியென்னையாக்கியங்காட்படுத்தே. (௧0௭)

அங்கயல்பாய்வயற்றென்னரங்கனணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையைப்போற்றுதும்பத்தியெல்லாந்
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சேநந்தலைமிசையே
பொங்கியகீர்த்தியிராமாநுசனடிப்பூமன்னவே. (௧0௮)

திருவரங்கத்தமுதனார்திருவடிகளேசரணம்.

இராமாநுசநூற்றந்தாதி முற்றிற்று.

ஆ. ப்ரபந்தம் - ௧௧ - இ - பாசுரம் - ௮௧௭.

இயற்பா

முற்றும்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நாலாயிரங்களின்விவரம்.

முதலாயிரம்... ...ப்ரபந்தம்-௰-இ-பாசுரம்.........௯௪௭
பெரியதிருமொழி ப்ரபந்தம்-௩-இ-பாசுரம்.... ...௧௧௩௪
திருவாய்மொழி ...ப்ரபந்தம்-௧-இ-பாசுரம்.........௧௧0௨
இயற்பா... ... ...ப்ரபந்தம்-௧௧-இ-பாசுரம்.........௮௧௭

ஆ. ப்ரபந்தம்-௨௪-க்குக்கூடியபாசுரம் - ௪௲.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

சாற்றுமுறை.

సర్వదేశదశాకాలేష్వవ్యాహతపరాక్రమా।
రామానుజార్యదివ్యాజ్ఞా వర్ధతామభివర్ధతాం॥

ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாவர்த்ததாமபிவர்த்ததாம்.

రామానుజార్యదివ్యాజ్ఞా ప్రతివాసరముజ్జ్వలా।
దిగంతవ్యాపినీ భూయాత్ సా హి లోకహితైషిణీ॥

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யாபிநீபூயாத்ஸாஹிலோகஹிதைஷிணீ.

శ్రీమన్ శ్రీరంగశ్రియమనుపద్రవామనుదినం సంవర్ధయ।
శ్రీమన్ శ్రీరంగశ్రియమనుపద్రవామనుదినం సంవర్ధయ॥

ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரியமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரியமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய.

నమః శ్రీశైలనాథాయ కుంతీనగరజన్మనే।
ప్రసాదలబ్ధపరమప్రాప్యకైంకర్యశాలినే॥

நம:ஸ்ரீசைலநாதாயகுந்தீநகரஜந்மநே
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யசாலிநே.

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవం।
యతీంద్రప్రవణం వందే రమ్యజామాతరం మునిం॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரம்தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தேரம்யஜாமாதரம்முநிம்.

வாழிதிருவாய்மொழிப்பிள்ளைமாதகவால்
வாழுமணவாளமாமுனிவன் — வாழியவன்
மாறன்திருவாய்மொழிப்பொருளைமாநிலத்தோர்
தேறும்படியுரைக்குஞ்சீர்.

செய்யதாமரைத்தாளிணைவாழியே சேலைவாழிதிருநாபிவாழியே
துய்யமார்பும்புரிநூலும்வாழியே சுந்தரத்திருத்தோளிணைவாழியே

சையுமெய்ந்தியமுக்கோலும்வாழியே கருணைபொங்கியகண்ணிணைவாழியே
பொய்யிலாதமணவாளமாமுனிபுந்திவாழிபுகழ்வாழிவாழியே.

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழச்
சடகோபன்தண்டமிழ்நூல்வாழக் — கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழமணவாளமாமுனியே
இன்னுமொருநூற்றாண்டிரும்.

திருநாள்பாட்டு.

செந்தமிழ்வேதியர்சிந்தைதெளிந்துசிறந்துமகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர்செய்தருளுங்கலைதேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவிமானிடர்தங்களைவானில்லுயர்த்திடுநாள்
மாசறுஞானியர்சேரெதிராசர்தம்வாழ்வுமுளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில்சூழ்குருகாதிபர்கலைகள்விளக்கிடுநாள்
காரமர்மேனியரங்கநகர்க்கிறைகண்கள்களித்திடுநாள்
அந்தமில்சீர்மணவாளமுனிப்பரனவதாரஞ்செய்நாள்
அழகுதிகழ்ந்திடுமைப்பசியிற்றிருமூலத்தனிநாளே.

வாழித்திருநாமம் முற்றிற்று.

இயல்சாத்து.

நேரிசைவெண்பா.

நன்றுந்திருவுடையோம்நானிலத்திலெவ்வுயிர்க்கும்
ஒன்றுங்குறையில்லையோதினோம் — குன்றம்
எடுத்தானடிசேரிராமானுசன்றன்
பிடித்தார்பிடித்தாரைப்பற்றி. (௧)

வாழிதிருக்குருகூர்வாழிதிருமழிசை
வாழிதிருமல்லைநாடு — வாழி
கழிபொருந்துதீர்ப்போனீர்த்தென்னரங்கன்றன்னை
வழிபடுத்தவாளன்வலி (௨)

திருநாடுவாழிதிருப்பொருநல்வாழி
திருநாட்டுத்தென்குருகூர்வாழி — திருநாட்டுச்
சிட்டத்தமர்வாழிவாழிசடகோபன்
இட்டத்தமிழ்ப்பாவிசை. (௩)

மங்கைநகர்வாழிவன்குறையலூர்வாழி
செங்கையருள்மாரிசீர்வாழி — பொங்குபுனல்

மண்ணித்துறைவாழிவாழிபரகாலன்
எண்ணிற்றமிழ்ப்பாவிசை. (௪)

வாழியரோதென்குருகைவாழியரோதென்புதுவை
வாழியரோதென்குறையில்மாநகரம் — வாழியரோ
தக்கோர்பரவுந்தடஞ்சூழ்பெரும்பூதூர்
முக்கோல்பிடித்தமுனி. (௫)

மொழியைக்கடக்கும்பெரும்புகழான்வஞ்சமுக்குறும்பாங்
குழியைக்கடக்குநங்கூரத்தாழ்வான்சரண்கூடியபின்
பழியைக்கடத்துமிராமானுசன்புகழ்பாடியல்லா
வழியைக்கடத்தலெனக்கினியாதும்வருத்தமன்றே. (௬)

நெஞ்சத்திருந்துநிரந்தரமாகநிரயத்துய்க்கும்
வஞ்சக்குறும்பின்வகையறுத்தோன்மாயவாதியர்தாம்
அஞ்சப்பிறந்தவன்சீமாதவனடிக்கன்புசெய்யுந்
தஞ்சத்தொருவன்சரணம்புயமென்றலைக்கணிந்தே. (௭)

ஊழிதொறூழிதொறுமுலகமுய்ய
உம்பர்களுங்கேட்டுய்யவன்பினாலே
வாழியெனும்பூதம்பேய்பொய்கைமாறன்
மழிசையர்கோன்பட்டர்பிரான்மங்கைவேந்தன்
கோழியர்கோன்றொண்டர்துகள்பாணன்கோதை
குலமுனிவன்கூறியநூலோதிவீதி
வாழியெனவருந்திரளைவாழ்த்துவார்தம்
மலரடியென்சென்னிக்குமலர்ந்தபூவே.

இயல்சாத்து முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருக்குடந்தை-தட்டை
கிருஷ்ணமாசாரியர்

வெண்பா.

கோதைபிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதிமணிமாடந் தோன்றுமூர் — நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோனூர்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும் — கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையஞ்சுமப்பதும் வம்பு.

இப்பிரபந்தங்களுக்கு [illegible] சித்தப்ராக்ரியால் அக்ஷர பேதமுண்டாயிருக்கிறது (மூர்க்குகாக்கொடிப்புகழிசொன்னேன் சங்கு சக்கரமேந்துகையனே பிழைப்பராகிலுந் தம்மடியார் சொற்பொறுப் பதுபெரியோர்கடன்றோ) என்ற பெரியாழ்வாருந் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றமையால் பாகவதர்களிப் பெருமைக்கொள்ளா தங்கீகரிக்கவேண்டியது [illegible]ணம்.